# பெண்மணி

அக்டோபர் 2021

ரூ.28/-



நவராத்திரி,
வெற்றித் திருவிழா!
- ஆன்மிக கட்டுரை



ஜி.ஏ.பிரபா

## ஆயிரம் மலரில் ஒரு மலர் நீயே...

முழு நாவல்



நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தபடியே
அன்றைய செய்திகளை தெரிந்துகொள்ள
epaper.malaimurasu.co
என்ற
இணையத்திலும் படிக்கலாம்
தேவியின்
கண்மணி
இனி
www.magzter.com/p/kanmani
என்ற
இணையத்திலும் படிக்கலாம்
பெண்மணி
இனி
www.magzter.com/p/penmani
என்ற
இணையத்திலும் படிக்கலாம்



# இருளைத் துரத்தும் ஒளி எங்கே?



கண்மணி கேளடி

இனிய தோழர், நலம்தானா?

தலைநகர் டெல்லி, பெண்களுக்கு பாதுகாப்பற்ற நகரம் என்ற பெயரை எப்போதோ சம்பாதித்து விட்டதை நாம் அறிவோம். அதை உறுதிப்படுத்தும் விதத்தில் கொடுமையான சம்பவம் ஒன்று அண்மையில் நடந்தேறியிருக்கிறது.

சாபியா சைஃபி இருபத்தோரு வயதே நிரம்பிய இளம்பெண். நம்மூரின் ஊர்க்காவல் படை போல டெல்லியில் சிவில் டிஃபென்ஸ் வாலண்டியர்ஸ் என்று இருக்கிறதாம். அதில் பணியாற்றியவர். காவல் உடுப்பு அணிந்து கொண்டு மக்கள் தொண்டில் ஈடுபடும் சேவைப் பணி இது. எப்பொழுதும் போல வேலைக்குச் சென்ற சாபியா இரவு ஏழு மணியாகியும் வீடு திரும்பவே இல்லை. தாய் தந்தை சகோதரன் அவருக்கு தொடர்ந்து அழைப்பு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் சாபியா போனை எடுக்கவே இல்லை. காவல் நிலையம் விரைந்தார்கள் மூவரும். சரியான உதவி கிடைக்க வில்லை என்கிறார்கள். பொறுப்பற்ற பதில்கள், கிண்டல்கள், பரிகசிப்புகள் என்று அலைக்கழிக்கப்பட்டதாகத் தெரிகிறது. சாபியா பணி புரிந்து கொண்டிருந்த காவல் நிலையத்திற்கு ஓடியிருக்கிறது குடும்பம். சாபியாவின் தோழிகள், நட்பு வட்டாரம் என்று அலைந்திருக்கிறார்கள். ஒரு விவரமும் தெரியவில்லை.

அழுது கெஞ்சி புகார் கொடுத்து விட்டு கலங்கி நின்றிருக்கிறது அந்த ஏழைக் குடும்பம்.

அடுத்த நாள் வருகிறது அந்த அதிர்ச்சித் தகவல்.

ஃபரிதாபாத் என்கிற இடத்தில் ஒரு பெண்ணின் உடல் கிடைக்கிறது. டெல்லியிலிருந்து ஒன்றரை கிலோ மீட்டர் பயணத்தில் இருக்கிறது ஃபரிதாபாத். உடல் முழுக்க ஐம்பது இடங்களில் கத்திக் குத்துகளுடன் கொடூரமாகக் கொல்லப்பட்டுக்கிடக்கிறார் சாபியா. இரு மார்புகளும் அறுத்தெறியப் பட்டிருக்கின்றன. பாலியல் கொடுமைகள் நிகழ்ந்ததா என்று தெரியவில்லை. இல்லை என்று போஸ்ட் மார்ட்டம் அறிக்கை சொல்வதாகவும்,

## இந்த இதழில்...

மலர் - 23 இதழ் - 6

ஆன்மிகம்:
**நவராத்திரி, வெற்றித்திருவிழா!** - பக்கம் 10

சின்னத்திரை:
**கொரோனாவிலிருந்து மீண்டு வந்தேன்!**
- இலக்கியா - பக்கம் 24

**ரூ.1000/- பரிசு**
அறிவுத்திறன் போட்டி - பக்கம் 26

கோவில்:
**கோவை - கோட்டைமேடு சங்கமேசுவரர்!** - பக்கம் 28

சுற்றுலா:
**ஹுப்ளி ஒரு குட்டி மும்பை!** - பக்கம் 49

இசை:
**இசையும், வயலினும் எனக்கு இறைவன் கொடுத்த வரம்!**
- டெல்லி பி.சுந்தரராஜன் - பக்கம் 54

ஜி.ஏ.பிரபா
**ஆயிரம் மலரில் ஒரு மலர் நீயே...**
முழுநாவல் - பக்கம் 66

## 'பெண்மணி'

'பெண்மணி' தபாலில் பெற ஓராண்டு சந்தா உள்நாடு – ரூ.300. வெளிநாடு – ரூ.1800. மணியார்டர் மற்றும் காசோலை 'MURASU PUBLICATIONS' என்ற பெயரில் அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாகி, **'பெண்மணி'**
'மாலைமுரசு' பில்டிங்,
246, அண்ணா சாலை,
ஆயிரம்விளக்கு, சென்னை–600 006.

சந்தா தொகையை NEFT/RTGS மூலம் செலுத்த:–
'MURASU PUBLICATIONS'
A/C No. 6034172999
Indian Bank, Peters Road Branch
IFSC: IDIB000R047

**செய்திப்பிரிவு:**
email: penmanimonthly@gmail.com
போன்: 42634565

**பணம் செலுத்திய விபரத்தை**
murasupublication@gmail.com
**என்ற நிர்வாகப்பிரிவு மெயிலுக்கு M.O. மற்றும் வங்கியில் பணம் செலுத்திய விபரத்தை தெரிவிக்க வேண்டும்.**
போன்: 28297225

## பெண்மணி

**அக்டோபர் - 2021 விலை ரூ.28/-**

இவ்வளவு இளம் வயதில் எங்கள் மகள் கொல்லப்பட்டிருக்கிறாள், அதிலும் மிகக் கொடூரமாகக் கொன்றிருக்கிறார்கள், நிச்சயம் பாலியல் கொடுமைகள் இருக்கும், என்ன குற்றம் செய்தாள் என்று இவ்வளவு பயங்கரக் கொலை செய்திருக்கிறார்கள் என்று கண்டு பிடியுங்கள் என அலறுகிறது குடும்பம்.

நிசாமுதீன் என்று ஒருவன். காவல் நிலையத்தில் சரணடைந்த அவன், சாபியாவை நான் தான் கொன்றேன் என்று சொல்லியிருக்கிறான். எங்கள் இருவருக்கும் திருமணம்ஆகிவிட்டது,நாங்கள்ஒன்றாகபணி புரிகிறோம், ஆனால் அவள் பலருடன் பேசிக் கொண்டிருந்தாள், எனக்குப் பிடிக்கவில்லை, வண்டியில்ஃபரிதாபாத் அழைத்துச் சென்றேன், மறைத்து வைத்திருந்த கத்தியால் அவளைக் குத்திக் கொன்று விட்டேன், புதர் மறைவில் வீசி விட்டேன் என்று அவன் சொன்னதன் அடிப்படையில்தான் சாபியாவின் உடலையே கைப்பற்றியிருக்கிறது காவல் துறை.

அய்யோ எங்கள் மகள் இப்போதுதான் வேலைக்கே சேர்ந்திருக்கிறாள், இந்த நிசாமுதீன் யாரென்றே எங்களுக்குத் தெரியாது, அவன் பெயரை ஒருமுறை கூட சாபியா சொன்னதில்லை, வீட்டிற்குத் தெரியாமல் கல்யாணம் செய்து கொள்கிற பெண்ணே இல்லை அவள் என்று அழுகிறார்கள் பெற்றோர். இது அவன் மட்டுமே செய்திருப்பதாக இருக்க முடியாது, ஏதோ பெரிய அரசியல் இருக்கிறது, மிகப் பெரிய சதித்திட்டம் இருக்கிறது, கண்டு பிடியுங்கள், என்தங்கையை சிதைத்தவர்களை யாரென்று காட்டுங்கள் என்று கதறுகிறார் சாபியாவின் சகோதரர்.

இதற்கு நடுவில் இன்னொரு விஷயமும் பேசப் படுகிறது. சாபியா வேலை பார்க்கும் காவல் நிலையத்தில் ஒரு ரகசிய அறை இருப்பதாகவும், அன்றாட லஞ்ச ஊழல் பணப்பரிவர்த்தனைகள் அங்கேதான் நடக்கும் என்றும், சாபியாவிற்கு இந்த விஷயம் தெரிய வந்ததால் அவளை அழைத்து மிரட்டினார்கள் என்றும் சொல்லப்படுகிறது.

தனக்கும் சாபியாவிற்கும் திருமணம் நடந்து விட்டதாகச் சொல்லும் நிசாமுதீன் ஒரு ஆவணத்தைக் கூட சாட்சியாகக் காட்டவில்லை. என்னதான் ஆத்திரக்காரக் கணவனாக இருந்தாலும் மனைவியை இந்த அளவிற்குக் கொடூரமாகக் கொல்வானா என்ற மனவியல் கேள்விக்கும் விடையில்லை. மார்பகங்களை அறுத்து எறிகிற அளவுக்கா சைக்கோ மனிதன் சமூகத்தில் உலவிக் கொண்டிருப்பான்? உண்மையைசிபிஐகண்டு பிடிக்க வேண்டும் என்று விம்முகிறார்கள்



சாபியாவின் தோழிகள்.

சாபியா இளம் பெண். காவல் துறை ஊழியர். இசுலாமியப் பெண். குற்றங்களைத் தட்டிக் கேட்ட பெண்ணாகக் கூட இருக்கலாம். நினைக்கவே பதறுகிறது. நாட்டில் நடக்கும் படுகொலைகளுக்கான காரணங்களைப் பார்க்கும்போது, இறைச்சிக்கும் கோமியத்துக்கும் கொடுக்கப்படும் மதிப்பு மனித உயிர்களுக்கு இல்லையா என்று நாம் துக்கப்படுகிறோம்.

சாபியாவின் படுகொலைக்கு உரத்த குரல் எழுப்பி நியாயம் பெற்றுத் தரவேண்டிய ஊடகங்கள் மவுனம் சாதிப்பதைப் பார்க்க முடியவில்லை. அடர்த்தியான இந்த கள்ள மவுனம் ஏதோ ஒரு கொடிய உண்மையைச் சொல்கிறதோ என்ற அச்சம் ஏற்படுகிறது. நாட்டில் நடக்கும் படுபாதகங்களை கண்டும் காணாமலும் செல்லும் இந்தப் போக்கு இறுதியில் நம்மை அடிமை வாழ்விற்கே இட்டுச் செல்லும்.

நிர்பயாவை யாரும் மறந்திருக்க மாட்டோம்.

மறுபடி மறுபடி ஏன் நிர்பயாக்கள் கொல்லப்படுகிறார்கள்? நினைத்துப் பார்க்க முடியாத சைக்கோக்கள் எப்படி இயல்பான மனிதர்கள் போல சமூகத்தில் நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்?

பாரத சமுதாயம் என்று மார்தட்டிக் கொள்ளவோ, ஞானம், அறிவு, பண்பாடு, முன்னோர்கள் எல்லாம் மூடர்கள் அல்ல என்று தோள் நிமிர்த்தவும் நமக்கு ஏதாவது அருகதை இருக்கிறதா என்ன?

இளம்பெண்களிடம் வெறியாட்டம் ஆடும் உரிமையை யார் கொடுத்தார்கள் இவர்களுக்கு? ஆந்திராவின் டாக்டர் இளம்பெண்ணை சீரழித்து சிதைத்துக் கொன்ற லாரிக்காரர்கள், கோயிலில் ஒரு வாரம் வைத்திருந்து தொடர்ந்து கிழம் கட்டைகள் முதற்கொண்டு பாலியல் வெறியாட்டம் ஆடி ஆசிபாவைக் கொன்று போட்ட வெறிநாய்கள், ஆசிட் வீச்சுகளுக்கு தங்கள் வாழ்க்கையையே பறி கொடுத்த எண்ணற்ற இளம்பெண்கள், இன்னும் இன்னும் ஐந்து நிமிடத்துக்கொரு முறை இந்தியாவின் ஏதோ ஒரு பகுதியில் பாலியல் கொடும் தொல்லைக்கு ஆளாகிக் கொண்டே இருக்கிற பெண்கள் என்று நினைத்தாலே ரத்தம் கொதிக்கிறது.

நம் முதுகிலும் மூளையிலும் எவ்வளவு அழுக்குகளை, அசிங்கங்களை சுமந்து கொண்டிருக்கிறோம்?

பெண்ணைசீண்டுபவன் எவன்என்றாலும். பெண் என்பவள் பொதுச் சொத்து, யார் வேண்டுமானாலும் அடையலாம், பெண்கள் எப்போதும் கடைசி குடிமக்கள், அடிமை வாழ்வே அவர்கள் விதி என்று சொல்வது எது? கல்வியா? பகுத்தறிவா? பண்பாடா? நல்லிதயமா? அல்ல. அல்லவே அல்ல. பெண்களுக்கு எதிரான கற்பனை உலகை மண்டையில் ஏற்றிக் கொண்டு உலவும் வில்லத்தனம், தன்னை உயர்ந்தவனாகவும் அடுத்த மனிதனை தாழ்ந்தவனாக, அடிமையாக, இழிவானவனாகக் கருதுபவன் யாராயினும் அவன் மனநோயாளிதான்.

மீண்டும் சந்திக்கலாம்.

அன்புடன்,

கௌரவ ஆசிரியர்.

ஜென் தத்துவம்:

# வேகமும் விவேகமும்!



ஜென் துறவி ஒருவர் பெரிய மடாலயத்தில் சீடர்கள் சிலருக்கு கல்வி போதித்து வந்தார். அவர் எப்போதும் தன்னிடம் சீடனாக சேர்ப்பவர்களை பரிசோதித்து தான் சேர்ப்பார். அது போல் ஒரு நாள் மூன்று பேர் வந்து, அந்த துறவியை சந்தித்து அவரது சீடர்களாக ஆசைபடுகிறோம் என்று கூறினார்கள். அந்த துறவியும் அவர்களை மறுநாள் வந்து பார்க்குமாறு கூறினார். அவர்களும் 'சரி!' என்று சொல்லி சென்று விட்டனர்.

பின் துறவி தன் சீடன் ஒருவனிடம் 'மறுநாள் அவர்கள் வரும் போது எனது காதில் ஓணான் புகுந்து இறந்துவிட்டாதாக சொல்' என்று சொன்னார். அந்த மூவரும் மறுநாள் வந்தபோது, துறவியின் சீடனும் அவர்களிடம் துறவி சொன்ன மாதிரியே சொன்னான். அதற்கு முதலாமவன், 'துறவியின் ஜாதகப்படி சனித்திசை என்பதால் இப்படி நடந்திருக்கலாம்!' என்று வருத்தத்துடன் சொல்லிச் சென்றான். இரண்டாமவன், 'துறவி போன ஜென்மத்தில் செய்த பாவத்தால், இவ்வாறு ஆகியிருக்கும்!' என்று கவலையுடன் சென்றான். ஆனால் மூன்றாமவன், அந்த சீடனின் முகத்தை உற்று பார்த்து, துறவி நிச்சயம் இறக்கவில்லை என்று அடித்துக் கூறினான். அதுவரை மடாலயத்திற்குள் இருந்த துறவி வெளியே வந்து 'எப்படி சரியாக சொன்னாய்?' என்று கேட்டார்.

'குருவே! உங்கள் இறப்பினால் வரக் கூடிய வருத்தம் உங்கள் சீடனின் முகத்தில் சிறிது கூட தென்படவில்லை. அதிலும் ஒருவரின் காதுக்குள் ஓணான் நுழைவது என்பது சாத்தியமே இல்லை. ஆகவே தான் நான் உறுதியுடன் சொன்னேன்' என்று கூறினான். அவனது விவேகத்தைக் கண்டு திகைத்துக் போன துறவி, அன்று முதல் அவனை தனது சீடனாக ஏற்றுக்கொண்டார்.

## பகவத்கீதை கூறும் போதனை.....!!

வாழ்வென்பது உயிர் உள்ள வரை மட்டுமே! தேவைக்கு செலவிடு. அனுபவிக்க தகுந்தன அனுபவி. இயன்ற வரை பிறருக்கு உதவி செய். ஜீவகாருண்யத்தை கடைபிடி. உயிர் போகும் போது, எதுவும் கொண்டு செல்ல போவதுமில்லை. ஆகவே, அதிகமான சிக்கனம் அவசியமில்லை. உயிர் உள்ள வரை, ஆரோக்கியமாக இரு.

உடல் நலம் இழந்து பணம் சேர்க்காதே. உன் குழந்தைகளை பேணு. அவர்களிடம் அன்பாய் இரு. அவரவர் வாழ்வு, அவரவர் விதிப்படி'' என அறிந்து கொள். மாற்ற முடியாததை, மாற்ற முனையாதே.

மற்றவர் குடும்ப நிலை கண்டு, பொறாமையால் வதங்காதே!. அமைதியாக, மகிழ்ச்சியோடு இரு. பிறரிடம் உள்ள நற்குணங்களை கண்டு பாராட்டு. நண்பர்களிடம் அளவளாவு. நல்ல உணவு உண்டு, நடை பயிற்சி செய்து, உடல் நலம் பேணி, இறை பக்தி கொண்டு, குடும்பத்தினர், நண்பர்களோடு கலந்து உறவாடி, மன நிறைவோடு வாழ்.. வாழ்வை கண்டு களி!. ரசனையோடு வாழ்! வாழ்க்கை வாழ்வதற்கே!

-தொகுப்பு: ஏ.எஸ்.கோவிந்தராஜன்,
சென்னை 24.



# உள்ளங்கையில் 'H' குறி கொண்டவரா நீங்கள்?

ஜோதிடங்களில் பல வகைகள் இருப்பதை நாம் அறிந்திருப்போம். குறிப்பாக, அதில் பலரும் அதிகமாக நம்பிக்கை கொண்டிருப்பது கைரேகை ஜோதிடம் ஆகும். நம் உள்ளங்கை ரேகையை வைத்து செல்வம், தொழில், இல்வாழ்க்கை, ஒரு தனி நபரின் குணாதிசயங்கள் போன்ற அனைத்துமே கூறப்படுகிறது. அந்த வகையில் ஒரு மனிதனின் உள்ளங்கையில் 'ஏ' என்ற எழுத்து போன்று ரேகை இருந்தால் அவர்களின் குணாதிசயங்கள் எப்படி இருக்கும் என்பதைப் பற்றி இந்த பதிவில் காணலாம்.

'H' என்பது மூன்று ரேகைகளின் இணைப்பில் உருவாகி உள்ள ரேகை ஆகும். இது இதயம், அதிர்ஷ்டம், தலை ரேகைகளின் இணைப்பை கொண்டது. இந்த 'ஏ' ரேகையை கொண்டுள்ளவர்கள் அவர்களின் 40 வயதிற்கு மேல் வெற்றிகரமாக இருப்பார்கள். 40 வயதிற்கு பின்னர் அவர்களின் வாழ்வில் ஒரு பெரிய திருப்பம் ஏற்படும். குறிப்பாக, 40 வயதிற்கு மேல் அவர்களின் வாழ்வில் திடீர் பொருளாதார வளர்ச்சி, பெரும்பாலான முயற்சிகள், வேலைகள், அவர்களின் எதிர்பார்ப்புகள் என இவை அனைத்துமே மேலோங்கி இருக்கும். மேலும், 40 வயதிற்கு முன்பு தாங்கள் முயற்சி செய்த கடின உழைப்புக்கான பலன்கள் அனைத்துமே 40 வயதை அடைந்த பின்னர் அவர்களை வந்தடையும் என்பது ஒரு உண்மையான விஷயம். இந்த 'ஏ' ரேகையை கொண்டுள்ள நபர்கள் இயற்கையாகவே உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாக இருப்பார்கள். குறிப்பாக இவர்கள் எப்போதுமே மற்றவர்களுக்கு உதவி செய்யும் மனப்பான்மை கொண்டவர்களாக இருப்பார்கள். மேலும் இவர்கள் தாராள மனதை கொண்டுள்ளதால் சில மக்கள் இவர்களை ஏமாற்றவும் செய்வார்கள்.

இந்த 'H' ரேகையை கொண்டுள்ளவர்களின் வாழ்வில் அதிகப்படியான கடினமான சூழல்களை கடந்து வந்திருப்பார்கள். குறிப்பாக தடங்கல்கள், இடையூறுகள், இவர்கள் செல்லும் பயணத்தில் பல இடைஞ்சல்களையும் சந்தித்து இருப்பார்கள். அவர்கள் விரும்பும் காதலிக்கும் நபர்களுக்கு எதிர்பார்ப்பை தாண்டி அதிகமாகவே உதவி இருப்பார்கள். ஆரம்ப கால கட்டத்தில் இவர்களுக்கு அதிர்ஷ்டம் என்ற எந்த ஒரு உதவியுமே இருக்காது. இருப்பினும் இவர்களின் தன்னம்பிக்கையை இழக்கமாட்டார்கள். 'ஏ' என்ற ரேகையை கொண்டுள்ள நபர்கள் அதிகமான தன்னம்பிக்கை கொண்டிருப்பார்கள். குறிப்பாக, நேர்மறை எண்ணங்களை கொண்டிருப்பார்கள். இதனால் இவர்கள் கடினமாக விடாப்பிடியாக உழைத்துக் கொண்டிருப்பார்கள். அறிவாளி என்பதையும் தாண்டி இவர்களிடம் புத்திக்கூர்மை சிறப்பாகவே அமைந்திருக்கும்.

## வேதமே தலையணையாக...

திருச்சிக்கு அருகில் முசிறி வழியில் உள்ளது, திரு நாராயணபுரம். இங்குள்ள பெருமாள் கோவிலில் பெருமாள் பள்ளி கொண்ட கோலத்தில் வேதங்களை தலையணையாக வைத்து படுத்திருக்கிறார்.

-எஸ்.விஜயலஷ்மி, ஆதம்பாக்கம்.



# உலகின் வித்தியாசமான நீச்சல் குளங்கள்!

உலகில் எத்தனையோ வித்தியாசமானவற்றை படைக்கின்றனர். அதில் நீச்சல் குளமும் விதிவிலக்கல்ல. சில வித்தியாசமான நீச்சல் குளங்களைப் பற்றி தெரிந்து கொள்வோம்.

**பிராண்டேராக்:** ஆஸ்திரேலியாவில் உள்ள நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் பிராண்டேராக் என்று அழைக்கப்படும் அருமையான நீச்சல் குளம் ஆனது கடற்கரையை ஒட்டி அமைந்துள்ளது. குறிப்பாக அங்கு குளிக்கும்போது கடலில் குளித்ததை போன்ற உணர்வு இருப்பதாக கூறப்படுகிறது.

ஏனெனில் 30 மீட்டர் நீளம் கொண்டுள்ள அந்த நீச்சல் குளத்திற்கும், கடலுக்கும் இடையே ஒரு சிறிய வேலி மட்டுமே அமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி கடல் சீற்றம் ஏற்படும்போதும் பெரிய அலைகள் வரும்போதும் கடல் நீர் ஆனது நீச்சல் குளத்திற்கு வருகிறது. அந்த சமயத்தில் நீச்சல் குளத்தில் குளிப்பது வித்தியாசமான ஒரு அனுபவத்தை தருவதாக கூறுகிறார்கள். மேலும் பார்க்க புதியது போல காட்சியளிக்கும்



அந்த நீச்சல் குளம் ஆனது 1887 வருடத்தில் கட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**சபரிலாட்ஜ் நீச்சல் குளம்:** தான் சானியாவில் உள்ள செரன்கெடி நேஷனல்



பார்க்கில் அமைந்துள்ள சபரி லாட்ஜில் அருமையான நீச்சல் குளம் ஒன்று உள்ளது. குறிப்பாக விலங்குகள் மீது ஆர்வம் கொண்ட நபர்களுக்கு மிகவும் விருப்பமான நீச்சல் குளம் ஆகும். ஏனென்றால் அந்த நீச்சல் குளத்தல் பொழுதை கழித்துக் கொண்டு இயற்கை அழகையும், வனவிலங்குகளையும் பார்த்து ரசிக்க முடியும்.

சில சமயங்களில் அங்கு வரும் யானைகள் நீச்சல் குளத்தில் வந்து தண்ணீர் குடித்து விட்டு செல்லும் காட்சிகளை நாம் மிகவும் அருகில் இருந்து பார்க்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

**கேஜ் ஆப்டெத்:** உலகில் உள்ள ஆபத்தான நீச்சல் குளங்களில் இதுவும் ஒன்றாகும். ஒரு உருளை வடிவிலான கூண்டிற்குள் மனிதர்களை பூட்டி பின்னர் அதை நீச்சல் குளத்திற்கு அனுப்புவார்கள். ஏனென்றால் அங்கு மிகப்பெரிய ஆபத்தான முதலை ஒன்று




இருக்கும். சில நேரங்களில் முதலைகள் மனிதர்களை கண்டதும் தாக்கவும், கூண்டை சேதப்படுத்தவும் தொடங்கும். எவ்வளவு தைரியம் கொண்டவராக இருந்தாலும் இந்த நீச்சல் குளத்திற்கு வரும்போது நிச்சயம் பயத்துடன் தான் வெளியே வருவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமின்றி 18 வயதுக்கு மேல் உடையவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுகிறார்கள்.


**சீட்டல் கேலக்ஸி நீச்சல் குளம்:** 575 அடி நீளம் கொண்ட உலகின் நீளமான இந்த நீச்சல் குளம் சீனாவில் உள்ள மகாவ் மாகாணத்தில் அமைந்துள்ளது. இந்த நீச்சல் குளத்தில் இருந்து கொண்டே கீழே இருப்பவர்களையும் பார்க்கும் அளவில் தெளிவாக தெரியும் அளவில் அமைக்கப்பட்டுள்ளது.

**தி ஹெட்ஜ்:** மலை உச்சியில் அமைந்துள்ள தி ஹெட்ஜ் ஹோட்டலின் விளிம்பில் கடல் காட்சியுடன் இந்த நீச்சல் குளம் அமைந்துள்ளது. நீச்சல் குளம் அமைந்துள்ள காட்சியை காணும்போது மிகவும் அருமையாக இருக்கும். அதுமட்டுமின்றி அந்த நீச்சல் குளத்தின் தரைப்பகுதி ஆனது கண்ணாடியால் அமைக்கப்பட்டுள்ளதால் நீச்சல் குளத்தில் இருந்து கொண்டே கீழே நடக்கும் காட்சிகளை காண முடியும். கடல் அழகை ரசித்துக் கொண்டே நீச்சல் குளத்தில் பொழுதை கழிக்க அருமையான இடம் ஆகும்.

**ஐலேண்ட்ஸ் மிகப் பழைய நீச்சல் குளம்:** இது பார்ப்பதற்கு சாதாரண நீச்சல் குளம் போன்று காட்சியளிக்கும். இந்த நீச்சல் குளம் ஆனது 1923-ம் ஆண்டு கட்டப்பட்டது. இந்த நீச்சல் குளத்தை சுற்றியுள்ள இயற்கை அழகு தான் இதன் சிறப்பு ஆகும். ஏனென்றால் நீச்சல் குளத்தை சுற்றியுள்ள இயற்கை அழகு தான் இதன் சிறப்பு ஆகும். ஏனென்றால் நீச்சல் குளத்தை சுற்றி பார்ப்பதற்கு அவ்வளவு அழகாக இயற்கை காட்சியுடன் அமைந்து இருக்கும். ஐஸ்லாந்தின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள வரலாற்று சிறப்புமிக்க மிக பழமையான இந்த நீச்சல் குளம் ஆனது 25 மீட்டர் நீளம் உடையது. மேலும் சுற்றுலா பயணிகளுக்கு மிகவும் பிடித்த இடமாகவும் உள்ளது. ★









# நவராத்திரி, வெற்றி திருவிழா!

**- மாலதி சுந்தரராஜன்**

**தனம் தரும்;கல்வி தரும்;ஒருநாளும் தளர்வறியா மனம் தரும். தெய்வ வடிவும் தரும்;நெஞ்சில் வஞ்சமில்லா இனம் தரும். நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே கனம் தரும் அபிராமி கடைக்கண்களே...**

அரிதாகிய இம்மானிடப் பிறவியில்,கல்வி, செல்வம்,வீரம் அல்லது தைரியம் எல்லாம் ஒருமிக்க கிடைப்பது இன்னும்அரிது.ஆனால்அம்பாளின்கடைக் கண் பார்வை தனம்,கல்வி,துன்பத்திலும் துவளாத மனம்,எல்லா நல்லனவையும் அளிக்க வல்லமை படைத்தது என்கிறார் அபிராமி பட்டர். நவராத்திரியின் மகிமையை ஒரேவரியில் அடக்கி விட்டார்! இவற்றிற்கு அதிபதிகளான துர்கா,லட்சுமி, சரஸ்வதி என்ற சக்தியின் மூன்று அம்சங்களையும் ஒன்றாக வழிபடுவது தான் நவராத்திரி! உலகம் அனைத்தும் சக்தி மயம் என்பதை விளக்குவதே நவராத்திரி விழா. அன்னை சக்தியை மட்டுமில்லாமல் சக்தியின் அம்சமாகிய பெண்களை போற்றிடும் அற்புத விழா நவராத்திரி திருவிழா. ஒரு மனிதனின் நல்வாழ்க் கைக்கு மனோதிடம்,செல்வம்,அறிவு என்ற மூன்றும் அவசியம் என்று உரைக்கிறது நவராத்திரி! **ஸ்ரீசக்தி கொலுவிருக்கும் நவராத்திரி-ஸ்ரீ லட்சுமிவாணியுடன் வரமளிக்கும் ராத்திரி...** என்ற பாடலில் கூறுவது போல், நாம் பக்தியுடன் கேட்கும் வரங்களைத் தந்தருளுவாள் நவராத்திரி நாயகியான ஸ்ரீசக்தி! இதையே பாரதியும், **அம்பிகையை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்'** என்கிறார்!

கிழக்கே காளிதேவியாகவும்,மேற்கே மும்பாதேவியாகவும் வடக்கே இமயத் தில் வைஷ்ணவதேவியாகவும் தெற்கே முக்கடல் தீரத்தில் குமரி அன்னை என்று நான்கு திசைகளிலும் பராசக்தியாக, வீற்றிருந்து எட்டுத் திக்கும்அருள் ஒளியைப்பரப்புகின்றாள்! **ஸ்ரீமாத்ரே நமஹ**, அதாவது அன்னைக்கு நமஸ்காரம் என்று ஸ்ரீலலிதா சகஸ்ரநாமத்தில் கூறுவது போல் அன்னை பராசக்தியை நமஸ்கரித்து நவராத்திரி விழாவை தொடங்குகிறோம். தனது அருண கிரணங்களால் பக்தர்களைக் காத்து அருள் புரிகிறாள்.ஒன்பது நாட்கள் கொண்டாடும் நவராத்திரி பண்டிகை நம் உடலுக்கு புத்துணர்ச்சியையும், மனதிற்கு உற்சாகத்தையும் தருகிறது. இந்தியா முழுவதும் கோலாகலமாக கொண்டாடப்படும் பிரம்மாண்ட விழா நவராத்திரி. புரட்டாசியில் வரும்



இந்த நவராத்திரி, சாரதா நவராத்திரி என்று அழைக்கப்படுகிறது.

முதல் மூன்று நாட்கள் இச்சா சக்தியான துர்கா தேவியை நம் துயர் துடைத்து, மன வலிமையை தந்தருள, பகவதி தேவி, பார்வதி தேவி; பலமிகு தேவி, துர்க்கையளே ஜகமதுயாவும் ஜெயஜெயவெனவே சங்கரி உன்னைப் பாடிடுமே ஹனஹன தகதக பசபசவெனவே தளிர்த்திடு ஜோதியானவளே ரோகநிவாரிணி, சோக நிவாரிணி தாபநிவாரிணி ஜெயதுர்கா! என்று துதிக்கின்றோம். துர்கை நெருப்பின் அழகு. வீரத்தின் இருப்பிடம் அவளை வழிபடும்போது நம் எதிர்மறை எண்ணங்களை அழித்து, நல் வாழ்க்கைக்கு வழி காட்டுகிறாள் ஸ்ரீதுர்கை!! பெண் என்பவள் மாபெரும் சக்தி என்பதைப் புரிய வைக்கின்றாள் துர்கை! மகிஷாசுரன், தன்னுடைய மரணம் ஒரு பெண்ணின் கையால் நிகழ வரம் பெற்றான். ஏனென்றால் ஒரு பெண் தன்னை என்ன செய்ய முடியும் என்ற ஆணவம், அலட்சியம் ஆனால் அம்பிகையோ, மகிஷாசுரமர்த்தினியாக சூரனை வதைக்க ஒன்பது நாட்கள் அவனுடன் போரிட்டு, பத்தாம் நாள் வெற்றியும் பெற்றாள்!

பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை. அதனால் செல்வத்தை அருளுமாறு அடுத்த மூன்று நாட்கள் கிரியா சக்தியான லட்சுமி தேவியை துதித்து, மாலவன் மீது வைத்த மாயப்பொன்விழி இரண்டை, மாது நீ என்னிடத்தில் வைத்தனை என்றால் நானும் காலமாக்கடலில் உந்தன் கருணையால் செல்வம் பெற்று கண்ணிறை வாழ்வு கொள்வேன் கண்வைப்பாய் கமலத்தாயே! என்று வேண்டுகிறோம்.

மகாலட்சுமி மலரின் அழகு. மலரின் மேவு திருவே, உன்மேல் மையல் பொங்கி நின்றேன் என்று மகாகவி பாரதியார் கூறுவது போல், லட்சுமி தேவி, அழகின் இருப்பிடம், இவளுக்கு ஈடான அழகோ, கருணையோ வேறு எவருக்கும் இல்லை. ஆகவேதான் ஈசன் தன் சரீரத்தில் பாதியை சக்திக்கு தந்திருக்கிறார். அவரது இடப்பாகத்தைக் கொண்ட ஸ்ரீசக்தியின் இடது காலே காமனை எரிக்கவும், காலனை வெல்லவும் செயல்பட்டது. நடராஜப் பெருமானின் தூக்கிய குஞ்சித பாதமும் அவளுடையதே. ஆக எல்லாப் பெருமையும் கொண்ட ஸ்ரீதேவி, செல்வத்தின் இருப்பிடமாக உறைகிறாள் உலர்ந்த நெல்லிக் கனியை ஸ்ரீஆதி சங்கரருக்கு அன்புடன் அளித்த ஏழை மாதுவின் வீட்டில் பொன்மழை பெய்யக் காரணம்? திருமகளின் அருளை வேண்டி அவர் மனமுருகி துதித்த கனகதாராசுலோகத்தின் பலன்தான்! அமுதமயமானவள்!. அஷ்ட லட்சுமியாக, நமக்கு எல்லா நலன்களையும் அருளுபவள்!

கற்றோர்க்கு சென்ற இடம் எல்லாம் சிறப்பு; அல்லவா? இறுதி மூன்று நாட்கள் ஞானசக்தியான சரஸ்வதியை





கல்வியும்,கலை ஞானமும் அருள வேண்டுகிறோம். கையில் வீணையும், ஏட்டுச்சுவடியும் ஏந்தி கல்விக்கும்,கலை ஞானத்திற்கும் அதிபதியான கலைவாணி, **வெள்ளைத்தாமரைபூவிலிருப்பாள்,வீணை செய்யும் ஒலியிலிருப்பாள்,கவிதை கூறும் பாவலர் உள்ளத்திலிருப்பாள்...** பிறவியிலேயே பேச்சிழந்த மூகர் எனும் ஞான பண்டிதருக்கு அம்பாள் அருள் புரிந்தது அற்புதம்!தன் வாயிலிருந்த சுகந்தமான தாம்பூலத்தை அவர் வாயில் உமிழ,என்ன ஆச்சரியம்!மூகர் பேச்சுத் திறனும்,கவி புனையும்திறனும் ஒருங்கே கிடைக்கப் பெற்றார்! அடுத்த கணமே பேரருவியாக, 500 துதிகளால் அம்பாளைப் பாடினார் .ஐநூறு துதிகள் கொண்ட இவ்வற்புத நூல் அவர் பெயருடன் சேர்த்து,மூக பஞ்சசதீ என்ற பெயர் பெற்றது! அதேபோல்புகழ்பெற்ற கவி ஸ்ரீகுமரகுருபரர், காசி நகரத்திற்கு யாத்திரை மேற்கொண்டார். காசியில், உழவாரப் பணியில் ஈடுபட்டிருந்த போது,பூமிக்கடியில் ஒரு சிவலிங்கத்தைக் காண்கிறார்.அரசனின் உதவி இல்லாமல் அதை வெளிக்கொணர முடியாது. அரசரைக் காணச் சென்றார். இந்துஸ்தானி மொழி தெரியாததால் அரண்மனை சிப்பாய்கள் இவரை உள்ளே அனுமதிக்க வில்லை. ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்ற குமரகுருபரர்,கலைமகளைத் துதிக்கின்றார்.உடனே அவள் அருளால் சகலகலாவல்லிமாலை எனும் அற்புத ஸ்துதியை பொழியும் பேறு பெற்றார். **பண்ணும் பரதமும் கல்வியும் தீஞ்சொற்பனுவலும் யான்எண்ணும் பொழுது எளிதெய்த நல்காய்,எழுதா மறையும் விண்ணும் புவியும் புனலும் கனலும் வெங்காலும்,அன்பர் கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே!**

என்று துதித்ததும்,அன்னை சரஸ்வதி, இந்துஸ்தானி,சமஸ்கிருதம் ஆகிய இரண்டு மொழிகளின் புலமையை வாரி வழங்கினாள்.

**''மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் என் பண் கண்டளவிற் பணியச்செய்வாய்.''**என்றதும், அவரை எள்ளி நகையாடிய அனைவரும் அவரை வணங்கும்படி,சிங்கத்தின் மீது கம்பீரமாக அனுப்பி வைத்தாள்!அவள் அருளால், மன்னருடன் அவர் மொழியில் பேசி காசியில் கேதாரநாத் கோவிலை நிர்மாணித்தார் குமர குருபரர்!

சரஸ்வதி பூஜையன்று மாணவர்கள், தங்கள் புத்தகங்களை பூஜையில் வைத்து, சிறந்தகல்வி,அறிவினைவழங்கபிரார்த்தனை செய்வர்.இசை பயிலுபவர்கள் கலை ஞானத்தை அருள வேண்டுவர்.இசைக்கருவிகளும்பூஜையில் இடம் பெறுவதுண்டு. ஆயுத பூஜை என்றும் அழைக்கப்படுவதால் நாம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தும் கருவிகளையும் வைத்து வழிபடுவது சிறப்பு. இவ்வாறு மலைமகள், திருமகள், கலைமகள் மூவரையும் துதித்து, பத்தாம் நாள் விஜய தசமியாக,வெற்றியைத் தரும் நாளாக




பச்சை மரகதத்தால் ஆன சிவனின் சிலை திருமுடச்சுரம் என்ற பேரூரில் உள்ளது. இங்குள்ள ஞாலபுரீஸ்வரர் மற்றும் மரகதத்தால் ஆன சிவனின் சிலைகள் உள்ளன. இவரை தரிசித்தால் வாழ்வில் செழிப்பு உண்டாகும் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை. அதே போல சிவகங்கை மாவட்டம், திருப்பாச்சேத்தி சிவன் கோவிலில் பச்சை மரகதலிங்கம் உள்ளது. மிக முக்கியமான நாட்களில் வெளியே எடுத்து பூஜை செய்கின்றனர்.

**- ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்.**



கொண்டாடுகிறோம்! விஜயதசமி, வித்யாரம்பம் என்று,

அறிவாற்றலை வளர்க்கும் நாளாக கருதப்படுகிறது. அன்று, பாட்டு படிப்பு என்று புதிய வகுப்பில் சேருதலும் புதிய தொழில் தொடங்குதலும் வெற்றியை தேடித்தரும் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது!

தெய்வீகப் பெண்மையை கொண்டாடும் விழாவான நவராத்திரி பெண்ணின் பெருமையையும், வலிமையையும் பறை சாற்றுகிறது. அம்பிகை சண்டமுண்டர்கள், சும்பநிசும்பர்கள் ஆகிய அரக்கர்களையும் அழித்து வெற்றி கொண்ட நாள் விஜயதசமி நன்னாள்! ஒன்பது நாட்கள் தனிசக்தியாக விளங்கி அருள் புரியும் ஜகன்மாதா, பத்தாம் நாள் ஈசனை வணங்கி, சிவசக்தியாக ஐக்கியரூபிணியாக மாறுகிறாள் என்கிறது புராணம்! மலையின் மீது கொடி படருவது போல் சிவபெருமானும் அம்பிகையும் இருக்கிறார்கள் **சுடரும் கலைமதி துன்றும், சடைமுடிக் குன்றில் ஒன்றிப் படரும் பரிமளப் பச்சைக்கொடியும்** என்று அபிராமி பட்டர் அழகுற பாடுகிறார்! ஆட்சி, அதிகாரம், நாடு என்று எல்லாவற்றயும் இழந்த பாண்டவர் பன்னிரு ஆண்டுகள் வனவாசம், ஒரு வருடம் அஞ்ஞாத வாசம் முடிந்து விஜயதசமி அன்றே அனைத்து ஆயுதங்களையும் பெற்றனர். ஆதலால் விஜயதசமி வெற்றியைத் தரக் கூடிய நாளாகும்!

இப்பேற்பட்ட நவராத்திரி மகிமையால் ஈசன் முப்புரம் எரித்தார் என்றும், ஸ்ரீராமன் சீதையை மீட்டார் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

விருத்தாசுரனைக் கொல்ல இந்திரனும் நவராத்திரி விரதத்தை மேற் கொண்டதாக கூறப்படுகிறது. மூன்று மூர்த்திகளாக, முப்பத்து முக்கோடி, மூர்த் திகளாக, அத்தனையாகவும் இருப்பது ஒரே சக்திதான். அவள்தான் அன்னை பரா சக்தி! இவ்வுண்மை ஸ்ரீலலிதாசகஸ்ரநாமத் தில், ஸ்ருஷ்டிகர்த்ரீ பிரம்மரூபா; கோப்த்ரீ கோவிந்தரூபிணி; சம்ஹாரிணீ ருத்ரரூபா. என்று கூறப்படுகிறது. அதாவது, அவளே படைப்பதும், அழிப்பதும், காப்பதும் ஒரே சக்தியாக வெவ்வேறு நாமங்களில் நிகழ்த்தி ஓங்காரிணியாக இருக்கிறாள்!

இவ்வளவு பெருமை கொண்ட இவ்விழா, இமயம் முதல் குமரி வரை மிக சிறப்பாக கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டில் பாரம்பரிய வழக்கப்படி கொலு வைக்கின்றோம். அசுரர்களை வதைத்த அன்னை பராசக்தி யையும், மூவர்கள், தேவர்கள், இறையருள் பெற்ற மகான்கள், சித்தர்கள் என்று எல்லோரையும் பெருமைப்படுத்தும் விதத்திலும், சக்தி எல்லா ஜீவராசிகளிலும் வியாபித்திருக்கிறாள் என்ற உண்மையை உணர்த்தும் வகையிலும் அவர்கள் உருவங்களை பொம்மை வடிவில் வைத்து வணங்குகிறோம். கொலு வைக்க என்று ஒரு நியதி உள்ளது. புரட்டாசி மாதம் மகாளய அமாவாசையன்று 5,7,9 என்று ஒற்றைப்படை எண்ணில் படிகள் அமைக்க வேண்டும். முதலில் கலசம் வைக்க வேண்டும். ஒரு

பித்தளை அல்லது வெள்ளிச்சொம்பில் லட்சுமி வாசம் செய்யும் பொருட்களான பச்சரிசி, மஞ்சள்கிழங்கு, நாணயம் இவைகளை இட்டு, தேங்காய், பூ, மாவிலை சந்தனம் குங்குமம் இவற்றால் அலங்கரிக்க வேண்டும்.

பொம்மைகளை வைக்கும் போது நாம் அமைத்திருக்கும் முதல் மேல் படியில், தெய்வ வடிவங்கள், பின் அடுத்தடுத்த படிகளில் மகான்கள், தேசத் தலைவர்கள் உட்பட மனிதபொம்மைகள், மற்ற ஜீவராசிகள், பின் இறுதியாக தாவர வகைகள் என்ற வரிசையில் இடம் பெற்றிருக்க வேண்டும். காலத் திற்கேற்ப புதிய கருத்துக்களைக் கூறும் பொம்மைகள் வரவேற்கப்படுகின்றன. இந்த வருடம் மாஸ்க் அணிந்த பொம்மைகள் வந்தாலும் ஆச்சரியமில்லை! படிக்கட்டோடு நின்று விடுவதில்லை கொலு அவரவர் கற்பனையையும் கைத் திறனையும் காண்பித்து, அணைக்கட்டு அருவி, கிராமம், கோவில்கள் என்று அழகாக அமைத்து வண்ண வண்ண கோலங்கள், விளக்குகள் கொண்டு அலங்கரித்து கொலுவிற்கு மேலும் மெருகூட்டுவர்! வசதி உள்ளவர்கள் தங்கள் வீட்டிலுள்ள ஓர் அறையையே கொலுவிற்கென்று ஒதுக்கி விடுவர்! சிறுவர்களை இதில் ஈடுபடுத்தும்போது அவர்களுடைய திறமையும் கலாசார அறிவும் வளர்கின்றன.

கண்ணுக்கு விருந்து கலைநயம் மிக்க கொலு. நாவிற்கு, சுவை மிக்க சுண்டல்! கலப்படம் இல்லாத, புரதசத்துள்ள தானியங்களால் செய்த சுண்டல்களை அம்பாளுக்கு நைவேத்யம் செய்து விட்டு கொலுவிற்கு வந்த பெண்களை உபசரித்து, அவர்களுக்கு வெற்றிலை, பாக்கு, பழம், சுண்டல் பின் அவரவர் வசதிக்கேற்ப பரிசுப்பொருட்கள் கொடுப்பது வழக்கம். ஒவ்வொரு சுமங்கலியையும் சக்தியின் ரூபமாக கண்டு, மனதில் இறை உணர்வுடன் அவர்களை உபசரிக்க வேண்டும். சுமங்கலிப் பெண்கள் மட்டுமல்லாது சிறு பெண்குழந்தைகளும் சக்தியின் அம்சமாக கருதப்படுவர். அதனால் குமாரி பூஜை செய்வது மிகவும் விசேஷம். மூன்று வயது முதல் பத்து வயது வரை உள்ள சிறுமிகள் குமாரி பூஜைக்கு உரியவர். அவர்களுக்கு நலங்கிட்டு, வெற்றிலை பாக்கு, பூ பழம் மற்றும் ஆடை ஆபரணம் என்று தாம்பூலத்துடன் அளிப்பது மிகவும் சிறப்பாகக் கருதப்படுகிறது பூஜை செய்யும் இடம் சுத்தமாக இருப்பது அவசியம். மாவினால் கோலமிட்டு செம்மண் பூசி அலங்கரிக்க வேண்டும். பூஜை செய்யும் பெண்களும் மனத்தூய்மையும் உடல் தூய்மையும் கொண்டிருக்க வேண்டும்.. இந்த ஒன்பது நாட்களும் நறுமணமிக்க மலர்களால் பூஜிக்கும்போது, அகம் மகிழ்ந்து போகிறாள் அன்னை பராசக்தி! லலிதா சஹஸ்ரநாமம், சாம்பேயகுஸுமப்ரியாயை



என்று தேவியை வர்ணிக்கின்றது. அதாவது பராசக்தி செண்பகப்பூவை விரும்பி சூடுபவள் என்கிறது. மலர்களை விரும்பாத தெய்வம் உண்டோ?

**மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து மாபதம் அணிந்து பணியேனே...** என்கிறார் அருணகிரிநாதர்!

செவிக்கு இன்பம் நல் இசை. அதுவும் நவராத்திரி கலை விழா நமக்கு வழங்குகிறது!பராசக்தி சங்கீதப்பிரியை! ஒன்பது நாட்களும் எங்கும் இசை நிகழ்ச்சிகளைக் காணலாம்;கேட்டு ரசிக்கலாம்! ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட ராகம் விசேஷமாக பாடப்படுகிறது.

கோவில்களிலும் வீடுகளிலும் அம்பாளின் அருளை வேண்டி,அபிராமி பதிகம்,அந்தாதி,தேவிமகாத்மியம், சௌந்தர்யலகரி, லலிதாசகஸ்ரநாமம் போன்ற சுலோகங்களும்,பக்திப் பாடல்களும் முழங்கக் கேட்கலாம்! அம்பிகையின் நாமங்களே தோத்திரங்கள்தான்!

**'வினையேன் தொடுத்த சொல் அவமாயினும் நின் திருநாமங்கள் தோத்திரமே''** என்கிறார் அபிராமிபட்டர். நவராத்திரி கீர்த்தனைகள் என்றே பல சங்கீத வித்வான்கள் எழுதி,சங்கீதத்திற்கும், சக்திக்கும் பெருமை சேர்த்துள்ளனர்!

பல்வேறு மொழிகளையும்,பாரம்பரிய வழக்கத்தையும் நம் நாடு கொண்டிருந்தாலும், எல்லோரையும் ஒன்றாக இணைக்கும் பெரும் விழா நவராத்திரி எனலாம்!இது தான் வேற்றுமையில் ஒற்றுமை என்பது! ஒரொரு மாநிலமும் ஒரொரு விதமாக கொண்டாடுகிறது. அவ்வளவுதான்! அன்னை சக்தியை,குமரி அம்மன்,சாமுண்டீஸ்வரி காளிதேவி,வைஷ்ணவ தேவி என்று பல திருநாமங்களால் வழிபட்டாலும்,அவள் நவராத்திரி தேவிதான்!

உலகப்புகழ் பெற்ற விழாக்களில் ஒன்று மைசூர் தசரா என்று அழைக்கப்படும் நவராத்திரி விழா. தேவி பராசக்தி, சாமுண்டீஸ்வரியாக வடிவம் கொண்டு மகிஷனை சம்காரம் செய்த இடமே மகிஷபுரம், மஹிஷூர் என்ற பெயர்களால் அழைக்கப்பட்டு பின்னர் மைசூர் என்று மறுவியதாக அறியப்படுகிறது.தசரா பண்டிகையின்



முதல் நாள்,மைசூர் உடையார் வம்ச மன்னர் சாமுண்டீஸ்வரியை வணங்கி சிறப்பு பூஜைகள் செய்து,விழாவினை தொடங்கி வைப்பார்.நவராத்திரி ஒன்பது நாட்களும் கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெறும்.பத்தாம் நாள்,விஜயதசமி அன்று ஜம்பூ சவாரி எனும் யானைகள் அணிவகுப்பு மிகவும் சிறப்பானது. நன்கு அலங்கரிக்கப்பட்ட தலைமை யானையில் சாமுண்டீஸ்வரி பவனி வருவது கண் கொள்ளாக் காட்சி!அதன் பிறகு,தீப ஒளி அணிவகுப்பு எனும் மாபெரும் விளக்கொளி வைபோகம், வான வேடிக்கை, நடன,இசை நிகழ்ச்சிகள், இவற்றால் நகரமே தேவலோகம் போல் காட்சி தரும்! புதுதில்லி மற்றும் வரலாற்றுப் புகழ் வாய்ந்த அயோத்தி, வாரணாசி மதுரா,பிருந்தாவனம் ஆகிய நகரங்களில் ஆண்டுதோறும் நவராத்திரி ராம்லீலா என்ற பெயரில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஸ்ரீராமரின் கதை நாட்டியநாடகமாக நவராத்திரியின் போது அரங்கேற்றப்படுகிறது

நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கும் போரில், தீயசக்திகள் அழிக்கப்படுவதை இறுதிநாளான விஜயதசமி அன்று புதுதில்லி ராம்லீலா மைதானத்தில், இராவணன்,கும்பகர்ணன்,இந்திரஜித் ஆகியோரின் உருவங்களை எரித்துக் கொண்டாடுவர்!

குஜராத் மாநிலத்தில்,புகழ்பெற்ற கர்பா மற்றும் தாண்டியா நடனத்துடன், நவராத்திரி கொண்டாடப்படுகிறது. கர்பா நடனத்தில் பெண்கள் ஒரு பானையில் விளக்கை வைத்து,சுற்றி நின்று வட்டமாக நளினமாக நடனமிடுவர்.தாண்டியா நடனத்தில் ஆண் பெண் இருவரும் ஜோடியாக கலந்து கொள்வர்.கையில் மூங்கில் குச்சிகளை வைத்து ஆடும் நடனம் இது. இங்கு



## மரங்களிலும் சரஸ்வதி!

**ம**ரங்களில் சரஸ்வதி வாழ்வதாலேயே மரம் கொண்டு செய்யப்படும் இசைக் கருவிகளை சர்ஸ்வதி பூஜையன்று வாக்தேவியாக நினைத்து வழிபடுகிறோம்.

இவள் ஏன் மறைந்து வாழ்கிறாள்? ஒரு சமயம் உலட்சுமிக்கும், சரஸ்வதிக்கும் இடைய 'யார் உயர்ந்தவர்' என்ற சர்ச்சை ஏற்பட்டது. பிரம்மனிடம் கேட்டனர். அவள் லட்சுமியின் புதல்வர் அல்லவா? அன்னையை விட்டுக் கொடுப்பாரா? 'லட்சிமியே சிறந்தவள்' என்றார் அவர்.

அவமானப்பட்ட சரஸ்வதி பிரம்மனின் கையிலிருந்த ஸ்ருஷ்டி தண்டத்தைப் பிடுங்கி கொண்டு மறைந்தாள். பிரம்ம தண்டம் பறி போனதால் ஸ்ருஷ்டி தொழில் செய்ய முடியாமல பரிதவித்த பிரம்மன் மகாவிஷ்ணுவை நாடினார்.

அசுவமேத யாகம் செய்தால் தான் மற்றொரு ஸ்ருஷ்டி தண்டம் தருவதாகக் கூறினார் மகாவிஷ்ணு.

பிரம்மன் யாகத்திற்காகான ஏற்பாடுகளை செய்ய தான் இல்லாமல் யாகம் செய்வதை நினைத்து கோபப்பட்ட சஸ்வதி தேவி, யாக சாலையை எரிக்கும்படி அனலை உண்டாக்கினார். அந்த அனலையும் தாங்கிப் பிடித்தார் மகாவிஷ்ணு. அதனால் அதிகம் கோபமடைந்த தேவியானவள் ஆக்ரோஷத்து டன் பூமிக்கு வந்து மரங்களிலும் மற்றும் நீர் நிலைகளிலும் மறைந்து இருந்தாளாம். இதன் காரணமாகவே மரத்தால் செய்யப்பட்ட இசைக் கருவிகளை வாக் தேவியாக மனதில் நிறுத்தி வழிபடுகிறோம்.

**- ஜெயலட்சுமி கோபாலன், சென்னை 64.**

பூஜைகளை விட இவ்வகை நடனங்களே புகழ் பெற்றதாகும். மகராஷ்ட்ராவில் நவராத்திரி முதல் நாளன்று சக்தியின் அம்சமான நவதானியங்களை மண் கலசங்களில் வளர்ப்பார்கள். விஜயதசமி யன்று அவற்றை ஊர்வலமாக எடுத்துச் சென்று ஆறுகளில் கரைத்து விடுவார்கள். இந்நிகழ்ச்சிக்கு காகற்புங்னே என்று பெயர்.

வங்காளத்தில் நவராத்திரியை துர்கா பூஜை என்ற பெயரில் மிக சிறப்பாக கொண்டாடுகிறார்கள். 51 சக்தி பீடங்களில் 16 சக்தி பீடங்கள். வங்காளத்தில் மட்டுமே இருப்பதாக கூறப்படுகிறது. வங்காள மக்களின் சக்தி வழிபாடு வாழ்க்கையின் ஒரு அங்கமாகவே இருக்கிறது. ஆகவே இப்பண்டிகையின் போது தலைநகரமாகிய கொல்கத்தா விழாக்கோலம் பூண்டிருக்கும். மிக முக்கியமான விஷயம் என்ன வென்றால், பந்தல் என்ற அமைப்பில் கொல்கத்தாவின் பிரதான சாலைகளிலும், முச்சந்தி இடங்களிலும் துர்கா, லட்சுமி, சரஸ்வதி தெய்வங்களின் பிரம்மாண்டமான உருவங்கள் வைக்கப்பட்டிருக்கும். இவை மிகப்பெரிய பொருட்செலவில் உருவாக்கப்படுகின்றன. மிக தத்ரூபமாக காண்போரை பரவசப்படுத்தும் வகையில் காணப்படும். இரவு 12 மணி வரை மக்கள் கூட்டம் கூட்டமாக இதைக்காண குதூகுலத்துடன் வருவர்! பிரபல நடிகர்களும் வருகை தந்து, வழிபடுவர்! கடைகளில் வியாபாரமும் இரவு 12 மணி வரை நடைபெறும் இரவு முழுதும் நகரம் ஒளிவெள்ளத்தில் மிதக்கும் என்றால் அது மிகையாகாது!

இவ்வாறு, பக்தி, பண்பாடு, கலா சாரம், கலைத்திறன், விருந்தோம்பல் என்று பல நல்ல விஷயங்களை வெளிப்படுத்தும் ஒரு முழுமையான பண்டிகை நவராத்திரி. இந்த ஒன்பதுநாட்களும், அம்பிகை, நவசக்திகளாக இருந்து நம்மை காத்து வருகிறாள். அகிலம் முழுதும் மிகப் பெருமையாக போற்றப்படும் பண்டிகை நவராத்திரி! அயல் நாடுகளிலும் நம் கலாசாரத்தை விட்டுக்கொடுக்காது உற்சாகத்துடன் கொண்டாடும் பண்டிகை நவராத்திரி! நமக்குக்கிடைத்த அருமையான வாழ்க்கையில் மனம், மொழி, மெய் என்ற மூன்று வழிகளையும் உயர்ந்த வகையில் செயல்படுத்தி அன்னை பராசக்தியின் அருளைப் பெறுவோம்!

**சகலசெல்வங்களும் தரும் இமயகிரிராஜ தனயை மாதேவி நின்னை சத்யமாய் நித்யம் உள்ளத்தில் துதிக்கும் உத்தமருக்கு இரங்கி மிகவும் அகிலமதில் நோயின்மை கல்வி தனதான்யம் அழகு புகழ் பெருமை இளமை அறிவு சந்தானம் வலிதுணிவு வாழ்நாள் வெற்றி ஆகு நல்லூழ் நுகர்ச்சி தொகை தரும் பதினாறு பெரும் தந்தருளி சுகானந்த வாழ்வளிப்பாய்...என்று மன முருக பிரார்த்திப்போமாக!!**

# மூட்டு வலிக்கு மருந்தில்லா மருத்துவம்!



-பேராசிரியர் க.ம.ராஜேஷ்கந்தன்

மூட்டுவலி என்று குறைபட்டுக் கொள்ளாதவர்கள் அரிது எனும் நிலைமையே எங்கும் பரவலாக்க் காண்கிறோம். ஒவ்வொரு குடும்பத்தில் ஒருவருக்கு உள்ளது என்பதே உண்மை நிலை. இதற்குக் காரணம் நமது உணவு முறை, நடைமுறை வாழ்க்கையில் ஏற்படும் தவறுகள்.

இதனால் மூட்டில் இருக்கும் குருத் தெலும்பு, தசை நாளங்களில் தேய்மானம், எலும்பில் சிறிய பிளவு, முறிவு முதலிய சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதனால் மூட்டில் வலி ஏற்படுகிறது.

முழங்கால் மூட்டானது, எண்சாண் உடலை வலிமையுடன் அதன் எடையைத் தாங்கும் வகையில் அமைந்துள்ளது. மேலும் மூட்டு வெளியே நீட்டிக் கொண்டு இருப்பதால் கீழே விழுந்தாலோ மோதினாலோ உடல் எளிதில் அடிபடுகின்றன. காயங்கள் உண்டாகின்றன. முழங்கால் மூட்டுப் பிடிப்பு, வீக்கம் ஏற்படுகிறது.

நம் உடலின் இயக்கத்தில் எலும்பு, நரம்பு, தசைகள் ஆகியவற்றிற்குப் பெரும் பங்கு உண்டு. 'நிற்பதும் நடப்பதும் நின்செயலாலே' என்று பாரதி பாடியது நம்மைப் பொறுத்த வரை உதவுபவை மூட்டுகள். அதில் உட்காரவும், உடல் வளைந்து கொடுக்கவும் உதவுபவை என்று சேர்த்துக் கொள்ளலாம்.

முழங்கால் மூட்டு மிகவும் சிக்கலானது. எலும்பின் அசைவுக்கு துணை நிற்க 'காரிலேஜ்' எனும் ஜவ்வு அதன் மீது உள்ளது.

மூட்டு என்றால் சுருக்கமாகக் கூறுவது எனில் இரண்டு எலும்புகள் சந்திக்கும் இடம். மூட்டுகள் எலும்புகளை இணைத்துப் பிடித்து எலும்புக்கூடு நகர உதவுகிறது.


மூட்டு ஜவ்வுகள் சேதமுற்று, மூட்டின் இயல்பான இயக்கம் செயலின்றி மூட்டு களில் வலி, பிடிப்பு, சிதைவுகள் ஏற்படுவதற் குச் சிலருக்கு மூட்டுகளின் இடையே இருக்கும் ஆர்டிகுலர் கார்டிலேஜி எனும் மென்மையான பரப்புகள் சீரற்று ஆவதும் காரணம்.

மனித உடலில் பலவகையான மூட்டுகள் உள்ளன. பந்துக்கிண்ண மூட்டு, மற்றும் இடுப்பு, தோல்பட்டையிலும் கையின் பெருவிரல்களிலும் மூட்டுகள் உள்ளன.

முழங்கால், முழங்கை, முட்டிகள், விரல்கள் ஆகியவற்றில் இருப்பவை மடங்கும் மூட்டுகள். கணுக்கால், மணிக் கட்டுப் பகுதிகளில் உள்ளவை நழுவும் மூட்டு வகையின.

மூட்டுவலியின் அறிகுறி எவையெனில் தரையில் உட்கார, உட்கார்ந்து எழச் சிரமப் படுவது, அதிக எடை தூக்கி நடக்கையில் மூட்டில் வலிப்பது, முட்டியை மடக்கும் போது லேசாக ஒருவித சத்தம் கேட்பது, கால்களை நீட்ட, மடக்கச் சிரமப்படுவது, மூட்டில் வலி, வீக்கம், மூட்டு இறுக்கம் ஆகியன.

மூட்டு வலி ஏற்படாமல் இருக்க முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் உள்ளன.



போயிற்று. தனக்கு தக்க ஆலோசனை கூறித் தனக்கு இருந்த தலைவலியைப் போக்க உதவியதற்கு நன்றி தெரிவித்துப் பாராட்டுக் கடிதமும் அனுப்பியிருந்தார்.

நோயுற்று இருக்கையில் ஓடுவதோ, வேகமாக மாடிபடியில் ஏறுவதோ கூடாது. கால் அளவுக்கு சாரியான செருப்பு, அல்லது ஷூ அணிய வேண்டும். மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தினமும் தண்ணீர் நிறையக் குடிக்க வேண்டும்.

மூட்டுவலி உள்ளவர்கள் அதனைத் தவிர்க்கவும், பின்பற்றவும் சில நடவடிக்கைகள் மேற்கொள்வது நல்லது. ஆவியில் வேகவைத்த இட்லி, இடியாப்பம், கொழுக்கட்டை ஆகியவற்றை உண்ண வேண்டும். நடக்க இயலாதவாறு உண்ணக் கூடாது. கால் பங்கு வயிறு காலியாக விட வேண்டும். பிரிட்ஜில் வைக்கபட்ட உணவுகள், ஐஸ் வாட்டர், குளிர் பானங்கள் ஒத்துக் கொள்ளாது. சிவப்பு அரிசி, பட்டை தீட்டாத தவிடுடன் கூடிய கைக்குத்தல் அரிசி உகந்தது. பூண்டு, வெங்காயம், இஞ்சி முதலிய உடலுக்கு நன்மைசெய்யும் உணவுப் பொருட்களைத் தவிர்க்கவே கூடாது. மூட்டு வலி உள்ளவர்கள் அதிக உடற்பயிற்சியைத் தவிர்த்துக் காலாற நடக்கலாம். பொரித்தவை, வறுத்தவற்றைத் தவிர்த்து, பச்சைக் காய்கறிகள், பழங்கள் அதிகம் சாப்பிடுவது நல்லது.

மூட்டுவலிக்கு இயற்கை மருத்துவம், மருந்தில்லா மருத்துவம் என்பது, யோகாசனம், முத்திரைப் பயிற்சி ஆகியன ஆகும்.

யோகாசனத்தைதகுந்த யோகாசனநிபுணர் ஆலோசனையுடன் கற்று பின்பற்றவும். இல்லையெனில் வலி குறைவதற்குப்

அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

எந்தக் காரணம் கொண்டும் குதிகால் உயரச் செறுப்பு அணியவே கூடாது. இங்கே இங்கு ஒரு செய்தியை சொன்னால் எவ்வளவு சரியானது என்பது விளங்கும்.

திருமதி இந்திரா காந்திக்குக் கடுமையான தலைவலி. டெல்லியில் எவ்வளவோ மருத்துவர்கள் கவனித்தும் தொடர்ந்து இருந்து வந்தது. நரம்பியல் நிபுணர் டாக்டர் ராமமூர்த்தி ஆளுநரின் மருத்துவர். இந்திரா அம்மையார் சென்னை வந்தால் ஆளுநர் மாளிகை விடுதியில் தங்குவது வழக்கம். அப்போது டாக்டர் ராமமூர்த்தியைக் கன்சல்ட் செய்ய யோசனை சொல்லவே, இந்திரா அம்மையாரும் மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டார்.

டாக்டர் ராமமூர்த்தியும் அவரைப் பரிசோதித்து, அவருக்கு உடல் கோளாறு, நரம்புக் கோளாறு ஏதும் காரணமில்லை என்று கண்டறிந்து, இந்திரா அம்மையார் அணியும், உயர்ந்த குதிகால் செருப்பு தான் காரணம் என்று அறிந்து அதனை மாற்றித் தட்டையான சாதாரணக் காலணி அணிந்தாலே சரியாகிவிடும் என்று கூறியிருக்கிறார்.

இந்திரா அம்மையாரும் கால் செருப்பை மாற்றிப் பார்த்திருக்கிறார். விளைவு தலைவலி போயே




பதில் கூடிவிடக் கூடும் என்பதை எச்சரிக்கையாகவே தெரிவிக்கிறோம்.

**மூட்டுவலிக்கு யோகாஸனம்:** யோகாசன நிபுணர்கள் மூட்டு வலிக்கு மிக நல்ல பயன் அளிக்கக் கூடியவை என தடாசனம், பவான் முக்தாசனம், மகராசனம், புஜங்காசனம், விர்கோசனம் ஆகியவற்றைப் பரிந்துரைக்கின்றனர்.

எனினும் இவற்றில் அதிகச் சிரமம் தராத ஆசனங்களைக் குறைந்தது 2-3 நிமிடங்கள் மட்டும் செய்ய வேண்டும். காலை, மாலை இருவேளையும் செய்யலாம். முடிந்த பின் மூச்சுப் பயிற்சி மேற்கொள்க. உணவுக்கு முன் செய்தல் நல்லது.

**மூட்டுவலிக்கு முத்திரை:** இடது கைவிரல் நுனியுடன் நடுவிரல் நுனியை அழுத்துக. அதே வேளை வலது கை பெருவிரல் நுனியுடன் மோதிர விரல் நுனியை அழுத்த வேண்டும். இப்படி தினசரி மூட்டுவலி இருக்கும்போதே குறைந்தது 5 நிமிடமும் அதிகமாக 5 நிமிடங்கள் செய்யலாம். நேரம் கிடைக்கும் போது உட்கார்ந்து கொண்டு இந்த முத்திரை பயிற்சி செய்தால் மூட்டுவலி மிக விரைவில் குணமாகும்.



**மூட்டுவலிக்கு அக்குபிரஷர் சிகிச்சை:** முழங்காலில் உள்ள புள்ளிகளிலும் தனித்தனியாக 20 விநாடிகள் அழுத்தம் கொடுக்க வேண்டும். கை,கால்,விரல்களை அடிப்பாகத்தில் அழுத்தமாக பிடித்து விடவும்.

சூடு செய்த பூண்டு எண்ணெயைத் தடவி அழுத்தம் கொடுத்தால் நல்ல நிவாரணம் கிடைக்கும். வலியின் தீவிரத்தைப் பொறுத்து தினமும் 3 அல்லது 4 முறை அழுத்தம் கொடுக்க வேண்டும்.

வெந்நீரில் கல்உப்புப் போட்டுப் பின் சிறிய துணியை முக்கிப் பிழிந்து வலியுள்ள இடத்தில் ஒத்தடம் கொடுக்கவும்.



**காய்கறி மருத்துவம்:**

உருளைக் கிழங்கை நன்றாகக் கழுவிப் பின் அதைச் சிறிய துண்டுகளாக்கி ஒரு தம்ளர் நீரில் இரவில் ஊற வைத்துவிடவும். காலையில் அந்த கிழங்கை எடுத்துவிட்டு அந்த நீரை வெறும் வயிற்றில் குடிக்கவும். ஒரு நாள்விட்டு ஒரு நாள் இதைக் குடிப்பது நல்லது.

தேங்காய் எண்ணெய் ஒரு கரண்டி எடுத்துக் கொண்டு அதில் 8-10 பூண்டுப் பற்களைப் போட்டு நன்றாகச் சிவந்து வரும் வரை வதக்க வேண்டும். பின் அந்த எண்ணெயை இளம் சூட்டில் வலியுள்ள இடத்தில் மிதமாகத் தடவி லேசாக அழுத்தம் கொடுக்க வேண்டும். ஒரு கரண்டி தேங்காய் எண்ணெயில் 3-4 கற்பூர வில்லையைத் தூளாக்கிப் போடவும். பின் அதை லேசாகச் சூடு செய்யவும். பின் அந்த எண்ணெயை இளம் சூட்டில் வலியுள்ள இடத்தில் மிதமாகத் தடவி லேசாக அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தினமும் ஆப்பிள் சிடர் வினிகர் 2 தேக்கரண்டி, தேன் ஒரு தேக்கரண்டி இரண்டையும் ஒரு குவளை வெதுவெதுப்பான நீரில் கலந்து குடிக்கவும். கடுகு எண்ணெயைச் சூடு செய்து மூட்டில் தேய்க்கவும். கல் உப்பு ஒத்தடம் கொடுக்கவும்.



# நிம்மதியான உறக்கம் தரும் உணவுகள்!

**வா**ரத்தின் பெரும்பாலான நாட்களில் இரவு உணவு என்றால் உடனே ஃபாஸ்ட் புட் கடைகளில் கிடைக்கும் எண்ணெயில் பொரிக்கப்பட்ட ஃபிரைடு ரைஸ், சில்லி சிக்கன், நுநீடுல்ஸ் போன்ற இன்றைய உணவு பழக்கம், உடல் ஆரோக்கியத்திற்குக் கேடு விளைவிக்கக் கூடியதாக இருக்கின்றது.

பாஸ்ட் புட் ஒருபக்கமும், மறுபுறம் பீட்ஸா, பர்கர் போன்ற கொழுப்புகள் அதிகம் நிறைந்த உணவுகளையும் மக்கள் அதிகம் சாப்பிடுகின்றனர்.



உணவு விஷயத்தில் எல்லாத் தப்பையும் செய்து விட்டுப் பின் உறக்கம் வரவில்லை என புலம்புகின்றனர். இரவில் வயிறு நிறைய சாப்பிடுவதும், ருசிக்காக எளிதில் செரிக்காத உணவுகளை சாப்பிடுவதே பிரச்சனைதான். இரவில் நாம் எவ்வித உணவுகளை சாப்பிடுகிறோம், எந்த நேரத்தில் சாப்பிடுகிறோம் என்பதற்கும், நிம்மதியான உறக்கத்துக்கும் தொடர்பு இருக்கிறது. இரவு நேரத்தில் வயிறு மந்தமாக இருக்கும் வகையில் அதிகமாகச் சாப்பிட்டாலும், நேரங்கெட்ட நேரத்தில் பசி எடுக்கும் வகையில் குறைவாகச் சாப்பிட்டாலும் சிக்கல் தான். இரவில் பசி ஏற்படும் போது ஒரு கப் தயிர் சாப்பிடலாம்.

தயிரில் இருக்கும் டிரிப்டோபேன் வயிற்றில் ஏற்படும் பசியைப் போக்கி, வயிறு நிறைந்தது போன்ற உணர்வை ஏற்படுத்தும்.

கார்போஹைட்ரேட் நிறைந்த உணவுப்பொருட்களான, கார்ன் மற்றும் ஓட்ஸை ஒரு கப் எடுத்துப் பாலில் கலந்து, சர்க்கரை சேர்த்துக் கொள்ளாமல் சாப்பிடலாம். இதனால் இரவில் அகால நேரத்தில் பசி ஏற்படாமல், நல்ல நிம்மதியான தூக்கத்தைப் பெற முடியும்.

கேரட் மற்றும் வெள்ளரிக்காயை நறுக்கி, இரண்டையும் பழக்கலவையாக்கி சாப்பிடலாம். இது எளிதில் செரிமானம் ஆகும். வயிறும் நிறைந்து இருக்கும்.

உடம்புக்கு ஆரோக்கியத்தைத் தரும் பழ வகைகளான ஆப்பிள், வாழைப்பழம், மாதுளை போன்ற பழங்களை ஒன்றாகக் கலந்து பழக்கலவை தயாரித்து ஒரு கப் அளவு சாப்பிடலாம். இதனால் நல்ல உறக்கம் ஏற்படும். மேலும் உடல் எடை அதிகரிப்பதைத் தடுக்கும்.

மீன்களில் கொழுப்புகள் இல்லை. அதேநேரம், அதிக அளவு புரதம் மற்றும் தாது சத்துக்கள் உள்ளன. எனவே மீன் வகைகளை இரவு நேரத்தில் பசி ஏற்பட்ட பின் சாப்பிட்டால் எளிதில் செரிமானம் ஆகும். நல்ல உறக்கத்தைத் தரும்.

ஏ.எஸ்.கோவிந்தராஜன்,
சென்னை 24.

## அறிமுகம்!

**வா**க்காளர் அடையாள அட்டை முதன் முதலில் அறிமுகப்படுத்தப் பட்ட மா நிலம் அரியானா.

முதன் முதலில் தேசியக் கொடியை உருவாக்கிய நாடு டென்மார்க். 1218-ம் ஆண்டில் உருவாக்கபட்டது.


– ஆர்.கே.லிகேசன், மேலகிருஷ்ணன் புதூர்.



# கடலில் 4,800 கி.மீ. பயணம் செய்த கடிதம்!

ஒரு கண்ணாடி குப்பியில் கனடா நாட்டில் கடலில் வீசப்பட்ட கடிதம் சுமார் 4,800 கிலோமீட்டர் கடலில் பயணித்து பிரிட்டன் நாட்டில் இருக்கும் தெற்கு வேல்ஸ் நகரத்தில் ஒருவரிடம் கிடைத் திருக்கிறது.

வேல்ஸில் இருக்கும் ப்ரினா நகரத்தைச் சேர்ந்த 52 வயதான அமண்டா டிட்மார்ஷ் கடற்கரை ஓரத்தில் தன் இரு நாய்களோடு நடந்து சென்று கொண்டிருந்த போது கடற்பாசியுடன் கூடிய ஒரு கண்ணாடிக் குப்பியைக் கண்டிருக்கிறார்.


11 2020
THIS BOTTLE WAS TOSSED OVER THE SIDE OF THE FISHING VESSEL ARCTIC EAGLE ON THE GRAND BANKS OF NEWFOUNDLAND, CANADA WHILE FISHING FOR SNOW CRAB IN POSITION: 47° 57.15' N 49° 34.75' W

அதைக் கண்டுபிடித்தது தனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது என்கிறார். முன்பு தன் குடும்பத்தினரிடம் தான் எப்போதும் புதையலை வேட்டையாடுவதாக வேடிக் கையாகக் கூறியதையும் நினைவுகூர்கிறார்.

இந்தக் கடிதத்தை கடலில் வீசி எறிந்த மீனவரிடம் இருந்து பதில் வரும் என காத் திருக்கிறார் அமண்டா.

கனடாவில் வீசி எறியப்பட்ட அந்த கண்ணாடிக் குப்பி சுமார் 4,800 கிலோ மீட்டர் பயணித்து தெற்கு வேல்ஸ் நகரத்தை வந்தடைந்து இருக்கிறது. அந்தக் கடிதம் கடந்த 2020 நவம்பரில் கடலில் வீசி எறியப்பட்டதாக அக்கடி தத்தில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது.

அமண்டா டிட்மார்ஷ் வெல் ஆஃப் க்ளாமார்கன் கடற்கரையில் அமண்டா டிட்மார்ஷ், லேப்ரடூடல் டெய்சி மற்றும் ஜேக் ரஸ்ஸல் ஆலி என்கிற இரு நாய்களோடு நடந்து



சென்று கொண்டிருந்தார். கடற்கரையில் கடற்பாசி, கடல்சிப்பி போன்றவைகளோடு இருந்த காலி வொயின் பாட்டிலைக் கண்டார். 'அதைக் கண்டெடுத்த போது, அந்த கண்ணாடிக் குப்பி எந்த வித சேதமும் இல்லாமல் இத்தனை தூரம் வந்திருப்பதை நினைக்கும் போது அது அருமையாக இருந்தது. அக்குப்பிக்குள் புதையல் போல ஏதாவது இருக்கும் என கருதினேன்' என்கிறார் அமண்டா.

இதைத் தனியாக திறக்கும் அளவுக்கு சிறப்பானது' என தான் கருதியதாகவும், தன் மகன் வீட்டுக்கு வரும் வரை காத்திருந்ததாகவும் கூறுகிறார்.

'இது உண்மையிலேயே மிகவும் அருமையான ஒன்று. நான் என் மற்றொரு மகன் மற்றும் மகளுக்கும் இது குறித்து குறுஞ்செய்தி அனுப்பினேன். அவர்களும் என்னைப்போலவே மிகவும் மகிழ்ந்தார்கள். இதை நம்ப முடியவில்லை'.

'நான் கடற்பாசிகளில் புதையலைத் தேடுவதாக எப்போதும் என் அம்மாவிடம் வேடிக்கையாகக் கூறுவதுண்டு. இப்போது அப்படி ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டேன்'

இந்தக் கடிதம் ஜான் க்ரஹம் என்கிற பனி நண்டு பிடிக்கும் மீனவரிடம் இருந்து வந்ததாகத் தெரிகிறது. இந்தக் கடிதத்தைக் கண்டெடுப்பவர் தன்னைத் தொடர்பு கொள்ளுமாறு தன் மின்னஞ்சலையும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

'அந்த பாட்டில் கச்சிதமாக அடைக்கப்பட்டிருந்தது. அதற்குள் ஒரு சிப் லாக் பைக்குள் கடிதம் சுருட்டி வைக்கப்பட்டு இருந்தது' என்கிறார் அமண்டா. ஜான் க்ரஹாமிடம் இருந்து பதில் வரும் என உற்சாகத்தோடு காத்திருக்கிறார் அவர்.

அந்த பாட்டில் தற்போது ரோண்டா சியான் டஃப் என்கிற இடத்தில் இருக்கும் அமண்டாவின் வீட்டில், க்ரீன் ஹவுஸ் என்றழைக்கப்படும் தோட்டம் போன்ற அறையில் இருக்கிறது.

★

## கருடனுக்கு கண் திறக்கும் விழா!

குமரி மாவட்டம் நாகைகோவிலில் இருந்து மணக்குடி செல்லும் சாலையில் 7 கி.மீ. தொலைவில் இட்துபுறம் அமைந்துள்ளது 12000 ஆண்டுகள் பழமையான பறக்கை என்னும் ஊர்.

பட்சிராஜபுரம், வேதவனம், விலவ்வனம், பிரம்மதேய கிழார் மங்கலம், அபிதான்மேரு சதுர்வேதி மங்கலம் என வெவ்வேறு பெயர்களைக் கொண்டுள்ளது இவ்வூர்.

இவ்வூரிலுள்ள மதுசூதனன் கோவிலில் கருடனுக்கு தனிச் சன்னதி உள்ளது. இங்கே நடைபெறும் பங்குனி மாத தேரோட்டத் திருவிழாவின் ஐந்தாம் நாள் விழாவில் கருடனுக்குக் கண் திறக்கும் வைபவம், கோவில் கொடிமரம் அருகில் நடைபெறுகிறது. பின் மதுசூதன் பெருமாளின் உற்சவர் சிலை இந்தக் கருடன் மீது ஏற்றிவைத்து சுவாமி புறப்பாடு நடைபெறும். பிறகு கோவிலின் பின்புற மதில் சுவரில் உள்ள சிற்பத்தின் கீழ்பகுதியில் வந்தபின் கருடனையும், பெருமாளையும் வணங்கித் தேங்காய் உடைப்பர்.

- ரமணி புனிதகுமாரி.

# கொரோனாவில் இருந்து மீண்டு வந்தேன்!

## - இலக்கியா



**இலக்கியா, பி.டெக். முடித்தவர். சொந்த ஊர் ஈரோடு, நந்தினி சீரியலில் சிறு வயது குஷ்புவாகவும், நாயகி, தேவதை சீரியல்களிலும் தலை காட்டியவர் தற்போது பாண்டவர் இல்லம் நாயகியாக நடித்து வருகிறார். பெண்மணிக்காக அவர் அளித்த பேட்டி.**

### முதல் மீடியா பிரவேசம் எப்போது?

2018-ல் நந்தினி சீரியலில் குஷ்பு மேடம் சின்ன வயது பார்வதி கேரக்டரில் நடித்தேன். டிக்-டாக் யு-டியூப் சேனலிலும் பங்குபெற்றேன். அதன் பிறகு சன் டி.வி. சேனல் தொடரான நாயகியில் அம்பிகா மேடத்திற்கு இரண்டாவது மருமகளாக சுமதி கேரக்டரில் நடித்தேன். ஜீ தமிழ் சேனலில் தேவதையைக் கண்டேன் சீரியலிலும் நடித்தேன்.

தற்போது சன் டி.வி. சேனல் சீரியலான பாண்டவர் இல்லத்தில் மகேஸ்வரி கேரக்டர் செய்து வருகிறேன்.

### வெள்ளித்திரை அனுபவம் உண்டா?

சில வாய்ப்புகள் வந்தது. சீரியல் நடிப்புக்காக கால்ஷீட் தர முடியவில்லை.

### பிடித்த - பிடிக்காத விஷயம் பற்றி...

எனக்கு நடனம் பிடிக்கும். குறிப்பாக பரத நாட்டியம் தெரியும். வெஸ்டார்ன் டேன்ஸ் தெரியும். எல்லோரும் அன்புடன் பழக வேண்டும் என்பது பிடிக்கும். என்னிடம் பிடிக்காத ஒன்று, எனக்கு அடிக்கடி கோபம் வருவது.

### நினைவில் நீங்காத நிகழ்வுகள் உண்டா?

பாண்டவர் இல்லம் சீரியலில் நான் தற்கொலை செய்து கொள்கின்ற ஒரு சீன். அதில் நான் ஓர் ஆற்றில் இறங்கி மூழ்கிட வேண்டும். நான் ஆழமான பகுதி வரை சென்றுவிட்டேன். இதை அறிந்த படப்பிடிப்பு குழுவினர் என்னைக் காப்பாற்றினார்கள். இதை என்னால் மறக்க முடியாது.

### திறமைக்குப் பெற்ற பாராட்டுகள் பற்றி...

2020-ல் சினிபறவைகள் என்ற அமைப்பு, சிங்கப்பெண் விருது வழங்கி கௌரவித்தது.

மதுரையில் நடைபெற்ற தமிழ்நாடு திரை உலக பேரவை சாதனைப் பெண் விருதினை ஜி.கே.வாசன் கையால் பெற்றுள்ளேன். சமீபத்தில் பாண்டவர் இல்லம் சீரியலில் புதுமுக வரவிற்கான சன் குரூப் விருது பெற்றுள்ளேன்.

**உங்களது திருமணம் பற்றி...?**

எனக்கு என் அப்பா இல்லாத குறை தெரியாமல் என் அம்மா விஜயலெட்சுமி என்னை அன்பாகவும், படிக்க வைத்தும், நான் பொறுப்பன பெண்ணாகவும் வளர்த்தார். என் கவனம் இன்று நடிப்புத் துறையில் தான் உள்ளது. அதனால் திருமணம் பற்றி இன்னும் சிந்திக்கவில்லை.

**லாக்-டவுன் காலத்தில் உங்களது லைப் ஸ்டைல் பற்றி...?**

இந்த லாக் டவுனில் கோவிட்-19 பாதிப்படைந்தேன். மக்களின் ஆசியாலும், பிரார்த்தனையாலும் மீண்டேன். இந்த காலம் எனக்குஒரு மோசமானதாக இருந்தது.

**நாயகி சீரியல் மற்றும் பாண்டவர் இல்லத்தில் உங்களது கேரக்டர் பற்றி..?**

நாயகி சீரியலில் நான் சுமதி என்ற கேரக்டரில் அம்பிகா மேடத்தின் இரண்டாவது மருமகளாக நடித்தேன். அது ஒருத்ரில்லிங்கான கேரக்டர். தைரியமான ஓர் பெண் கேரக்டர் தான்.



தவறான பாதையில் செல்லும் தன் கணவனைத் திருத்திட முயற்சி செய்வாள். தன் ஓரகத்தியுடன் ஒற்றுமையாக வாழ்ந்திட முற்படுவாள். இதனால் தன் மாமியாருக்கும், கணவருக்கும் எதிரியாக மாறும் சூழ்நிலை ஏற்படும். பின்னாளில் சமாளித்து குடும்பத்தை ஒன்று சேர்ப்பவள்தான் சுமதி.

பாண்டவர் இல்லத்தில் மகேஸ்வரி என்ற ஓர் தைரியமான பெண் கேரக்டர். தன் அப்பா ஓர் ஆசிரியர் அம்மா தைரியமான பெண்மணி. அம்மா தன் தம்பிக்கு என்னை கட்டி வைத்திட விரும்புவார். என் அப்பா பாண்டவர் இல்லத்தின் மருமகளாக செல்லவே விரும்புவார்.

அதற்காக மகேஸ்வரி, பாண்டவர் இல்லம் சென்று அங்கு தங்கியபடி எல்லோருடனும் பழகுவார். முடிவில் மணிமேகலை என்ற ரோஹினிக்கும் மகேஸ்வரிக்கும் நல்ல சிவம் என்பவனைக் கல்யாணம் செய்வதில் போட்டி ஏற்படுகிறது. கதை இப்படியாக செல்கிறது.

**வருங்கால கனவு பற்றி..?**

கனவு என்று ஒன்று கண்டால்தான் எதிர்கால நிகழ்வுகளை வரையறுக்க முடியும். காணும் கனவானது பிறருக்கு உபயோகமாக இருந்திட வேண்டும். நமது வருங்காலம் பிரகாசமாக இருப்பதற்கு முயற்சி கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

நடிப்பு தொழிலில் நான் மேல்நிலைக்கு வர வேண்டும். பல சீரியல்களில் நல்ல கேரக்டர்களில் நடிக்க வேண்டும்.

வெள்ளித்திரை வாய்ப்பு கிடைத்தாலும் நடிப்பேன்.

என் முக்கிய கனவு, எதிர்காலத்தில் ஆதரவற்றோருக்கு அனாதை இல்லம், வயதானவர்களுக்கு முதியோர் இல்லம் என்று தொடங்கிட வேண்டும் என்ற லட்சியம் உண்டு. இதன் வாயிலாக எல்லோரையும் எவ்வித இன்னலுமின்றி வாழ வைத்திட வேண்டும் என எண்ணுகிறேன்.

எல்லோரும் எல்லா வளமும் பெற்று நலமாக வாழ்ந்திட வேண்டும் என்பதே என் விருப்பம்.

**-வீ.லோகநாதன்**



# கண்டம் விட்டு கண்டம் பறக்கும் குருவி!

வடதுருவப் பகுதியில் கோடை காலம் வந்தாலே உலகம் முழுவதும் இருந்து பறவைகள் அங்கு வலசை கிளம்புவது வழக்கம். ஒன்றல்ல, இரண்டல்ல சர்வ சாதாரணமாக பதினைந்தாயிரம், இருபதாயிரம் கிலோ மீட்டர்கள் எல்லாம் இவை வலசை போகும். தங்களுடைய வாழ் நிலம்விட்டு கோடைக்காக இவை ஏன் இத்தனை தூரம் பயணிக்கின்றன என்பது இப்போதும் புரியாத கேள்வி.

குறிப்பாக வார்ப்பலர் எனப்படும் பலவண்ணக் கீச்சுக் குருவிகள் தான் இப்படி கண்டம் விட்டு கண்டம் பறக்கின்றன. இந்த வலசை பெரும்பாலும் இரவு நேரத்திலேயே இருக்கும். கழுகு போன்ற வேட்டையாளிகளிடம் இருந்து தப்பவும், அமைதியான காற்று மண்டலம் மற்றும் குளிர்ச்சியான சீதோஷ்ணம் காரணமாகவும் இவை இரவை தங்களது பயணத்துக்குத் தேர்ந்தெடுக்கின்றன.

கனடாவிலிருந்து மட்டும் நாற்பத்தேழு வகையான கீச்சுக் குருவிகள் இப்படி வலசை கிளம்புகின்றனவாம். இவை பறக்கும் போது கீச் கீச்சு என்றும் குக்கூ குக்கூ என்றும் குரல் எழுப்பிக் கொண்டே போகும். இவை இரை, தங்குமிடம், பயண வழியில் எதிர்படும் ஆபத்து போன்றவை பற்றிய சமிக்ஞைகள் என்று பொதுவாக சொல்லப்பட்டாலும், எந்த ஒலிக்கு என்ன பொருள் என்பது இதுவரை தெரியவில்லை. தற்போது கனடாவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த வலசை மொழியைக் கண்டறிந்திருக்கிறார்கள். இவை தகவல்களை மட்டும் பகிர்வதில்லை. சில சேட்டைக்கார குருவிகள் உற்சாகமாக அர்த்தமற்ற சொற்களைப் பாடவும் செய்கின்றன என்று கண்டறிந்திருக்கிறார்கள்.

தொகுப்பு: கோட்டாறு ஆ.கோலப்பன், நாகர்கோவில்.

# அறிவுத்திறன் போட்டி - 260

## விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 ந | ச் | சு | ப் | 2 பொ | ய் | 3 கை |
| ங | | | 4 ரி | தி | த் | 5 ரா |
| 6 கூ | 7 வ | ம் | | 7 கை | | சி |
| 8 ர | ஞ் | 9 சி | | | 10 ப | |
| ம் | ச | ம் | 11 வ | ய | ரி | 12 சூ |
| | 13 க | பா | ல | ம் | | ல |
| 14 யா | ம் | | ம் | | 15 டி | ம் |

## பரிசு பெற்றவர்கள் விவரம்:

அறிவுத்திறன் போட்டியில் பங்கு கொண்ட வாசக, வாசகியர் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. கட்டுக்கட்டாக கடிதங்கள் வந்து குவிந்தன. நூற்றுக்கணக்கானவர்கள் சரியான விடை எழுதி இருந்ததால் அவர்களில் 10 பேர் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டனர். தலா ரூ.100 பரிசு பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள் பெயர் வருமாறு:

1. **ஆர்.பாரதிராஜேந்திரன்,**
   திருவொற்றியூர்.
2. **என்.ராணி,**
   மதுரை - 7.
3. **ராஜேஸ்வரி,**
   ஜோலார்பேட்டை
4. **மாரியம்மா,**
   சேலம் - 8.
5. **வசந்தா ராஜகோபாலன்,**
   சென்னை - 26.
6. **எம்.எஸ்.சுவாமிநாதன்,**
   சென்னை - 88.
7. **பருகத்துல்லா,**
   சென்னை - 24.
8. **ஆர்.விஜயலெட்சுமி,**
   பெங்களூர் - 50.
9. **இந்துமதி ராஜேஷ்,**
   செங்கல்பட்டு மா காரணை புதுச்சேரி.
10. **ஜெயம் சிவராமன்,**
    பாலக்காடு.

## அறிவுத்திறன் போட்டி-261

இது அதிர்ஷ்டப் போட்டி அல்ல. அறிவுத்திறனை எடை போடும் போட்டி. யார் எத்தனை கூப்பன் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். இந்த பக்கத்தில் வெளியாகி உள்ள கட்டத்திலேயே விடைகளையும், கீழே முழு முகவரியையும் தெளிவாக எழுதி கத்தரித்து அனுப்ப வேண்டும்.

10 பேருக்கு தலா ரூ.100 பரிசு உண்டு. அதிகம் பேர் சரியான விடை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் 10 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுத்தொகை அளிக்கப்படும்.

## ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி தேதி: 18.10.2021**

# பரிசுத்தொகை ரூ.1000

அனுப்ப வேண்டிய முகவரி:

**அறிவுத்திறன் போட்டி - 261**
**'பெண்மணி'**
மாலைமுரசு பில்டிங்,
246, அண்ணா சாலை, ஆயிரம் விளக்கு,
சென்னை–600 006.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | |
| | ■ | | ■ | | ■ | |
| 4 | 5 | | ■ | 6 | | |
| 7 | | ■ | ■ | | 8 | 9 |
| | ■ | 10 | 11 | | ■ | ■ |
| ■ | 12 | | | ■ | 13 | |
| 14 | | | ■ | | | 15 |

### இடமிருந்து வலம்:

1. ராமாயண சகோதரர்களில் நான்காமானவர்.
4. காவிரி ஆற்றின் முக்கிய துணை ஆறுகளில் ஒன்று.
6. வாழ்க்கைத் துணைவி.
7. விதம்.
10. சோதனை இல்லாமல் ---- இல்லை.
12. ஒருவர் உதவி செய்தால் நாம் கூறுவது.
13. ஆயக் ---கள் 64.
14. புரதம் நிறைந்த உணவு வகை.

### வலமிருந்து இடம்:

9. பிக் பாஸ் 1-ல் பிரபலமான நடிகை - கலைந்துள்ளது.
15. தாவரத்தின் ஒரு பகுதி.

### மேலிருந்து கீழ்:

1. நிகழ்வு.
2. மாம்பழத்தில் ஒரு வகை.
3. வினைப்பயன்.
5. வெற்றியாளர் அணியும் மாலை.
10. ஆதாரம்.
11. துணி நெசவு செய்யும் இயக்கி.
12. நம்பவைத்து ஏமாற்றுதலை --- வஞ்சகம் என்பர்.
13. விழி.

### கீழிருந்து மேல்:

8. வாரணம்.
9. சித்திரம் வரைபவர்.
15. சிரம்.

**–சாய் மனோஜ்.**

## அறிவுத்திறன் போட்டி - 261

முகவரி: ................................
................................
................................
அஞ்சல் எண்: ................................
மாவட்டத்தின் பெயர் ................................



### திருமணத்தடை நீக்கும்

# கோவை - கோட்டைமேடு சங்கமேசுவரர்!

**- ராஜம் மங்களமுருகேசன்**

தலையெழுத்தையே மாற்றும் வல்லமை கொண்ட ஈசன் உறையும் திருக்கோவில், கோவை கோட்டைமேடு அகிலாண்ட ஈசுவரி உடனுறை சங்கமேசுவரர் திருக் கோவில் ஆகும். தொழில் நகரம் எனக் கோவை திகழ்ந்தாலும் பல புகழ் பெற்ற கோவில்கள் உடைய நகரம். இங்குள்ள சிறப்பான கட்டடக்கலை வடிவமைப்புகள் கோவையின் பண்பாட்டு நெறி, மக்களின் இறை நம்பிக்கை ஆகியன கூறும் வண்ணம் உள்ளன.



கோவையின் மிகச் சிறந்த கோவில்களில் ஒன்றெனத் திகழ்வது கோட்டைமேடு சங்கமேசுவரர் திருக்கோவில் ஆகும். இத்திருக்கோவில், சங்கு மலர்கள் இருந்த காட்டை அழித்துக் கட்டியமையால் சங்கீசுவரன் எனவும், சோழன்எழுப்பியதால் சோழீசுவரமுடையார் எனவும் விஜயநகர மரபில் ஒன்றான சங்கம மரபு எனபதன் அடிப்படையில் சங்கமீசு வரன் எனவும் பெயராயிற்று. கோவிலுக்கு, உக்கடம், காந்திபுரம், சிங்காநல்லூர் பேருந்து நிலையத்திலிருந்து பேருந்துகள் உள்ளன.

வரலாற்றுச் செய்திகளின்படி, முன்பு கருவறை பொன் வேய்ந்ததும், தங்கக் கலசங்களுடனும் விளங்கியது. அன்றாட வழிபாட்டிற்கு 300 சிவாச் சாரியர்களை விசயநகர மன்னர்கள் நியமித்திருந்தனர்.

1792-ல் மூன்றாம் மைசூர்ப் போருக்குப் பின் கோவைப் பகுதியில் இருந்த கோட்டையும் கோவிலும் சிதையலுற்றன. நான்காம் மைசூர்ப் போருக்குப்பின் 1809-ல் ஓரளவு சீரமைத்தனர்.



கோவை நகர்ப்புறச் சூழலால் கோவிலின் தரை மட்டமும் எட்டு அடி அளவிற்குக் கீழே சென்றது. 2003-ல் திருப்பணி மேற்கொண்டு 2007 ஜூலை 3-ல் குடமுழுக்கு நடைபெற்றது. சுமார் மூன்றரை கோடி பணத்தை இதற்கென மக்களே வழங்கினர். பழைய தேர் சிதிலம் அடைந்து விட்டதால் சிற்ப வேலைகள் கொண்ட புதிய தேர் அமைந்து ஜனவரி 20, 2011-ல் வெள்ளோட்டம் நடைபெற்றது.

முருகப் பெருமானின் ஆறு முகங்களும் முன்னும் பின்னுமாக அனைத்துத் திக்கு களையும் நோக்கிய வண்ணம் உள்ளது. ஆனால் ஒரே திசையை நோக்கிய ஆறு முகங்களைக் கொண்ட முருகனாக இத்தலத் தில் அருள் புரிகிறார்.

இங்கு அருளாட்சி செய்யும் சிவலிங்கத் தின் மேற்பகுதியில் பிரம்ம சூத்திரம் வரையப்பெற்றுள்ளது. இந்த அமைப்பு படைப்பில் கோளாறு இருந்தாலும் விதியையே மாற்றும் வல்லமையுடையது என்பர். சோழர்கள் கட்டிய கோவில் இது. திருச்சுற்றில் காசி விசுவநாதர், தட்சிணாமூர்த்தி, பைரவர் ஆகியோர் அருள்புரிகின்றனர். 63 நாயன்மார்களின் திருஉருவங்கள் உள்ளன. சண்முக சுப்பிரமணியர் சன்னதி உள்ளது.

சிவபெருமானை நோக்கிக் கடுந்தவம் இருந்த அசுரன் ஒருவன், யார் மூலமாகவும் தனக்கு அழிவு நேராதவாறு சாகாவரம் பெற்றான். தேவலோகம் ஆள ஆசைகொண்டு முனிவர்கள், தேவர்கள் ஆகியோருக்குத் துன்பமளித்துக் கொடுமை செய்தான். இதனால் மனம் வருந்தியோர் இந்திரனிடம் முறையிட இறைவன் அவர்களிடம், சிவனிடம் முறையிடுவது, வேண்டுவது தவிர அசுரரை அழிக்க வழியேதும் இல்லை என்றார். எனவே அவர்கள் சங்கு மலர்த் தோட்டமாக இருந்த இவ்விடம் வந்து சிவனை வழிபட்டு அசுரனை அழித்திட முறையிட்டனர். சிவன், அசுரனை அவர்கள் வேண்டியவாறு வதம் செய்தார்.

சோமாசுக்கந்தராக உள்ள முருகன் சூரபத்மனை வதம் செய்யும் கோலத்தில் தோன்றுகிறார். வடக்கு நோக்கிய மயில் வாகனத்துடனும் சண்முக சுப்பிரமணியரும் உள்ளார். அவருடைய பன்னிரண்டு கரங்களில் ஆயுதம் ஏந்தித் தோன்றுகிறார். இவரே மூலவரும் ஆவார். சுவாமிக்கு இடப்புறம் அகிலாண்டேசுவரி சன்னதி உள்ளது. தூண் ஒன்றில் மேற்கு நோக்கியபடி ஆஞ்சநேயர் தோன்றுகிறார்.

சிவபக்தனான கரிகால் சோழன், தமக்குப் பின் நாடாள வாரிசு இன்றித் தவித்தவன். தனக்கு ஏற்பட்ட புத்திரப் பீடை நீங்கச் சிவனிடம் மனம் உருகி வேண்டினார். சிவன் அற்புதம் நிகழ்த்திய தலங்களில் ஆலயங்கள் எழுப்புவது போலக் கனவு கண்டான். அவன் தக்காரிடம் ஆலோசனை கேட்கச் சிவன் அற்புதங்கள் புரிந்த இடங்களில் கோவில்களை எழுப்பி வணங்கினான். அவன் கட்டிய சிவத்தலங்களில் இத்தலம்



## நவராத்ரி கொலு டிப்ஸ்!

**கோ**லுவில் செம்மண்ணுக்குப் பதில் மஞ்சள் பொடியில் சுண்ணாம்புத் தூள் கலந்து வைத்துக் கொண்டால், தேவைப்படும் போது சிறிது தண்ணீரில் கொஞ்சம் பொடியைக் கலந்து, கோலத் தில் பயன்படுத்தலாம். மஞ்சள் மணக்கும், பூச்சிகள் நெருங்காது, ஆரத்தி கரைக்கவும் இந்தப் பொடி பயன்படும்.

**சு**ண்டலில் மாங்காய்த் துருவல் அல்லது மாங்காய்ப் பொடி (ஆம்சூர்) சேர்த்தால் சுவை தரும்.

**ம**ரப்பாச்சி மற்றும் மரப் பொம்மைகளை வார்னிஷ் அடித்து வைத்தால் புத்தம் புது பொம்மைகள் போல் மின்னும். பிளாஸ்டிக் தோரணங்களுக்குப் பதிலாக மாவிலைத் தோரணம் கட்டுவது சிறந்தது. மாவிலை, புழு பூச்சிகளை உள்ளே விடாது.

– ஆர்.ராஜலட்சுமி, திருச்சி 6



31-வது தலமாக விளங்குகிறது.

இத்தலத்தில் அகிலாண்டேசுவரியை வழிபட்டால் திருமணத் தடை நீங்கும். மகப்பேறு கிட்டும். சகல பீடைகளும் நீங்கும். சிவராத்திரி நாளில் 108 முறை வலம் வருதல், கண்விழித்து விரதம் இருத்தல், ஐந்தெழுத்து மந்திரம் சொல்லுதல் ஆகியன நல்ல பலன் தரும்.

சித்திரையில் 13 நாள் பிரம்மோற்சவம், வைகாசி விசாகம், ஆடிப்பூரம், ஆடி வெள்ளி, மகாசிவராத்திரி, ஆருத்ரா தரிசனம், விஜயதசமி ஆகியன திருவிழா நாட்களாகும்.

இக்கோவிலின் தேர் பழுதடைந்து 18 ஆண்டுகளாகத் தேரோட்டம் நடைபெறாமல் இருந்து மீண்டும் 2011-ம் ஆண்டு முதல் தேரோட்டம் நடைபெறுகிறது. தைப்பூசத் திருவிழாவின் போது நடைபெறும் தேரோட்டத்தில், அலங்கரித்த தேரில் சண்முகர், வள்ளி, தெய்வானை எழுந்தருளுவர். கோட்டை ஈசுவரன் கோவில் வீதி, பெருமாள் கோவில் வீதி, பெரிய கடை வீதி வழியாக மீண்டும் கோவில் சென்றடையும்.

இக்கோவிலின் மேற்கூரையில் பிரம்ம சூத்திரம் எண்கோண வடிவில் வரையப்பெற்றுள்ளதாம். ஈசுவரனுக்குச் சங்குப் பூமாலை அணிவித்து வேண்டினால் குடும்பப் பகை, வியாபாரப்பகை போன்ற அனைத்துப் பகைகளும் தீரும் என்பது நம்பிக்கை. கார்த்திகைத் திங்களில், சங்ககமேசுவரருக்கும், அன்னை அகிலாண்டேசுவரிக்கும் சங்கு அபிடேகம் செய்தல் சிறப்பு ஆகும்.

சோழ மன்னன் பராந்தகன் காலத்திலும், விசய நகரப் பேரரசர் காலத்தும், திருமலை நாயக்கர் காலத்திலும் கோவிலை விரிவு செய்து திருப்பணிகள் நடைபெற்றுள்ளன.

ஆங்கிலேயர் காலத்தில் கொங்குப் பகுதியைத் திப்புசுல்தான் ஆட்சி செய்தார். 1792-ல் ஆங்கிலேய வணிகக் குழுவினர் திட்டமிட்டபடி அவர்கள் கையில் கோட்டை வீழாமல் கோட்டையை இடித்துத் தரைமட்டமாக்கினார் என்பது வரலாறு.



## துர்கைக்கு 9 ரூபங்கள்!

மகிஷாசுரனை சமாரம் செய்ததால், மகிஷாசுரமர்த்தினி என்றும் துர்கமாசுரனை அழித்ததால், துர்கா என்றும் பராசக்திக்கு பெயர் ஏற்பட்டது. துக்கம், பயம்,தரித்திரம் இவற்றிலிருந்து நம்மை காப்பாற்றுபவள் துர்கை. இவளை சர்வதேவதா ஸ்வரூபிணி, சர்வமந்திர, யந்திர ஸ்வரூபிணி, சர்வயந்திர ஸ்வரூபிணி என்று போற்றுகின்றன மந்திர சாஸ்திரங்கள்.

துர்கைக்கு ஒன்பது ரூபங்களும், பெயர்களும் உண்டு. அவை, ஆலினி துர்கை, தீப துர்கை, சபரீ துர்கை, அசூரி துர்கை மற்றும் லவண துர்கை.

கோட்டை, மண்மேடு ஆனதால் அப்பகுதி கோட்டைமேடு எனப் பெயர் பெற்றது.

ஆறடி ஆழத்தில் அமைந்து ஈசுவரன், அம்பாள் சன்னதியைத் தரிசிக்க சிரமமாக இருந்ததால் வாஸ்து விதிமுறையின்படி உயர்த்திக் கட்டினர். அடர்ந்த மண்டபம் முன் இரு பக்கங்களிலும் அய்ந்து அடி உயரமான இரு தூண்களிலும் சிற்பமாக அனுமன் இருக்கிறார். வடபுறத் தூணில் தெற்கு நோக்கிய ஆஞ்சநேயர் பெண் உருவமும், தென்புறத் தூணில் வடக்கு நோக்கிய ஆண் உருவமும் கொண்ட சிற்பங்களும் வரலாற்றுச் சிறப்புடையன. ஆஞ்சநேயர் உருவம் நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது என்கின்றனர். ஆண், பெண் என இரு வகையிலும் அனுமன் தரிசனம், அகிலாண்டேசுவரி சன்னதி முன் தோன்றுதல் வியப்பாகும். இத்தலத்தில் துர்க்கைக்கு தனிச் சன்னதி உள்ளது. அரச மரத்தினடியில் நாகர்களுடன் இருப்பவர் சக்தி கணபதி. கன்னிமூலை கணபதிக்கு மரமல்லி மரம் மலர் உதிர்க்கிறது. மரமல்லி சுழன்று சுழன்று சிவலிங்கத்தை மலர் தூவி அர்ச்சிக்கிறது என்பர்.

சங்கு மலர்கள் அருகில் நாகலிங்க மரம் கருத்தை ஈர்க்கிறது. பவளமல்லி, அரளி முதலிய மலர்கள் பூத்துக் குலுங்கும் மலர்த் தோட்டம் காண மனம் நிறைவு பெற வைக்கிறது. 13-ம் நூற்றாண்டைச் சேர்ந்த யோக தட்சிணாமூர்த்தி, வன்னி மரத்தடியில் வழிபடப் பெறுகிறார். வன்னி மர இலைகளால் சிவனை அர்ச்சிக்கிறார்.

63 நாயன்மார்களின் சன்னதியில், பிள்ளையார், மனோண்மணி, நால்வர் ஆகியோர் சிலை வடிவங்களை நிறுவியுள்ளனர். கருவறையிலிருந்து பிரித்து எடுத்திட்ட கல்வெட்டுகளை ஒருங்கிணைத்தும் சன்னதி பீடத்தின் கீழே வரிசை செய்துள்ளனர். திருச்சுற்றில் வாராகி



அன்னை வீற்றிருக்கிறாள். மகிழ மரம் இத்தலவிருட்சமாகும்.

இந்தக் கோவிலுக்கு உரிய சிறப்புகளில் அட்டமி வழிபாடும் ஒன்று. மகாபைரவருக்குத் தேய்பிறை அட்டமி நாளில்நெய்தீபமேற்றிசிவப்புஅரளியால்அர்ச்சனை செய்து அன்னதானம் செய்வோருக்கு மகப்பேறின்மைக் குறை தீரும். பஞ்ச தீபம் ஏற்றி வழிபடின் எல்லாத்துன்பங்களும்தீரும். பஞ்ச தீபம் என்பது, இலுப்பை எண்ணெய், விளக்கெண்ணெய், தேங்காயெண்ணை. நல்லெண்ணெய், பசுநெய் ஆகியன.

மகாசிவராத்திரியில் 108 முறை வலம் வருகிறார்கள். 108 எண்ணிக்கை மாறாமல் இருக்க 108 காசுகளை உண்டியலில் போட்டு வணங்குகின்றனர். திருமணப் பேறு கிட்ட, சகல சம்பத்தும் கூட நன்மக்கட் பேறு அடைய சிவராத்திரி விரதம் பலனளிக்கிறது.

சித்திரை முழுநிலவு நாளில், சங்கமேசுவரரும், சுப்பிரமணியரும் இரு தேர்களில் நகரின் முதன்மை வீதிகளில் புதுப்பிக்கப்பட்ட தேரில் உலா வருவர்.

கோவை நகரின் மய்யத்தில் மாநகராட்சி கட்டடத்தின் பின்புறம் ஆலயம் அமைந்து உள்ளது. டவுன்கால் பேருந்து நிறுத்தத்தில் இறங்கிடத் தென்புறம் செல்லும் சாலையில் ஐந்து நிமிட நடையில் கோவிலை அடையலாம்.

காலை 6.30 மணி முதல் 12 மணி வரை, மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை நடை திறந்திருக்கும்.

## நவராத்ரி நிவேதனம்!

நவராத்ரியின் முதல் மூன்று நாட்களில் எலுமிச்சம் பழச் சாதமும், எள்ளுச் சாதமும், தயிர் சாதமும் நிவேதனம் செய்யலாம். அடுத்த மூன்று நாட்களில் சர்க்கரை அன்னம், பால் சாதம், கற்கண்டு சாதம் ஆகியவற்றை நிவேதனம் செய்யலாம்.

கடைசி மூன்று நாட்களில் வெண் பொங்கல், தேங்காய் சாதம், பால் சாதம் நிவேதனம் செய்து அம்பாளின் அருள் பெற்று பலன் பெறலாம்.

**- ஆர்.ராமலெட்சுமி, திருநெல்வேலி.**



# ஆன்லைன் பிள்ளையார்!



மும்பை நகரில் ஆண்டுதோறும் விமரிசையாக கொண்டாடப்பட்டு வரும் கணபதி விழா, கடந்த இரண்டு வருடங்களாக ஆன்லைன் ஆகிவிட்டது.

பெரிய சபாக்களும் ஆன்லைன் வழியே இந்நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். ஃபைன்ஆர்ட்ஸ் சொஸைட்டி, செம்பூர் மும்பை நடத்தி வரும் ஆன்லைன் நிகழ்வுகளுக்கு மக்களிடையே வரவேற்பும், ஆதரவும் உள்ளன.

பிள்ளையார் சதுர்த்தியை முன்னிட்டு, ''ஆன்லைன் பிள்ளையார் மேக்கிங் போட்டி''யை அறிவிக்க, சுமார் 300 பேர்கள் இந்தியா முழுவதிலுமிருந்து பங்கேற்றனர்.

இயற்கைப் பொருட்களான களிமண்; அரிசி மாவு; கோதுமை மாவு; மைதா மாவு; மஞ்சள் பொடி, காவிப் பொடி; இலைகள், கறிகாய்கள் மட்டும் உபயோகிக்க அனுமதிக்கப்பட்டது.


5 அங்குலம் முதல் 12 அங்குலம்வரையில்பிள்ளையார் இருக்கலாம் என்றும் பிளாஸ்டர் ஆஃப் பாரிஸ் கூடாது என்றும் சொல்லப்பட்டு, விநாயகரை உருவாக்கும் போது அதன் மீது வீடியோ போகஸ் இருக்கவும், சிலையை தயாரிக்க ஒரு மணி நேரமும் கொடுக்கப்பட்டிருந்தது.

முதல் ஒரு மணி நேரம் பிள்ளையார் செய்து முடிக்கவும் மீதி அரை மணி நேரம் நடுவர் பார்வைக்கு வைத்திருப்பது என்ற நிபந்தனைகளுடன் ஆண்களும், பெண்களுமாக 3 பிரிவுகள் பங்கேற்க அனுமதி அளிக்கப்பட்டது. மேற்பார்வை செய்ய கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் நடுவர்கள் இருந்தனர்.

பங்கேற்றவர்கள் மிகவும் ஆர்வத்துடன் பிள்ளையாரை தங்களது கைகளால், விதம் விதமாக உருவாக்கிய அழகு கண்களில் ஒற்றிக்கொள்வதாக இருந்தது.

-ஆர்.மீனலதா, மும்பை.





# மருந்தே வாழ்க்கையாகி விடக்கூடாது !

எதிலும் ரசாயனம் மிக்க இந்த உலகத்தில் தற்போது நோய்கள் மிகவும் அதிகரித்து விட்டன. பாக்கெட் உணவுகள், குளிரூட்டப்பட்ட பலவகையான குளிர்பானங்கள் என நமது அன்றாட வாழ்வில் இப்படி பல பொருட்கள் இன்றியமையாத பொருட்களாகவே மாறிவிட்டன. இயற்கை உணவுப் பொருட்கள், கைத்தறி ஆடைகள், ரசாயனம் கலக்காத வீட்டு உபயோகப் பொருட்கள், மருந்து இல்லாத மருத்துவம் ஆகியவை கேள்விக்குறியாகி விட்டது. அதனை சாத்தியப்படுத்தி தனது வாழ்வில் மட்டுமல்லாது தன்னை சார்ந்தவர்கள் வாழ்விலும் கடைபிடிக்க வைத்து அசத்தி வருபவர் அக்கு ஹீலர் ( Acu Healer) பி.எஸ். வைஷ்ணவி. சமூக ஆர்வலரான இவர், தொழிலாளர்கள் நலனிலும், இயற்கை வாழ்வியல் மீதும் மிகுந்த ஆர்வம் கொண்டவர். இயற்கையோடு வாழும் வாழ்க்கை குறித்து அவர் விரிவாகப் பேசினார்.

பெரும்பாலும் இந்த மண்ணுக்கும், சூழலுக்கும் குப்பைகளையும், நச்சுகளையும்தான் நாம் திருப்பிக் கொடுக்கிறோம். நாம் அன்றாடம் உபயோகிக்கும் பொருட்கள், உடுத்தும் ஆடை என அனைத்திலும் ரசாயன கலப்பு உள்ளது. இதனை மாற்றி அறம் சார்ந்த வாழ்வியலை நாம் ஏற்படுத்த வேண்டும்



இங்கு பெரும்பாலான ஆடைகள் சாயப்பட்டறையிலிருந்து ரசாயனத்துடன் வெளியேறுகின்றன. நவீன தொழில்நுட்பத்தில் பெரும்பாலான தொழிலாளர்களின் உழைப்பு ஆடைகளில் சுரண்டப்படுகிறது. ஒரு விஷயத்தை அழித்துதான் தொடர்ச்சியாக இந்த சமுதாயத்தில் நாம் வாழ்கிறோம். இதனை மாற்றும் விதமாக சிறு வியாபாரிகளிடம், உள்ளூர் தயாரிப்புகளில் ஆடைகளை வாங்குவதில் கவனம் செலுத்த வேண்டும்.

அரசின் கோ-ஆப்டெக்ஸ் மற்றும் நமக்குத் தெரிந்த கைத்தறி தொழிலாளர்கள் மூலமாக கைத்தறி ஆடைகளை வாங்கி உடுத்தலாம். இதேபோன்று வீட்டு உபயோகப் பொருட்களிலும் கவனம் செலுத்த வேண்டும். துணி துவைக்கும் சோப்பு, உடலுக்கு பயன்படுத்தும் சோப்பு, கழிப்பறைக்கான பொருட்கள் என அனைத்திலும் ரசாயனம் கலக்கப்பட்டுள்ளது. எனவே அதனை பயன்படுத்தக் கூடாது என்று முடிவெடுப்பது சிறந்தது.

இதற்காக வீட்டிலேயே எலுமிச்சம் பழம், சாத்துக்குடி பழங்களின் தோலை வைத்து 'சுத்தப்படுத்தி' தயார் செய்தோம். துணி துவைப்பது, குளிப்பது, வீடு துடைப்பது வரையில் தயார் செய்ததை மட்டுமே பயன்படுத்துகிறோம். இதனை மற்றவர்களும் பின்பற்றலாம்.

**- அக்கு ஹீலர் வைஷ்ணவி**

இதேபோன்று ஹேண்ட் மேட் சோப்புகளை பயன்படுத்துவது நல்லது. அதில் ரசாயனக் கலப்பு இல்லை. இதனைத்தொடர்ந்து பிளாஸ்டிக் ஒழிப்பிலும் கவனம் செலுத்த வேண்டும். எந்த கடைக்குச் சென்றாலும், அவர்கள் கொடுக்கக் கூடிய பிளாஸ்டிக் பைகளை வாங்கக்கூடாது. வெளியில் செல்லும்போதே துணிப் பையுடன் செல்வதை வழக்கமாக கொள்ள வேண்டும். மேலும் தலையில் தேய்த்துக் குளிப்பதற்குக்கூட வீட்டிலேயே பொடி வகைகளை தயார் செய்யலாம். அப்படி தயார் செய்த பொடியை பயன்படுத்தினால் தலைமுடி கொட்டாமல் நன்கு வளர்ச்சி பெறும்.

இப்படி வீட்டிலேயே தயார் செய்த பொருட்களால் துணி துவைக்கும்போது, குளிக்கும்போது வெளியேறும் தண்ணீரில் ரசாயனம் எதுவும் இருக்காது. அப்படி வெளியேறும் தண்ணீரைக்கூட வீணடிக்காமல் சேகரித்து வைத்து, அதனை வீட்டு செடிகளுக்கு ஊற்றலாம். இதன் மூலம் செடிகள் நன்கு வளரும். பாத்திரம் தேய்க்கவும் இதனை பயன்படுத்தலாம்.

உணவு முறையிலும் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். உணவுமுறை காரணமாகத்தான் புற்றுநோய் உள்ளிட்ட பலவகையான நோய்கள் தற்போது அதிகரித்துள்ளது. எனவே பிராய்லர் கோழி போன்றவற்றை தவிர்ப்பது நல்லது. இன்றைய பரபரப்பான இந்த காலகட்டத்தில் உடலுழைப்பு என்பதே இல்லாமல் போய்விட்டது. எனவே நாம் சாப்பிடக்கூடிய உணவிலும் ஒவ்வாமை அதிகமாக உள்ளது.



## வீட்டு வைத்தியம்!

மிளகுப் பொடியுடன் வெல்லம் கலந்து சாப்பிட்டு வர இருமல், பசியின்மை நீங்கும். சீரகத்தை பொடித்து தேன் அல்லது பாலில் சாப்பிட்டு வர பித்தம், வாய் ஆகியவை நீங்கும்.

ஓமத்தைப் பொடித்து நீருடன் உட்கொள்ள பசி மிகும். வயிற்றுக் கோளாறுகள் நீங்கும்.

இஞ்சியையும், எலுமிச்சை சாற்றையும் அடிக்கடி சாப்பிட்டு வந்தால் மார்புவலி போன்ற நோய்கள் அண்டாது.

– கே.பிரபாவதி, மேலகிருஷ்ணன் புதூர்.



எனவே ஒவ்வாமை கொடுக்கும் உணவுகளை முடிந்த வரையில் தவிர்த்து விடவேண்டும். பாட்டிலில் அடைக்கப்படும் அன்னிய குளிர்பானங்களை எடுத்துக்கொள்ளாமல் இருப்பது நல்லது.

இதனையடுத்து மருந்து இல்லாத மருத்துவம் எந்த அளவுக்கு சாத்தியம் என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். சிலருக்கு அலோபதி சிகிச்சை முறை திருப்தி தரும். ஆனால் எந்த அளவுக்கு ஒரு மருந்து நோயை கட்டுப்படுத்துகிறது என்பதுதான் முக்கியம். நமக்கும், நம்மைச் சார்ந்து இருப்பவர்களுக்கும் மருந்துகள் உட்கொள்ளும் சிகிச்சைமுறை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. மருந்து என்பது வாழ்க்கையின் ஒரு அத்தியாயமாக இருக்க வேண்டுமே தவிர, அதுவே வாழ்க்கையாகி விடக்கூடாது. தினசரி அட்டை அட்டையாக மருந்துகளை சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். அதை மாற்ற வேண்டும்.

நல்லதொரு மாற்றத்திற்காக அக்குபஞ்சர் சிகிச்சை முறையை தேர்ந்தெடுக்கலாம். அக்குபஞ்சர் சிகிச்சை முறையில் நல்ல திருப்தியை உணர முடியும். பின்னர் அந்த சிகிச்சை முறை பற்றிய தேடல் நமக்குள் எழும். இதில் முழுவதுமாக மருந்து இல்லாத மருத்துவம் கடைபிடிக்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக உலக மக்களை கொரோனா அச்சுறுத்தி வருகிறது. இதுபோன்ற சூழலில் உடலையும் உடலிலுள்ள நோயையும் சரியாக புரிந்துகொண்டு வாழ்க்கை முறையுடன் மனநிலையை சமமாக வைத்துக் கொள்வது குறித்து சரியான புரிதல் ஏற்பட்டது. இந்த சிகிச்சை முறை மூலம் பயமின்றி இந்த கால கட்டத்தை கடக்க ஒரு உத்வேகம் எழுந்தது. இதுபோன்று இயற்கையோடு சார்ந்து நாம் அனைவரும் வாழ ஆரம்பித்தால் எதிர்காலத்தில் நோய் அச்சுறுத்தலைக் கடந்து நல்ல உடல் ஆரோக்கியத்துடன் நாம் நிம்மதியாக வாழலாம்.

- வினோதன்



# கஷ்டங்களை போக்கும் பாணலிங்கம்!

இந்தியாவில் ஏழு புனித நதிகளில் ஒன்று நர்மதா. ரேவா என்பது அதன் பழைய பெயர். ராமாயணம், மகாபாரதம் மற்றும் புராணங்களில் ரேவா பற்றி நிறைய தகவல்கள் உண்டு. 5-வது நீண்ட நதி. இந்தியாவில் பயனளிக்கும் 4-வது பெரிய நதி. கங்கை, கோதாவரி, கிருஷ்ணாவுக்கு அடுத்த பெரிய நதி.

மொத்தம் 1312 கி.மீ. பயணிக்கும் இதன் நீரை குடித்து, சிவனை வழிபட்டால் செய்த பாவங்கள் அனைத்தும் மறையும் என்பது வட நாட்டு பக்தர்களின் நம்பிக்கை.

இந்த நர்மதை நதிக்கு ஒரு சிறப்பு உண்டு. இங்கு கிடைக்கும் அழகிய (லேத்தில் ஏற்றி கடையப்பட்டது போன்ற வழ வழப்பு கொண்ட) கூழாங்கற்களுக்கு அலாதி மதிப்பு உண்டு. இவற்றை பாண லிங்கம் என சிறப்பு பெயரிட்டு அழைப்பர்.

நர்மதா நீர்வீழ்ச்சி இடங்களில் பெரும் பள்ளங்கள் உருவாகி தண்ணீருடன் பாறைகளும் விழுந்து சிறிய பாறைகள் பல ஆயிரம் முறை சுற்றுதலுக்கு உள்ளாகின்றன. இதனால் கற்கள், கடைந்தது போல மென்மையாவதுடன், பல வண்ணங்களையும் ரேகைகளையும் பெறுகின்றன. இத்தகைய பள்ளங்களில் தொழிலாளர்கள் இறங்கி மூச்சைப் பிடித்து மூழ்கி, அடியில் சென்று அங்கு சேர்ந்துள்ள கற்களை எடுத்து வருகின்றனர். இவை 20 செ.மீ. முதல் 300 செ.மீ. வரை நீளத்தில் உள்ளன.

ஒரு காலத்தில் வட நாட்டில் உள்ள சிவத் தலங்களில் இந்த பாண லிங்கமே இடம் பெற்றதாம். ஆனால் இன்று நர்மதையில் பாணலிங்கம் உருவாகும் 'தாடிகுன்ட்' என்ற இடத்தில் புதிய அணை கட்டி விட்டதால் இந்தப் பகுதி தண்ணீரில் மூழ்கி விட்டதால் பாணலிங்கம் கிடப்பது அரிதாகி விட்டது.

தஞ்சை பெரிய கோவிலில் நாம் காணும் லிங்கம் பாணலிங்கம் தான் என கூறப்படுகிறது. இவை 1000 ஆண்டுகளுக்கு முன்பு எடுத்து வரப்பட்டதாகும்.

இதே போன்ற பெரிய, பெரிய லிங்கங்களை உருவாக்க கர்கோன் மாவட்டத்தில் பக்காவா என்ற கிராமம் உள்ள பகுதியில் ஓடும் நர்மதையின் கரையில் மிக கடினமான பாறைகள் உள்ளனவாம். இந்த கடின பாறைகள் லிங்கம் செய்ய ஏற்றவை என காலம் காலமாக தீர்மானிக்கப்பட்டு, அவற்றிலிருந்துபிரம்மாண்ட லிங்கங்கள் செய்யப்பட்டதாக கூறுகின்றனர். இதே போல் இந்த பகுதி கோவிலை ஒட்டியுள்ள கடைகளில் விற்கும் பாணலிங்கங்கள் ஒரிஜினல் அல்ல எனவும் கூறுகின்றனர்.

உண்மையான பாணலிங்கம், கட்டை விரல்களின் நகங்களுக்கு இடையே பாணலிங்கத்தைப் பிடித்தால் அவை சுற்ற வேண்டுமாம். இதனை வைபரேஷன் எனக் கூறுகின்றனர். இத்தகைய பாணலிங்கங்கள் சக்தி மிக்கவை. இவற்றை வீட்டில் வைத்து பூஜித்தால் கஷ்டங்கள் விலகும் என கூறுகின்றனர்.

இப்போதும் நர்மதா பாயும் காட்டுப் பகுதிகளில் அதனை ஒட்டியுள்ள காட்டுப் பகுதிகளில் உள்ள ஆற்று மணலை தோண்டினால் ஏராளமான பாணலிங்கங்கள் கிடைக்கிறதாம். இறை வழிபாட்டிற்கு பயன்படும் பல பொருட்கள் நமக்கு நதி படுகைகளில் தான் கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

- ராஜிராதா, பெங்களூரு.

பரிசு கதை



# தெய்வமும் மனிதனாகலாம்!

-ஜெயா ராஜாமணி

''**வ**ரேன் சார்!'' காலை தொட்டு வணங்கிய செந்திலை அணைத்துக் கொண்டார், சிறை அதிகாரி ரமணன்.

சிரித்தபடி, ''இங்க, 'வரேன் சார்'ன்னு சொல்லக் கூடாது; போறேன் சார்'ன்னு தான் சொல்லணும்.'' என்றார்.

''செந்தில்... நான் கூறியதையெல்லாம் மறக்காதே... கூர்மையான அறிவுள்ளவன் நீ... உழைப்பாளி, பாடுபட தயங்காதவன். சரியான வழிகாட்டுதல் இல்லாமல், பாதை மாறி போய்விட்டாய். இப்போதும் ஒன்றும் காலம் கடந்து விடவில்லை.


''நாலு பேர் உன்னை பின்பற்றும் நல்ல மனிதனாக வாழ்ந்து காட்டு; உன்னால் நிச்சயம் முடியும். என்ன... சிறைக்கு போய் வந்தவன் என்ற முத்திரை, உன்னை அவ்வப்போது அலைக்கழிக்கும்... அதையெல்லாம் லட்சியம் செய்யாதே. புது மனுஷனா வந்து, என்னைப் பாரு.''

செந்திலுக்கு மட்டுமல்ல, அந்த கருங்கல் கட்டடத்தினுள் கல்லாக இறுகிப் போயிருந்த பல கைதிகளுக்கும், அவர் அவ்வப்போது கூறும் அன்பான அறிவுரைகள், இவை.

அப்பப்பா... ஒன்றா, இரண்டா, ஒன்பது ஆண்டுகள். பலதரப்பட்ட மனிதர்கள். அவர்களது குற்றங்கள், நியாயங்கள் தனி ரகங்கள். அந்த அனுபவங்களும் கூட செந்திலை பக்குவப்படுத்தி இருந்தன. பெருமூச்சுடன் வெளியே வந்த அவனை, உலகின் ஒளியும் - ஒலிகளும் தான் வரவேற்றன.

'தலைவா... தலைவா...' என்று கண்மூடித்தனமாக யார் பின்னால் ஓடினானோ, அந்த தலைவனையோ, அவருடன் சிறு தொண்டர்களாக சுற்றித் திரிந்த சின்னு, மாரி மற்றும் ஜோசப்பையும் காணவில்லை. இதெல்லாம் செந்தில் எதிர்பார்த்தது தான். இருந்தாலும், ஏமாற்றத்துடன் மனதில் எழுந்த பழைய நாட்களின் நினைவுகளை ஒதுக்கித் தள்ள முடியவில்லை; அதிலும் அந்த சம்பவம், அந்த முகம்.

அவனால் வெட்டப்பட்டு, ரத்தக்களரியுடன், 'அம்மா' என்ற அலறலுடன் சாய்ந்தவனை, அவனால் மறக்க முடியவில்லை. இப்போது, எப்படி இருக்கிறானோ... அவ்னை எப்படியாவது சந்திக்க வேண்டும் என்று அவ்வப்போது தோன்றும் ஆவல், இப்போதும் எழுந்தது. எதற்கு... அவன் சேதமில்லாமல் இருந்தால்,



## மாஸ்க் கண்காட்சி!



ஐரோப்பிய நாடுகளில் ஒன்று செக் நாடு. இந்நாட்டு மக்கள் தங்களுக்கான முகக் கவசங்களை தாங்களே தயாரித்து, வீட்டைவிட்டு வெளியில் வரும்போது தவறாமல் அணிந்து கொள்கிறார்கள்.

மாஸ்க் அணிவது கட்டாயம் என்று வலியுறுத்திய நாடு செக். அந்நாட்டு மக்களைக் கவுரவிக்க அவர்கள் தயாரித்த 100 விதமான முகக் கவசங்களை நேஷனல் மியூசியத்தில் கண்காட்சியாக வைகிறது அரசு. கண்காட்சியைப் பார்வையிட மாஸ்க் அணிவது கட்டாயம். இது போல மாஸ்க் கண்காட்சி நடப்பது உலகில் இதுவே முதல் முறை. செக் நாட்டு மக்கள் கட்டுப்பாடுகளைக் கடைபிடித்து கொரோனா தொற்றை பெருமளவு குறைத்து விட்டார்களாம்.

– ஆர்.ராஜலட்சுமி, திருச்சி 6.

வண்டாக குடையும் தன் மனதிற்கு நிம்மதி கிடைக்கும் என்பதற்கா அல்லது பாவ மன்னிப்பு கேட்கவா... அவனுக்கே புரியவில்லை.

எந்த ஊர்... நினைவை கசக்கினான், சோலையூர். திட மனதுடன் கிளம்பி விட்டான்.

சோலையூரில் வந்து இறங்கியதுமே, ஊருணியின் தூர் எடுக்கும் பணி, அவன் பிழைப்புக்கு வழி காட்டியது.

புல்லும் முள்ளும், சேறும் சகதியும் மண்டிப் போயிருந்ததை, செம்மைப் படுத்தும் பலரில் ஒருவனாக அன்றைய கூலியை அவன் வாங்கிய போது... மெதுவாக அவன் தோளை தொட்டு கேட்டார், ''ஊருக்கு புதுசா... யாருப்பா நீ?''

அந்த கண்களின் ஊடுருவலில், தடுமாற்றத்துடன், ''சேலத்து பக்கத்திலிருந்து பொழப்பு தேடி வந்தேனுங்க... வந்ததும் இந்த வேலை கிடைச்சுச்சு,'' என்றான் செந்தில்.

''அயராம நீ வேலை செய்யறத பார்த்தேன்... இப்படிதான் பாடுபடணும்... உன் பேரு என்ன?''

''செந்தில்ங்க.''

''எங்க தங்கியிருக்கே?''

விழித்தான் செந்தில்.

புரிந்து கொண்டவராக, ''ர... ராமா... இப்போதைக்கு இவரை உன் கூட தங்க வச்சுக்க... இந்தாப்பா செந்தில்... நாளைக்கு வந்துடு'' எனக் கூறி, நடந்தவரை பார்த்தபடியே நின்றான்.

''செந்தில்... அவர் தான் கணேசன் சார்... சோலையூர் என்ற பேருக்கேத்தாப்புல குளுகுளுன்னு மரமும், செடியுமா இந்த ஊர் நல்லாருக்குன்னு சொன்னியே... அதுக்கு காரணமே, இவர் தான். ஊர்ல ஒவ்வொருத்தரும் ஒரு செடியாவது வளர்த்து மரமாக்கணும்ன்ற திட்டத்தை செயல்படுத்தி, அவனவனை போட்டி போட்டு மரம் நடவச் சாரு... ஊரே இன்னிக்கு சோலையாயிருக்கு.''

''இந்த ஊர் தலைவரா?'' கேட்டான் செந்தில்.

சிரித்தான் ராமன்.

''இங்க தலைவர்னுல்லாம் கிடையாது. எல்லாரும் தலைவர் தான், தொண்டர் தான். 'நான், எனது'ன்னு இல்லாம, 'நாம், நமது'ன்னு இருக்கோம்...

''கணேசன் சாருக்கு இந்த மண்ணுன்னா உசிரு... இந்த ஊர்லயே பிறந்து வளர்ந்து, படிச்சு, இந்த ஊர் கலைக்கூடம் அரசு பள்ளியில தலைமை ஆசிரியரா இருக்காரு... நிறைய படிச்சிருந்தும் டவுனு, வெளி நாடுன்னு போகாம, ஏழை எளியவங்க நல்லா படிக்கணும், அரசு பள்ளிகளெல்லாம் சிறப்பா நடக்கணும்னு பாடுபடறாரு...

''போன மாசம், பேப்பர், 'டி.வி'யில் எல்லாம் பார்த்திருப்பியே... அரசு கலைக்கூடம் பள்ளி மாணவி கவுரி, தமிழகத்திலேயே முதல் மாணவியா வந்தது... அப்ப நீங்க இங்க வந்திருக்கணும், கலெக்டர் என்ன... மந்திரிங்க என்ன... ஊரே திருவிழாவா இருந்துச்சு...

''நாலு ஆண்டுக்கு முன், பள்ளிக்கூடத்துல

## தெரிந்து கொள்வோம்!

தபால்தலையை முதன் முதலாக வட்ட வடிவமாக வெளியிட்ட நாடு மலேசியா. சிம்கார்டின் விரிவாகாம் Subscriber Identity Module.

உலகிலேயே முதியோருக்கு பென்ஷன் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்திய நாடு நியூசிலாந்து. ஒடிசாவில் அமைந்துள்ள சில்கா ஏரியில் நல்ல நீரும், கடல் நீரும் கலந்திருக்கும். இவ்விடம் பறவைகள் சரணாலயமாக உள்ளது.

எகிப்து நாட்டில் அலெக்ஸாண்டிரியா துறைமுகத்தில் தான் உலகின் முதல் கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டது.

உலகின் மிக நீளமான ரயில் பாதை மாஸ்கோ நகரிலிருந்து விலாடிபோஸ்டாக் வரை அமைந்து உள்ளது. மொத்த தூரம் 10 ஆயிரத்து 160 கி.மீ.

சைப்ரஸ் நாட்டு தேசியக் கொடியில் அதன் 'மேப்' இடம் பெற்றிருக்கும். பராகுவே நாட்டுக் கொடியில் 2 பக்கங்களில் வெவ்வேறு படங்கள் காணப்படும்.

- எஸ்.மகாலெட்சுமி, காரைக்கால்.

மட்டுமில்ல, வீடுகள்ல கூட சரியான கழிப்பறை கிடையாது... கள்ளுக்கடை, பொழுது சாஞ்சா புருஷன் பொண்டாட்டி சண்டை, தெருவ அடைச்சுகிட்டு ஓடற சாக்கடைன்னு இருந்த சோலையூரு... இன்னிக்கு 'பளீச்'சுன்னு அனைவரும் திரும்பி பார்க்கறாப்புல இருக்குன்னா, அதுக்கு கணேசன் சாரோட வழிகாட்டலும், அயராத உழைப்பும் தாம்பா காரணம்.

''அவ்வளவு ஏன், இந்த தேர்தல்ல ஓட்டு கேட்டு வந்தவங்க, இலவசமா கொடுக்க வந்த பொருள், பணம் எதையும் நாங்க வாங்க மறுத்துட்டோமே... அதுக்கு பதிலா, 'குண்டும் குழியுமா இருக்கற ரோட்டை செம்மைப்படுத்துங்க... சரியான கவனிப்பு இல்லாம இருக்கற அரசு ஆஸ்பத்ரிய சீர்படுத்துங்க... எங்க ஓட்டு, உங்களுக்கு தான்'னு கோரிக்கை வச்சோம்!''

''மூச்சுவிடாமல் அடுக்கிய ரமணி, வியப்புடன் பார்த்த செந்தில், ''அதெண்ணண்ணே ரோடு ஓரத்துல ஆங்காங்கே மஞ்ச பெட்டி, சிகப்பு பெட்டி?''

''அதுவா... மக்கற குப்பையை, மஞ்ச பெட்டிலேயும்... மக்காத குப்பையை சிகப்பு பெட்டிலேயும் போடணும்... அப்படி போட்டா, அதுல வேலை செய்யறவங்களுக்கு உதவியா இருக்கும். எடுத்த துக்கெல்லாம் அரசையே குறை கூறிட்டு இருக்காம, நாமளும் விழிப்புணர்வோட இருக்கணும்கறதையே கணேசன் சார் தான் புரிய வச்சார்... நீ கேட்டியே, அவர் தலைவாரான்னு... கணேசன் சார் அதுக்கும் மேலே... எங்க தெய்வம்னே சொல்லணும்.''

'இப்படியெல்லாம் ஒழுங்கா முறையா நடக்குமா... நடக்கும். ஊருணி வேலை முடிந்ததும், வந்து பார்க்க சொன்னாரே கணேசன் சார்... எத்தனை பெரிய மனசு...' வியந்த செந்திலின் மனதில், அவர் உயர்ந்து நின்றார்.

அந்த ஊருக்கு எதற்கு, யாரை காண வேண்டும் என்று வந்தானோ, அந்த துடிப்பு கூட சற்று பின் தள்ளப்பட்டுவிட்டது.

தனித்து தெரிந்த அந்த ஊர், அதன் மக்கள், அவர்களில் ஒருவனாக காலமெல்லாம் அங்கேயே கழித்துவிடலாம் என்று தோன்றியது. அதிலும் பூத்துக் குலுங்கும் செடிகளும், மரங்களும் சூழ, துறு துறுவென்று ஓடி வரும் சிறுவர்களும், கம்பீரமாக வலம் வரும் ஆசிரியர்களுமாக. 'பளீச்'சென்று காட்சியளிக்கும் அந்த கலைக்கூடம் அரசு பள்ளியில், கூட்டி பெருக்கும் சிறு வேலை கிடைத்தால் போதும்... இப்படி பல சிந்தனைகள்.

கணேசன் சாரை போய் பார்த்தான், செந்தில்.

ஆனால், அந்த சந்திப்பு... எப்போதும் போர்த்தியபடி இருக்கும் மேல் அங்கி இல்லாமல் அமர்ந்திருந்த அவரின் மார்பு... வலது தோள்பட்டையுடன் நின்று போயிருந்த, கைக்கு மேல் தொங்கிய தொள தொள சட்டை...

ஓங்கி அறையப்பட்டது போல் ஒரு கணம் துடித்தான் செந்தில்.

''செந்தில்... நம்ம ஊர் சர்ச்சுல வேலை செய்பவர், மூன்று மாத விடுப்பில் போயிருக்கிறார். அவர் வரும் வரை, நீ அந்த வேலைகளை பார்த்துக் கொள்கிறாயா... அங்கேயே பக்கத்துல தங்குமிடம், உணவு வசதியும் இருக்கு... பாதிரியார் பீட்டரை போய் பார்... எல்லாம் விளக்கமா சொல்வார்,'' என்றார் கணேசன்.

வாய் திறந்து சொல்ல இயலாது, தலையை ஆட்டி, வெளியே வந்தவன், ஒதுக்குப்புறமாக நின்று, குலுங்கி குலுங்கி அழுதான்.

'அந்த அவன் தான், இவரோ... ஆமாமா... நான் தான் பார்த்தேனே... என்னோட வெட்டு, சரியா அந்த தோல் பட்டைல விழுந்ததை... அவருக்கும் தன்னை தெரிந்து விட்டதோ... அதனால் தான் என்னை, பாவ மன்னிப்பிற்கு சர்ச்சுக்கு அனுப்புகிறாரோ...'

பலவாறு கலங்கிய அவன் மனதிற்கு, அந்த

தேவாலயத்தின் புனிதமும், அமைதியும் சுத்தப்படுத்துவதும், தோட்ட பராமரிப்பும், பாதிரியாரின் கனிவான பேச்சும் இதமாக இருந்தது. இருப்பினும், மூன்று மாத வேலை முடிந்தவுடன், ஊரை விட்டே போய்விடலாமா என்ற எண்ணமும் அவ்வப்போது எழுந்தது.

ஆனால், அவனை போகவிடவில்லை, கணேசன்.

அது... சோலையூரில் உருவாகி வரும், பெரிய நூல் நிலையத்தை காவல் காக்கும் பொறுப்பு.

சிறுவர்கள் முதல் பெரியோர் வரை, மாணவர்கள், பொதுமக்கள் எல்லாருக்கும் பயன்படக் கூடியதாக, சுற்று வட்டாரத்தில் எங்கும் கிடைக்காத அரிய நூல்களும் கிடைக்கும் என்ற நம்பிக்கையை தரும்படியாக, அந்த பாரதி நூல் நிலையம் அமைய வேண்டும். வாழ்வின் லட்சியமே அதுதான் என்பது போல, அயராது பாடுபட்டு கொண்டிருந்தார், கணேசன்.

அதற்காக பல இடங்களிலிருந்தும் நன்கொடை குவிந்தாலும், அங்கு வைத்திருந்த பெரிய உண்டியலில், 'நிதி மிகுந்தோர் பொற்குவி தாரீர்... நிதி குறைந்தோர் காசுகள் தாரீர்...' என்று எழுதி வைத்திருந்தார். அதற்கேற்ப, மாணவர்களும், அவ்வப்போது சில்லரை காசுகளை அதில் போடுவதை கண்டான் செந்தில்.

'என்னை நம்பி, இவ்வளவு பெரிய பொறுப்பை ஒப்படைத்திருக்கிறாரே கணேசன் சார்...' என்று மனம் கசிந்துருக, தானும் அதற்கு கைமாறாக ஏதாவது செய்ய துடித்தவனின் கண்களில், செய்தி தாளின் அந்த விளம்பரம் கண்ணில் பட்டது.

அதில், 'பெரும் செல்வந்தர் ஒருவரின் மகனுக்கு, ஒரு கிட்னியை தந்து உதவுபருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்... என, விலாசம்மற்றும் தொலைபேசி எண்ணுடன் குறிப்பிடப்பட்டிருந்தது.

'ஆஹா... நல்ல வாய்ப்பு...' என்று மகிந்த செந்தில், இதனால் தன் வேலைக்கு பங்கம் வருமா... எத்தனை நாள் மருத்துவமனையில் இருக்க வேண்டும் என்ற விபரங்களை சேகரித்தான். பின், குறிப்பிட்டுருந்த தொலைபேசி எண்ணில் பேசி, சோலையூர் நூல் நிலையம் பற்றி கூறி, 'சன்மானத்துடன், முடிந்தவரை கூடுதலாக சேர்த்து, மகன் பெயரில் நன்கொடையாக கொடுங்கள்... அந்த புண்ணியம் அவரை வாழ வைக்கும்...' என்று உணர்ச்சி பெருக்கில் கூறினான், செந்தில்.

எப்போது வர வேண்டும் என்று மருத்துவர்கள் கூறியதும், சொல்வதாக கூறினார், நெகிழ்ந்த அந்த செல்வந்தர்.

'இதையெல்லாம் கணேசன் சாரிடம் சொல்லாமல் செய்கிறோமே, விடுப்பு எத்தனை நாளோ, எப்படி கிடைக்கும்...' பல சிந்தனைகளுடன் வந்தவன் எதிரில், அவனை வழிமறித்தவனை கண்டதும், 'ஷாக்' அடித்தது போல் நின்றான்..

அவனுடன் ஒன்றாக சிறையில் இருந்த அழகரு. அடாவடி, முரட்டுத்தனம், தான் சொல்வதே சரி என்ற பிடிவாதம்... இதன் மொத்த உருவம் அவன். ஆனாலும், தன்னை போல அவனும் இப்போது மறியிருக்க மாட்டானா என எண்ணினான்.

என்னடா செந்தில்... அப்படியே திகைச்சு நின்னுட்டே... போன வாரம் தான் ரிலீசானேன்... இங்க என் மச்சான் இருக்கானான்னு பார்க்க வந்தேன்... அவங்க ஊரை விட்டே போயிட்டாங்களாம்... என்ன செய்யிறது, எங்க போறதுன்னு யோசனையோட வந்தவனுக்கு, 'நான் இருக்கேன்டா''ங்கறாப்பல நீ வந்து நிக்கறே... உன்னை பார்த்தது, ரொம்ப சந்தோஷமா இருக்குடா.''

அவன் பேச்சின் உருக்கத்தில் நெகிழ்ந்த செந்தில், அழகரு கையை பற்றி, தன் இருப்பிடத்திற்கு கூட்டி வந்தவன், அப்படியே தன் மனதை திறந்து கொட்டிவிட்டான். அதில், தன்னால் வெட்டப்பட்ட கணேசன் சாரின் சிறப்பு... தான் தான் அந்த குற்றவாளி என்பது, இங்கு யாருக்கும் தெரியாது... இன்னும் ஓரிருநாளில் கிட்னியை கொடுக்க, கோவை போக இருப்பது எல்லாமே அடக்கம்.

காலையில் விடிந்தும், விடியாதது மாக, ''செந்தில்... உங்கிட்ட கொஞ்சம் பேசணும்'' ஒரு மாதிரியாக இருந்தது அழகரு குரல்.

''இந்தா பாரு... எனக்கு உன்னை போல நல்லவன், வல்லவன்கற பட்டம் எல்லாம் வேண்டாம்... அது நம்மால முடியாது... அப்பப்ப கை நிறைய காசு... மனம் போன போக்கில், ஜாலியான வாழ்க்கை... இருக்கற வரைக்கும் அனுபவிக்காம, இதென்னடா சாமியார் வாழ்க்கை...

''அதுக்கு தான் ஒண்ணு சொல்றேன், நானும் உன் கூட கோவைக்கு வரேன்... எல்லாம் முடிஞ்சதும், அவரை கூட போட்டு தரச் சொன்னியே, அதையும் சேர்த்து, 'லம்பா' வாங்கி எங்கிட்ட கொடுத்திடு... பயப்படாதே, அதுல உனக்கும்

பங்கு தரேன்,'' என்றவனை அதிர்ச்சியுடன் பார்த்தான், செந்தில்.

செந்திலின் மறுப்பு, அழகரின் பிடிவாதம், அதன் இடையில் ஒலித்த மொபைல் போனில் செல்வந்தரின் மகன் மரண செய்தி வந்தது. செந்தில் முகத்தில் தெரிந்தது பச்சாதாபமா... நிம்மதியா... ஆனால், 'சுளையா கிடைக்க இருந்த பணம் போச்சே...' என அழகருக்குதான் ஒரே ஏமாற்றம்.

''சரி விடு... இன்னொண்ணு சொல்றேன்... அந்த நூல் நிலையத்துல இருக்கற அந்த உண்டியல்... நேத்து தூக்கி பார்த்தேன். என்ன கனம்... 50 - ஆயிரம் தேறும்... ஏன், லட்சம் கூட இருக்கும்... நீ ராவுல வர்றப்ப அதை எடுத்துட்டு வா... இங்க வச்சு ஒடச்சு ஆளுக்கு பாதியா அள்ளிட்டு, ஊரை விட்டே ஓடிடலாம். என்றான் அழகரு.

வெறுப்புடன், த்தூ...' என்று காறி உமிழ்ந்தான். சட்டைப்பையில் இருந்த சில 10 ரூபாய் தாள்களை எடுத்து, அழகரு கையில் அழுத்தியவன், ''இந்தா பஸ் காசு... இப்பவே இங்கிருந்து ஓடிடு,'' எனக் கூறி, பணிக்கு கிளம்பினான் செந்தில்.

''ஏண்டா... உனக்கு இவ்வளவு திமிரா... என்னையா விரட்டுறே... வெக்கறேண்டா உனக்கு வேட்டு... இப்ப பாரு, இந்த ஊர்க்காரங்களே உன்னை கல்லால் அடிச்சு, கழுத்தை பிடிச்சு தள்ளிடுவாங்க,'' என உறுமியவன், கணேசன் சார் முன் போய் நின்றான்.

''ஓ... செந்திலோட விருந்தாளி... என்னப்பா, காலையிலேயே இந்த பக்கம்... ஊருக்கு கிளம்பிட்டியா,'' கேட்டார் கணேசன்.

''ஆமா சார்... அதுக்கு முன், உங்ககிட்ட மட்டுமில்ல... இந்த ஊரையே கூட்டி வச்சு, அந்த புரட்டுக்காரன் மூடி மறைச்ச ரகசியத்தை உடைக்கணும்... முதல்ல, அந்த செந்தில் பயல இழுத்தாற சொல்லுங்க'' என்றான் மிதப்புடன்.

அழகரு வந்திருப்பதை அறிந்து, அங்கு வந்த செந்தில், சர்வ அங்கமும் ஒடுங்க, திகைத்து நின்றான்.

''இதோ... செந்திலே வந்துட்டானே... அதென்னப்பா சிதம்பர ரகசியம், சும்மா சொல்லு... எங்கிட்ட சொன்னாலே போதும்... இந்த ஊரும், நானும் ஒண்ணு தான்'' சிரித்தபடி கூறினார், கணேசன்.

''இவன் யாரு தெரியுமா... உங்க கையை வெட்டிட்டு, ஒன்பது ஆண்டுகளாக ஜெயில்ல 'களி' தின்னுட்டு இருந்தானே அந்தப் பய... இது தெரியாம, மாலை மரியாதையோட அவனை கொண்டாடறீங்க'' என ஆக்ரோஷத்துடன் கூறினான் அழகரு.

''தெரியுமே... முதலாளி சொன்னாருன்னு மரத்தை வெட்ட தான் அருவாளை ஓங்கினான்... நான் தான் சின்னப்பிள்ளைத் தனமா ஓடிப்போய் மரத்தை கட்டிப் பிடிச்சுட்டேன்... ஓங்கிய அருவா நிக்காம, நழுவிருச்சு; என் கை போச்சு... இதுல செந்திலோட தப்பு எதுவும் இல்லே...

''பாவம்... அனாவசியமா ஒன்பது ஆண்டு தண்டனை அவனுக்கு... இப்ப பாரு, எனக்கு ஒரு கை போனா என்ன, செந்திலோட கை களையும் சேர்த்து, நூத்துக்கணக்கான கைகள் உதவியா இருக்கு... அது இந்த ஊருக்கே தெரியும்... அழகருன்னு பேரு தான் உனக்கு, மனசு நல்லா இல்லியே... இப்ப வேணா அந்த 'மைக்'ல போயி சொல்லு'' என்றார்.

'தடால்' என்று விழுந்து கண்ணீரால் கால்களைக் கழுவிய செந்திலை, தூக்கி அணைத்து கொண்டார் கணேசன்.

''என்னப்பா... பெரிய மனுஷா... உன் கிட்னிய கொடுத்து, நம்ம லைப்ரரிக்கு நன்கொடை கேட்டாயாமே... அவரு பாவம், தன் மகனை இழந்ததை கூட பெரிது பண்ணாம, உன்னை பாராட்டி ஒரு லட்ச ரூபாய் அனுப்பியிருக்காரு'' என்றார்.

அங்கிருந்த அனைவர் கண்களும் கலங்கின... அதோ அழகரு, அவன் மனசும் கூட லேசாக இளக துவங்கியது.

**தினமலர் நிறுவனர் டி.வி.ஆர்., நினைவு சிறுகதை போட்டியில் ஆறுதல் பரிசு பெற்ற சிறுகதை.**

## பொன்மொழி!

**இ**ன்று செய்ய வேண்டியதை, இப்போதே செய்யுங்கள். காரண, நாளைக்கு ஏதேனும் இடையூறுகள் ஏற்பட்டு செயலை தடுக்கக் கூடும்.

**- பெஞ்சமின் பிராங்க்ளின்**

அதிக செலவுகளையும், மன சுமைகளையும் உண்டாக்கும் பொருளான கோபத்தை செலவழிப்பதில் மிகவும் கஞ்சனாக இருங்கள்.

**- வில்லியம் கர்ட்ஸ்**

நம்பிக்கை என்பது சூரியனை போல; அதை நோக்கி நாம் செல்லச் செல்ல மனச்சுமை என்ற நிழல் நம் பின்னால் போய்விடும்.

**- சாமுவேல் ஸ்மைல்ஸ்**

*தகவல்: எச்.ராஜேஸ்வரி, மாங்காடு*

# முத்துச்சிதறல்

**வான் நிலா!**

வான் நிலாவை பெண்ணாக ஏன் வர்ணிக்கிறார்கள்? என நினைப்பதுண்டு. பெண்மணி அட்டையில் மாருதி கைவண்ண பெண் ஓவியங்களை பார்க்கும்போது பதில் கிடைத்தது.

**- ஆர்.அமிர்தரூபன், குஞ்சன்விளை.**

விளையாட்டுத் துறையில் தலைமைப் பொறுப்பில் இருப்போர் செய்யும் தகிடுத்தத்தங்கள், இயற்கையை சேதப்படுத்தி வாழ்ந்து வரும் மனிதனுக்கு இயற்கை அளிக்கும் பேரிடர்கள், எதிர்காலம் குறித்து கௌரவ ஆசிரியரின் வேதனை எல்லாவற்றையும் படித்து நெகிழ்ந்தோம்.

**- ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்.**

இம்மாத பெண்மணி இதழில் நலம் தரும் நாமம்! கட்டுரை அருமை! இறைவனின் நாம மகிமையை ஆன்றோர் வாக்குகளிலிருந்தும், பல புராணங்களில் இருந்தும் தொகுத்து வழங்கிய.... அதிலும் அருணாசல நாமத்தையும் பகவான் ஸ்ரீரமண மகரிஷிகளின் பெருமையையும் படிக்க மனம் கசிந்தது. மாதம் தோறும் வெளிவரும் இந்த பக்தித் தொடர் அடுத்த மாதம் என்ன? என ஆவலுடன் எதிர்பார்க்க வைக்கிறது என்றால் அது மிகையல்ல! எழுதி வழங்கும் திருமதி. மாலதி சுந்தரராஜன் அவர்களுக்கு மனமுவந்த பாராட்டுக்கள்!

**-ஆர்.சந்திரா, மதுரை-2**

**ஜென் தத்துவம்!**

வாழ்க்கை என்பது நெடும் தூக்கத்தில் தொடர் கனவு. மரணமே விழிப்பு. கனவை மாற்ற முடியாதது போல வாழ்க்கையையும் அதன் போக்கில் வாழ வேண்டியது தான் என்பது புது தத்துவமாக இருந்தது.

**- அண்ணா அன்பழகன், அந்தணப்பேட்டை.**

'பறவைகளின் பாதுகாவலர்' சலீம் அலி, மறக்க முடியாத அற்புத மனிதர். சாதனைப் பெண் 'குர்பீத் அங்மோ', படிப்பு இல்லை என்று தயங்காமல் திறமையை வளர்த்து, ஊக்கத்துடன் சாதனை புரிந்துள்ளார்.

**- எஸ்.வளர்மதி, கொட்டாரம்.**

**பகிர்ந்து கொண்டீர்களா?**

மொழிபெயர்ப்பு சிறுகதை மிக அருமை. தம்பதியரில் யார் மறைந்தாலும் மற்றவர் படும் துயரத்தை மிக உருக்கமாக விவரித்துள்ளார் ஆசிரியர். அந்த கடைசி வாக்கியம் உண்மையானது. அன்பு என்பதை வெளிப்படுத்தி பகிர்ந்து கொண்டால்தான் வளரும் என்பது மறுக்க முடியாத நிஜம்.

**- கலாவதி தலையூர், சென்னை 64.**

இந்தியாவின் சர்க்கரைக் கிண்ணம் கோல்காப்பூர் பற்றிய கட்டுரை மற்றும் படங்களுடன் படித்த போது சென்று பார்த்த திருப்தி உண்டானது.

**- வசந்தா மாரிமுத்து, சென்னை 64**

மன நோய், மன அழுத்தம், மனச் சோர்வுக்கு மனமேதான் மருந்து. மனதை நாம் கையாளுவதை பொறுத்துதான் பிரச்சனை ஏற்படுவதும், அதை தீர்ப்பதும் நடக்கிறது என்பதை மாலதி சுந்தரராஜன் கட்டுரை தெளிவுப்படுத்தியது.

**- அ.யாழினி பர்வதம், சென்னை 78.**

மூன்று தலைமுறை கண்ட ஜெயஸ்ரீ நாயரின் கலைச் சேவை படித்து பல விருதுகள் வாங்கி பரிமளித்த இவர், இது எல்லாம் இறைவன் செயல் என்று கூறியது பாராட்டத்தக்கது.

**- வசந்தா மாரிமுத்து, சென்னை 64**

**'நீ இரவு நான் விண்மீன்'**

மனோன்மணி, செழியனோடு மனசுவிட்டுப் பேசியதும் தான், எனது மன இறுக்கம் தளர்ந்தது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்ட து. கடைசி நாலைந்து அத்தியாயங்கள் படிக்கப் படிக்க கண்களில் நீர் கரந்தது.

**- ஆர்.சூர்யா, கோவை.**

நாவலில் வல்லவனுக்கு உள்ள மரியாதை இங்கே நல்லவனுக்கு இல்லை எனும் வரிகள் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டியது. செழியன் கதாபாத்திரம், வாசகர்கள் நெஞ்சில் என்றென்றும் நியலைத்திருக்கும்.

**- எஸ்.விஜயலெஷ்மி, ஆதம்பாக்கம்.**

கட்டிய மனைவியிடம் மனம் விட்டுப் பேசக் கூட நேரமில்லாத கணவன்; பூகுந்த வீட்டில் கணவன் காதல் லீலைகளை எதிர்பார்த்த மனைவி; இப்படி இரு துருவங்களைக் காட்சிப்படுத்தி அற்புதமாய் தோரணம் கட்டியிருந்தார் எஸ்.பர்வீன் பானு. கடைசி வரை விறுவிறுப்புக் குறையாமல் நாவலைக் கையாண்ட விதம் அற்புதம்.

**- டி.ஜெயந்தி, கோவை.**

யதார்த்தத்தை புரிந்து கொள்ளாமல் சிறு பிள்ளை போல வாழ நினைக்கும் மனோன்மணி ஒருபுறம், அன்பை வெளிப்படையாக காட்டத் தெரியாமல் அவளுக்கு வேண்டியதை செய்யும் கணவன் செழியன் ஒருபுறம். வீட்டின் மூத்த பிள்ளையாக இருப்பவர்களின் கடமையே அவர்களை அழுத்தி அதிலேயே அமிழ்ந்து போய்விடுவதால் அவனுடன் பிணக்கம் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறும் மனைவி மனோன்மணி. இவர்களுக்குள் நடக்கும் வாழ்க்கைப் போராட்டமே கதைக் களம். இறுதியில் அவனுடைய நிஜமான அன்பை உணர்ந்து அவனுடன் வாழ முடிவெடுப்பது இளம் பெண்களுக்கு வாழ்க்கைப் பாடமே.

**- நிர்மலாராவ், சென்னை 73.**

நாவல் படிக்கும் போதே விறுவிறுப்புடன் இருந்தால் படித்து முடித்துதான் கீழே வைத்தேன். அருமையான ரசிக்க வைத்த 'காதல் காவியம்'.

**- உஷா முத்துராமன், மதுரை 6.**



# நந்திகிராம யோக நந்தீஸ்வரர்!

பெங்களூர் சர்வதேச விமான நிலையம் அருகே தேவனஹள்ளியை ஒட்டி, நந்திமலை அடிவாரத்தில் நந்திகிராமம் உள்ளது.

இந்த இடம் 17-ம் நூற்றாண்டில் தனபரகவுடா என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டதாம். மலையடிவாரமான இங்கு ஏராளமான குட்டிக் கோவில்கள் உள்ளன. இவற்றில் யோக நந்தீஸ்வரர் கோவில் பிரபலம். ஆயிரம் ஆண்டுகள் பழமையானது. இவற்றின் பாரம்பரியம் கருதி 1985-ம் ஆண்டு இந்த கோவில்கள் அனைத்தும் தொல்லியல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

9-ம் நூற்றாண்டில் பானா மன்னர் ஆட்சியின் போது, ரத்னவள்ளி என்ற அரசியால் இங்கு முதலில் சிறுகோவில் எழுப்பப்பட்டது. பிறகு ஹொய்சாலர், சோழர், பல்லவர், விஜய நகரப் பேரரசர்கள் காலத்தில் மீண்டும் விரிவுபடுத்தி கட்டப்பட்டன.

யோக நந்தீஸ்வரரின் கோவில் நுழைவு மண்டபமும், உள் நாக மண்டபமும், மிகுந்த கலைநயத்துடன் கட்டப்பட்டுள்ளது.



இந்தக் கோவிலுக்கு இரு கோபுரங்கள் உள்ளன. விலுக்குள் 3 சன்னதிகள் உள்ளன. நடுவில் உமாமகேஸ்வரரும், இருபுறமும் யோகநந்தீஸ்வரரும், அருணாச்சலேஸ்வரரும் அமர்ந்த நிலையில் உள்ளனர். நடு கருவறையில் உள்ள உமா மகேஸ்வரர் எழுந்தருளி காட்சி தருகிறார். கோவிலில் உள்ள கருப்பு நிற சிலை, ஒரு சோழனின் சிலை எனக் கூறப்படுகிறது.

கருவறைக்கு அருகில் மிகுந்த வேலைப்பாட்டுடன் கூடிய திருமண மண்டபம் உள்ளது. கோவிலுக்கென்று தனி தீர்த்தம் உள்ளது. இதன் பெயர் சீரங்க தீர்த்தம். இங்கு சீரங்க முனிவர் அமர்ந்து தவம் செய்து முக்தி அடைந்ததாக தலவரலாறு கூறுகிறது. முனிவரின் பெயரை தீர்த்தத்திற்கு வைத்துள்ளனர்.

இந்தக் கோவில் திராவிடக் கட்டிடக்கலை பாராம்பரியத்தில் கட்டப்பட்டுள்ளது. மிக்ச் சிறந்த சிற்ப அம்சங்களுடன் கூடிய கோவில் சுவர்கள், தூண்கள், அழகிய கருப்புநிற சிலைகள், புராணம் மற்றும் இயற்கை தொடர்பான ஓவியங்கள் ஆகியவை நம்மை வியக்க வைக்கின்றன.

நந்திமலைக்கு வரும் சுற்றுலா கூட்டம், இந்தக் கோவிலுக்கும் வந்து செல்கிறது. அதனால் சனி, ஞாயிறுகளில் கூட்டம் உள்ளது. பெங்களூரிலிருந்து நந்திமலைக்கு பேருந்துகள் அடிக்கடி செல்கின்றன. தேவனஹள்ளி வழியாக செல்லும் இவற்றில் ஏறி, சர்வதேச விமான நிலையம் கடந்து நந்திகிராமம் செல்லலாம்.

சீரங்க தீர்த்தத்தைச் சுற்றி, மதுரை மீனாட்சியம்மன் பொற்றாமரை குளம் போல் எடுப்பான தூண்களுடன் சுற்றுமாடம் உண்டு.


- ராஜிராதா, பெங்களூரு.



# பூக்கூடை

–உஷா நாராயணன்

காசநோய், எய்ட்ஸ், புகைபிடித்தல், ஆல்கஹால் போன்றவை உடலில் ஏற்படுத்தும் பாதிப்புகளுக்குக் கொஞ்சமும் குறைவில்லாதது காற்று மாசுபாடு மூலம் ஏற்படும் பாதிப்பு.



தற்போது நிலவி வரும் மாசுபாட்டின் அளவு இப்படியே தொடர்ந்தால் ஏற்கனவே மோசமான காற்று மாசுபாட்டில் உள்ள இந்திய நகரங்களில் வசிக்கும் மக்கள் தங்கள் வாழ்நாளில் 9 ஆண்டுகளை இழப்பார்களாம். மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் சொல்கிற எச்சரிக்கை இது. குறிப்பாக ஆசிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், வங்காளம், போன்றவை, உலகின் மிக மோசமான காற்று மாசு நாடுகளின் பட்டியலில் முதல் ஐந்து இடங்களில் உள்ளனவாம். அதுவும் தொடர்ச்சியாக டெல்லி, கொல்கத்தா போன்ற இந்திய நகரங்கள் மிக மோசமான பாதிப்பில் இருப்பதாகவும், இந்த இடங்களில் வாழும் மக்கள் தங்கள் ஆயுளில் 9 ஆண்டு காலங்களை இழக்க வாய்ப்புள்ளதாகவும் சொல்கிறது இந்த அறிக்கை. இந்த நுண் துகள் அளவுகள் அளவுக்கதிகமாக இருப்பதாகச் சொல்லப்படும் சென்னைக்கும் விடப்பட்ட எச்சரிக்கையாகவே கொள்ள வேண்டும்.

அரசின் டெலிகாம் துறையில் பணியாற்றிய ஒருவர், இன்று தன் வேலையை இழந்து உணவு டெலிவிரி செய்யும் வேலையைச் செய்து வருகிறார். ஆப்கானிஸ்தானின் முன்னாள் அமைச்சரான சையத் அகமத், ஜெர்மனியில் தன் டெலிகாம் துறையில் வேலை தேடினார். அது கிடைக்காததால் உணவு டெலிவிரி வேலை பார்க்கிறார். இரு சக்கர வாகனத்தில் போய் வாடிக்கையாளர்களுக்கு உணவு விநியோகம் செய்யும் இவரது புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகின. தாலிபான்களுக்கு பயந்து இவர் ஆப்கனை விட்டு வெளியேறவில்லை.



2018 லேயே ஆப்கன் அரசின் திட்டங்கள் மட்டும் செயல்பாடுகள் தனியாருக்கு ஆதரவாக இருப்பதாகக் குற்றம் சாட்டிவிட்டு , ராஜினாமா செய்தார். பின் ஜெர்மனிக்குப் போய் உணவு டெலிவிரி வேலையைச் செய்கிறார். சையத் அகமத் ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் பயின்றவர்.




இன்னும் பதினெட்டு வயது நிரம்பாத 10 மில்லியன் குழந்தைகள் ஆன்லைன் வீடியோ விளையாட்டுகள் விளையாடி வருகிறார்கள் சீனாவில். அப்படி நாள் முழுக்க வீடியோ கேம்களில் மூழ்கிக் கிடப்பதால் உடல்நலம், மனநலம் இரண்டுமே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் இந்த இளைய தலைமுறையினர். இதனால் சீன அரசு ஒரு அரசாணை கொண்டு வந்திருக்கிறது. இனி வார இறுதி நாட்களிலிம், அரசு விடுமுறை நாட்களிலும் மட்டுமேஇரவு 8 மணி முதல் 9 மணி வரை குழந்தைகள் ஆன்லைன் கேம்ஸ் விளையாட அனுமதிக்கப்படுவார்கள் என்பதே அரசு உத்தரவு. அரசின் இந்த முடிவு டென்செண்ட், நெட் ஈஸ் போன்ற புகழ் பெற்ற ஆன்லைன் வீடியோ கேம்ஸ் தயாரிப்பு நிறுவனங்களுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தக் கூடும் என்கிறார்கள். தவிர, ஆன்லைன் வீடியோ கேம்ஸ் விளையாடுவதற்காக லாகின் செய்யும் குழந்தைகள் தங்கள் உண்மையான பெயரில்தான் நுழைகிறார்களா என்பதை இந்த தயாரிப்பு நிறுவனங்கள்தான் கண்காணிக்க வேண்டுமாம்.

வெல்டன் சைனா!!!

ஏழை விவசாயியான சகாதேவ் சாகான் ராஜஸ்தானைச் சேர்ந்தவர். இவருக்கு ஐந்து பெண் குழந்தைகள். தொடக்கக்கல்வி வரை பள்ளி சென்று படித்தார்கள். அதற்குப் பிறகு படிக்க அவர்கள் கிராமத்தில் உயர்நிலைப் பள்ளி இல்லை. மகள்களை தொலைதூரம் அனுப்ப அப்பாவுக்கு மனதில்லை, வசதியும் இல்லை. பெண்கள் அசரவில்லை. வீட்டில் இருந்தபடியே படித்தார்கள். திறந்தவெளி பல்களைக்கழகங்கள் மூலம் பட்டம் வாங்கினார்கள். மூன்று சகோதரிகள் பி ஹெச் டி பட்டம் பெற்று, அரசு அதிகாரிக்கான போட்டித் தேர்வை எழுதி வெற்றி பெற்று விட்டார்கள். கடைக்குட்டிகள் இரண்டு பேரும் அண்மையில் அரசுத் தேர்வு எழுதி அதிகாரிகளாகி விட்டார்கள். கிராமமே இவர்களை கொண்டாடுகிறது.



மனமே மந்திரம்!!!



சொந்த அலுவல் காரணமாக பேருந்துகளில் பயணிக்கும் காவலர்கள், கட்டாயம் டிக்கெட் வாங்க வேண்டும் என்று டிஜிபி சைலேந்திர பாபு அவர்கள் அறிவுறித்தி உள்ளார். மாநிலம் முழுக்க இது ஒரு பிரச்னையாக இருக்கிறதாம். டிக்கெட் எடுக்க மறுக்கும் காவலருக்கும் கண்டக்டருக்கும் தகராறுகள் ஏற்படுவதால் இந்த புதிய உத்தரவு வெளியாகியிருக்கிறது.

வெல்டன்!!

குழந்தை வளர்ப்பு

# கருவறை முதல் தொட்டில் வரை!

கர்ப்பகாலம் அல்லது கருத்தரிப்புகாலம் முடிவடையும்போது, கருவானது வளர்ச்சியடைந்த குழந்தையாக உருமாற்றம் பெற்று, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கைக்குழந்தையாக பெண்ணின் கருப்பையிலிருந்து வெளியேறுவதையே குழந்தை பிறப்பு என அழைக்கிறோம். கருத்தரிப்புகாலம் முழுமைக்கும் கருப்பையினுள் குழந்தை வளர்ச்சிக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்டிருந்த நஞ்சுக் கொடி வெளியேற்றப்படும்.

இயற்கையாக சாதாரண முறையில், குழந்தையானது வெளியேற முடியாத நிலை ஏற்படும் போது, வேறு கருவிகள் கொண்டு வெளியே இழுத்து எடுப்பதன் மூலமோ, அல்லது வயிற்றில்வெட்டு ஒன்றை ஏற்படுத்தி அறுவைச் சிகிச்சையின் மூலமோ குழந்தை செயற்கையாக பெண்ணின் கருப்பையிருந்து வெளியேற்றப்படுவதும் உண்டு.

தற்போது குழந்தை பிறப்பானது மருத்துவ மனைகளிலேயே நிகழ்கின்றதாயினும், 20 ஆம் நூற்றாண்டுக்கு முன்பு வீட்டில் பெண்களின் உதவியுடன் இது நிகழ்ந்து வந்தது.

சாதாரண குழந்தை பிறப்பின்போது, பெண்களுக்கு ஆரம்ப நிலையில் மெது வாகவும், அதிகரித்த இடைவெளியிலும் வயிற்றில் வலியெடுக்க ஆரம்பிக்கும். நேரம் செல்லச் செல்ல வலியின் அளவு அதிகரிப்பது டன், வலிகளுக்கிடையிலான இடைவெளியும் குறைந்து செல்லும். இந்த வலியின் தன்மை ஒவ்வொருபெண்ணுக்கும் மிகவும் வேறுபடும்.





இந்தத் தன்மை குறிப்பாக பிரசவம்பற்றிய பயம், மற்றும் ஆர்வத்தில் தங்கியிருக்கும். ஏற்கனவே குழந்தை பெற்றுக் கொண்ட அனுபவம், வயது, அவர்களின் சமூக அமைப்பு, அவர்கள் செய்யும் தொழில், இயற்பியல் சூழல், தயார்ப்படுத்தல் போன்ற பல்வேறு காரணிகளும், இந்த வலியின் தன்மையை மாற்ற வல்லன.

பெண்களில் குழந்தை பிறப்பானது மிகவும் தீவிரமான நேர்மறையானதும், எதிர்மறையானதுமான உணர்வுகளை



வெளிப்படையாக காட்டக் கூடிய நிலமையை ஏற்படுத்தவல்லது. பல பெண்கள் குழந்தை பிறந்ததும் மிகவும் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் உணரக்கூடிய அதே வேளையில், சில பெண்களுக்கு குழந்தை பிறப்பிற்குப் பின்னான, மன அழுத்த ஒழுங்கின்மை ஏற்படும்.

10 சதவீத பெண்களுக்கு மன அழுத்தம் ஏற்படுகின்றது. சிலரில் அசாதாரண, தொடர்ந்திருக்கும் மன அழுத்தம் காணப்படும். இந்நிலையைத் தவிர்க்க குழுவாக அமர்ந்து பெற்றுக்கொள்ளும் சிகிச்சை முறை மிகுந்த பலனளிக்கிறது. குழந்தை பிறப்பின்போது, பிறக்கும் குழந்தைக்கும் பாதுகாப்பான உள்சூழலை விட்டு வெளியேறுவதும், வேறு பல காரணிகளும் மன அழுத்தத்தை கொடுக்கக்கூடும்.

பெண்களின் இடுப்பு எலும்பானது, குழந்தை இயல்பாக பிறப்பதற்கு ஏற்றவாறான அமைப்பையே கொண்டுள்ளது. மனிதன் நிமிர்ந்த நிலையில் இருப்பதனால் இடுப்புக்கு மேலான பகுதியின் நிறையை முழுமையாக தாங்கும் வல்லமையுடனேயே இடுப்பு எலும்பின் அமைப்பு உள்ளது.

குழந்தை பிறப்புக்கு ஏற்றவாறு இடுப்பு வளைவு என அழைக்கப்படும் இடுப்பு எலும்பின் கீழ்ப்பகுதி, நன்கு விரிந்த நிலையில் காணப்படும்.

குழந்தையானது பிறப்புக் குழாய் வழியாக வெளியேறும். இவ்வெளியேற்றத்தின்போது, குழந்தையின் தலை பின்பக்கம் சாய்வாக இருப்பதால், முன் நெற்றிப் பகுதியானது முதலில் வெளியேற முடியும். சாய்வாக இருக்கும் தோளுடன் தனது வழமையான நிலைக்கு வருவதற்காக தலையானது 45 பாகையில் திரும்பும். தலை திருகாணியில் மூடி திரும்புவதுபோன்ற அசைவை ஏற்படுத்தியது போலவே தோள்பகுதியும் அசைந்து குழந்தை வெளியேற உதவும்.

தலை வெளியேறும் போது, தலை சிறிது நீளமாகி, தனது அமைப்பில் மாற்றமேற்படுத்திக் கொள்வதன் மூலம் இலகுவான வெளியேற்றத்திற்கு உதவும். இப்படியான தலையின் வடிவமைப்பில் ஏற்படும் மாற்றம் முதன் முதலில் குழந்தை பெற்றுக் கொள்ளும் பெண்களில் தெளிவாகத் தெரியும்.



# கர்ப்பிணி பெண்கள் சாப்பிடும் உணவுகள்!

கர்ப்ப காலத்தில் கர்ப்பிணி பெண்கள் சாப்பிடும் உணவுகள் தான் குழந்தைக்கு அதிகமாக சத்துக்களை கொடுக்கின்றன. குழந்தைகளின் மூளை, எலும்புகள் போன்ற ஒவ்வொரு பகுதிகளும் வலுப்பட தாய் சாப்பிடும் உணவுகள் முக்கியப்பங்கு வகிக்கிறது. நாம் உண்ணுகின்ற உணவானது, உடலுக்கும், உள்ளத்திற்கும் உறுதியைத் தருவதாக இருக்க வேண்டும். நிறைய கீரைகள், காய்கறிகள், பழங்கள், கொட்டை

கள், விதைகள், பருப்பு வகைகள் ஆகியவை சைவப் பிரியர்களின் அன்றாட உணவில் அவசியம் இருக்க வேண்டும்.

அசைவப் பிரியர்கள் இறைச்சி, இறால், மீன், நண்டு, முட்டை முதலியவை மூலம் முழுமையாக உண்கிறார்கள். சைவமோ, அசைவமோ எதுவாக இருப்பினும், அந்த உணவு வகைகளில் புரதச்சத்து, கொழுப்புச் சத்து, தாதுப்பொருட்கள், வைட்டமின்கள், இரும்புச்சத்து, மாவுச்சத்து முதலியவை முக்கிய பங்கை வகிக்க வேண்டும். முட்டை என்பது ஒரு ஆரோக்கியமான உணவாகும். இதில் அதிகளவு புரோட்டின் சத்துக்கள் அடங்கியுள்ளன. கர்ப்பிணி பெண்களுக்கு தேவையான ஆரோக்கியத்தை முட்டை அள்ளித்தருகிறது.

கர்ப்ப காலத்தில் எந்த காரணத்தை கொண்டும் முட்டை வேண்டாம் என்று சொல்லாதீர்கள். கர்ப்ப காலத்தில் முட்டை, நிலக்கடலை, மீன் போன்றவற்றை சாப்பிடுவதால், பிறக்க போகும் உங்களது குழந்தைக்கு எந்த விதமான உணவு அலர்ஜியும் ஏற்படாமல் இருக்கும்.

நீங்கள் சாப்பிடும் உணவில் இருந்து தான் குழந்தைக்கு அனைத்து சத்துக்களும் கிடைக்கின்றன. மருத்துவரின் அனுமதி பெற்ற பின்னர் நீங்கள் இதனை உண்பது மிக மிக சிறந்ததாகும்.

முட்டை சாப்பிடுவது, சிசுவின் ஆரோக்கியத்துக்கு நல்லது. எதிர்காலத்தில் பல நோய்களில் இருந்து பாதுகாப்பு அளிக்கிறது என்று சமீபத்தில் ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.

முட்டையில் உள்ள கோலைன் சத்து 480 மி.கி. அல்லது 930 மி.கி. அளவுக்கு கிடைக்கும் வகையில் தினமும் முட்டை சாப்பிடுமாறு கூறப்படுகிறது.





கர்ப்பகாலத்தில் இயல்பாகவே தாய்மார்கள் அதிக டென்ஷனுடன் இருப்பார்கள். ஒருவித மன அழுத்தம், இறுக்கம், குழந்தை நல்லபடியாக பிறக்குமா என்ற பயத்துடன் காணப்படுவார்கள். அதிகப்படியான பயம், மன அழுத்தம் ஆகியவை தாய்க்கு மட்டுமின்றி, வயிற்றில் இருக்கும் சிசுவையும் பாதிக்கும்.

கருவில் உள்ள சிசுவின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு முட்டையில் உள்ள கோலைன் முக்கிய பங்காற்றுகிறது. சிசுவின் நியூரோ எண்டோகிரைன் சுரப்பு சீராகிறது. ஆரோக்கியமான மூளை வளர்ச்சிக்கு உதவுகிறது. இதனால் வாழ்நாள் முழுவதும் மூளையின் நினைவாற்றல் மற்றும் கற்கும் திறன் சிறப்பாக இருக்கும். எதிர்காலத்தில் ரத்தஓட்டம், டென்ஷன், சர்க்கரைநோய் உள்ளிட்ட பாதிப்புகள் வராமலும் தடுக்கிறது. மஞ்சள் கருவில் 125 மி.கி. அளவுக்கு கோலைன் பொருள் உள்ளது. இதுதவிர புரதம், இரும்புசத்து, உள்ளிட்ட பல சத்துகள் முட்டையில் உள்ளதால், கர்ப்பிணிகள் நிறைய சாப்பிடலாம். சைவம் சாப்பிடுபவர்களே அதிகம் விரும்பிச் சாப்பிடும் முட்டை நம் அன்றாட உணவில் முக்கிய பங்கை வகிக்கிறது. முட்டையில் கொழுப்பு, புரதம், வைட்டமின்கள், இரும்புச் சத்து உள்ளது. தினமும் ஒரு முட்டையை சாப்பிடுவது நம் உணவை முழுமையான உணவாக மாற்றுகிறது. முட்டையின் மஞ்சள் கருவில் லூடீன் மற்றும் ஜியாசாந்தின் என்னும் ஆன்டி-ஆக்ஸிடண்ட்டுகள் வளமாக நிறைந்திருப்பதால், அவை கருவிழியை பாதுகாத்து, கண்களில் பிரச் சனைகள் ஏற்படாமல் பாதுகாக்கும். பெண்கள் கர்ப்ப காலத்தில் தினமும் ஒரு முட்டையை நன்கு வேக வைத்து சாப்பிட்டால், வயிற்றில் வளரும் குழந்தைக்கு வேண்டிய சத்தானது கிடைத்து, ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்கலாம்.

-திருமகள்.






-சுற்றுலா

# கர்நாடகத்துக்கு ஹூப்ளி ஒரு குட்டி மும்பை!







-முனைவர் பேராசிரியர் ந.க.மங்கள முருகேசன்

**ஆ**ந்திரத்தில் இரட்டை நகரங்கள் என்று அய்தராபாத், செகந்திராபாத்தைக் குறிப்பிடுவது போல், கேரளத்தில் எர்ணாகுளம், கொச்சி என்று குறிப்பிடுவது போல கர்நாடகத்தில் 'ஹூப்ளி - தார்வாத்' இரட்டை நகரங்கள் உள்ளன. ஹூப்ளியானது தார்வாத் மாவட்டத்தின் தலைநகரமாகும்.


வட கர்நாடகாவின் வணிக மையமாக விளங்குகிறது. தொழில்துறை, வாகன உற்பத்தி, கல்வித்துறை முதலாய துறைகளில் பெங்களூருக்கு அடுத்த ஒன்றாகக் கர்நாடகத்தில் வளர்ந்து வருகிறது.

ஹூப்ளி எனும் சொல்லுக்கு மலர்களைச் சொரியும் என்று பொருள். முன்னர் இவ்வூருக்கு 'ராயரஹள்ளி' மற்றும் 'புர்பள்ளி' என்னும் பெயர்களும் இருந்துள்ளன. ஹூப்ளி, கர்நாடக மாநிலத்தின் வடக்கே உள்ளது. ஹூப்ளி எனில் பூக்கும் கொடி எனச் சொல்லவும் செய்வர். பெங்களூருக்கு அடுத்த இரண்டாவது மிகப் பெரும் நகர்ப்பகுதி.

தார்வாட் நிர்வாகத் தலைநகர். அதற்குத் தென் கிழக்கே 22 கி.மீ. தொலைவில் ஹூப்ளி உள்ளது. ஹூப்ளி வணிக மய்யமும், தொழில் முனையமும் ஆகும். அதே வேளையில் இதன் பின்புலப் பகுதியில் பருத்தியும், நிலக்கடலையும் பயிராகின்றன.

ஹூப்ளி இந்தியத் தொடர் வண்டியின் முதன்மைச் சந்திப்பு. தென்மேற்குத் தொடர் வண்டி மண்டலம், ஹூப்ளி கோட்டத்தின் தலைமையிடமாகும். பெங்களூரிலிருந்து 425 கி.மீ. தொலைவு. தேசிய நெடுஞ்சாலை 4-ல் உள்ளது. ஹூப்ளியைச் சிறிய மும்பை, குட்டி மும்பை என அழைக்கின்றனர். தமிழில் பூப்பள்ளி என இந்நகரின் பெயர். தமிழில் 'ப' என்பது கர்நாடகத்தில் 'ஹ' நாம் பள்ளி என்று சொலவதை கன்னடத்தில் 'ஹள்ளி'. நாம் பூப்பள்ளி என்பது ஹூப்பள்ளி எனவும் அதுவே பின்நாளில் ஹூப்ளி என ஆயிற்று.

காலநிலையைப் பொருத்தமட்டில் பிரவரி முதல் மே மாதம் வரை 32 முதல் 36 டிகிரியாக இருக்கும். அதன்பின் சரராசரியாக 25 டிகிரியாக இருக்கும். ஹூப்ளி தார்வாத் அயன மண்டல உலர்ந்த ஈரப்பதம் மிக்க கால நிலை உடையது. அக்டோபர் கடைசி முதல் பிப்ரவரி முற்பகுதி வரை இளங்கதிர் காலத்தில் மழையின்றி மிதமான வெப்ப கால நிலை நிலவுவதால் சுற்றுலாப் பயணிகளுக்கு அக்டோபர் முதல் பிப்ரவரி



காலமே உகந்த காலம் ஆகும்.

ஹூப்ளி கடல் மட்டத்திலிருந்து 626.97 மீ. உயரத்தில் உள்ளது. ஹூப்ளியின் வரலாறு சாளுக்கியர் காலத்திலிருந்து தொடங்குகிறது. விஜயநகர ராயர் மரபினர் ஆண்ட போது பருத்தி, சால்ட் பீட்டர் (ஒரு வகை கனிம வேதிப்பொருள்), இரும்பு போன்ற முதன்மைப் பொருட்களுக்கான ஒரு முக்கிய வாணிகத் தலமாக இருந்துள்ளது.

ஹூப்ளி, வரலாற்றுக் காலத்தில் மராத்தியர், முகலாயர், ஆங்கிலேயர் ஆகியோரின் முதன்மை இலக்காகும். சிவாஜி மன்னர், ஆங்கிலேயர் இங்கு நிறுவியிருந்த தொழிற்சாலை ஒன்றை 1675-ம் ஆண்டு சூறையாடினார். பின்னர் முகலாயருக்கு அடங்கிய சவானூர், நவாப் ஆளுகைக் கீழ் இருந்துள்ளது. பாசப்ப செட்டி எனும் வணிகர் 'துர்க்காதபேல்' எனும் இடத்தில் ஒரு புதிய நகரத்தை உருவாக்கியுள்ளார். மராத்தியர்கள் 1755-56-ல் இதனைக் கைக்கொண்டனர். இடையில் ஹைதர் அலியின் ஆளுகையின் கீழ் வந்து மீண்டும் 1790-ல் மராத்தியர் வசமாயிற்று. பழைய ஹூப்ளி 1817-ல் ஆங்கிலேயர் ஒரு தொடர் வண்டித் தொழிகூடம் நிறுவியபின் இந்த நகரம் தொழில் நகரமாக மாறலாயிற்று.

இன்று ஹூப்ளி பஞ்சாலைத் தொழில், இதர நெசவுத் தயாரிப்புகளுக்குப் பெயர் பெற்று விளங்குகிறது.

சமீப காலங்களாகக் கர் நாடக மா நிலத்தில் ஒரு முதன்மைச் சுற்றுலா மய்யமாக ஹூப்ளி விளங்கி வருகிறது. சுற்றுலா அடிப்படையில் பவானிசங்கர் கோவில், அசார், சித்தரூத மடம், உன்கால் ஏரி, நிருபதுங்க பெட்டா, கண்ணாடி மாளிகை ஆகியன குறிப்பிடத்தக்கன.

ஹூப்ளியின் அருகிலுள்ள தார்வாட், நவில்தீர்த், சத்தோடா, சொகல்லா, மத்தோடா அருவிகள், ஸ்கைக்ஸ் பாயிண்ட், உலாவியா, இஸ்கான் கோவில் ஆகியவை குறிப்பிடத்தக்கன.

ஹூப்ளியிலிருந்து பயணம் மேற்கொள்ள வசதியாக உள்ள வரலாற்று முதன்மை வாய்ந்த சுற்றுலாத் தலங்கள் எனில் பீஜப்பூர், பீடார், படாமி, ஏஹோல், படாட்கல், ஹம்பி ஆகியனவற்றைக் குறிப்பிடலாம்.

கர்நாடக மாநிலத்தின் முதன்மை நகர்களுடனும் அண்டை மாநிலங்களான தமிழகம், ஆந்திரா ஆகியவற்றுடனும் நல்ல சாலை வசதிகளாலும், தொடர் வண்டி சேவைகளாலும் இணைந்து உள்ளதால் இங்குப் பயணம் எளிதாக மேற்கொள்ளலாம். ஹூப்ளியில் உள்நாட்டு விமான நிலையம் அமைந்துள்ளதால் பெங்களூர், மும்பை, அய்தராபாத் ஆகிய நகரங்களுக்குச் செல்வதும் எளிது.

ஹூப்ளியில் ஈர்க்கும் இடங்கள் குறித்துக் காண்போம்.

**நிருபதுங்கபெட்டா:** ஹூப்ளியில், உன்கல் மலையில் நிருபதுங்கா சிகரம் அமைந்து

உள்ளது. சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற தலம் இது. இதிலிருந்து மொத்த ஹூப்ளி, தார்வாத் ஆகிய இரண்டினையும் அழகாகக் காணலாம். மேற்கில் விமான தளம். வடக்கில் அமர்கோல் ஆகியவற்றையும் உச்சியிலிருந்து நன்கு காண இயலுகிறது. இந்தச் சிகரத்தில் தேவி கோவில் ஒன்று உள்ளது. பரபரப்பாக இயங்கும் நகரச் சந்தடிகளிலிருந்து சற்றே விலகி அமைதியும், தனிமையும் விரும்புவோருக்கு ஏற்ற இடம் இது.

1974-ம் ஆண்டில் சாலைகளை நன்கு திருத்தி அமைத்தனர். அதனால் இது இப்பகுதியின் முதன்மைச் சிற்றுலா செல்ல உகந்த இடமாயிற்று. காலையில் நடைப் பயணம் மேற்கொள்வதற்கும் உகந்ததாக உள்ளது.

ஒரு கி.மீ. தொலைவிலேயே ஒரு நுழைவாயில் உள்ளது. வாகனங்கள் இந்த இடத்தில் நிறுத்திவிட்டு நுழைவுச் சீட்டு ரூ.10 செலுத்திப் பெரியவர்களும், ரூ.5 செலுத்திச் சிறுவர்களும் நிருபதுங்கா செல்ல வேண்டும்.

**உன்கல் ஏரி**: ஹூப்ளி செல்வோர் காணத்தகு இடங்களில் இடம்பெற வேண்டிய ஒன்று உன்கல் ஏரி. 110 ஆண்டுகள் பழமையானது. அமைதியான சூழலுக்கும் தோற்ற அழகிற்கும் புகழ் மிக்கது. இதன் பரப்பளவு 200 ஏக்கர். இதர பொழுது போக்கு வசதிகளுடன் மாலை வேளையில் சூரியன் மறைவுத் தோற்றம்தனை இந்த ஏரியின் பின்னணியில் கண்டு மகிழலாம். ஏரியின் மய்யத்தில் விவேகானந்தர் சிலை உள்ளது. இந்த இடம் ஷீ சித்தப்பஜ்ஜா எனும் யோகியின் இடமாக உள்ளது.

அவர் யார்? 1859-ம் ஆண்டு பிறந்தவர். 14-வயதில் ஒரு குருவைத் தேடி வீட்டைவிட்டு வெளியேறினார். உன்கல் மைலார்லிங்க கோவிலில் வாழ்ந்து வந்தார். 1921-ம் ஆண்டு சித்தப்பஜ்ஜா மறைந்தார். இங்கு ஒவ்வோர் ஆண்டும் ஒரு ரதப் பவனி நடைபெறுகிறது. உன்கல் ஏரி அதன் அருகிலுள்ள பகுதிகளுக்கு நீர் ஆதாரமாகவும் விளங்குகிறது. இந்த ஏரி வளாகத்தில் பசுமையான பூங்காக்களும், அமைதியான சூழலும் நிலவுகிறது. ஏரியில் படகுச் சவாரி வசதிகளும் உள்ளன.

**கண்ணாடி மாளிகைத் தோட்டம்**: இங்குள்ள பூங்காவிற்கு இந்திரா கண்ணாடி மாளிகைப் பூங்கா எனப் பெயர். இங்கு நடைபெறும் மலர்க் கண்காட்சி காண்பது இனிய அனுபவம். அன்னை இந்திராகாந்தி அம்மையார் தொடங்கி வைத்த இப்பூங்காவிற்கு அவருடைய பெயரே வழங்கி வருகிறது.

இந்தக் கண்ணாடி மாளிகையில் முதன்மையான ஓவியக் கண்காட்சி, கருத்தரங்கு, கலை நிகழ்ச்சிகள் ஆகியன நடைபெறுகின்றன. மேலும் இந்தப் பூங்காத் தோட்டம் பெங்களூரு லால்பாக் பூங்ககாவைப் போன்றே காணப்பெறுவது குறிப்பிடத்தக்கது.

ஒரு சருக்கு விளையாட்டு மைதானம், பசுமையான புல் தரைகள் கவர்கின்றன. பல முதன்மையாளர்களைச் சிறப்பிக்கும் இடமாகவும்விளங்குகிறது. இந்தப்பூங்காவைச் சுற்றிப் பார்க்கும் பயணிகள் 'ஹ்யூமர் கிளப்' உறுப்பினர்கள் காலை நேரத்தில் சிரிப்புப்





பயிற்சியில் ஈடுபட்டிருப்பதைக் காணலாம். இந்தப் பூங்காவைப் பராமரித்து, நிருவகிப்பது ஹூப்ளி நகராட்சியாகும்.

**நீர் பூங்கா (வாட்டர் பார்க்):** மாருதி நீர் பூங்கா அல்லது நீர் உலகம் நல்லதொரு பொழுது போக்கு உல்லாச மய்யமாகும். ஹூப்ளியில் கார்வார் சாலையில் மருத்துவமனைக்கு அருகில் அமைந்துள்ள இதில், பல்வகை நீர்விளையாட்டுகளில் பங்கேற்று மகிழலாம். இது கன்ட்ரி கிளப் ரிசார்ட் எனும் தனியார் நிறுவனத்திற்கு உரிமையானது.

இங்குப் பலவிதச் சாகச நீர் விளையாட்டு அம்சங்கள் உள்ளன. சிறுவர்களை மட்டுமல்லாது பெரியவர்களையும் மகிழச் செய்யும் வகையில் இந்த நீர் விளையாட்டு மய்யம்தனை உருவாக்கி உள்ளனர்.

ஹூப்ளியில் இயற்கையோடு இயைந்தவைகளே காணத்தக்கன.

**பண்ட்கார்டன்:**

பசுமையான அழகிய மலர்ச் செடிகளும், தாவரங்களும் உள்ள பண்ட்கார்டன் எனும் பூங்காத் தோட்டமும் காணத்தக்கது. ஹூப்ளியிலிருந்து 4 கி.மீ. தொலைவில் இருக்கும் உன்கால் ஏரியின் ஓர் உறுப்பாக இது விளங்குகிறது.

**எல்லாபூர்:** ஹூப்ளியிலிருந்து சுமார் 70 கி.மீ. தொலைவில் உள்ளது எல்லாப்பூர் எனும் அழகிய மலைச் சுற்றுலாத் தலம். இது குறைந்த மக்கள் தொகையுள்ள மேற்கு மலைத் தொடரில் அடர்ந்த காடுகளுக்கிடையே உள்ள ஒரு சுற்றுலா தலம். கர்நாடகாவிலேயே அழகு மிகுந்த அருவி என்று கூறப்பெறும் சந்தோடி அருவி இங்குதான் உள்ளது. வழிநெடுகிலும் பசுமை நிறைந்த காடுகள்.

ஹூப்ளியிலிருந்து எல்லாபூர் செல்லும் சாலையில் சுமார் 48கி.மீ. தொலைவில் நம்மை வரவேற்கும் சுற்றுலா தலம்





துவாரத்தில் சென்று அணையில் சேர்கிறது.

மலையேற்ற சாகச விரும்பிகளாயின் இப்பகுதி, அவர்களுக்குப் புதிய அனுபவத்தைத்தரும். புதுமணத் தம்பதியருக்கு மகிழ்ச்சியூட்டும். தோற்றங்கள், படகுச் சவாரி, வண்ண வண்ணப் பறவைகள் என எண்ணிறந்த சுற்றுலாக் கூறுகள் இங்கே நிறைந்து உள்ளன. மழைக் காலத்தில் இப்பகுதிக்குச்செல்வதைத் தவிர்த்து நவம்பர் முதல் பிப்ரவரி வரை இப்பகுதிக்குச் சுற்றுலா சென்று கண்டு வருவது நல்லது.

தட்டிஹல்லா அணையாகும். மேற்கு மலைத் தொடரில் பல சிற்றாறுகளும், காளி நதியும் இணைந்து உருவாகும் இந்த அணை மலைகள் சூழ்ந்த சுற்றுலா மய்யமாகும். காளி நதி உத்தர கன்னடா மாவட்டம் வழியாக சென்று சுமார் லட்சம் மக்களின் நீராதாராமாக விளங்குகிறது. காளி ஆற்றின் குறுக்கேசுபா அணை எனும் பெரிய அணையும் கட்டியுள்ளனர்.

கவிகேரே எனும் பசுமை வனக் காடுகள் சூழ்ந்த ஒரு குளம் எல்லாப்பூர் காட்டின் மய்யத்தில் உள்ளது. இங்கு சுற்றுலா செல்வோரை இக்குளத்தின் அமைதியும், சுற்று வட்டார அழகும் நிச்சயம் மனம் கொள்ளை கொள்ளும்.

சந்தோடி அருவி எல்லாபூரிலிருந்து சுமார் 27 கி.மீ. மலையேற்றத்தில் கொடசல்லி எனும் பெரிய அணையின் உறுப்பாக விளங்குகிறது. இந்த அருவி 50 அடி உயரத்தில் இருந்து வில்லிலிருந்து புறப்பட்ட வெள்ளி அம்புகள் சரமாரியாகப் பாய்வது போல் பாயும் அழகே தனி அழகு தான். அருவியிலிருந்து நீரோடையாக மாறி கொடசல்லி அணையில் முகத்



எல்லாபுரத்திலிருந்து 17 கி.மீ. தொலைவில் உள்ளது மகோத் எனும் அருவி. மகோத் எனும் மலைப் பகுதியில் சுமார் 600 அடிக்கும் மேற்பட்ட உயரத்தில் இருந்து பிரம்மாண்டக் காட்சியுடன் கொட்டும் அழகைக் காண்போர் நிச்சயம் பிரமித்து போவார்கள். தேனுகல்லு குட்டாகாட்சிமுனைப் பகுதிக்கு அருகிலேயே இந்த அருவி உள்ளது.

ஹூப்ளி செல்வோரைத் தார்வாத்பேடா என்னும் இனிப்பு அனைவரையும் கவர்கிறது. அதனுடைய தூய்மையும், சுவையும் உலகப் புகழ் பெற்றது என்கின்றனர். எம்.ஜி.மார்கெட் என்பது ஒரு கி.மீ. நீளமுள்ள அங்காடி. தேவையான அத்தனைப் பொருட்களையும் இங்கே வாங்கி மகிழலாம்.

ஆன்மிகப் பயணம் மேற்கொள்வோர் அமார்கோல் என்னுமிடத்தில் உள்ள பனசங்கரி அம்மன் கோவிலுக்குச் செல்லலாம். இதன் கட்டடக்கலை அமைப்பு ஆகியனவும் கண்டு மகிழலாம். உன்கலில் உள்ள சந்திரமவுலீசுவரர் கோவில் சாளுக்கியரின் கட்டடக்கலை நினைவுச் சின்னமாக இது விளங்குகிறது. இஸ்கான் அமைப்பினர் அருள்மிகு கிருஷ்ணர் - பலராமன் கோவிலை அமைத்துள்ளனர்.

இதுதவிர கன்னடக் கவிஞரும் ஞானபீட விருது பெற்றவருமான டாக்டர் தத்ரேயாவின் பிந்த்ரேபவனா எனும் நினைவுச் சின்னத்தை உருவாக்கியுள்ளனர். சிவனுடைய சிலையை பசுமைத் தோட்டம் அருகே சிவநகரில் உருவாக்கியுள்ளனர். சிவதட்டி சாலை என்னுமிடத்தில் முருக மடம் எனும் மடம் அமைத்துள்ளனர். ஹூப்ளியில் தங்குமிடங்கள் ஏராளமாக உள்ளன.



# இசையும், வயலினும் எனக்கு இறைவன் கொடுத்த வரம்!

**- டெல்லி பி.சுந்தர்ராஜன்**

கர்நாடக சங்கீதம் மற்றும் வயலின் வித்வான் டெல்லி பி.சுந்தர்ராஜன் இசைத் துறையில் 40 வருடம் அனுபவம் பெற்றவர். ஆயிரக்கணக்கான இசைக் கச்சேரிகளில் வயலின் வாசித்தும், வாசித்துக் கொண்டும் இருப்பவர். தனியாகவும் கச்சேரிகளை நிகழ்த்தியவர். உலகின் பல நாடுகளிலிலிருந்தும் ஏராளமான மாணவர்கள் இவருடைய இசை பயிற்சியில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இவர் கடந்த 25 வருடங்களாக சென்னை வாசியாக இருக்கிறார். பெண்மணிக்காக அவர் அளித்த பேட்டி.

**டெல்லி சுந்தர்ராஜன் என அழைப்பதன் காரணம் என்ன?**

டெல்லியில் பிறந்து வளர்ந்த நான், கச்சேரிகளுக்கு வயலின் வாசிக்க, பாட சென்னைக்கு அடிக்கடி வருவதுண்டு. ஒரு அடையாளத்திற்காக, டெல்லியில் இருந்து வந்திருக்கிற சுந்தர்ராஜன் என்று பலர் கூறுவதுண்டு. மேலும் கச்சேரி ஆரம்பமாகும் முன், டெல்லி சுந்தர்ராஜன் - வயலின் என அறிவிப்பார்கள். அனைத்து இடத்திலும் அவ்வாறே அழைக்க, 'டெல்லி' என் பெயருக்கு முன்பாக சேர்ந்து கொண்டுவிட்டது.

**தங்கள் குடும்பம் பற்றி...**

அன்றைய கால கட்டத்தில் (1872-1904) புல்லாங்குழல் வாசிப்பில் சிறந்து விளங்கிய ப்ரம்மஸ்ரீ க்ஷரபா சாஸ்திரிகள் பரம்பரையில் வந்த குடும்பம் எங்களுடையது. மேடையில் புல்லாங்குழல் வாசிப்பதற்கு பிள்ளையார் சுழியைப் போட்டவர் இவரே என்பது பெருமைக்குரிய விஷயமாகும். எங்களது பூர்வீகம் கும்பகோணம்.

பணி காரணமாக, பெற்றோர்கள் டெல்லியில் இருந்தனர். நான் பிறந்து, வளர்ந்து, படித்தது எல்லாமே டெல்லி மாநகரில் தான்.

எனது தாயார் வாலாம்பாள் பரசுராமன் டெல்லியிலுள்ள பள்ளிக்கூடம் ஒன்றில் ஆசிரியையாக வேலை செய்து கொண்டிருந்தார். இவர் இசைக் கலைஞரும் கூட. எனக்கு 6 வயதாகையில் சங்கீதம், வயலின் கற்க ஏற்பாடு செய்தார்.





**வயலினில் ஈடுபாடு ஏற்பட்டது எவ்வாறு?**

சிறுவனாக இருக்கையில், டெல்லி வீதிகளில், ''ஏக் தார்'' (ஒரு தந்தி) வைத்து பாட்டுகளை வாசிக்கும் கருவியை விற்கும் ஒருவரைக் காண்பதுண்டு. அநாயசமாக அவர் வாசிப்பதைக் கண்டு, அதனை வாங்கி பலமுறை முயற்சித்தேன். எனக்கு மிகவும் அந்த கம்பி வாத்தியம் பிடித்திருந்தது. அதுவே எனக்கு வயலின் வாசிக்க தூண்டியது.

**உங்கள் குருவைப் பற்றி கூறுங்கள்...**

சங்கீதம் மற்றும் வயலினிற்கு ஒரே குருதான். குரு சங்கீத பூஷணம் புதுக்கோட்டை வி.ஜானகிராமன் ஆவார். இவர் பெரிய சங்கீத வித்வான். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில். ''பெருமை வாய்ந்த சங்கீத பூஷணம்'' படிப்பை, மிகவும் அனுபவமுள்ள டைகர் வரதாச்சாரியாரிடம் கற்றவர்.

சங்கீதம் பாடுவதிலும், வயலின் வாசிப்பதிலும் சிறந்த வித்வான் எனது குரு. தனித்துவமான வித்தையை கற்பிக்கும் நுட்பங்கள் அறிந்தவர். வயலின் வாசிக்கும் சமயத்தில், அதற்குரிய பாட்டை வாய் திறந்து பாடுமாறு கூறுவார்.

ஆரம்பக் காலத்தில் விரல்களை வைத்து பயிற்சி செய்த பின், குரு பாட, அவர் பாடியதை அப்படியே நான் வாசிக்க ஆரம்பித்துவிட்டேன். அருமையான குரு அமைந்தது இறைவன் செயல்.

**முதன் முதலாக மேடை ஏறியது எப்போது?**

3 வருடங்களுக்கும் மேலாக இசை மற்றும் வயலின் கற்ற பிறகு, எனது 9-வது வயதில் டெல்லியிலுள்ள விநாயகர் கோவிலில், குருவின் ஆசிகளுடன் மேடை ஏறி கச்சேரி செய்தேன். அதற்கு முன்பாக, ஸ்ரீ குருவாயூரப்பன் சன்னதியில் வாசித்தேன். கூடவே ஒரு இசைக் கலைஞராகவும் என்னை தயார்படுத்திக் கொண்டேன்.

குழந்தை மேதையாக இருந்த காரணத்தால் ஆல் இந்தியா ரேடியோ, அவர்களது விதிகளைத் தளர்த்தி, 13 வயதில் என்னை கிரேடட் ஆர்ட்டிஸ்ட் ஆக்கியது பெரிய விஷயம்.

**மாணாக்கர்களுக்கு கற்பிக்கும் முறைகள் எவ்வாறு?**

அநேக மாணாக்கர்கள், கர்நாடக சங்கீதம், வயலின் ஆகிய இரண்டையும் என்னிடம் பயில்கிறார்கள். இந்தியா மட்டுமல்லாது, அமெரிக்கா; கனடா; ஆஸ்திரேலியா; ஸ்விட்சர்லாந்து; க்ரீஸ் போன்ற இடங்களிலிருந்தும் கற்கிறார்கள். வயலின் சிறு வாத்தியக் கருவியாக இருப்பதால், இதில் மாஸ்டர் ஆக கடின உழைப்புத் தேவை.

எனது குரு, எனக்கு கற்றுக் கொடுத்த மிகச் சிறந்த விரல் பயிற்சி நுணுக்கங்களை, மாணாக்கர்களின் திறமை, கிரகிக்கும் தன்மை போன்றவற்றை அறிந்து கற்றுக் கொடுப்பதுண்டு. இதன் மூலம், குறுகிய காலத்தில் பல மாணவர்கள் வயலின் வாசிப்பதில் வல்லவர்கள் ஆகிவிடுவார்கள்.

வயலினில் ஒரு பாட்டு வாசிக்கையில், வாயினால் எப்படி பாடுவோமோ, அதே போல் அச்சு அசலாக இருக்க வேண்டுமென்பதை அடிக்கடி கூறுவேன். வயலின் மூலம் பாட்டு கற்பார்கள்.

சங்கீதம் கற்பவர்களுக்கு, குரல் வளத்தை மேம்படுத்தும் வழிமுறைகள்; பாட்டின் பொருள்கள் போன்றவற்றைக் கற்பிப்பதன் மூலம் சிறப்பாக பாடுவார்கள். என்னுடையா மாணாக்கர்களில் அநேகர்,




சங்கீதத்தையும் வயலினையும் கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்களாக மட்டுமல்லாது, மேடைகளில் கச்சேரிகளும் செய்து வருகிறார்கள்.

பாரம்பரிய கர்நாடக இசையை பிரபலப்படுத்தவும், இளைய சமுதாயத் தினரை ஊக்குவிக்கவும், இந்தியாவில் ''மார்கா'', வெளிநாட்டில் ''மார்கா யுஎஸ்ஏ'' என்கிற அமைப்புகளை ஏற்படுத்தி யுள்ளேன்.

**வாங்கிய விருதுகள், இதர ஈடுபாடுகள் பற்றிச் சொல்லுங்கள்...**

வாணி கலா சுதாகரா; நாத வல்லபா; நாதப்ரம்ம கலா பூஷணம்; இசை அரசர் என பல்வேறு விருதுகளை வயலின் மற்றும் சங்கீதத்திற்காக பெற்றிருக்கிறேன். அமெரிக்காவிலுள்ள பிரசித்தி பெற்ற இரு இந்துக் கோவில்களின் ''ஆஸ்தான வித்வான்'' என்கிற பட்டப் பெருமை கிடைத்துள்ளது. எல்லாம் கடவுள் அருள். ஹெச்எம்வி, ஏவிஎம் போன்ற பிரபல கம்பெனிகளுக்காக நிறைய ரெக்கார்டிங்ஸை வெளியிட்டு இருக்கிறேன்.

''டான்ஸிங் ஸ்ட்ரிங்ஸ்'' எனப் பெயரிட்ட எனது தனி வயலின் வாசிப்பு, சிடி, மக்க ளிடையே மிகவும் பிரபலமானதாகும். ஆல் இந்தியா ரேடியோ; தூர்தர்ஷன்; டிவி சேனல்கள் ஆகியவைகளில் அடிக்கடி கச்சேரி செய்வதுண்டு.




எது உனக்கு விதிக்கப்பட்டுள்ளதோ அது நடந்தே தீரும். ஆதலால் எதிர்காலத்தைப் பற்றித் தேவையில்லாமல் கவலைப்படாதே. ஆழ்ந்த இறை நம்பிக்கையுடன் நிகழ் காலத்தில் வாழ்ந்திடு.

- சுவாமி ராமதாஸ்

மனித முயற்சியில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு முயன்று பார். ஒவ்வொரு தடவையும் எனக்கு தோன்றுவது, இறைவன் இருக்கிறான் என்பதே!

- கண்ணதாசன்

- தொகுப்பு: ஆர்.கே.லிங்கேசன், மேலகிருஷ்ணன் புதூர்



**நினைவில் நிற்கும் நிகழ்வுகளை பகிர முடியுமா?**

எனது நினைவில் நிற்கும் மூன்று நிகழ்வுகளை பகிர்கிறேன். ஒவ்வொரு கலைஞனுக்கும், மனிதனுக்கும் வாழ்க்கையில் திருப்புமுனை ஏற்படுவது வழக்கம். எனக்கு 14-வது வயதில் எதிர்பாராமல் நடந்த விஷயம் இது.

டெல்லியிலுள்ள கர்நாடக சங்கீத சபாவின் அரங்கம் பெரியது. ரசிகர்கள் கூட்டம் நிறைய வரும். கச்சேரிகள் கேட்க அடிக்கடி அங்கே போவதால், அனைவருக்கும் என்னைத் தெரியும்.

சங்கீத கலாநிதி டி.என்.கிருஷ்ணன் அவர்களின் கச்சேரி அங்கே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவரைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் கச்சேரி ஆரம்பம் ஆவதற்கு முன்பே சபாவிற்கு சென்றுவிட்டேன்.

கிருஷ்ணன் சார் மேடையில் வாசிக் கையில் அவரது மகளும், மகனும் கூட அமர்ந்து வாசிப்பது வழக்கம். அன்றைய தினம் அவர்கள் வரமுடியாத சூழ்நிலையை, ஏற்கனவே சபாக்காரர்களிடம் தெரிவித்திருக்கிறார். சபா செகரட்டரி ஆர்.மகாதேவன் என்னைச் சுட்டிக்காட்டி கிருஷ்ணன் சாரிடம் ஏதோ கூறினார். சற்றே தள்ளி நின்று கொண்டிருந்த என்னிடம், சில நிமிடங்கள் சென்றபின் ஒருவர் வந்து, ''கிருஷ்ணன் சாருக்கு நீதான் உதவியாக



இருக்கவேண்டும். உன்னுடைய வயலினை எடுத்து வா'' என்று கூறினார். ஒரு விநாடி திகைத்த நான், பிறகு அவசர அவசரமாக வீட்டிற்குச்சென்று எனதுவயலினைஎடுத்துச் சென்றேன்.

மிகப் பெரிய வித்வான் அருகே அமர்ந்து வாசிக்க முடியுமா? நடுக்கமாக இருந்தது. எனது நடுக்கத்தை அறிந்து கொண்ட அவர், ''பயப்பட வேண்டாம்! உனக்கு எந்த மாதிரியான இசை அமைப்புகள் தெரியும் என கேட்க, நானும் கூறினேன்.

என்ன ஒரு ஆச்சரியம்! நான் கூறியவைகளையே அவர் வாசிக்க, அருகே அமர்ந்திருந்த நானும் வாசிக்க, ஒரே பிரமிப்பாக இருந்தது. கச்சேரி பிரமாதமாக இருந்ததை அனைவரும் பாராட்டினார்கள்.

கச்சேரி முடிந்தவுடன், ''எனக்கு சுந்தர்ராஜன் இங்கு இருப்பது தெரியும். அதனால் தான் என்னுடன் வாசிக்குமாறு கூறினேன். நன்றாக வாசித்தான்'' என எல்லோர் முன்பும் பாராட்டிப் பேசினார். இவ்வாறு பாராட்ட, பெரிய மனது வேண்டும். அவரது ஆசீர்வாதம் என்னை மேலும் புடம் போட்டு வளரச் செய்தது.

1988-ம் வருடம் ''டெல்லி சங்கீத விழா''வில், பெரிய பாடகர்களான பத்மபூஷண் விருதுபெற்ற டி.வி. சங்கர நாராயணன்; மதுரை டி.என்.சேஷ கோபாலன்; புல்லாங்குழல் மேதை என்.ரமணி ஆகியோருக்கு வயலின் வாசித்தேன். அவர்கள் என்னைப் பாராட்டியதோடு நிற்காமல், அவர்களின் இதர மேடைக் கச்சேரிகள், சென்னை சங்கீத சீசன் நிகழ்வுகள் மற்றும் வெளி நாட்டுப் பயணங்களின் போதும், எனக்கு வாசிக்க வாய்ப்பு அளித்தது பெரிய பாக்கியமெனக் கருதுகிறேன்.

சங்கீத கலாநிதி மகாராஜபுரம் சந்தானம் அவர்களுடன் மேடையில் வயலின் வாசித்தேன். இதுவும் ஒரு பெரிய வாய்ப்பு. அவரின் ''கரகரப்ரியா'' ராகத்திற்கு, வயலினில் நான் இசைத்த ராக ஆலாபனையைப் பாராட்டி, எல்லோர் முன்பாகவும், முதல் தரம் எனக்கு வாசித்தாலும் முதல் தரமாக இருந்தது சுந்தர்ராஜன் வாசிப்பு!'' என்று அவர் கூறியதும், ஆடிட்டோரியத்தில் கைதட்டலின் கரகோஷம் அமர்க்களமாயிருந்தது.

''பெரியவர்கள் மற்றும் குடும்பத்தினரின் ஆதரவு மற்றும் ஊக்கம்; குருவின் ஆசிகள்; இசை மேதைகளின் மனமார்ந்த வாழ்த்துகளும், இறையருளுமே எனது முன்னேற்றத்திற்கு மேலும் மேலும் தூண்டுகோலாக செயல்படுகிறது என்பது நிதர்சனம்'' என்று கூறி பேட்டியை நிறைவு செய்தார்.

**- ஆர்.மீனலதா, மும்பை**



## நவராத்ரியில் அம்பிகை தரிசனம்!

நவராத்ரியின் முதல் நாளில் பாலை; இரண்டாம் நாளில் குமாரி; 3-ம் நாளில் தாருணி: 4-ம் நாள் சுமங்கலி; 5-ம் நாள் - சதக்ஷி, 6-ம் நாளில் ஸ்ரீவிதயா, 7-ம் நாளில் - மகாதுர்கை, 8-ம் நாளில் - மகாலக்ஷ்மி, 9-ம் நாளில் - சரஸ்வதி என நவ்வடிவில் காட்சியளிக்கும் அம்பிகை, விஜயதசமியன்று சிவசக்தி ஐக்கிய ரூபிணியாக தரிசனமளிக்கிறாள் எங்கின்றன புராணங்கள்.

**- ஆர்.ஜெயலெட்சுமி, திரு நெல்வேலி.**



# வலி தரும் வலிமை!

– மாலதி சுந்தரராஜன்

வலி எவ்வாறு வலிமையைத் தரும்?. உடலில் ஏதாவது ஒரு பாகம் வலித்தால் தாங்க முடிகிறதா நம்மால்?. அந்த வலிகளைக் குறைக்க மருந்துகள் இருக்கின்றன. உடல் வலிகளெல்லாம் உடன்பிறந்தவை!அழையா விருந்தினர்! மருந்துகளால் இவ்வலிகளைக் குறைக்க முடியும். ஆனால் மனதில் ஏற்படும் வலிகளுக்கு? மருந்துகளால் குணப் படுத்த முடியாத வலிகளுக்கு நிவாரணம் தான் என்ன? அந்த வலிகளின் ஊற்றுக்கள் தான் எத்தனை ரகம்?! அவமானம், தோல்வி, ஏமாற்றம், பாசம், உடல் குறை, இயலாமை... அப்பப்பா! இவ்வுணர்வுகளால் ஏற்படும் வலிகள் நம்மைப் பாதிக்கும் போது அவைகளுடன் வாழப் பழகிக் கொண்டு விடுகிறோம்.

ஏன் அவ்வாறு வாழ வேண்டும்? அனுபவத்தினால் உணர்ந்த அந்த வலிகளை அனுபவத்தைக் கொண்டே மாற்ற முயற்சிக்க வேண்டும்.சற்று பொறுமையாக சிந்தித்தால் நம்மால் முடியாதது ஒன்றுமேயில்லை. அவைகளை எதிர்த்துப் போராடும்போது அவை மெதுவாக மறைந்து வலிமையாக உருவெடுக்கின்றது! ஆச்சரியமாக இருக்கிறதா?!

மனிதனைப் பாதிக்கும் பலதரப்பட்ட வலிகளை மாற்றும் வழிகளான மனவலிமையையும் தன்னம்பிக்கையையும் வளர்த்துக் கொண்டு சாதனைகள் புரிந்தவர்கள் எத்தனை பேர்! மனவலிக்கு மருந்து மனவலிமை! வலிகளின் மறைவு நமக்கு பலமாகி விடுகிறது!. வாழ்க்கையில் எல்லோரும் அவமானத்தின் வலியை உணர்ந்திருக்கிறோம். சிலர் அதைத் துடைத்து விட்டு ஒன்றும் நடக்காதது போல் வளைய வருவார்கள். அது தவறு.அவமானங்களை அலட்சியப் படுத்த வேண்டாம்.ஏனெனில் அதன் வலி ஒரு லட்சியப்பாதையைக் காட்டும்!

நம் நாடு சுதந்திரம் அடைந்தது எவ்வாறு? அதன் பின்னணியில் நம் தேசத்தலைவர்கள் ஆங்கிலேயரிடம் அடிமைகளாக பட்ட அவமானங்கள் எத்தனை!இறுதி மூச்சு வரை போராடினார்கள்.

சந்தோஷமாக தூக்கு மேடைக்கு சென்றார்கள். ஏன்? தேசபக்தி. அவர்கள் பட்ட அவமானங்களின் வலியை வலிமையாக மாற்றிய! இன்று இல்லையானாலும் நாளை நிச்சயமாக சுதந்திரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவர் அனுபவித்த வலியை மறக்கச் செய்தது! இவர்கள், மனதாலும், உடலாலும், உறுதியாலும், ஊக்கத்தாலும் செய்த தியாகங்கள் அவர்கள் வாழ்க்கை முடிந்த பின்பும் பேசப்படுகிறன என்றால் அவர்களின் மனவலிமையை என்னவென்று உரைப்பது! மகாகவி கூறியது போல் வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் வேறொன்று கொள்வாரோ? என்று சுதந்திரமே மூச்சாக போராடிப் பெற்றுத் தந்த சுதந்திரக் காற்றை இன்று நாம் சுவாசித்துக் கொண்டிருக்கிறோம்!

தன் மகன் சிறுவயதில் எந்த அவமானத்தையும் உணரக்கூடாது என்று அவ்வலியைத் தான் ஏற்று,அவனை புகழ் பெற்ற சிறந்த விஞ்ஞானியாகத் திகழச் செய்தாளே அந்த தாயின் மனவலிமையைப் பற்றி என்ன சொல்வது? தாமஸ் ஆல்வா எடிசன், சிறுவயதில் ஒருநாள் அவர் பள்ளி ஆசிரியர் கொடுத்த கடிதத்தை அன்னையிடம்



## கொலு டிப்ஸ்...!

கொலுவில் மண் பாதைகளில் சாலை போட வேண்டுமானால் கார்பன் பேப்பரை வெட்டி மணலின் நடுவில் அழகாக சாலை போல் அமைத்தால் உண்மையான சாலைகள் போல அமைத்து பார்ப்பவர்களை அசர வைக்கும்.

கொலு வைக்கும் அறையில் கலர் பேப்பர்களை கட்டி தொங்கவிட்டால் லைட் வெளிச்சத்தில் தக தக வென ஜொலிக்கும்.

- ஆர்.ராமலெட்சுமி, திருநெல்வேலி.

தந்தார். அதில் அவர் மூளை வளர்ச்சி இல்லாதவர் என்றும் இனிமேல் பள்ளிக்கு வர வேண்டாமென்றும் எழுதியிருந்தது.

அந்த வலி தன் மகனின் எதிர் காலத்தை பாதிக்கும், அவன் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் என்று அவன் தாய் அவனைப் பாராட்டி எழுதியிருப்பதாகக் கூற, அந்த மகிழ்ச்சியில்,தன்னம்பிக்கையில் சாதனையின் உச்சியை அடைந்தான் அம்மகன்!. மகனின் முன்னேற்றத்தில் அசைக்க முடியாத நம்பிக்கை! அத்தாயின் மனவலிமை ஒரு சிறந்த விஞ்ஞானியை இவ்வுலகிற்குத் தந்தது! இங்கு பாசம் கொடுத்த வலி அதிகம் தான். ஆனால் அதை வலிமை கொண்டு முறியடித்து அதில் வெற்றியும் பெற்ற அவ்வன்னையைப் பற்றி இன்றும் பேசுகிறோம்!

உடலின் ஒரு பாகம் சரியாக இயங்காவிடில் எப்படி துவண்டு போகிறோம்!வாழ்க்கையே முடிந்து போனதுபோல் புலம்புகிறோம். பிறந்த பதினெட்டு மாதத்தில் கண் பார்வை,கேட்கும் திறன்,பேசும் திறன் இவை எல்லாவற்றையும் இழந்த ஒரு பெண்குழந்தையின் மனநிலை எப்படி இருந்திருக்கும்!யோசித்துப்பாருங்கள். ஆனால் அவள் வாழ்க்கை ஒரு சாதனை ஏடாக மாறியது!தன்னால் பேச முடியாவிட்டாலும்,இந்த உலகமே தன்னைப் பற்றி பேசவைத்த சாதனைப் பெண்ணாக திகழ்ந்தாள்!தன்னால் இவ்வுலகைப் பார்க்க முடியாது.

ஆனால் தன்னை எல்லோரும் திரும்பிப் பார்க்க வைத்தாள்! அவள்தான் விருதுகள் பல பெற்ற ஹெலன் கெல்லர்! ஊனம் மனதில் இல்லை என்று நிரூபித்த பெண்மணி! அவர் சாதித்த சாதனை சாதாரணமானதா?!

குழந்தைப் பருவத்தில், தன் இயலாமையினால் கோபம்; அதனால் முரட்டுப் பிடிவாதம்.இந்த வலியை மாற்ற ஹெலனை நன்றாக புரிந்து கொண்ட ஒரு சிறந்த ஆசிரியை கிடைத்தார். அவர் தான் ஆன்சலிவன்.உடல் ஊனம்தந்தவேதனையை மன வலிமை கொண்டு சாதனையாக மாற்ற உறுதுணையாக இருந்தவர்!எதையும் விரைவாகக் கற்றுக்கொள்ளும் திறமை கெல்லருக்கு இயல்பாகவே இருந்ததால் பத்து வயதிற்குள் பிரெயில் முறையில் ஆங்கிலம்,ஜெர்மன், பிரெஞ்சு ஆகிய மொழிகளைக் கற்று தேர்ந்தாள்! ஊனம் உத்வேகம் ஆனது; வலி வலிமையானது! உழைப்பு, உழைப்பு, உழைப்பு!...

24-ம் வயதில் இளங்கலை பட்டம் பெற்று உடல் குறைகளுடன் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற முதல் பெண் என்ற சிறப்பையும் பெற்றாள் ஹெலன்!என் வாழ்க்கையின் கதை என்ற அவளுடைய சுயசரிதை 50 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு அவருக்கு மேலும் புகழைத் தேடித்தந்தது! பெண்ணுரிமை, தன்போன்றோர் வாழ்வில் சந்திக்கும் பிரச்சனைகள், அனுபவிக்கும் வலிகள் இவைகளை மனதைத் தொடும் வகையில் எழுத்தாக வடிவமைத்தார்! தன் குறைகளைப் பற்றி கவலைப்படாமல், தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டு வலி போன வழி தெரியாமல் பல விருது





களை பெற்று எல்லோருக்கும் ஒரு முன் மாதிரியாகத் திகழ்ந்த ஹெலன் கெல்லரை இன்றும் பேசவைத்தது அவர் மனவலிமை அல்லவா? .

பறக்கத்துடிக்கும், சாதிக்கத்துடிக்கும் கனவுகளோடு வாழ்க்கையின் முதல்படியில் அடி எடுத்து வைத்த இளைஞனைக் கட்டிப்போட்டது ஒரு விபத்து. கடற்படை அதிகாரி நேர்முகத்தேர்வில், உடல் தகுதி சோதனையின் போது ஏற்பட்ட விபத்து அவ்விளைஞனின் எதிர்காலத்தையே புரட்டிப்போட்டது. கழுத்துக்குக்கீழே நரம்புமண்டலம் செயலிழந்து விட்டநிலை. உடல் வலியைவிட மனவலியில் துடித்துப் போனான் அவன். இயலாமையினால் சோர்வு, கோபம் என்ற பல வலிகளைக்கடந்து ஆக்கபூர்வமாக சிந்திக்க ஆரம்பித்தான்.

விதியின் விளையாட்டால் மூலையில் முடங்கிப்போகாமல் தன் போன்றவர்களைப் பற்றி சிந்திக்க ஆரம்பித்தான். அதன் விளைவு ஊனமுற்றோர்க்கு ஆலமரமாக அடைக்கலம் தரும் இனிய இல்லம் உருவானது! தனக்கு யார் வழிகாட்டி என்ற எண்ணம் இடம் பெயர்ந்து, தான் பலருக்கு வழிகாட்டியாக அமைந்தது அந்த இளைஞனின் தன்னம்பிக்கையும் மனோதிடமும் தான் காரணம்! ஆம். அந்த இளைஞன் தான் இன்று பல விருது களைப் பெற்று தமிழ்நாட்டில் ஆயக்குடியில் சிறப்பாக செயல்படும் அமர்சேவா சங்கத்தினை நிறுவிய ராமகிருஷ்ணன் அவர்கள்!

சக்கரநாற்காலியில் இருந்தவாறே சாதித்தவர்; சாதித்துக் கொண்டிருப்பவர்! உடல் ஊனம் ஒரு ஊனமல்ல என்று வாழ்க்கையில் போராடி வெற்றியும் கண்டவர்! சென்ற வருடம் மதிப்புமிக்க பத்மஸ்ரீ விருதும் கிடைக்கப் பெற்றவர்! அவருடைய சேவா சங்கத்தில் மாற்றுத்திறனாளிகளுடன் மனநலம் குன்றியவர்களும் பாதுகாக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு அடிப்படைக் கல்வியுடன் தொழில் அறிவும் அதற்கான பயிற்சியும் கொடுக்கப் படுகிறது.

அவரவர் உடல் நிலை கேற்றவாறு புக் பைண்டிங், கை வேலைகள், கம்ப்யூட்டர் பயிற்சி, என்று முறையாக கற்றுத்தரப்படுகிறது. இதனால் அவர்கள் தன்னம்பிக்கை வளர்ந்து சமூகத்தில் கடமையுணர்வு மிக்க குடிமக்களாக வெளியேறுகின்றனர்! அனைவருக்கும் தவறாத மருத்துவ பரிசோதனைகள் சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன எவ்வளவு பெரிய சாதனை! அமர் சேவாசங்கத்தின் மற்றுமொரு தூணாக இருந்து செயல்படுபவர் அதன்

செயலாளர் சங்கரராமன் அவர்கள்.நான்கு வயதில்,தசை தேய்வு தாக்க உடலை அசைக்க முடியாமல் போனது! சிகிச்சைகள் பலனளிக்காமல் வீல் சேரில் தன் வாழ்க்கைப் பயணம் என்று புரிந்தபோது தொய்ந்து போனான் அச்சிறுவன்! உடல்ரீதியாகவும்,மனோரீதியாகவும் பல சவால்களை சந்திக்க நேர்ந்தது.

அந்த வலியே சிறிது சிறிதாக லிமையாகிப் போனது!வலிமையாக மாற்றிக்கொண்டான்!பள்ளி இறுதியாண்டில் நல்ல மதிப்பெண் பெற,அது மேலும் ஊக்கத்தைத் தந்தது.சி ஏ படித்து, சிறந்த சார்ட்டர்டு அக்கௌன்டன்ட் ஆனார். ஒதுக்கியவர்கள் திரும்பிப்பார்த்தனர்! பொதுநலம் சிந்தையைக் கவர அமர் சேவாசங்கத்தில் சேர்ந்து,தன் வலியை மறந்து,மற்றவர்க்கு மருந்தானார்! அவர் திறமையால்,உழைப்பால் சங்கம் பல வெற்றிப்படிகளில் ஏறியது! முடியாது! என்பதே இவர் அகராதியில் கிடையாது அங்குள்ளவர்களின் வேதனையை சாதனையாக மாற்றியவர்!

இவரது முயற்சியினால் சங்கம் பல சிறந்த திட்டங்களை செயல் படுத்தியுள்ளது கிட்டத்தட்ட 35 வருடங்களுக்கு முன் சிறிதாக தொடங்கப்பட்ட இல்லம்,இன்று துளிர்விட்டு தொழில்கூடம்,சுய உதவி குழு பயிற்சி,இலவச கல்வி,மருத்துவ மறுவாழ்வு மையம் உடல் பயிற்சி கூடம் என்று வலிமையுடன் வளர்ந்து உடலும் மனமும் ஆரோக்கியமாக வாழ வழி காட்டுகிறது. மும்பை மற்றும் பெங்களூரில் மாரத்தான் ஓட்டத்தில் கலந்து கொண்டு மனமிருந்தால் எதையும் சாதிக்கலாம் என்று நிரூபித்தவர்!

தன்னலம் கருதாது,பொதுநலம் வேண்டி அயராது உழைக்கும் மாமனிதர்கள் இவர்கள்!வாழ்க்கை வாழ்வதற்கே என்கிறோம் நாம்.வாழ்க்கை சேவை புரி வதற்கே என்ற குறிக்கோளுடன் வாழ்பவர்கள் இவர்கள்!ஆர்வத்துடன் பல சோதனைகளை சாதனைகளாக மாற்றிய அற்புத மனிதர்கள் இவர்கள்! நல்ல எண்ணம் என்ற விதையை ஊன்றி,உழைப்பு,ஆர்வம்,நம்பிக்கை எனும் செழிப்பான உரமும் சேர்க்கும் போது, அது பெரிய விருட்சமாகி, படிப்படியாக நல்ல பலன்களைத் தருகிறது.அதுதான் அமர் சேவாசங்கம்!

அடுத்தவர் வலியை உணரும்போது, மனமிரங்கும் போது தன் வலி மறந்து வலிமை பிறக்கின்றது!வந்த வலி போன வழி தெரியவில்லை!எண்ணம் தான் செயலாக மலர்கிறது.நல்ல எண்ணங்களை விதைத்து,நல்ல பலனை அறுவடை செய்வோம்!இவர்கள் எண்ணம் தான் செயல்; ஊக்கம் தான் உழைப்பு;நோக்கம் தான் நோன்பு;ஆர்வம் தான் ஆக்கம் எளிமை தான் வளமை;தெளிவு தான்

திறமை! வாழ்க்கை அர்த்தமுள்ள தாக,பிறருக்குப் பயனுள்ளதாக ,சவால்களை சாதனையாக மற்றும் வலிமையை வளர்த்துக் கொண்டு வாழும் இம்மனித தெய்வங்களை வணங்குவோம்!போற்றுவோம்!

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பது வே அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே ...என்ற தாயுமானவர் வாக்கினை நினைவு கூறுவோம்! ★



## அறிவமுதம்...!

தவறாக அனுபவிக்கும் இன்பங்களுக்கு நாம் கொடுக்கும் விலைதான் வியாதிகள்.

– கண்ணதாசன்

அச்சத்தை அச்சப்படாமல் எதிர் கொள்ளுங்கள். நிராகரிப்பை நிராகரிக்க முயற்சி செய்யுங்கள்.

– ஆஸ்கார் இசின்

விதி ஒரு கதவை மூடினால், நம்பிக்கை ஒன்பது கதவுகளை திறக்கும்.

– ஜக்கி வாசுதேவ்.

உண்மையை மட்டும் எப்போதும் பேசுங்கள்; பிழைகளை எப்போதும் மன்னித்துவிடுங்கள்.

– அன்னை தெரஸா.

நீ. நீயாகவே இருந்தால் எவரும் உன்னை அடிமை கொள்ள முடியாது.

– மசினோலிங்க்


எந்தப் பொய்யும் மூப்பு அடையும் வரை வாழ்வதில்லை.

– கோபர்னிகஸ்

நல்லதை கூட்டு. கெட்டதை கழி. அன்பை பெருக்கு. வாழ்க்கையை வகுத்துக் கொள்.

– எமர்சன்

தொகுப்பு: சி.பி.சிவலிங்கம், கோவை 31.



# தமிழின் தொன்மையை உலகுக்கு பறைசாற்றிய பெருமகனார்,

# ராபர்ட் கால்டுவெல்!

கிறிஸ்துவ இறைபணி ஆற்றும் நோக்குடன் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த மேலைநாட்டினர் தமிழ் மக்களுடன் எளிதாக பழகுவதற்காக தமிழ் கற்றனர். இப்படி கற்க தொடங்கிய பலர் தமிழின் மீது ஏற்பட்ட காதலால் தமிழுக்கு அருந்தொண்டாற்றினர்.


இந்த வகையில் பெஸ்கி எனப்படும் வீரமாமுனிவர் சதுரகராதி, தேம்பாவணி முதலான நூல்களை படைத்தார். ஜி.யு. போப் திருக்குறள், நாலடியார் ஆகிய நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். ஆய்வறிஞர் ராபர்ட் கால்டுவெல் 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற மகத்தான நூலைப் படைத்து தமிழ் ஒரு செம்மொழி, மொழிகளின்தாய் என்பதை உலகுக்கு உணர்த்தினார். பெருமகனார் ராபர்ட் கால்டுவெல் குறித்து தமிழர் ஒவ்வொருவரும் அறிந்தும் போற்ற வேண்டியதும் கடமையாகும்.

அயர்லாந்தில் உள்ள ஒரு சிற்றூரில் 1814-ஆம் ஆண்டு மே மாதம் 7ஆம் தேதி ராபர்ட் கால்டுவெல் பிறந்தார்.

தம் இளம் வயதிலேயே படிப்பிலும் ஓவியத்திலும் சிறந்து விளங்கினார். கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி கற்றார்.

பேராசிரியர் டேனியல் ஸ்டான்போர்ட் மூலம் மொழியியலில் இவருக்கு ஆர்வம் ஏற்பட்டது. லத்தின் மற்றும் கிரேக்க மொழிகளுக்கு இடையே இருந்த தொடர்புகளை ஆராய்ந்தார்.

சமயப் பணியில் இருந்த ஆர்வம் காரணமாக லண்டன் மிஷனரி சொசைட்டியில் சேர்ந்து 1838 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் தேதி சென்னை வந்தார்.



சென்னை வருவதற்காக 'அன்னை மேரி' என்ற கப்பலில் இவர் பயணம் மேற்கொண்டார். இந்தக் கப்பல் கடுமையான சூறாவளியில் சிக்கி, பிரெஞ்சு நாட்டு கப்பலுடன் நடுக்கடலில் மோதி நொறுங்கியது. இதன் காரணமாக, இவருடன் வந்த ஏராளமானோர் உயிரிழந்தனர்.உயிர் தப்பிய சிலரில் இவரும் ஒருவர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து 4 மாதம் பெரும் சிரமப்பட்டு சென்னைக்கு வந்து சேர்ந்தார். வரும்வழியில் பிரவுன் என்பவருடன் நட்பு ஏற்பட்டு , அவரிடம் தென்னிந்திய மக்கள் மற்றும் அவர்கள் பேசும் மொழிகள் குறித்த பல்வேறு தகவல்களை கேட்டறிந்தார்.

சென்னையில் சிலகாலம் தங்கி தமிழ் கற்றார். தமிழ் மொழியின் வட்டார வழக்கு மற்றும் மூலத்தை ஆராய முற்பட்டார். அதன் பொருட்டு ,தான் இறை பணிக்காக தேர்வு செய்த திருநெல்வேலி மாவட்டத்தை நோக்கி நடைபயணமாக புறப்பட்டார்.

சிதம்பரம், மயிலாடுதுறை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் மதுரை ,நீலகிரி ஆகிய ஊர்களில் வாழும் மக்களின் பேச்சுவழக்கு, சமூக வரலாற்று பின்னணி ஆகியவற்றை ஆய்வு செய்துவிட்டு, திருநெல்வேலியை அடைந்தார்.

திருச்செந்தூருக்கும் உவரிக்கும் இடைப்பட்ட கடலோர கிராமமான இடையன்குடியை தேர்வு செய்து அங்கு சமயப் பணியைத் தொடங்கினார்.

இவர் இயல்பாகவே ஓவியக்கலையில் நாட்டம்

-முனைவர் திருக்குறள் தாமோதரன்.

கொண்டவர். ஒப்பிலக்கணம், வரலாற்று-தொல்பொருள் ஆய்வாளர். புத்தக வாசிப்பில் பேரார்வம் கொண்டவர். இப்படிப்பட்டவருக்கு போகிற வழியில் சிதம்பரம் நடராஜர் கோயில் சிற்பங்கள், தஞ்சைப் பெருவுடையார் கோயில் கோபுரம் மற்றும் அங்குள்ள கலையம்சங்கள், பழமை மிக்க மதுரைமாநகரின் அரிய காட்சிகளை காணும் வாய்ப்பு கிடைத்தது. அவற்றின் தாக்கம் இம்மண்ணின் மொழி மற்றும் வரலாறு குறித்து ஆய்வு செய்வதற்கு பெரும் காரணமாக அமைந்தது.

மொழியியல் அறிஞரான இவர் தமிழின் மூலத்தை ஆராய முற்பட்டு, பிரமித்து நின்றார். மலையாளம், தெலுங்கு, கன்னடம் உள்ளிட்ட மொழிகளையும் ஆய்வுசெய்தபோது இந்த மொழிகள் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவை என்றும் இதுகுறித்து புதிய தகவல்களை உலகத்திற்குச் சொல்ல வேண்டிய அவசியம் உள்ளதையும் உணர்ந்தார்.

இது தொடர்பான ஆய்வு பணியில் சுமார் 15 ஆண்டுகாலம் தீவிரமாக ஈடுபட்டார்.

அந்த உழைப்பின் வெளிப்பாடு தான். இவருடைய 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' (A comparative grammar of the Dravidian or South Indian family languages) என்ற ஆய்வு நூலாகும். இலண்டன் மாநகரில் 2856 -ல் இந்த நூலை வெளியிட்டார். இந்நூல் இவருக்கு உலகப் புகழை பெற்றுத் தந்தது.

சிந்துவெளி நாகரிகம் குறித்த தகவல் வெளிவராத காலகட்டம் அது. இந்திய மொழிகளுக்கு தாய் சமஸ்கிருதம் என்ற கருத்து வலுவாக முன்வைக்கப்பட்டிருந்த சமயம். வேத காலத்திலிருந்துதான் இந்திய வரலாறு தொடங்குவதாக வட இந்திய எழுத்தாளர்கள் பலரும் சொல்லி வந்தனர். இத்தருணத்தில் இந்த ஆய்வு நூல் வெளிவந்து இந்திய மொழியியலில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்திய மொழிகளில் பழமையானது சமஸ்கிருதம், அதுதான் தாய்மொழி என்ற கருத்துக்கு இவருடைய ஆய்வு முற்றுப்புள்ளி வைத்தது. ஆரியர் வருகைக்கு முன்பே தொல் மாந்தர்கள் இந்த மண்ணில் வாழ்ந்ததை இவருடைய ஆய்வுகள் உறுதி செய்தன.

வடமொழி குடும்பத்தில் இருந்து முற்றிலும் மாறுபட்டது திராவிட மொழிக் குடும்பம். அதில் உள்ள மொழிகளில் தொன்மையானது தமிழ் மொழி. இம்மொழி பேசிய நன்மக்கள் இந்தியாவின் தென்கோடி பகுதியிலிருந்து மெசபடோமியா, பலுசிஸ்தான் போன்ற பகுதிகளுக்கும் குடிபெயர்ந்து சென்றனர் என்ற வரலாற்று உண்மையை இராபர்ட் கால்டுவெல் வெளிப்படுத்தினார்.

சங்ககாலப் பாண்டிய மன்னர்களின் துறைமுகமாக விளங்கியது கொற்கை. யவனர்கள் எனப்படும் ரோம்,கிரேக்க நாட்டவர்கள் வாணிகம் செய்ய வருகை தந்த கடற்கரைப் பட்டினம் கொற்கை. தான் ஆலயம் அமைத்து இறைப்பணி செய்து வந்த இடையன்குடியில் இருந்து திருச்செந்தூர் வழியாக கடலோரமாகவே பலமுறை நடைபயணம் மேற்கொண்டு கொற்கையை ஆராய்ந்தார்.

அந்த சமயத்தில் தனக்கிருந்த வசதி வாய்ப்புகளைப் பயன்படுத்தி கொற்கையின் நிலம் மற்றும் கடல் பகுதியில் கிடைத்த தொன்மையான பொருட்களை சேகரித்தார். பண்டைக்கால பாண்டியநாட்டு நாணயங்களை சேகரித்தார். பல்வேறு கல்வெட்டுகளையும் தமிழ் இலக்கியங்களையும் அலசினார். அதன் வெளிப்பாடுதான் 'திருநெல்வேலியின் அரசியல், பொது வரலாறு' A political and general history of tinnevelly) என்ற மற்றொரு ஆய்வு நூலாகும். 1881ஆம் ஆண்டு இந்த நூலை வெளியிட்டார்.

தமிழ் மொழி மற்றும் வரலாற்றுக்கு இவருடைய நூல்கள் பொக்கிஷங்களாக கருதப்படுகின்றன.



இவைத்தவிர இறைபணி, அக்கால மக்களின் வாழ்க்கை முறை, சமூக சூழல் குறித்து பல்வேறு நூல்களை இயற்றியுள்ளார்.

கட்டபொம்மன், ஊமைத்துரை, மருது சகோதரர்கள் குறித்தும் தன் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் மொழிக்கு பின்னாளில் செம்மொழி அந்தஸ்து கிடைக்க காரணமாக இருந்த மூல ஆய்வு நூல்களில் இவருடைய நூல் முக்கிய பங்கு வகித்தது.

திராவிட இயக்க அரசில் கடந்த முக்கால் நூற்றாண்டாக தமிழ்நாட்டின் சமூக அரசியல் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தைஏற்படுத்திவருகிறது. இதற்கு மூலகாரணமான கருத்தியல் சிந்தனைக்கு இவருடைய ஆய்வுகளும் நூல்களும் வித்திட்டன என்றால் மிகையில்லை.

## கர்ணன் கோவில்!



ஹரித்துவாரில் இருந்து பத்ரிநாத் செல்லும் வழியில் ஐந்து புண்ணிய சங்கமங்கள் உள்ளன. இது கர்ணன் தவம் செய்த தலம். தனது புண்ணியத்தை எல்லாம் பகவான் கண்ணனுக்கு தானம் செய்த இடம். இங்கு கர்ணனுக்கு ஒரு கோவிலும் உள்ளது.

**- அண்ணா அன்பழகன், அந்தணப்பேட்டை**

## அமர்ந்த நிலையில் நவகிரகங்கள்!

மதுரையிலிருந்து 37 கி.மீ. தூரத்தில் உள்ள நத்தம் கைலாசநாதர் கோவிலில் நவக்கிரகங்கள் நின்ற நின்ற நிலையில் அமைக்கப்படாமல் அமர்ந்த நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்படி வேறு எங்கும் இல்லை. தென் மாவட்டத்தில் செவ்வய்தோஷ நிவர்த்திக் கோவில் இது ஒன்றுதான் என்பது குறிப்பிடத்தக்கது.

**- சுசீலா சோமசுந்தரம், கும்பகோணம்.**

இவர் தமிழ்நாட்டில் வாழ்ந்த காலத்தில் தீண்டாமை கொடி கட்டிப் பறந்தது. உயர் ஜாதி இந்துக்கள் கீழ்த்தட்டு மக்களை அடக்கி ஒடுக்கி வைத்திருந்தனர்.

தனித் தெரு, தனி சுடுகாடு, தனி குவளை, தோளில் துண்டு போடக் கூடாது என்று சில சமூகங்களுக்கு கட்டளைப் பிறப்பிக்கப்பட்டு வதைக்கப்பட்டனர்.

அந்த சமூகத்தினர் கல்வி பெற இவர் பாடுபட்டார்.

மிகவும் எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டார். பனை நார்க் கட்டிலில் படுத்து உறங்குவதை விரும்பினார். எளிய உணவுகளை உட்கொண்டார். இதன் காரணமாக ஒடுக்கப்பட்ட மக்களால் மிகவும் நேசிக்கப்பட்டார்.

'கடமையைச்செய், பலனை எதிர்பாராதே'. என்ற பொன்மொழி தமிழகத்தில் உண்டு.

கடைகோடி மக்களுடன் இணைந்து இறை பணியை சத்தமின்றி செய்து வந்த இவருக்கு ஆயர் பதவி தேடி வந்தது. வரலாறு, மொழியியல் ஆய்வு பணிகளை தொடர்ந்து மேற்கொண்டு அரிய தகவல்களை வெளியிட்டமைக்காக சென்னை பல்கலைக் கழக ஆட்சி மன்றக் குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார்.

அயர்லாந்தில் பிறந்து ஸ்காட்லாந்தில் படித்து தன்னுடைய 24வது வயதில் தமிழகம் வந்த ராபர்ட் கால்டுவெல். சுமார் 50 ஆண்டு காலம் இங்கேயே வாழ்ந்தார். இந்த காலகட்டத்தில் மூன்று முறை மட்டுமே தாய் நாட்டுக்கு சென்று தம்முடைய இரத்த உறவுகளை சந்தித்தார்.

தமிழ் மண்ணின் மைந்தனாக வாழ்ந்து தன்னுடைய 77 வது வயதில் 1891ஆம் ஆண்டு ஆகஸ்ட் 28 ஆம் தேதி கொடைக் கானலில் மரணம் அடைந்தார்.

அவருடைய உடல் இடையன்குடி கொண்டுவரப்பட்டு அவர் கட்டிய தேவாலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தென் தமிழகத்திற்கு பயணிக்கும் மாணவர்கள் , தமிழ் மொழிக்கும் தமிழினத்திற்கும் பெருந்தொண்டாற்றிவிட்டு, தமிழ் கூறும் நல்லுலகில் நிலைத்த புகழை பெற்றுவிட்ட, ராபர்ட் கால்டுவெல் 50 ஆண்டுகாலம் வாழ்ந்து இறைப் பணியும் ஆய்வு பணிகளும் மேற்கொண்ட இடையன் குடிக்கு சென்று வரவேண்டுகிறேன்.

ஒரு மனிதனின் இன்றியமையாத பண்புகளில் 'புத்தக வாசிப்பும்' இருக்க வேண்டும். வாசிப்பு குறித்து அறிஞர் ராபர்ட் கால்டுவெல் கூறும் கருத்து நினைவில் கொள்ளத்தக்கது.

'வாசிப்பு பழக்கம் இல்லாமல் மாணவர்கள் உயர் மதிப்பெண்கள் பெற்று விட முடியும். ஆனால், அவர்கள் எதனையும் விரிவாக அறியாமல் தன் பாடத்திட்டத்தில் மட்டுமே திருப்தி கொண்டு விடுவார்கள்'.

அறிவை விசாலப்படுத்தி பெரிய அளவில் சாதனை புரிவதற்கு வாசிப்பு அவசியம் என்பதை ராபர்ட் கால்டுவெல் மூலம் இளைய சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டும்.

பெருமை பண்புகளை உடையவர்கள் அரும்பெரும் செயல்களை அவர்களுக்கே உரித்தான பாணியில் உரிய நெறிகளைப் பின்பற்றி செய்து முடிப்பார்கள். அத்தகைய வல்லமை அவர்களுக்கு உண்டு என்கிறார் நம் வள்ளுவர்.

அறிஞர் பெருமகனார் ராபர்ட் கால்டுவெல் போன்றோரை கருத்திற்கொண்டு அவர் எழுதிய அருமையான குறள் இது:

'பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.'

(குறள்- 975).


-பவானி.




# உற்சாகத்துடன் வாழ்வோம்!

தினமும் 10-லிருந்து 30 நிமிடங்கள் சிரித்த முகத்துடன் நடந்து செல்லுங்கள். எந்த சிந்தனைகளும் இல்லாமல் அமைதியாக கண்ணை மூடி 10 நிமிடம் அமருங்கள்.

தினமும் ஏழு மணி நேரம் உறங்குங்கள். எப்போதும் இரக்கம், உற்சாகம், ஊக்கம், கருணை ஆகிய குணங்கள் மனதில் நிறைந்திருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.



அதிகநேரம் ஏதாவது விளையாடுங்கள். அதிகமான ஆன்மீக மற்றும் விஞ்ஞான புத்தகங்களை படியுங்கள். உங்கள் தினசரி அலுவலில் தியானம், யோகா, வழிபாடு போன்றவற்றிற்கு இடம் கொடுங்கள். இவை உங்கள் வாழ்க்கைக்கு புத்துணர்ச்சி அளிக்கும்.

உங்களுக்குள் உன்னதமான ஆற்றல் மறைமுகமாக இருப்பதை உணருங்கள், நீங்கள் எந்தவிதமான கட்டுப்பாடும் இல்லாமல் வானில் சுதந்திரமாக பறக்கும் பறவையாக உணருங்கள். பாசிட்டிவான எண்ணங்களை உங்களின் மனதில் தினமும் ஐந்துமுறை உருவாக்கும் வழக்கத்தை ஏற்படுத்தி வாழுங்கள். நீங்கள் வாழ்கின்ற வாழ்க்கையே உலகில் சிறப்பானது என்று உணருங்கள்.

நன்றாக வாய்விட்டு சிரியுங்கள். எல்லோரிடமும் அன்பு கொண்டு வாழ்ந்தால் இறைவனும் உங்களிடம் அன்பு செலுத்து வான் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

வாழ்க்கையை டேக் இட் ஈஸி'யாக எடுத்துக் கொள்ளுங்கள். அனாவசியமான விவாதங்களில் கலந்து கொள்ளாதீர்கள்.

உங்களின் கடந்தகால வாழ்க்கையை மிகவும் சிறப்பான முறையில் இறைவன் நடத்தி வந்துள்ளார் என்பதை உணர்ந்து இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள். எவரையும், எதற்காகவும், எந்த சந்தர்ப்பத்திலும் மன்னிக்கத் தயாராக இருங்கள். 'உங்களைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள்' என்று யோசிப்பதை தவிருங்கள்.

உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்காதவை எதுவாக இருந்தாலும் அவைகளிடம் இருந்து விலகி ஓடி விடுங்கள். எத்தனை 'பிஸி'யாக இருந்தாலும் குடும்பத் தினருடன் பேசி மகிழுங்கள்.

தினசரி மற்றவருக்குப் பயனளிக்கும் வகையில் ஒரு சிறிய செயலையாவது செய்யுங்கள். நீங்கள் காலையில் கண் விழித்தவுடன் கடவுளுக்கு நன்றி தெரிவியுங்கள் நீங்கள் தூங்கும் முன்பு மகிழ்ச்சிகரமான தினத்தை தந்த இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்.

தொகுப்பு: சௌமியா சுப்ரமணியன்,
பழைய பல்லாவரம்.

# ஆயிரம் மலரில் ஒரு மலர் நீயே...



''சூரியனே சூழொளி தெய்வமே
வந்தெனைக் காத்திடுவாய்
வாழ்வில் தீபம் ஏற்றிடுவாய்''

பளீரென்று ஒளிர்ந்த சூரியனைப் பார்த்து, கண்மூடி கரம் குவித்து நின்றார் கைலாசம்.

அதிகாலைச் சூரியன் பிரகாசமாக இருந்தது.

மொட்டை மாடியில் கிளை பரப்பியிருந்த தென்னங்கிளைகள், வேப்பமரக் கிளைகள் சூரிய ஒளியை முழுதாக வாங்கி பிரதிபலித்தது. லேசான குளிர் காற்றும், சூரிய ஒளியும் அந்த அதிகாலைப் பொழுதை அழகாக்கியது.

கைலாசம் அதைப் பார்த்தபடி நின்றார்.

உலகம் அழகான விஷயங்களால் நிரம்பி இருக்கிறது. எங்கும் அழகு நிரம்பி இருக்கிறது. அதை அனுபவிக்கவே இந்த மனிதப் பிறவி என்று நினைத்தார் கைலாசம். அவரைச் சுற்றி அனைத்தும் அழகிய விஷயங்களே நிரம்பி இருக்கும்.

ஒவ்வொன்றையும் பார்த்துப்

- ஜி.ஏ.பிரபா

பார்த்து ரசிப்பார் கைலாசம்.

காலையும், மாலையும் மொட்டை மாடியில்தான் வாக்கிங் போவார். சூரியன் உதிப்பதையும், மறைவதையும் ரசிக்கவே அவரின் இந்த வாக்கிங். தன் உடம்பையும், கட்டுக் கோப்பாக வைத்திருப்பார். கருங்கல் போன்று உறுதியான உடல்வாகு. அதிகப் பருமனும் இல்லாமல் ஒல்லியும் இல்லாமல் பூசிய உடல். சந்தன நிறம், கருகரு என்று கிராப் தலை. அவரைப் பார்த்தால் ஐம்பது வயது என்று சொல்ல முடியாது.

இன்னும் தலைக்கு டை அடிக்கவில்லை. கண்ணாடி போடவில்லை. நடந்தால் கம்பீரம், நாலுபேரை திரும்பிப் பார்க்க வைக்கும். ரசனையும், அது சார்ந்த விஷயங்களை மட்டுமே அவர் அறிந்து கொள்வார். சிறிது மனக் கலக்கம் என்றாலும் அதன் அருகில் நெருங்க மாட்டார். உடனே தன்னை விட்டு அதை அப்புறப் படுத்தி விட்டுத்தான் மறுவேலை.

இப்போதும், வெயிலுக்காக வறண்டு கிடந்த வேப்பங் கிளைகளை ஒடித்துப் போட்டார். கீற்றுகளை வெட்டி எடுத்து ஓரமாகக் குவித்து வைத்தார். மொட்டை மாடி முழுவதும் வறண்ட இலைகள், பூக்கள் விழுந்து கிடந்தது. அவற்றை ஒதுக்கித் தள்ளினார்.

''என்ன சார், நீங்களே கிளீன் வேளையில் இறங்கிட்டீங்க?''- பக்கத்து வீடு சபேசன்.

''கொரானா காலம். வேலைக்காரி வரதில்லை. மாடி பூரா அசிங்கமா இருக்கு. அதான் நான் கிளீன் பண்றேன்.''

''அந்த வேப்பம்பூக்கள் நல்லது சார். அதை சாதத்துல போட்டு சாப்பிட்டா ரொம்ப நல்லது. சுகர் குறையும்''

''தேங்க் காட், எனக்கு சுகர் இல்லை.''


''ஆனால் உங்களைப் பார்த்தா மத்தவங்களுக்கு சுகர் ஏறுதே. அவ்வளவு ஸ்வீட்டா இருக்கீங்க''

பெருமையாக உணர்ந்தார் கைலாசம். எல்லோரும் சொல்வது அது. உன்னைப் பார்த்தாலே மனசு ஜில்லுனு இருக்கு கைலாசம். உன் தோற்றம், பேச்சு எல்லாமே ஸ்வீட்டா இருக்கு என்பார்கள். அதில் உள்ளூர ஒரு பெருமை உண்டு அவருக்கு.

ஒரு விதத்தில் தான் அதிர்ஷ்டம் செய்தவன் என்று நினைத்தார் கைலாசம். அழகான ராஜா மாதிரி தோற்றம். நல்ல வேலை. கை நிறைய சம்பளம். அவருக்குப் பொருத்தமான மனைவி. அவரைப் போலவே ஒரு மகன். கிளி மாதிரி ஒரு பெண். நன்றி இறைவா.

மனம் நன்றி கூறியது எல்லையற்ற பரம் பொருளுக்கு.

தன் சௌபாக்கியத்தை நினைத்து நன்றி கூறி, பழைய வாழ்க்கையை அவர் மறந்தாலும் பிரபஞ்சம் அதை நினைவு வைத்திருந்தது. அது ஒவ்வொரு நிமிஷமும் அவரின் நேரத்திற்காகக் காத்திருந்தது. மெல்ல



நகர்ந்து வரும் மேகம் போல் அந்த சக்தி அவரை நெருங்கி வந்தது.

அதை அறியாமல் கைலாசம் கீழே இறங்கி வந்தார்.

வீடு இன்னும் எழுந்திருக்கவில்லை. மகளும், மகனும் அவரவர் ரூமில். மனைவி விஜயம் மட்டும் எழுந்து வீட்டுக்குள் உடற்பயிற்சி செய்து கொண்டிருந்தாள்.

''போதும், போதும். ரொம்ப ஒல்லிக் குச்சி மாதிரி ஆகிட்டா, அப்புறம் நான் ஊதினா பறந்துடுவே''

''க்கும். கொஞ்சம் வெயிட் போட்டுட் டேன்''

''கொஞ்சம்தானே. ஆமாம் மஞ்சு எழுந் துக்கலையா?''

''அவ ஏழு மணிக்குத்தானே எழுந் துப்பா? குளிச்சு காலேஜுக்கு கிளம்பினா போதும்.''

''அவன் எங்கே, உன் சீமந்தப் புதல்வன்.?''

''அவனும் ஏழரைக்கு எழுந்துடுவான்.''

''என்ன டிபன் இன்னைக்கு?''

''கார்ன் ஃபிளேக்ஸ், பால். ஆப்பிள் இருக்கு.''

''ஓகே. நான் கேண்டீன்ல சாப்டுப்பேன்.''

''நானும், மஞ்சுவும் இதை சாப்டுப்போம். குமரேஷ் போறப்போ ஹோட்டல்ல சாப்டுடுவான். நைட் ஹோட்டல்ல ஆர்டர் பண்ணிடலாம்.''

மதியத்திற்கு என்ன என்று கேட்க வில்லை. அவர் தன் அலுவலக கேண்டீனில் சாப்பிடுவார். அங்கேயும் சாப்பாடு சிறிது ருசி இருக்காது. உப்பு, புளி காரம் கம்மியாகத்தான் இருக்கும். ஆனால் விஜயத்தின் சமையலுக்கு அது பிரம்மாதம் என்று இருக்கும்.

கைலாசம் சிறிது சாப்பாட்டு ரசிகர். நல்ல ருசியுடன், வித விதமாக சாப்பிடப் பிடிக்கும். ஆனால் விஜயத்திற்கு இன்னும் சமையல் பிடிபடவில்லை. முன்பு அம்மா இருந்தாள். அவள்தான் முழுச் சமையலும். உதவிக்குக் கூட விஜயம் சென்றதில்லை என்றாலும் அவளின் வேலைக்காகாக அம்மாவை எதுவும் சொல்லாமல் வைத்திருந்தாள்.

சென்ற வருடம் அம்மா இறந்த பிறகு அவர் நாவும் ருசிக்கு ஏங்கி விட்டது. நல்ல உணவுக்கு, ருசியும், மனமும் நிறைந்த உணவுக்கு மனம் ஏங்கியது. எவ்வளவு நாள் ஹோட்டலில் உணவு ஆர்டர் செய்வது?

''ஏம்மா, மஞ்சு நீயானும் சமைக்கக் கத்துக்கோயேன்?''

''போப்பா, நான் காலேஜுக்குப் போகணும்.''

''கல்யாணமாகிப் போனா அங்க என்ன பண்ணுவே?''

''சமையலுக்கு ஆள் இருக்கற வீடாப் பாருங்க''

''ஹோட்டல் வச்சிருக்கற ஆளாத்தான் பார்க்கணும்.''

''ஃபைவ் ஸ்டார் ஹோட்டலா பாருப்பா, வெரைட்டி ஃபுட் கிடைக்கும்''

தலையில் அடித்துக் கொண்டார் கைலாசம். மஞ்சு சொகுசாக வாழ்ந்தவள். கை விரல் நகங்களில் அழுக்கு படியாமல் வாழ்கிறவள். மகன் குமரேஷ் நண்பர்களுடன் ஹோட்டல், கிளப் என்று போகிறவன். என்ஜீனியர். இப்போதுதான் வேலை கிடைத்திருக்கிறது. இன்னும் ஒரு வருஷத்தில் வெளிநாடு பறந்து விட்டால், பின் இந்தியாவை நினைக்க மாட்டான்.

அவருக்குள் மெல்லியதாய் கவலை எழுந்தது.

சிந்தனையோடு அமர்ந்திருந்தார்.

''இன்னைக்கு கம்பெனி இல்லையா?''- விஜயம்.

''ம். மணி ஏழுதானே ஆகறது. குளிச்சு, ஒன்பதுக்கு கிளம்பினா போதும். ரெண்டு தெரு தள்ளி கம்பெனி அலுவலகம்.'' கைலாசத்திற்கு சிறிது நேரம் அமைதியாக அமர வேண்டும்போல் இருந்தது.

''விஜி ஒரு காபி கிடைக்குமா?''

''தரேனே. ஆல்சோ ஐ நீட் ஒன்.''

அப்பாடா என்றிருந்தது. விஜிக்கும் தேவை என்றால்தான் எதுவும் கிடைக்கும். அவளுக்காக ஒரு மூடு வந்தால் சமையலும் அசத்துவாள். மற்றபடி எதிலும் ஒரு ஆர்வம் இல்லை.

''கைலாசம். இருக்கியாப்பா?''- வாசலில் குரல்.

''ராமநாதன் வரார். இருங்க அவருக்கும் சேர்த்து எடுத்துட்டு வரேன்''

''என்கூட இன்னொருத்தர் இருக்காரும்மா. அவருக்கும் சேர்த்து கொண்டு வா.''-ராமநாதன் உள்ளே வந்தார். அவர் பின்னாடியே ஒரு பெண்ணும் உள்ளே நுழைந்தாள்.

மிகச் சாதாரணமான தோற்றம். நடுத்தர உயரம். பூசின உடல்வாகு. மாநிறம் என்றாலும், சரியான பராமரிப்பு இல்லாமல் வறண்டு போயிருந்தது. வட்ட முகத்தில் கண்கள் மட்டும் கடலளவு இருந்தது. அதில் தெரிந்த ஒரு ஒளி, அவரை ஈர்த்தது. இடுப்பு

வரை தொங்கும் கூந்தல்.

அலங்காரம், பூச்சுவேலை இல்லாமல் சாதாரணமாகத் தெரிந்தவளை தன் மகளுடன் ஒப்புமை படுத்திப் பார்த்தது அவரின் மனம். பளீரென்று பொன்னாக மின்னும் தேவதை போன்ற தன் மகளுடன் வாடிய பயிராய் நிற்கும் இவளையும் கற்பனை செய்து பார்த்தது மனம்.

பாவம். வறுமை, அழகும் இல்லை. யார் இந்தப் பெண்?

''என் உறவுதான் கைலாசம். திருச்சி பக்கம். ஹோம்சயின்ஸ் படிச்சிருக்கா. ஒரு விஷயம் தெரியுமா? நம் கம்பெனி கேண்டீனை இவங்கதான் காண்ட்ராக்ட் எடுத்திருக்காங்க''

''அட,''- அதிசயித்தார் கைலாசம்.

''இவளுக்கு சமைக்கவும் தெரியுமா?''

''உருவத்தை பார்த்து எடை போடாதே கைலாசம். திறமை எங்கு வேணாலும் இருக்கும். மூர்த்தி சிறிது. கீர்த்தி பெரிது.''

கைலாசம் அவளை மீண்டும் பார்த்தார். சின்னப் புன்னகையோடு அவர்களின் பேச்சை கவனித்துக் கொண்டிருந்தாள். அதற்குள் விஜயம் காபி கொண்டுவர எழுந்து போய் அதை வாங்கி அனைவருக்கும் கொடுத்தாள். குடித்த, டவரா, தம்ளர்களை கொண்டுபோய் உள்ளே வைத்து விட்டு வந்தாள்.

அவளின் செய்கை விஜயத்தை கவர்ந்தது.

''உன் பெயர் என்னம்மா?''

''பவானி.''

''இங்க என்ன தனியாவா வந்தே?''

''ஆமாம். அம்மா திருச்சியில் இருக்காங்க. எனக்கு இங்கு கேண்டீன் காண்ட்ராக்டுன்னு வந்தேன்.''

''எங்க தங்கியிருக்கே?''

''நீங்க ஓகேன்னு சொன்னா, உங்க வீட்டு மாடி''- ராமநாதன் சிரித்தார். ''உங்க வீட்டு மாடில ஒரு போர்ஷன் காலியா இருக்குன்னு சொன்னீல்ல, அங்க பாவானி குடி வரலாமான்னு. என்ன சொல்றே?''

சமீபத்தில்தான் மேலே ஒரு ஹால், கிச்சன், ரூம் போட்டார் கைலாசம். யாரானும் குடி வைக்கலாம் என்று ஐடியா. ஆனால் வீட்டை மிக நேர்த்தியாக வைக்க வேண்டும். இவளைப் பார்த்தால் அழுது வடிகிறாள். வீட்டை எப்படி வைத்திருப்பாள் என்று தெரியவில்லையே?

''பவானியைப் பற்றி உனக்குத் தெரியாது. கண் பார்த்ததை கை செய்யும். சமை



# தாருமின்யான் மரங்கள் புனிதமானது!

இந்தோனேஷியாவில் பாலி தீவில் உள்ள ட்ருயான் என்ற கிராமத்தில் மரணமடந்தவர் உடலை. நீரால் உடலை சுத்தப்படுத்தி பிரார்த்தனை செய்வர்.

பின் இடுகாட்டில் தாருமின்யான் என்ற மரத்துக்கு கீழ் பள்ளம் உருவாக்கி பச்சை மூங்கில் கூடையில் வைத்து மண் நிரப்பி மூடிவிடுவராம். தாருமின்யான் மரத்தில் இருந்து பசை போன்ற ஒரு திரவம் உடல் துர்நாற்றத்தை போக்கிவிடுமாம். இதனால் இறந்தவர் ஆன்மாவும் புனிதமடையுமாம்.



மேலும் ஆண்டிற்கு இரண்டு முறை இங்கு வந்து. மரணமடைந்த தங்கள் உறவினருக்கு விருப்பமான மது. சிகரெட் மற்றும் பணம் போன்றவற்றை வைக்கின்றனர். பெண்கள் இங்கு செல்ல அனுமதியில்லை.

– தொகுப்பு: கோட்டாறு ஆ.கோலப்பன், [illegible].

யல் தேவாமிர்தம். நீதான் இனி கேண்டீன்ல சாப்பிடப் போறீல்ல. இன்னொரு விஷயம் தெரியுமா? பவானியை என் மகனுக்கு நிச்சயம் செய்யப் போறேன்.''

என்னது? அதிர்ந்தார் கைலாசம். இவளையா? மீண்டும் பவானியைப் பார்த்தார். யாரையோ சொல்கிறார்கள் என்று அமர்ந்திருந்தாள். ராமநாதன் மகன் சுரேஷ் ஜம் என்று இருப்பான். படித்தவன். அவனுக்கு ஒரு சமையல்காரி மனைவியா?

அவரின் அதிர்ச்சியை ரசித்தார் ராமநாதன்.

பவானியோட திறமைகள் என்னென்னன்னு இனிதானே உனக்குத் தெரியும். இவளுக்கு என் மகன் பொருத்தமானவனா இருக்கணும்னு நான் வேண்டிக்கறேன். பவானி தோற்றத்தில் அழகு இல்லாமல் இருக்கலாம். ஆனால் உள்ளம் அழகு. இது போகப் போக உனக்குத் தெரியும்.''

ராமநாதன் எழுந்தார். ''வீட்டைப் பார்க்கலாமா?''

''வேண்டியதில்லை அங்கிள்.''- பவானி.

''எப்படி இருந்தாலும் நான் அட்ஜஸ்ட் செய்துப்பேன். காலைல சமையல் செஞ்சுட்டு கம்பெனிக்கு வந்தா, ராத்திரி தூங்கத்தானே வீட்டுக்கு வருவேன்.''

கம்பெனியில் காலை டிபன் இல்லை. மதியம் சாப்பாடு, மாலை டிபன். மட்டும்தான். நடுவில் டீ, காபி மட்டும்.

டெலிபோன் உபகரணங்கள் தயாரித்து ஏற்றுமதி செய்யும் நிறுவனம் அது. தொழிற்சாலை மதுக்கரை தாண்டி இருக்கிறது. நிர்வாக அலுவலகம் மட்டும் இங்கு கணபதியில். சுமார் எண்பது பேர்கள் மட்டும் இங்கு. அத்துடன் ஆர்டர் கொடுப்பவர்கள் இங்குதான் வருவார்கள். மற்றொரு அலுவலகம் ராம் நகரில் உள்ளது. அங்கு அறுபதுபேர் இருப்பார்கள். அத்தனை பேருக்கும் கணபதியில்தான் உணவு தயாராகும். மிகக் குறைந்த விலையில் உணவுக்கான டோக்கன் கொடுத்து விடுவார்கள்.

கணபதி அலுவலகத்தைச் சேர்ந்த இருபது பேர் அருகில் இடம் வாங்கி, ஒன்றாக வீடு கட்டி குடி இருக்கிறார்கள். கைலாசத்தின் எதிர் வீடு ராமநாதன். பவானி தன் கண் எதிரில் இருக்கலாம் என்று விரும்புகிறார்.

பவானியை நினைக்கும்போது சிறிது பரிதாபமாக இருந்தது. ஏழைப் பெண் என்பது தோற்றத்தில் தெரிந்தது. இந்த வேலை அவளுக்கு முக்கியமான ஒன்று. ஆனால் கிட்டத்தட்ட இருநூறு பேருக்கு அவளால் சமையல் செய்து, ஒப்பந்தத்தை காப்பாற்ற முடியுமா? எம்.டி யும் இங்குதான் சாப்பிடுவார். உணவு சற்று தரமில்லாமல் இருந்தாலும் ஒப்பந்தத்தை ரத்து செய்து விடுவார்.

யார் இவள்? எங்கிருந்து இவ்வளவு நம்பிக்கையோடு வந்திருக்கிறாள் என்று நினைத்தவருக்குத் தெரியவில்லை, அவள் தன் மகள் என்பது.



**பூ**ண்டும் வெங்காயமும் சேர்ந்து வதக்கும் வாசனை வீடெங்கும் மணத்தது.

வாசனையை இழுத்து முகர்ந்தார் கைலாசம்.

மாடியில் பவானி எதோ சமைக்கிறாள். இன்று ஞாயிறு என்பதால், முகூர்த்தநாள் என்று காலையில் பால் காய்ச்சி சமையலும் ஆரம்பித்து விட்டாள். இரண்டு பெட்டி. சமையல் சாமான்கள், கொஞ்சம் பாத்திரம்,

ராமநாதன் இரண்டு கேஸ் இணைப்புகள் வைத்திருந்தார். ஒன்றை பவானிக்குக் கொடுத்ததால் சிரமம் இல்லாமல் போய் விட்டது. நேற்று காலையில் வீட்டைப் பார்த்து விட்டு கம்பெனிக்குப் போய், எம்,டி யைப் பார்த்து விட்டு வந்தாள். இன்று அதிகாலையில் பால் காய்ச்சி வந்து விட்டாள்.

கைலாசம் மெதுவாகப் படி ஏறினார். நுழைந்ததும் அழகான கோலம். வாசலில் மணிகளால் அழகான சரம். ஆடும்போதெல்லாம் ஒன்றை ஒன்று உரசி ஒலி எழுப்பியது. வாசலில் யானை உருவம் போட்ட மிதியடி. தரை, சுவரெல்லாம் கழுவி விடப் பட்டு ஈரம் இருந்தது.

வாசலுக்கு நேர் எதிரில் ஒரு பிறையில் முருகன் படம். அதன் முன் சின்ன விளக்கு சுடர் விட்டுப் பிரகாசித்தது. மற்றபடி அனாவசிய சாமான்கள் இல்லாமல் பளிச் என்று அழகாக இருந்தது. வீடு இப்படி

இருந்தால் அவருக்கு பிடிக்கும்.

வீடு எளிமையும், அழகுமாய் இருந்தது.

பிறையில் சுவாமி படத்துக்கு மேல் வரிசையில் புத்தகங்கள் இருந்தது.

''சார், வாங்க, வாங்க''- வேகமாக பவானி வெளியில் வந்தாள்.

''என்னம்மா வீடு எப்படி இருக்கு?'' சௌகர்யமா இருக்கா?''

''சூப்பர் சார். தூங்க ஒரு ரூம். சமைக்க ஒரு இடம். உள்ளுக்குள்ளேயே பாத்ரூம், வரவங்க உட்கார ஹால். அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி பண்ற வீடு சார்.''

''ஹாலுக்கு சேர் வாங்கணும்.''

''ஆமாம் சார். நான் மரத்துல சோபா சொல்லியிருக்கேன். காலைல வந்துடும். இந்த ஓரம் சோபா. பக்கத்துல ஒரு டேபிள். என் லேப்டாப் வைக்க. அவ்வளவுதான். நிறையச் சாமான் போட்டா, கசகசன்னு இருக்கும்''

''குட், அதுதான். வீடு அழகா இருந்தா நமக்கும் மனசு நிறைவா இருக்கும்''

''ஆமாம் சார். எனக்கு வீடு எளிமையா, தேவையான வசதிகளோடு இருக்கணும். நிறைய சாமான்கள் சேர்க்கப் பிடிக்காது. ரூம்ல கூட நீங்க வுட்டன் டோர் வச்சு கப்போர்டு வச்சிருக்கறதால பீரோ வேண்டாம்னு''

''சமையல் ஆறதா?''

''முடிஞ்சது சார், ஒரு ரசம். பருப்புத் துகையல். ரசம் குடிக்கறீங்களா?''

அமிர்தமாய் இருந்தது ரசம். சுடச், சுட கொத்துமல்லி வாசனையோடு, பூண்டுத் துகள் மிதக்க, இன்னொரு டம்ளர் கேட்டு வாங்கினார்.

''சூப்பர். கேண்டீன்ல டெய்லி ரசம் உண்டா.''

''ஜோரா உண்டு. ரசம், சாம்பார், கூட்டு, ஒரு பொரியலோடு. ஒவ்வொரு நாள் வித விதமா''

''தூள் கிளப்பு.''- கைலாசம் சந்தோஷத்துடன் கூறினார்.

''எங்கம்மாவுக்குப் பிறகு உன் ரசம்தான் அதே டேஸ்ட்டு. ரசம் ஊற்றிச் சாப்பிடுவதை விட டம்ளரில் ஊற்றிக் குடிக்கணும்.''

''சாதம் சூடா இருக்கு. பருப்புத் துகையல் போட்டு சாப்படரீங்களா?''

''குடேன். ஆனா கொஞ்சமா கொடு.''

ஒரு கப்பில் போட்டு பிசைந்து, தொட்டுக்கொள்ள இஞ்சிப் புளி வைத்துக் கொண்டு வந்தாள். கூச்சம் இல்லாமல் ரசித்து சாப்பிட்டார் கைலாசம்.

''நல்ல கை மணம்மா உனக்கு. பகல்ல கேண்டீன்ல சாப்பிட்டுவேன். நைட், ஞாயிறுகளில்தான் மிஸ் பண்றேன்.''

''அன்னைக்கு ஒருநாள் வீட்டுச் சாப்பாடு சாப்பிடுங்களேன்.''

''எங்கம்மா? விஜயம், மஞ்சுவுக்கு சமைக்கத் தெரியாது. ஜுமாட்டோ, ஸ்வங்கி தான். இல்லைன்னா குமரேஷ் போய் ஹோட்டல்ல வாங்கிண்டு வருவான்.''

''விடுங்க. நோ பிராப்ளம். நைட் டிபன் நான் கொடுத்துடறேன். ஞாயிறுகள்ல என்ன மெனுன்னு சொல்லிடுங்க. செஞ்சு தந்துடறேன்.''

''உனக்கு எதுக்கும்மா சிரமம்.''- நப்பாசையுடன் தயங்கினார் கைலாசம்.

''இதில் என்ன சார் கஷ்டம். அதுக்கு ஒரு அமௌன்ட் கொடுத்துடுங்க. உங்களுக்கும் சங்கடமில்லை. எனக்கும் ஒரு வருமானம் ஆச்சு.'' -தெளிவாகப் பேசினாள் பவானி.

அவளிடம் ஒரு பாசாங்கோ, வேஷமோ இல்லை. தெளிவாகப் பேசினாள். நேர் கொண்ட பார்வை. சொல்லும், செயலும் ஒன்றாக இருந்தது. துணிச்சலும், தைரியமுமாக, வாழ்வின் தடங்கல்களை எதிர் கொண்டு ஜெயிக்க வேண்டும் என்ற துடிப்பு அவளிடம் இருந்தது.

வீட்டை நேர்த்தியாக வைத்திருப்பது, ருசியாகச் சமைப்பது, வந்தவர்களுடன் கலகலப்பாகப் பேசுவது என்று பவானியின் வழக்கங்கள் அவரைக் கவர்ந்தது. மேலும் பவானி அவரின் அடிமனதில் இருந்த ஒருத்தியை ஞாபகப் படுத்தினாள்.

மெதுவாகத் தூண்டில் வீசினார்.

''உனக்குச் சொந்த ஊர் எதும்மா?''

''நான் பொறந்து, வளர்ந்தது எல்லாம் சேலம் சார்.''

''அப்பா, அம்மா என்ன பண்றாங்க?''

''அப்பா, இல்லை. அம்மா டெய்லரிங் ஷாப் வச்சிருக்காங்க. எங்க தாத்தா, பாட்டி கூட இருக்காங்க. உங்க கம்பெனில விளம்பரம் பார்த்தேன். நான் அப்ளை செஞ்சேன். ஒருநாள் வந்து இங்க சமைச்சிக் கொடுத்தேன். வரச் சொல்லிட்டாங்க''

''ராமநாதனை எப்படித் தெரியும்?''

''எங்க மாமாவும், அங்கிளும் நண்பர்கள்.''

''பரவாயில்லை. எதோ ஒரு லிங்க், எப்படியோ வந்து எல்லோரையும் சேர்த்து விட்றது.''

''பிரார்த்தனை சார். வலிமையான ஆயுதம். அதற்கு இணையானது எதுவும் இல்லை. எனக்கு ஒரு நல்ல வேலை கிடைக்கணும்னு

அம்மாவோட விருப்பம். பிளஸ்டூல நான் ஆயிரத்துக்கு மேல. அம்மா நீட் எழுதச் சொன்னாங்க. ஆனா எனக்கு வித்தியாசமா ஏதானும் படிக்கணும்னு. அதனால் ஹோம்சயின்ஸ் படிச்சேன்.''

''வெரி குட்''

''தானத்திலேயே சிறந்தது அன்னதானம்னு சொல்லுவாங்க. ருசியான் உணவை வயிறார சாப்பிடறப்போ, மனசும், வயிறும் வாழ்த்தும். நான் இங்க கோவையில்தான் படிச்சேன்.''

''அப்படியா?''- கைலாசம் முகம் மலர்ந்தார். ''நல்ல விஷயம்மா.''

பவானி பேசிக் கொண்டே காய்கள் நறுக்க ஆரம்பித்தாள்.

''சமையல் முடிச்சாச்சு. அப்புறம் எதுக்கு காய் நறுக்கரே?''

''இது கொரானாவால பாதிக்கப்பட்டு தனியா இருக்கறவங்க சாப்பிட''

''நீ கொண்டுபோய் தரப் போறியா?''

''ஆமாம் அங்கிள். நாங்க ஒரு அமைப்பு இருக்கோம். அவங்க எல்லாம் சேர்ந்து மதியம் ஒரு இடத்துல சமையல் செய்து, தனிமைபடுத்தப் பட்டு இருக்கறவங்க, தெருவோரக் குழந்தைகள், மனவளர்ச்சி இல்லாத ஏழைகளுக்கு உணவு கொடுக்கறோம். நாளையிலிருந்து கம்பெனியிலிருந்து எடுத்துண்டு போய் கொடுத்துடுவோம். ''

''எத்தனை நாளா செய்யறீங்க?''

''அமைப்பு ஒரு வருஷமா செய்யறாங்க. நான் இன்னையிலிருந்து போறேன். அந்த அமைப்போட தலைவரா இருக்கற வாசுதேவன் என் கிளாஸ்மேட். ஒருவிதத்தில் தூரத்து சொந்தம் கூட''

''வெரிகுட், நல்ல விஷயம்.''- கைலாசத்தை வியப்பில் ஆழ்த்தினாள் பவானி.

''ஆனா, இந்த காண்ட்ராக்ட் ஒரு வருஷம்தானே?

''இந்த வருஷம் வொர்க்கர்ஸ் கருத்து கேட்டு ஒப்பந்தத்தை நீடிக்கலாம்னு சொன்னார் எம்.டி.''

நாளை சமைச்சு, ஒருவாரம் சாப்பிட்டு பார்த்த பின்தான் எந்தக் கருத்தும் சொல்ல முடியும் என்று நினைத்தார் கைலாசம். எதையும் உடனுக்குடன் முடிவு எடுக்க முடியாது. ஆனால் இவள் ஏழைப் பெண் போல் தெரிகிறாள். இந்த வேலை ரொம்ப அவசியம்.

அவளைப் பற்றி அவர் மனதில் ஒரு பரிதாபம் எழுந்தது.

''பார்த்து பண்ணும்மா. எம்.டி. தரத்துக்கு ரொம்ப முக்கியத்துவம் தருவார்.''

''கண்டிப்பாக சார். நான் என்னை அப்டேட் செஞ்சுக்கறேன்.''

''அப்புறம், நான் உன்மேல் உள்ள அக்கரையில் சொல்றேன். கொஞ்சம் இந்தக் கோவைக்கு ஏற்ற விதத்தில் பளிச்சுன்னு, நாகரீகமா இரு. எப்படி என்னன்னு மஞ்சு அல்லது விஜயத்தைக் கேளு.''

சிரித்தபடி தலையாட்டினாள் பவானி. எழுந்து போனார் கைலாசம்.

''அக்கா'' என்று குதித்தபடி வந்து நின்றாள் மஞ்சு.

''சும்மா வாசனை ஊரைத் தூக்குதே.''

''ரசம் குடிக்கிறியா?''- கேட்டபடி ஒரு டம்ளரில் ரசம் ஊற்றிக் கொடுக்க வாங்கிக் கொண்ட மஞ்சு, அங்கு ஒரு தட்டில் உரித்து வைத்திருந்த பூண்டைப் பார்த்து புருவம் சுளுக்கினாள். ''இவ்வளவு பூண்டு எதுக்கு?''

''முதியோர்இல்லத்துல அந்தப்பெரியவங்க சாப்பிட பொரி வறுத்துக் கொண்டுபோய் தரணும்.''

''நீங்க சமைக்கிறதை நான் பார்க்கப் போறேன்.''

''பார்க்காதே. கத்துக்கோ. என்னதான் ஹோட்டல்ல வாங்கிச் சாப்பிட்டாலும், வீட்டில் நாம செய்யற சமையல் போல் ஹைஜீனாவும், சுவையாவும் இருக்காது. நாளைக்கு உனக்கு கல்யாணம் ஆச்சுன்னா, அந்தக் குடும்பத்தைக் கவர் பண்ணனும்னா, வயத்தை நம்ம சுவையான சமையல் மூலம் நிரப்பனும். நாக்குக்கு சுவையை கொடுத்தா, மனசில் இடம் பிடிக்கலாம்.''

''நான் காலேஜுக்குப் போகணுமே.''

''ஏன், காலேஜுக்குப் போனா என்ன? சண்டேஸ்ல செய்யலாமே. மஞ்சு, நாம பெண்கள் எதுவும் செய்யத் தெரியாதுன்னு இருக்கக் கூடாது.''- பவானி பேசியபடி மடமடவென்று பொரியை வறுத்தாள். அதேநேரம், மற்றொரு அடுப்பில் தக்காளி சாதம் செய்து, உருளைக் கிழங்கு பொரியல் செய்தாள். இந்தா நீயும் டேஸ்ட் பாரு என்று ஒரு தட்டில் வைத்து மஞ்சுவிடம் நீட்டினாள்.

''சூப்பர்'' என்று ருசி பார்த்தாள் மஞ்சு.

''அக்கா, அம்மவுக்கு கொஞ்சம் எடுத்துட்டுப் போகவா?''

''கொஞ்சம் என்ன? நிறையவே எடுத்துட்டுப் போ உங்களுக்கும் சேர்த்துதான்

சமைச்சிருக்கேன்.'' என்ற பவானி, தக்காளி சாதம், லெமன் சாதம், வடகம், பொரியல், தயிர் என்று அடுக்கி ஒரு கூடையில் வைத்துக் கொடுத்தாள்.

''எதுக்கு இத்தனை ஐட்டம் அக்கா?''

''நான் போற முதியோர் இல்லத்துல நாலஞ்சு குழந்தைகள் இருக்கு. அவங்க இதெல்லாம் வேணும்னு சொன்னாங்க. அதனால செஞ்சேன். நெல்லிக்காய் தொக்கு, சேமியா பாயாசம்.''- பவனி கூறக் கூற அதிசயமாகப் பார்த்தாள் மஞ்சு.

வீட்டில் அவளுடைய காரியம் நடந்தால் போதும் என்றுதான் நினைப்பாள் விஜயம் சமையல் செய்து வைத்தால் கூட, மற்றவர்களுடன் சேர்ந்து சாப்பிடுவோம் என்றில்லாமல், தனக்கு மட்டும் ஒரு தட்டில் போட்டு வைத்துக் கொண்டு அமர்ந்து விடுவாள். மற்றவர்கள் சாப்பிட்டார்களா என்று கூடக் கேட்டதில்லை.

ஆனால் இங்கு மளமளவென்று பவானி வேகமாகச் செயல் படுவது சிறிது பொறாமையை உண்டு செய்தது.

''உங்களை மாதிரி நான் செய்யச் சான்ஸே இல்லை'' என்றாள் மஞ்சு.

''இல்லை மஞ்சு. ஆர்வம், பிரியம், மற்றவர்கள் மீது அன்பு இருந்தால் போதும். இன்று நீ செய்யாமல் இருக்கலாம். ஆனால் நாளை உன் கணவன், குழந்தைகள் என்று வந்தால் இதைவிட அற்புதமா நீ செய்வே.''- மஞ்சுவை உற்சாகமூட்டுவது போல் பேசினதை ரசித்தாள் மஞ்சு.

''நல்லா சமைக்கிறீங்க, நல்லாவும் பேசறீங்க. கிரேட்''

''நன்றி''- குனிந்து வணங்கினாள் பவானி.




**ஆத்தாளை எங்கள் அபிராமி வல்லியை**

**அண்டமெல்லாம் பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை**

**புவி அடங்கக் காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும் கரும்பு வில்லும்**

**அங்கை சேர்த்தாளை**

**முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே**

இனிமையான குரலில் பாடல் மிதந்து வந்தது. கூடவே சாம்பிராணி, ஊதுவத்தி மணமும் வீடு முழுவதும் நிறைந்து வந்தது. அதன் சுகந்த மணமும், சூழ்நிலையும், மனதை சுகமாக்கியது. கூடவே எண்ணெய் காயும் மணமும்.

கைலாசம் நறுமணத்தை இழுத்து முகர்ந்தார்.

கிராமத்தில் அம்மா இப்படித்தான் மாலையில் வீட்டில் சாம்பிராணி தீபம் போடுவாள். மென்மையான குரலில் ஏதானும் முருகன் பாடலைப் பாடியபடி வீடு முழுவதும், புகை போடுவாள். அதன் நறுமணம் மனம் முழுவதும் நிரம்பி, உற்சாகம் பிறந்து விடும்.

அதே மனநிலை இப்போதும் நிரம்பி, அம்மாவின் ஞாபகம் வந்தது.

அவளைப் பார்த்து வருஷங்கள் பல ஓடி விட்டது. குமரேஷ் பிறந்து முதல் மொட்டை போட கிராமத்துக் குலதெய்வம் கோவிலுக்குப் போனது. விஜயம் கிராமத்தில் தங்க முடியாது என்று ஹோட்டலில் தங்கிவிட, அவர் மட்டும் ஒருநாள் அம்மாவுடன் வீட்டில் தங்கினார். அம்மா அவருடன் பேசவில்லை.

மறுநாள் கோவிலுக்கும் வரவில்லை. அவர் கிளம்பும்போது மட்டும், ''நல்லா இரு. எனக்கு ஏதானும் செய்யனும்னு நினைச்சா, இனி இங்க வராதே'' என்றாள். அதுதான் அவர் அவளைக் கடைசியாகப் பார்த்தது. மஞ்சு பிறந்து, வீடு கட்டும்போது கிராமத்திற்குப் போனபோது அம்மா அங்கு இல்லை.

எங்கே போனாள் என்று தெரியவில்லை.

நாளின் ஒவ்வொரு நேரமும், ஏதோ ஒரு சம்பவம், அம்மாவை ஞாபகப் படுத்தும். ஆனால் விஜயம், அம்மா வருவதை விரும்பவில்லை. தன்னுடைய நவநாகரீக வாழ்க்கைக்கு அம்மாவின் கிராமியத்தனம் அவமானம் என்று நினைத்தாள். கைலாசமும் உறவினர்களுடன் அதிகம் நெருங்கியதில்லை. அம்மாவும் உறவுகளை விட்டு விலகி விட்டாள்.

ஒரு விதத்தில் இந்த நிலை அவருக்கு ஒரு திருப்தியாக இருந்தது. பொறுப்புகள் இல்லாமல், ஆடம்பரமாக, ஜாலியாக வாழ வேண்டும் என்பதுதான் அவருக்கு ஆசை. பொறுப்புகள் சுமக்கக் கஷ்டப் பட்டார். அவர் வேலைக்கு வந்த சிறிது மாதங்



# நோய் உண்டாக்கும் ஸ்மார்ட் போன்கள்!

ஸ்மார்ட் போன்களை அதிகமாக பயன்படுத்துவதால் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் ஏற்படும் ஆபத்து இருப்பதாக குடும்ப சுகாதார பணியகத்தின் வாழ்க்கை முறை மற்றும் உளவியல் ஆலோசகர் வைத்தியர் வசந்த வி.ஜே.சேகர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக உலக சுகாதார அமைப்பு உட்பட பல்வேறு அமைப்புகள் கருத்து தெரிவித்து உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இது தொடர்பில் ஊடகமொன்றுக்கு அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், ஸ்மார்ட்போனிலிருந்து வெளிப்படும் மின்காந்த அலைகள் புற்றுநோய் மற்றும் பிற நோய்களை ஏற்படுத்தக்கூடியவை. ஒரு ஸ்மார்ட்போன் மூலம் வெளிப்படும் மின்காந்த அலைகள் நீண்ட நாள் நோய்களுக்கு வழிவகுக்கும்.

இந்த நோய்கள் என்னவெனில் குறிப்பாக மூளை தொடர்பான நோய்கள், மார்பக புற்றுநோய், ஆண்மைக் குறைவு ஏற்படுத்தல், குழந்தைகளின் கவனம் குறைதல், சமூகப்பிரச்சனைகள் போன்றவை ஏற்படலாம்.

அதனால் தான் நாம் ஸ்மார்ட்போன்களின் பயன்பாட்டை மட்டுப்படுத்தி ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

களில் அப்பா கல்லீரல் கட்டி என்று கஷ்டப் பட்டார்.

ஆனால் லட்சக் கணக்கில் செலவாகும் என்று தயங்கி கைலாசம் காலம் தாழ்த் தியதில் அப்பா ரத்த வாந்தி எடுத்து இறந்து போனார். சொத்து எதுவும் இல்லை, கடன் என்று கைலாசம், கோபித்துக் கொண்டு வீட்டுக்கே போகாமல் இருந்தார். அதன் பின் அப்பாவின் நண்பர் ஒருவர் கடன்களை எல்லாம் அடைத்த பிறகு வீட் டுக்குப் போனார்.

ஒவ்வொரு தகப்பனார் போல் அப்பா தனக்கு சொத்து எதுவும் சேர்த்து வைக்கவில்லை என்று அவருக்கு வருத்தம் உண்டு. தன் தகப்பனார் விவசாயக் கூலி என்று சொல்வதில் அவருக்கு அவமானம் இருந்தது. நிலம் இருக்கிறது என்றுதான் விஜயத்திடம் கூறினார்.

ஆனால் அந்த நிலங்களை விற்று, வீட்டை அடமானம் வைத்துதான் கைலா சத்தை படிக்க வைத்தார் அப்பா. இரண்டு பெண்கள் கல்யாணம் செய்து, வறுமையில் சிக்கி, பையனின் உதவி கிடைக்காமல், அப்பா, அம்மா விவசாயக் கூலியாகச் சென்றார்கள்.

நல்ல வேலை கிடைத்தும், கைலாசம் பெற்றவர்களுக்கு எந்த உதவியும் செய்யவில்லை. அருகில் நெருங்கினால், அவர்களுக்கு, தங்கைகளுக்கு உதவ வேண்டுமோ என்ற பயம். விலகியே இருந்தார். அப்பா இறந்து, வீட்டை மீட்ட பிறகுதான், கிராமத்துக்குச் சென்றார்.

எவ்வளவு சுயநலமாக இருந்தாலும், தாய்ப்பாசம் மட்டும் எப்போதும், நீறு பூத்த நெருப்பாக மனதுக்குள் கனன்று கொண்டுதான் இருக்கும். அடிக்கடி அம்மா அழைப்பது போல் மனசுக்குள் குரல் கேட்கும். தம்பி சாப்பிட வரியாப்பா? என்ற அன்பான அழைப்பு அவருக்குள் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

பவானி, சார் என்று அழைக்கும்போது அம்மா அழைப்பது போலவே இருக்கும். அவள் பாடும் அபிராமி அந்தாதி பாடல்களும் அம்மா பாடுவதுதான்.

வயதாக, ஆக அம்மா, தங்கைகளின் நினைவும், ஒரு குற்ற உணர்ச்சியும் மனதிற்குள் உறுத்திக் கொண்டே இருக் கிறது.

''என்ன சார், அப்படியே, எதோ யோச னையில் ஆழ்ந்து போய் இருக்கீங்க?''-

பவானி சாம்பிராணிப் புகையுடன் உள்ளே வந்தாள்.

''என்னவோ உன் செயல்கள் என் அம்மாவை நினைவு படுத்துது.''

''ஓஹோ, என்னை வயசானவளா ஆக்கிட்டீங்களா?''

''சேச்சே, நீ அசப்புல எங்க அம்மா மாதிரியே இருக்கே''

''ஏன்? அப்போ அம்மாவை கூட்டிண்டு வந்து வச்சுக்கலாமே?''

''ப்ச்ச். எங்கே? விஜயத்துக்குப் பிடிக்காது.''

''அவங்களுக்கா? உங்களுக்கா?''- பவானி கூர்மையாகக் கேட்டாள்.

உங்கம்மாவை, உங்ககூட வச்சுக்க, யாருடைய பர்மிஷன் தேவை சார்? உங்களைத் தன் கூட வச்சுக்க, உங்களைப் படிக்க வைக்க, அதுக்காகச் சொத்து, சுகங்களை விக்க அவங்க யோசிக்கவும் இல்லை, யார் பர்மிஷனும் கேட்கலையே?''-

பொட்டில் அடித்தது அவளின் கேள்வி. பதில் சொல்ல முடியவில்லை.

''பெத்தவங்க வருமானத்தில் பிள்ளைகள் திட்டம் போடறாங்க. ஆனா பிள்ளைகள் வருமானத்தில் ஒரு அஞ்சு ரூபா உரிமையா எடுக்க பெத்தவங்களுக்கு அதிகாரம் இல்லை. இதான் சார் உலகம். கண்ணாடிக் கூண்டுக்குள் அமர்ந்து கல் எறியரீங்க''- பவானி ஹால் முழுவதும் புகை போட்டாள்.

''நான் உள்ளே போய் எல்லாப் பக்கமும் புகை போடலாமா?'' - பவானி கேட்க ''இதென்ன கேள்வி?'' என்று விஜயம் வெளியில் வந்தார்.

''என்ன விசேஷம் இன்னைக்கு?''

''எந்த விசேஷமும் இல்லை. மாலை நேரத்தில் வீட்டில் சாம்பிராணிப் புகை போட்டா, எதிர்மறை சக்திகள் வீட்டில் பரவாது. நேர்மறை சக்திகள் நிறையும். எங்க பாட்டி சொல்வாங்க.''

''அதெல்லாம் இல்லை. இந்தப் புகைக்கு கொசு வராது. அதன் மூலம்தானே நிறைய நோய்கள் பரவுது.''- மஞ்சு.

''சரி. அப்படிச் சொன்னா, நீ கேட்கப் போறியா? அதான் இப்படி ஒரு ஆன்மீக நம்பிக்கை. பாரு கிராமத்துல வளர்ந்த பொண்ணு. உன்னைவிட ரெண்டு வயசு தான் பெரியவளா இருப்பா. எவ்வளவு பொறுப்பா, எல்லாம் செய்யறா பாரு!''- விஜயம் ஆதங்கமாய்ப் பேச, மஞ்சுவின் முகம் மாறியது.

இளம் பெண்கள் தங்களை யாருடனும் ஒப்புமைப் படுத்திப் பேசுவதை விரும்புவதில்லை. அதிலும் மஞ்சுவுக்குத் தெரிந்த ஒரே விஷயம் மேக்கப் போடுவது மட்டும்தான். தன்னைவிட அழகிலும், படிப்பிலும், பல மடங்கு குறைந்த ஒருத்தியுடன் தன்னை ஒப்புமை படுத்துவதை யாரும் விரும்ப மாட்டார்கள்.

''என்னம்மா நீங்க?''- சிரித்தாள்.

''மஞ்சுவோட திறமை எனக்கு இல்லை. அவங்க ஆங்கிலம் என்ன அழகு! அது மாதிரி என்னால பேச முடியுமா? என்ன அழகு? அவங்க நிறமும், அழகும் எனக்கு இருக்கா? நான் சமையலுக்குத்தான் படிச்சேன். அவங்க எம்.பி.ஏ படிச்சு வெளிநாடு போகப் போறாங்க. அந்தத் திறமை எனக்கு இல்லையே''

பவானியின் பதிலில் மஞ்சுவின் முகம் மலர்ந்தது. விஜயத்தின் முகம் கூட பெருமிதத்தில் பூரித்தது.

''உன்னுடைய இந்த பேச்சுத் திறமை எங்களுக்கு இல்லை.''

ராமநாதன் உள்ளே வந்தார். ''நீ இங்கதான் இருக்கியா? நான் உன்னைப் பாக்கத்தான் வந்தேன்''

''என்ன விஷயம் அங்கிள்''

''விஷயத்தை வெளிப்படையா பேசிடலாம்னு வந்தேன். கைலாசம். எனக்கு பவானியை, என் மகன் சுரேஷுக்கு கட்டி வைக்க விரும்பிதான் இவளை இங்க கூட்டிண்டு வந்தேன். ஆனால் அவன் மாட்டேன்னு சொல்றான்.''

''என்னவாம்?''

''அவன் சினிமா மாதிரி வாழ விரும்பறான். சினிமா ஸ்டார் மாதிரி மனைவி வேணுமாம். ஆடம்பர வாழ்க்கை.
வெளியில கூட்டிண்டு போகும்போது அவன் மனைவி அழகா, மத்தவங்க பார்த்து வியக்கற மாதிரி இருக்கணுமாம். குடும்பத்துக்குத் தேவை குணம்தான். அழகு இல்லைன்னு யார் அவனுக்குப் புரிய வைக்கிறது?''

''அவர் சொல்றது சரிதானே?''- பவானி மெதுவாகக் கூறினாள்.

''எல்லோருக்குமே தன் மனைவி அழகா இருக்கணும்னு ஆசை இருக்கும்ல?

''சரிம்மா, இவனுக்கு ஐஸ்வர்யா ராய் மாதிரி மனைவி வேணும். பெண்களுக்கு அம்பானி மாதிரி கணவன் வேணும்னு ஆசை. தகுதி, பிராப்தம்னு இருக்குல்ல?''- கைலாசம்.

ஏனோ அவர் மனம் பவானிக்காக வருந்தியது.

''பவானி, உன்னைத் தவிர வேறு ஒரு பொண்ணு என் வீட்டுல விளக்கு ஏத்தறதை நான் விரும்பலை. பவானி நீ நிரூபிக்கணும். குடும்பத்துக்குத் தேவை நல்ல குணம். பண்பாடுன்னு''

பாவானி சிரித்தாள். விஜயம் கொடுத்த காபியை அவர் குடித்து விட்டுக் கிளம்ப, பவானி மேலே வந்தாள். மனசு சிறிது சங்கடப் பட்டது. வாழ்க்கையில் அவள் பல விஷயங்களை உதாசீனம் செய்து விட்டுப் போய்விடுவாள். ஆனால் திரும்பிய பக்கமெல்லாம் அவளைக் கறுப்பி, அழகு இல்லை என்று கூறும்போது, அழகுதான் பெண்ணுக்கான தகுதியா என்ற கேள்வி எழுகிறது.

தரையில் நீட்டிப் படுத்தாள். முதுகு அழுந்தப் படுத்தது நன்றாக இருந்தது.

''ஏன் படுத்துட்டே?''- கைலாசம் உள்ளே நுழைந்தார்.

பவானி எழுந்து அமர்ந்தாள்.

''உன் மனசு வருத்தம் எனக்குப் புரியுது. ஆனா இந்த மாதிரி மனசு நோகப் பேசறவங்களுக்கு பத்தி சொல்லக்கூடாது. ஆனால் செய்கை மூலம் பதிலடி தரணும்.''

கைலாசம் அவள் அருகில் அமர்ந்தாள். அவர் மனம் அவளுக்காகக் கரைந்தது. ஏனென்று தெரியாமல், ஒரு கனிவு, பிரியம் சுரந்தது,

''நீ கிராமத்துலேயே வளர்ந்தவ. சரியான நாகரீகம் பரவாத இடம். ஆனா தேவைன்னு வரும்போது, எல்லாம் வந்துடும்.''

பவானி சிரித்தாள். '' கரெக்ட்.''

''நீ இப்போ டவுன்ல இருக்கே. கேண்டீன் வேலை மிக முக்கியம். உன் சாப்பாடு எல்லோருக்கும் புடிச்சா, உன் லெவலே மாறிடும். இங்க கம்பெனிக்கு நிறைய வெளிநாட்டு கஸ்டமர் வருவாங்க. அவங்களுக்கு நீ நல்ல சாப்பாடு போடணும். அவங்களோடு பேசணும்''

''- - - - - - - - - -''

''முதலில் உன் தோற்றத்தை மாத்து. வண்டி ஓட்டத் தெரியுமா?''

''சைக்கிள் ஓட்டுவேன்''

''அது போதும். ஒரு வண்டி வாங்கிக்கோ. அது வரைக்கும் என் வண்டி சும்மா தான் இருக்கு. அதை ஓட்டு. ஒரு கோச்சிங் சென்டர்ல சேர்த்து விடறேன். ஆங்கிலம் பேசக் கத்துக்கோ. இன்னும் புதுப்புது வெரைட்டியா செய்யக் கத்துக்கோ.''

பவானி அவரை விழி விரியப் பார்த்தாள். அவரின் அக்கறை அவளுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

''என்னவோ உன்னைப் பார்த்தா என் மகள் போல ஒரு உணர்வு. உன்னை யாரானும் சொன்னா எனக்குச் சங்கடமா இருக்கும்மா.''

''நன்றி சார்.''

''சார்னு கூப்பிட்டா என்னவோ மாதிரி இருக்கும்மா''

''அப்போ அப்பான்னு கூப்பிடவா?''

பனிமழை பொழிந்தது போல் உணர்ந்தார் கைலாசம்.




**ஹா**ல் முழுவதும் நிறைந்திருந்தது.

அலங்கார விளக்குகள் ஜொலிக்க, எம்.டி புன்னகையோடு ஒவ்வொருவரையும் தனித்தனியாக விசாரித்து உபசரித்துக் கொண்டிருந்தார். பவானி ஓரமாக நின்று புன்னகையோடு செய்திருந்த அயிட்டங்களை எடுத்து பரிமாறக் கொடுத்து விட்டாள்.

அவளுக்கு உதவியாக நால்வர் இருந்தார்கள். ஹாலின் ஓரம் சின்னச் சின்ன ஸ்டால் அமைத்து சாப்பாட்டு அயிட்டங்கள் வைத்திருந்தது.

''என்னென்ன செஞ்சிருக்கீங்க?''- எம்.டி அருகில் வந்தார்.

''உங்க மீட்டிங் நடக்கும்போது எல்லோருக்கும் ஜூஸ். மதியம் லஞ்ச். பிசிபேளா பாத், காலி ஃபிளவர் மஞ்சூரியன், முந்திரி பக்கோடா, தயிர் சாதம், நெல்லிக்காய் தொக்கு, மாங்காய் தொக்கு, கம்பு சாதம், சப்பாத்தி, ரைய்த்தா, உருளை காரக் கறி, வாழைக்காய் பொடித்தூவல், காளான் பிரியாணி, இது தவிர அரிசி சாதம், சாம்பார், ரசம், அவியல், அப்பளம்,சேமியா பால் பாயாசம்.''

''நிறைய அயிட்டம். சாப்பிடுவாங்களா?''

''மிச்சம் ஆகாது''- பவானி நம்பிக்கையுடன் கூறினாள்.

''அப்படி மிச்சம் ஆச்சுன்னா, பக்கத்துல

ஒரு அநாதை இல்லம் இருக்கு. அங்க அனுப்பிடலாம்.''

''ஓகே சார்.''- பவானி ஜூஸ் கொடுக்க நகர்ந்தாள்.

எம்.டி மேடையை நோக்கி நகர்ந்தார்.

கைலாசம் வேகமாக பவானியிடம் வந்தார்.

''என்னம்மா? எம்.டி என்ன சொன்னார்?''

பவானி அவர் கூறியதைச சொன்னதும் அவர் முகம் கவலையானது.

'' ஏம்மா, நிறைய மிச்சம் ஆகிடுமா?''

''அதெல்லாம் இல்லை சார். பரிமாறுவது நாங்கதான். எதுவும் மிச்சம் ஆகாம, நாங்க பாத்துக்கறோம்.''

''பவானி, எம்.டி எதிலும் தரம் பார்ப்பார். கொஞ்சம் சரியில்லைன்னாலும், எவ்வளவு நஷ்டம் ஆனாலும் பரவாயில்லைன்னு தூக்கி எறிஞ்சுடுவார்.''

தன் நம்பிக்கையைப் பலவீனப் படுத்துவது போல் யார் பேசினாலும் அவளுக்குள் ஒரு எரிச்சல் வரும். அதேபோல் இப்போதும் சடாரென்று ஒரு கோபம் எழுந்தது. ஆனால் மௌனமாக பல்லைக் கடித்து தன்னை நிதானப் படுத்தினாள்.

''யாரிடமும், உன் பெருமையைப் பாடாதே. செயல்கள் மூலம் காட்டு'' என்பார் அவளுடைய பேராசிரியை. உன் மனசை ஒரு விஷயத்தில் குவித்து அதையே சிந்தனையாகச் செயல்படுத்து. வீண் பேச்சில் காலம் கழிக்காதே.'' என்பார்.

''இந்த உலகம் உன்னை டிஸ்கரேஜ் செய்யத்தான் முன் வருமே தவிர, உன்னை ஊக்கப் படுத்த வராது. அவங்களுடைய வீண் பேச்சுக்கு காது கொடுக்காம, உன் பாதையில் நீ துணிவோடு முன்னேறு. ஜெயிச்ச பிறகு அத்தனை பெரும் நான் அப்பவே சொன்னேன்னு வருவாங்க. அதையும் சிரிப்புடன் மௌனமாக கடந்து போ'' என்பார்.

அதைத்தான் பின் பற்றுவாள் பவானி. இப்போது கைலாசத்தை மௌனமாக ஏறிட்டுப் பார்த்து விட்டு தன் வேலையில் ஆழ்ந்தாள்.

தொலைத் தொடர்பு சாதனங்கள் தயாரித்து ஏற்றுமதி செய்யும் நிறுவனம். ஆரம்பித்து அம்பது வருடங்கள் நிறைவு பெற்றதை ஒட்டி ஒரு விழா. அத்துடன், புதிதாக, ரெடிமேட் ஆடைகள் தயாரிப்பிலும் இறங்குகிறது. அதற்கான புது யூனிட் திறப்பு விழாவும் இன்று. கைத்தறி துறை அமைச்சர், மாவட்டக்கலெக்டர் என்று பெரிய மனிதர்கள் வந்து குழுமி இருந்தார்கள்.

எம்.டி தன் நிறுவனம் பற்றிப் பேசினார். புது யூனிட்டை அமைச்சர் திறந்து வைத்தார். ஊழியர்களுக்கு மாவட்டக் கலெக்டர் மூலம் நினைவுப் பரிசுகள் வழங்கப் பட்டது.

ஒவ்வொரு ஊழியர்களும் குடும்பத்துடன் வர வேண்டும் என்றதால், அவர்கள் வீட்டுப் பெண்களும் வந்திருந்தார்கள். குமரேஷ், மஞ்சுவுடன், விஜயமும், படாடோபமாக வந்திருந்தார்கள். ராமநாதனின் மகன் சுரேஷ், மனைவி கோகிலாவும் வந்திருந்தார்கள்.

''நீதான் பவானியா?'- கோகிலா அருகில் வந்தாள்.

''ஆமாம்''

''இதுக்கு முன்னாடி சமைச்சிருக்கியா?''

''ம். ஊர்ல ஒரு கோவில் திருவிழா அப்போ அன்னதானம் செஞ்சாங்க. அப்போ சமைச்சிருக்கேன்.''

''அது வேற, இது வேற.''

''ம். எனக்குத் தெரிஞ்ச வரைக்கும் செஞ்சிருக்கேன்.''

கோகிலாவிடம் ஒரு கனிவு இருந்தாலும், பவானியை ஏற, இறங்கப் பார்த்தார். அவளின் தோற்றம் அவருக்குள் ஒரு ஏளனத்தை உண்டு செய்தது.

சமையல் மேற்பார்வை செய்தவள், அப்படியே ஹாலுக்கு வந்திருந்தாள். காட்டன் புடவை சிறிது கசங்கி இருந்தது. முகம் வாடி களைத்திருந்தது.

''ஏம்மா, கொஞ்சம் பளிச்சுன்னு இருக்கக் கூடாதா? பெரிய, பெரிய ஆளுங்க வர இடம்.''- கோகிலா.

''இல்லைம்மா. இதோ போய் முகம் கழுவி சேலை மாத்திண்டு வரேன்.''

பவானியிடம் தோற்றம் பேணுவதில் சிறிது அலட்சியம் இருந்தது. எல்லாரும் அவளை, கறுப்பி, அழகு இல்லை என்று சொல்லி, அந்த வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டு, சலித்துப் போயிருந்தது மனசு. அதிகம் தன்னை நேர்த்தியாக அலங்கரித்துக் கொள்ள மாட்டாள். ஆனால் கோகிலா சொல்வது போல் ஒரு பொது இடத்தில் பளிச் என்று இருக்க வேண்டியது அவசியம் என்று புரிய, வேகமாகப் போய் முகம் கழுவி, பவுடர் போட்டு, புடவையை நீவி சரிப்படுத்திக் கொண்டு வந்தாள்.

அவளுடைய கல்லூரி தோழிகள் இரண்டு பேர், அவளுடன் சேவை நிறுவனத்திற்கு உதவும் ஒரு இளைஞன் என்று நால்வர் குழு சமையல் வேலையில் ஈடுபட்டிருந்தது. ஒவ்வொரு ஸ்டாலில் ஒருவர் நிற்க, இளைஞன் அனைவருக்கும் ஜூஸ் கொண்டுபோய்க்

கொடுத்து விட்டு வந்தான்.

''வாசு, ஜூஸ் போதுமா?''



''போதும் பவானி. இது மூலிகை ஜூஸ். ஒன் அவர்ல பசி எடுத்துடும். சாப்பாட்டை மட்டும் சூடா வை.''

ஒரு தோழி ஐஸ்கிரீம் பாக்ஸை கொண்டு வந்து வைத்தாள். அருகில் சுக்குப் பால். பீடா. ரெடியாக மீட்டிங் முடித்து எம்.டி முதலில் வந்தார்.

''பவானி, முதலில் நான் சாப்பிட்டுப் பார்க்கிறேன்.''

''ஸ்யூர்.''- பவானி எல்லாவற்றிலும் சிறிது எடுத்து ஒரு தட்டில் போட்டுத்தர, ஒவ்வொன்றையும் ருசி பார்க்கப் பார்க்க முகம் மலர்ந்தது.

''வாவ். சூப்பர் டேஸ்ட்''- என்று முகம் மலர்ந்து பாராட்டியவர், அமைச்சரையும், கலெக்டரையும் அழைத்து, அவர்களுக்கும் ஒரு தட்டில் போட்டுக் கொண்டு போய்த் தந்தார். அனைவரும் அமர்ந்து சாப்பிட டேபிள், சேர் போட்டிருந்தது.

எம்.டி விருந்தினர்களுடன் அமர, பவானி எல்லாவற்றையும் எடுத்துப் போய் அவர்களுக்குப் பரிமாறினாள்.

''நீதான் சமையலாம்மா?''- அமைச்சர்.

''ஆமாம் சார்.''

''ரொம்ப அருமையா இருக்குமா. சில புது அயிட்டமும் செஞ்சிருக்கே. வித்தியாசமான டேஸ்ட்.''- அமைச்சர்.

''லேசா ஒரு இனிப்பு.''

''ஆமாம் சார், பெங்களூர் மாடல்ல, வெல்லம் போடுவேன்.''

''இதென்ன வடகம்?''

''இது நெல்லிக்காய், இலந்தைப் பொடி போட்டு வடகம் சார். சுக்கு, மிளகு, வெல்லம், மிளகாய், உப்பு, பெருங்காயம் போட்டு தட்டி, காய வைக்கணும். கொஞ்சம் ஹெவியா சாப்பிட்டாக் கூட, இதை வாயில போட்டுண்டா, ஜீரணம் ஆயிடும்.''

''எங்க வீட்டுல பாட்டி எலந்தை வடாம் தட்டுவாங்க கிராமத்துல. ஜீரணம் ஆயிடும். இப்போ எங்கே அதெல்லாம்?''- எம்.டி.

நம் பாரம்பரிய முறை, உடல் ஆரோக்கியம் பேணுவதற்கு. இப்போவாய்க்குருசின்னு, ஜங்க்ஃபுட்னு உடம்புக்குத் தேவையில்லாத நச்சுக்கலைத்தான் சாப்பிடறோம்.'' என்ற பவானி ரசம் ஒரு கப்பில் ஊற்றித் தந்தாள்.

''இது என்னம்மா?''

''இது பாட்டி ரசம் சார். மிளகு, சீரகம், திப்பிலி, பூண்டு போட்டு அரைச்சு சாப்பிடறது. இப்போ எவ்வளவு சாப்பிட்டாலும், கடைசியில் இதை ஒரு டம்ளர் சாப்பிட்டாலும் ஜீரணம் ஆகிடும்.''

அவர்கள் அதைக் குடித்தார்கள். ''ஜோர்'' என்று இன்னொரு கப் வாங்கிக் குடித்தார்கள். எம்.டி முகத்தில் ஒரு திருப்தி நிலவியது. பவானியைப் பாராட்டும் ஒரு புன்னகை முகத்தில்.

''வெளியில் ஏதானும் நிகழ்ச்சிக்கு சமைச்சுத் தருவீங்களா?''

''நான் இங்க கேண்டீன் ஒப்பந்தத்துல வந்திருக்கேன் சார். அதனால வறது சிரமம்.''

''என்ன சிரமம்? நீங்க சொல்லுங்க. நான் பவானியை அனுப்பி விடுறேன்.'' என்றார் எம்.டி. நன்றியோடு புன்னகைத்தாள் பவானி.

''நம் திறமைக்கு ஒரு வாய்ப்பு எனும்போது மறுக்கக்கூடாது.''

''எஸ். அடுத்த மாதம் நம்ம கட்சிக் கூட்டம் ஒரு திருமண மண்டபத்துல ஏற்பாடு செஞ்சிருக்கோம். நான்வெஜ் தனியா இருக்கு. வெஜ் இவங்க செய்யட்டுமே.''

''கண்டிப்பாக சார். நீங்க என்னென்ன வேணும்னு சொல்லுங்க. ஏற்பாடு செஞ்சிடலாம்.''

''நீங்க ஒரு குழுவா?''

''நாங்க பெண்கள் மூணுபேரும் ஒண்ணாப் படிச்சவங்க சார். கேண்டீன்ல பங்கு. இவர் இளங்கோ. பேங்க் எம்ப்ளாயி. நாங்க எல்லாரும் தன்னார்வத் தொண்டர்கள். கோவைல நடக்கற பல சேவை நிறுவனங்கள்ல இளங்கோவும் உறுப்பினர். எங்களுக்கு உதவிக்கு வந்திருக்கார்.''

''அப்படியா. அன்புக்கரங்கள்னு ஒரு அமைப்பு. நிறைய நல்ல விஷயங்கள் செய்யறாங்க. இந்தக் கொரானா காலத்துல கூட நல்ல சேவை அவங்களுடையது. உங்களுக்குத் தெரியுமா?''

''இவருடையதுதான் சார் அந்த அமைப்பு.''

''வாவ். அந்த இளங்கோ நீங்க தானா?''- எம்.டி ஆர்வமாய்க் கை குலுக்கினார்.

வேலையை முடிச்சுட்டு வாங்க சார். நம்ம கம்பெனி மூலமா உங்களுடன் இணைஞ்சு சில விஷயங்கள் செய்ய நினைக்கிறேன். சீஃப் கெஸ்ட்டை அனுப்பிட்டு வரேன்''

''ஷ்யூர் சார்.''

கைலாசம்வியப்புடன் அவர்களைப் பார்த்தபடி நின்றார். பவானி அங்கு மெல்ல, மெல்ல விஸ்வரூபம் எடுப்பது ஏனோ பெருமையாக இருந்தது. மடமடவென்று சாப்பாடு தீர்ந்து, ஸ்டால் காலியாவது அப்பாடா என்று நிம்மதியாக இருந்தது.



எல்லோரும் இரண்டு தடவை கேட்டு வாங்கிச் சாப்பிட்டார்கள்.

''வீட்டில் அம்மா இருக்காங்க. அவங்க விரும்பிச் சாப்பிடுவாங்க.''என்று பார்சல் கட்டினார்கள் சிலர். சப்பாத்தி, குருமா, பிசிபேளா பாத் என்று அதிகம் பார்சல் ஆனது.

''மிச்சம் இருக்கா?''

கைலாசம் வந்து கேட்ட போது பாத்திரங்கள் அனைத்தும் எடுத்து தேய்க்கப் போட்டு, ஸ்டால் ஷாமியானாவைப் பிரித்து கிளம்பத் தயாராக இருந்தார்கள்.

''இல்லை சார். ஏதானும் வேணுமா?''- பவானி.

''இல்லைம்மா. எனக்கு இப்பத்தான் நிம்மதி. ரொம்ப அருமையா ஜமாய்ச் சுட்டே.''- மனப்பூர்வமாய்க் கூறினார் கைலாசம்.

''இது எங்க நாலுபேரின் கூட்டு முயற்சி சார்.''

''வெரிகுட்.''

கைலாசம் அவர்களைப் பிரமிப்புடன் பார்த்தார். நாலுபேரிடம் ஒரு ஒற்றுமை, அன்பு இருந்தது. அவர்களே வேலையைப் பிரித்துக் கொண்டு மடமடவென்று செயல் பட்டார்கள். இளங்கோ எம்.டி யைப் பார்க்கப் போயிருந்தான். வரிசையாக ஊழியர்கள் வந்து பவானியைப் பாராட்டி விட்டுப் போக முறுவலுடன் அவர்களுக்கு நன்றி கூறினாள் பவானி.

''டீம் வொர்க்.''

''ஆமாம் சார். இவ ராஜேஸ்வரி. கணக்கு, வழக்குகளைக் கவனிக்கிறாள். இவள் கணவர் ரயில்வேயில் இருக்கிறார். ஒரு பெண். முதல் வகுப்பு படிக்கிறாள். இது கீதா. கேண்டீனுக்கு வேண்டிய அனைத்து காய்கறிகளும், மளிகை சாமான்களும் இவள் பொறுப்பு. திருமணம் நிச்சயம் ஆகியிருக்கு. சமையல் முழுவதும் என் டிபார்ட்மென்ட்''- பவானி அனைவரையும் அறிமுகப் படுத்தினாள்.

கைலாசம் அவர்களை வாழ்த்தினார். அவர் நகர்ந்ததும் கீதா கேட்டாள்.

''இவர்தான் உன் அப்பாவா?''

''ஆமாம்''

''நீ அவர் மகள்னு தெரியுமா?''

''சொல்லலை. சொல்றதுக்கு அம்மா வருவாங்க.''

நம்பிக்கையுடன் கூறினாள் பவானி.




மூச்சை இழுத்து விட்டாள் பவானி.

நுரையீரல் முழுவதும் சுத்தமான காற்று நிரம்பியது. அதன் புத்துணர்ச்சி மனம் முழுவதும் பரவ, ''வெரிகுட் பவானி'' என்று தன்னைத் தானே புகழ்ந்து கொண்டாள்.

''பவானி, நீ சக்தி வாய்ந்தவள். ஜெயிக்கப் பிறந்தவள். உன்னைச் சுற்றி நல்ல மனிதர்களே நிரம்பி இருக்கிறார்கள். பிரபஞ்ச சக்தியின் கையில் நீ பத்திரமாக இருக்கிறாய்''- மந்திரம் போல் தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

உள்ளுக்குள் ஒரு தைரியம் பிறந்தது. நின்று நிதானித்து அந்த கட்டிடத்திற்குள் நுழைந்தாள்.

மகிழ்ச்சியாக இருந்தது. ஒவ்வொரு வாய்ப்பாக அவள் திறமைக்குத் தீனி போடுவதுபோல் வரும்போது உற்சாகமாக இருந்தது.

சவாலை ஏற்கப் பழகு. அது உன்னை இன்னும் பக்குவப் படுத்தும். உன் அறிவை, சிந்தனைத் திறனை மேம்படுத்தும். முக்கியமா எதையும் எதிர் நின்று சமாளிக்கும் சக்தியைக் கொடுக்கும்.'- என்பாள் அம்மா.

அதுதான் பவானியை இவ்வளவு தூரம் வர வைத்திருந்தது.

''சவாலைச் சந்திக்க முக்கியமாத் தேவை நேர்மை. அது கொஞ்சம் சிரமம்தான். ஆனால் நீ நேர்மையாக, உண்மையாக இருந்தால் மற்றதை தெய்வம் பார்த்துக் கொள்ளும்'' என்பாள்.

''நேர்மைங்கிறது எதுவும் இல்லை. உண்மையாக இருப்பது'' என்பாள்.

அம்மாவின் வார்த்தைகளை மனதில் கொண்டு நடப்பதால்தான் இந்த அளவுக்கு வெற்றிப் பாதையில் நடைபோட முடிகிறது. மற்றவர்களை எளிதில் நம்புவது சுலபம். ஆனால் நம்மை நாமே, நம் திறமைகளை நம்புவது, உண்மையில் மிகச் சிறந்த சவால்.

அதை பழக்கப் படுத்திக் கொண்டாள்

பவானி. என்றுமே தன் திறமையை குறைத்து மதிப்பிட்டதில்லை. திறமையை வளர்த்துக் கொள்ள அவள் பெரிதும் முயற்சித்தாள். அம்மா நன்றாகச் சமைப்பாள். அவளிடம் கற்றுக் கொண்டது. கல்லூரியில் படித்தது, இவற்றுடன் குக்கரி வகுப்பிற்குச் சென்றாள். பல நாட்டுச் சமையல்களை புத்தகங்கள் வாங்கிப் படித்துச் செய்து பார்த்து, அதில் நிறை குறைகளைச் சரி செய்து மற்றவர்களுக் குச் செய்து தருவாள். அவர்கள் சொல்லும் கருத்தைக் குறித்துக் கொள்வாள்.

இப்போது எம்.டி மூலமாக வந்த வாய்ப்பு இது. அவரின் நண்பர் மகளுக்கு நிச்சயதார்த் தம். மகள் வடநாட்டுப் பையனை லவ் செய்து திருமணம் செய்து கொள்வதால் அந்தப் பக்க உணவு முறைகள் வேண்டும் என்றிருந்தார். பவானிக்குத் தெரியும் என்பதால் அவரைச் சந்திக்க வந்திருந்தாள்.

பவானி முருகா என்றபடி வீட்டுக்குள் நுழைந்தாள்.

பெண் வீடு தமிழர்கள் என்பதால், தமிழ் நாட்டுச் சமையலுடன், வடநாட்டுச் சமையலும் வேண்டும் என்றார்கள். அவர்களுக்கு என்ன வேண்டும் என்பதை ஏற்கனவே சொல்லியிருந்தார்கள். அவர்கள் கேட்ட, காரம், இனிப்பு வகைகள், இரண்டு சாதம் வகைகளைச் செய்து எடுத்து வந்திருந்தாள்.

அதைச் சாப்பிட்டுப் பார்த்தவர்களுக்கு ரொம்பத் திருப்தியாக இருந்தது. நிச்சயத் துக்கு என்னென்ன ஆர்டர் என்பதை குறித்துக் கொண்டு அட்வான்சுடன் வெளியில் வந்த போது திருப்தியாக இருந்தது.

அப்பா என்று மூச்சு விட்டாள். அப்பா என்றதும் கைலாசம் நினைவு வந்தது.

அவரைப் பார்க்கும்போது கோபம் வந்தாலும், சிறிது வருத்தமாக இருந்தது. இரண்டு பெண்களுக்குத் துரோகம் செய்து விட்டு அதன் குற்ற உணர்ச்சி இல்லாமல் எப்படி இருக்க முடிகிறது?

ஒரு முதல் மனைவி இருக்கிறாள், அவளின் குழந்தைகள் எப்படி, எங்கே இருக்கிறார்கள் என்பது கூட அறியாமல் எப்படி வாழ முடிகிறது. இவர் மற்றவர்களை ஏமாற்றவில்லை. தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்கிறார். உண்மை தெரிய வரும்போது அவரின் ரியாக்ஷன் எப்படி இருக்கும் என்று அறிய ஆவலாக இருக்கிறது.

ஆனால் மூத்த மனைவிக்கு ஒரு மகள் இருக்கிறாள் என்பது தெரியாது கைலாசத் துக்கு. திருமணம் ஆகி பத்தே நாளில் கிளம்பி



# கழுகுமலை வெட்டுவான் குகைக்கோவில்!

கழுகுமலை வெட்டுவான் கோவில், கோவில்பட்டியிலிருந்து 22 கி.மீ. தொலைவில் கழுகுமலை என்னும் பேரூராட்சியில் அமைந்துள்ளது. தமிழகத்தில் உள்ள மிகச் சிறந்த குகை கோவில்களில் கழுகுமலை வெட்டுவான் கோவிலும் ஒன்றாகும். இக்கோவில் 8-ம் நூற்றாண்டில் பாண்டிய மன்னர்களால் செதுக்கப்பட்டதாகும். மலைப் பகுதியில் அமைந்துள்ள இக்கோவில் ஒரே கல்லால் ஆனதாகும். கருங்கல்லைக் குடைந்து இக்கோவில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கோவில் திராவிடக் கட்டிடக் கலையை பயன்படுத்தி கி.பி. 800-ல் பாண்டிய மன்னன் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப் பட்டது. சமணர்களின் முக்கிய இடங்களில் ஒன்றாக விளங்கும் இவ்விடத்திலுள்ள மலை சரிவில் சமண தீர்த்தங்கர்களின் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இங்கு சமண சித்தாந்தம் போதிக்கப்பட்டது. இச்சிற்பங்கள் பாண்டிய மன்னன் பராந்தக நெடுஞ்சடையான் காலத்தில் தோற்று விக்கப்பட்டவை. சமய இறையாண்மை மிக்க இடமாகவும், கலைக் கருவூலமாகவும் திகழும் கழுகுமலை, உலக மரபுச் சின்னங்களின் பட்டியலில் இடம்பெறக் கூடிய வகையில் சிற்பக்கலையை தன்னகத்தே கொண்டுள்ளது.

கழுகுமலை கடினமான பாறை அடுக்கு களால் ஆனது. இவ்விடத்தில் சிற்பங்களை செதுக்கி இருக்கிறார்கள் என்றால் முன்னோர்களின் உழைப்பும், தொழில்நுட்பமும் வியப்புக்குரியதாகும். இப்பாறைகள் எண்ணற்ற மிகவும் நுணுக்கமான சிற்பங்களை கொண்டுள்ளது. கோவிலின் முழு பணியும் முற்றுப் பெறாமல், கருவறையில் பிள்ளையார் சிலை ஒன்று வைக்கப்பட்ட நிலையில் காணப்படுகிறது.

*– தொகுப்பு: கோட்டாறு ஆ.கோலப்பன், நாகர்கோவில்.*

வந்தவர். அதன் பிறகுதான் தன் வயிற்றில் ஒரு கரு உருவாக்கி இருக்கிறது என்று தெரிந்தது மங்களாவுக்கு.

சொல்லிச் சொல்லித்தான் வளர்த்தாள் மங்களா தன் மகளை. அவரே உன்னைத் தன் மகள் என்று கூற வேண்டும் என்று கூறி, தன்மானம் கற்றுத் தந்து, தைரியம், துணிச்சல் கற்றுத் தந்து சுயமாக நிற்க கற்றுத் தந்தாள்.

அவர்களின் கதை முழுவதும் தெரிந்தவர் ராமநாதன். கைலாசத்திற்கு மங்களத்துடன் திருமணம் நடக்கும்போது, அவர்தான் கூட இருந்தார். அவர்தான் பவானியை கோவை அழைத்து வந்தார்.

அவரை முதல் முறை பார்த்தபோது வயிற்றில் ஒரு அமிலம் கொந்தளித்துக் கிளம்பியது. ஆனால் தன்னை சமாளித்துக் கொண்டாள். அவர் முன் நிமிர்ந்து நிற்க வேண்டும் என்பது மட்டுமே அவளின் லட்சியம். ஒரு மிகச் சிறந்த சமையல் நிபுணராக வேண்டும் என்று விரும்பினாள். ஒரு உணவு விடுதி ஆரம்பிக்க வேண்டும் என்பது அவளின் லட்சியம். ஜெயிப்பேன்'' தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

மெதுவாக நடந்து உக்கடம் பேருந்து நிலையத்தை அடைந்தாள்.

அதிகமானப் பேருந்துகள் இல்லை என்றாலும் காந்திபுரம் செல்ல ஒரு பேருந்து நின்றது. கூட்டம் இல்லை. ஏறி அமர்ந்து கொண்டாள். எதுவானும் சிந்தித்தப்படி செல்ல அவளுக்குத் தனிமை தேவைப் பட்டால் கூட்டம் இல்லாத பேருந்திலோ, கோவில் பிரகாரத்திலோ போய் அமர்ந்து விடுவாள்.

அடுத்து என்ன செய்வது என்று திட்டமிட வேண்டியிருந்த்து.

''பஸ் எடுக்க பத்து நிமிஷம் ஆகும்மா''- டிரைவர்.

''பரவாயில்லை. நான் சும்மா உக்காந்து இருக்கேன்.'' பவானி சீட்டில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள். லேசாக மழை தூறிக் கொண்டிருந்தது. அந்த கிளைமேட் அருமையாக இருந்தது. எப்போதுமே கோவை, பிரிஜ்ஜில் வைத்த மாதிரி ஜில் என்று இருக்கும். பவானிக்கு சென்னையில் இருந்து விட்டு, இங்கு கோவை சுகமாக இருந்தது.

ஒவ்வொருவரிடம், ஒவ்வொரு ஊர் சொன்னாலும், மங்களாவுக்கு சென்னை தான். அங்கிருந்து கல்யாணம் ஆகி வந்தது மதுரை என்றாலும் கைலாசம் உதறிப் போனதும் அவள் சென்னைக்கே போய் விட்டாள். அங்கு உறவுகள் விட்டு ஒதுங்கி, தானே உழைத்துச் சம்பாதித்து, பவானியைப் படிக்க வைத்தாள்.

சொந்தமாக மாவு அரைக்கும் மெஷின் வைத்து, அக்கம் பக்கம் மாவு அரைத்துக் கொடுத்து, மெஸ் நடத்திப் பிழைத்தாள். கண்ணியமாக வாழ்ந்தால் போதும். எல்லாமே கவுரவமான தொழில்தான் என்பாள் மங்களா.

பவானியை மட்டும் ராமநாதன் அழைத்து வந்து ஹோம்சயின்ஸ் படிக்க வைத்தார். கேண்டீன் ஒப்பந்தமும் அவர் மூலம் கிடைத்ததுதான்.

''உங்கப்பா, தான் செஞ்சது தப்புன்னு உணரவே இல்லை. நான் அவன்கிட்ட உன்னைப் பத்தி எதுவும் சொல்ல மாட்டேன். ஆனா அவனே உன்னை மாதிரி ஒரு பொண்ணு வேணும்னு ஏங்கற மாதிரி உன் வாழ்க்கை அமையனும்''- என்றார்.

வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கும்போது சிரிப்புதான் வரும் என்பார்கள். பவானி தன் வாழ்க்கையைத் திரும்பிப் பார்ப்பதில்லை. முன்னோக்கிப் பார் தூரத்தில் வெளிச்சம் தெரிகிறது என்று அதை நோக்கிப் போ என்பாள் மங்களம். பவானி அம்மாவை, அப்பாவை, தன் வாழ்க்கையைப் பற்றி நினைத்துப் பார்க்க விரும்பவில்லை.

அவள் லட்சியம் என்று எதுவும் மனதில் உருவாக்கிக் கொள்ளவும் விரும்பவில்லை. அன்றைய நாள் நிறைவாக அமைந்தால் போதும் என்றுதான் நினைத்தாள். ''இன்று இந்த நிமிஷம் நிறைவாக இருந்தால், அடுத்த நிமிஷம் இதை விட அற்புதமாக அமையும்'' என்பதே அவளின் கொள்கை.

**"wolf magic begins now''** என்பதை எப்போதும் சொல்வாள். கல்லூரியில் படிக்கும்போது கீதா ஒரு யூ டியூப் சேனல் பார்த்துச் சொன்னதை இன்றளவும் சொல்வாள். உனக்கு என்ன நடக்கனும்னு எழுதி வச்சிருக்கு. அதன்படி நடக்கும். வருவதை அப்படியே ஏத்துக்கோ. அதை அமைக்கறது இறைவன் பொறுப்பு'' என்பாள் மங்களா.

வாழ்க்கை அவளை நன்றாகப் பக்குவப் படுத்தி இருந்தது.

''வரப்போ எதுவும் கொண்டு வரலை. போறப்போ எதுவும் கொண்டு போகப் போறதில்லை. இங்க சம்பாதிச்சதை இங்கேயே விட்டுட்டுப் போகலாம். முடிஞ்ச அளவு தர்ம காரியங்கள் செய்''- என்பாள்.

''எப்பவும் முதல் வணக்கம் சொல்றது நாமளா இருக்கணும். எந்த ஒரு நல்ல விஷயத்திலேயும் முதல் பிள்ளையார் சுழி நாம போடனும்'' என்று அடிக்கடிச்

சொல்வாள். அந்த என்னத்தின்படிதான் நடக்கிறாள் பவானி.

வாழ்க்கை இனிமையாகத்தான் இருக்கிறது.

''ஆல் ஈஸ் வெல்'' - தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

கண்ணை மூடி, தனக்குத் தெரிந்த மந்திரங்களைச் சொல்ல ஆரம்பித்தவளின் கவனத்தைக் கலைத்தது மஞ்சுவின் குரல்.

கலகலவென்ற சிரிப்புடன் ஒரு இளைஞனுடன் வண்டிக்குள் ஏறியவள், பவானியைக் கவனிக்காமல் முன் சீட்டில் அமர்ந்தாள். இளைஞன் அவள் தோளைச் சுற்றிக்கை போடச் செல்லச் சிணுங்கலுடன் அதை அனுமதித்தாள் மஞ்சு.

ஒரு அதிர்ச்சியுடன் அவர்களைக் கவனித்தாள் பவானி.

காலையில் எதோ ஸ்பெஷல் கிளாஸ் என்று சீக்கிரமாக கிளம்பிச் சென்றாள். ஆனால் மதியம் நாலு மணிக்கு உக்கடம் பஸ் ஸ்டாண்டில் வண்டி ஏறுகிறாள். அவளின் கல்லூரி பீளமேட்டில். மஞ்சுவின் வண்டி எங்கே?

பவானிக்குள் பல கேள்விகள் அலைமோத, எழுந்து அவர்கள் அருகில் சென்றாள். அவளைப் பார்த்ததும் மஞ்சுவின் முகத்தில் அதிர்ச்சி.

''நீங்க எங்கே?''

''இங்கே ஒரு நிச்சயத்துக்கு ஆர்டர் கிடைச்சது. அது விஷயமா வந்தேன்''

மஞ்சு தடுமாறினாள். அவளுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை.

''இங்க நடந்ததைப் பார்க்கும்போது நிச்சயம் நீ காலையில் காலேஜுக்குப் போகலை. உண்மையாவே யாருன்னு தெரியுது.''

''தெரியுதுல்ல? அப்போ உன் வேலையைப் பாரு.''

சட்டென்று சொன்ன மஞ்சுவின் பதிலில் அதிரவில்லை பவானி.

''குட், அப்போ நீ எதோ தவறான செயல்ல ஈடுபடறேன்னு தெரியுது. இது நல்லது இல்லை மஞ்சு. ஒழுக்கமான செயல் இல்லை.''

''ஒழுக்கத்தைப் பற்றி நீ சொல்ல வேண்டாம். சமையல், சேவை காரியம்னு ஆம்பளைங்க கூட சுத்தறியே! நான் அப்படி இல்லை. இவர் என் காதலர். நான் இவரைத்தான் கல்யாணம் செஞ்சுக்கப் போறேன்.''

''நல்லது. அதுக்கு உங்கப்பாவோட பர்மிஷன் கிடைக்குமா?''

''அந்தக் கவலையும் உனக்கு வேண்டாம்.''

''ரொம்ப நல்லது. ஆனா இவரைப் பார்த்தா நல்லவராத் தெரியலை. அப்புறம் உன் தலையெழுத்து.''

''உனக்கு ஒரு லவ்வர் கிடைக்கலைன்னு உன் பொறாமையை என்கிட்டே காட்டாதே. இவர் யாரு? என்னன்னு உனக்குத் தெரியாது.''

''மஞ்சு, அழகைப் பார்த்து வர காதல் நிலையில்லாதது.''

''அழகைப் பத்தி நீ பேசாதே.''

மஞ்சு வெடுக்கென்று பதில் கூறினாள்.

''வா, சரண் நாம போகலாம்''- என்று அவனைக் கை பிடித்து பஸ்ஸை விட்டு இறங்கிப் போனாள்.

வேதனையுடன் நின்றாள் பவானி.




**அ**ழகு நிலையம் கூட்டம் இல்லாமல் இருந்தது. யார் என்று எழுந்து வந்த பெண் கீதாவைப் போலவே இருந்தாள்.

''நான் பவானி''

''ஓ! வாங்க, வாங்க'' வரவேற்று முன் ஹாலில் அமர வைத்தாள் அந்தப் பெண். எதிரிலிருந்த படத்தில் அவள் யாரிடமோ விருது வாங்கிக் கொண்டிருந்தாள். அருகில் அவள் பெயர் சந்தியா என்றது.

''கீதா சொன்னா உங்களைப் பற்றி.''

''நீங்க அவ தங்கையா?''

''சித்தி பெண். என் அம்மாவும், அவங்க அம்மாவும் அக்கா தங்கை.''

''கீதா என்கிட்ட உங்களைப் பார்க்கச் சொல்லி ஒரு மாசம் ஆச்சு. என்னவோ அதில் ஆர்வம் இல்லாம இருந்துட்டேன்.''

''நம்மை அழகு படுத்திக்கறது, மத்தவங்களைக் கவருவதற்காக இல்லை, நம்மை நாமே மதிக்கும் விதத்தில் இருக்கணும் இல்லையா. பளிச்சுன்னு இருந்தா நமக்கே ஒரு எனர்ஜி உண்டாகும்.''

''ஆமாம்.''

''நீங்க ஒரு இடத்துல, நாலுபேர் வந்து போற இடத்துல இருக்கீங்க. நாம பளிச்னு இருக்கணும். ரொம்ப சினிமா ஸ்டார் மாதிரி இருக்க வேண்டாம். பார்த்தா ஒரு கம்பீரம் வேண்டாமா?''

சந்தியா அழகாய்த் தெளிவாகப் பேசினாள்.

அவள் மாநிறம்தான். ஆனால் களையாக இருந்தாள்.

பவானியை அருகில் வந்து முகத்தைத் திருப்பி, கூந்தலைத் தொட்டுப் பார்த்தாள். தோலைத் தடவிப் பார்த்தாள்.

''பவானி உங்க தோல் நல்ல மென்மையா இருக்கு. வெயில்ல அலைஞ்சு, கருத்து இருக்கீங்க.. வீட்டில் இருக்கும் சாமான்களை வைத்தே நீங்க தோல் கறுப்பை எடுக்கலாம்.''

சந்தியா அவளை உள்ளே அழைத்துச் சென்றாள்.

காலுக்கு, கைக்கு, மசாஜ் செய்து சொற, சொறப்பை நீக்கினாள். முகத்துக்கு மசாஜ் செய்து , கூந்தலுக்கு ஆயில் மசாஜ் செய்தாள். ஸ்டீம் பாத் எடுத்து, முகம் தெளிவாகி வந்தபோது அவளுக்கே அதிசயமாக இருந்தது. தான்தானா என்று?

''உங்க கூந்தல் நல்ல நீளம், அடர்த்தி பவானி. ஆனா அதை நீங்க பராமரிக்க வில்லை. வாரத்துக்கு ஒரு தடவை ஆயில் மசாஜ் செய்யுங்க. தேங்காய் எண்ணெய், விளக்கெண்ணெய், ஆலிவ் ஆயில் சேர்த்து சூடுபடுத்தி, தேய்ங்க. மஞ்சள், தேங்காய் எண்ணெய் கலந்து உடம்பில் தேய்ச்சுக் குளிச்சா, இந்த வீண் கருப்பு விலகி, தோல் மின்னும்.''

பவானி அவள் கூறுவதை ஆழ்ந்து கவனித்தாள்.

''பவானி, தக்காளி தினம் முகத்துல தேய்ச்சுக் கழுவுங்க. பாலாடை நேசுரல் பிளீச். வாரம் ஒரு தடவை கொத்தமல்லித் தழையை கொதிக்க வச்சு அந்தத் தண்ணீரைக் குடிங்க. அதிகமா உப்பு, சர்க்கரை, எண்ணெய் சேர்க்க வேண்டாம்.''

சந்தியா வாடிக்கையாளரைக் கவர அழகு நிலையம் நடத்தவில்லை என்று புரிந்தது பவானிக்கு. அவளுக்குக் காசு முக்கியமில்லை. தன்னை நம்பி வருபவர்களுக்கு ஆரோக்கியமான டிப்ஸ் தந்து அவர்களை திருப்தி படுத்த வேண்டும் என்று நினைக்கிறாள் என்று புரிந்து கொண்டாள்.

''எனக்கு டெய்லரிங் தான் முக்கியம். கல்யாண மேக்கப் போவேன். அதுபோக இப்படி நண்பர்கள் வீட்டில் வந்தால் அழகு படுத்துதல் செய்வேன். நீங்க நான் சொன்னதைச் செய்யுங்க. ஆறு மாசத்துக்கு ஒரு தடவை பேஷியல் செஞ்சு, புருவத்தைத் திருத்தினா போதும். இயற்கையான முறையில் நம்ம உடல் நலனைப் பேணினா, என்னைக்கும் அழகா இருப்போம்.''

''ரொம்ப நன்றிம்மா.''- பவானி மனப்பூர்வமாகச் சொன்னாள்.

உடலும், முகமும் மிளிர தன்னைப் பார்க்கையில் அவளுக்கே மகிழ்ச்சியாக இருந்தது. வறண்டு கிடந்த அவளின் உடலும், மனசும் புத்துணர்ச்சி அடைந்தது போல் இருந்தது.

கூந்தலை சீராக வெட்டி, புருவத்தைத் திருத்தி, கைகால், நகங்களைச் சீராக வெட்டி அவளை அழகு படுத்தி இருந்தாள் சந்தியா.

''பேஷன், பேஷன்னு தங்களுக்குப் பொருத்தமில்லாம டிரஸ் செஞ்சுக்கறாங்க. ஆனா நல்ல மைல்டு கலர்ல புடவை கட்டி, கூந்தலை விரிச்சு விடாம, இந்த மாதிரி நீளக் கூந்தலைப் பின்னி, ஒருகிள்ளுபூ. கண்ணுக்குத் தெரியாம போட்டு வைக்காம, அழகா, பளிச்சுன்னு போட்டு வச்சு, மேலே சந்தனம், அல்லது விபூதிக் கீத்து வைங்க. லக்ஷ்மிகரமா இருப்பீங்க. நம்ம தோற்றம் பார்க்க, கம்பீரமா, மதிக்கத் தோன்றும் விதத்தில் இருக்கணும். தேச்சு வச்ச குத்து விளக்கு மாதிரி.''

சந்தியா அவளுக்கு புடவைகள் கலர், கட்டும் முறை கற்றுக் கொடுத்தாள். அளவு எடுத்து ஜாக்கெட் தைக்க ஆர்டர் எடுத்தாள். லூசாக, லொட, லொட என்று இருந்த அவளின் ஜாக்கெட் அளவை மாற்றினாள். நல்ல காட்டன் சுடிதார் எடுத்துக் கொடுத்து, ''இதைப் போடுங்க, நல்லா இருக்கும்'' என்று கொடுத்தாள்.

பார்லரை விட்டு வெளியில் வரும்போது தன்னைப் புதிதாக உணர்ந்தாள் பவானி. சென்னை அருகே கிராமம். அம்மாவின் வருமானத்தில் அவள் பெரிய படிப்புகள் படிக்க முடியாது என்றுதான் ஹோம் சயின்ஸ் சேர்ந்தாள். அதுவும் ஹாஸ்டல் என்பதால், ரொம்பச் சிக்கனமாக இருந்தாள்.

தன்னை அழகு படுத்திக் கொள்வது, நல்ல உடைகள் என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியவில்லை. வருஷம் ஒரு தடவை தீபாவளி சமயத்தில் இரண்டு செட் உடை கிடைக்கும். அதை பத்திரமாக வைத்திருந்து கல்லூரி வரும்போது அஞ்சு செட் உடை மட்டுமே வைத்திருந்தாள்.

இங்கு வேலை கிடைத்து வந்து முதல் மாச வருமானத்தில் அம்மாவுக்கு குலதெய்வத்துக்கு புடவை வாங்கித் தந்தாள். இனிதான் தனக்குப்புடவை, துணிகள் வாங்க வேண்டும். அதற்கு முன் அம்மாவின் உழைப்பை நிறுத்த வேண்டும். இங்கு கூட்டி வர வேண்டும்.

அந்த எண்ணம் தோன்றியதும் மனது சிறிது சங்கடப் பட்டது.

''அம்மா இங்கு வருவாளா?

''அப்பாவைப் பார்க்க அவள் விரும்பவில்லை. ஆனால் அவரைச் சந்திக்க வேண்டும். அவர் முன் தான் கம்பீரமாக நிமிர்ந்து நிற்க வேண்டும் என்ற ஆசையும் அவளிடம் உள்ளது.

என்ன நடக்கும்?. தெரியவில்லை.

''எதையும் திட்டம் போடாதே. அக்செப்ட் இட், ஆஸ் இட் ஈஸ்''- யாரோ தெருவில் பேசியபடி போனார்கள். அவளுக்குள் புன்னகை விரிந்தது.

மெதுவாக பேருந்து நிறுத்தம் நோக்கி நடந்தாள்.

''ஹலோ, கிளியோபாட்ரா''- இளங்கோ சர்ரென்று வண்டியைக் கொண்டு வந்து நிறுத்தினான்.

''அழகு நிலையத்தில் அத்தனை அழுக்கையும் நீக்கியாச்சா?''

''இன்னும் கொஞ்சம் பாக்கி. அடுத்த வாரம் வரேன்.''

''சந்தியா, பார்லரை மூடிட்டுப் போகப் போறா.''

''போனா என் கேண்டீன்ல வேலை போட்டுத் தரேன்.''

''கெத்து! ம்ம்.''

''சரி என்ன விஷயம்?''

''பாவம் அழகி நடந்து போறியே, ஒரு வண்டி வாங்கித் தரலாமேன்னு பார்த்தேன்.''

''அட, நீ காசு போட்டு வாங்கித் தரியா?''

''உலக வங்கில கடன் கேட்டிருக்கேன். கிடைச்சதும் வாங்கித் தரேன். நல்ல கார். இப்போ ஒரு டூ வீலர். வண்டில உட்காரு.''

''எங்க போகணும்?''

''பாம்பே சேட்டுகிட்ட உன்னை விலை பேசியிருக்கேன். கொண்டுபோய் வித்துட்டு வரப் போறேன்.''

''ஏண்டா, துபாய் ஷேக் யாரும் கிடைக்கலையா? அவங்க வீட்டுல எல்லாமே தங்கமா இருக்குமே?'

''உன்னையும் தங்கமா மாத்திருவாங்க. கொஞ்சமாச்சும் மனுஷியா இரு.''

இளங்கோ அவளை அழைத்துக் கொண்டு ஒரு டூவீலர் ஷோரூமுக்கு வந்தான். ஏற்கனவே சொல்லி வைத்திருந்ததில் வண்டி இருந்தது. அந்த ஷோரூம் ஓனருக்கு இவனின் வங்கி கடன் கொடுத்திருந்ததால், நல்ல மரியாதை.

அப்போதே வண்டியை வாங்கி, அவளுக்கு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்து கொடுத்தான்.

''கரெக்டா கட்டிடும்மா.''- இளங்கோ.

''கடன் வாங்கி கட்டாம போற கோடீஸ்வரனை எல்லாம் விட்டுருவீங்க. நாங்கதான் ஏமாளிங்க.''

''ரைட்டு. வண்டியை உனக்கு நான் அன்பளிப்பா தரேன்.''

''வேண்டாமப்பா. அப்புறம் வண்டி வழில நின்னுடும். நான் கட்டிடறேன். நன்றி, நன்றி கோடானுகோடி நன்றி.''

பவானி உண்மையில் அவனுக்கு மனப்பூர்வமாக நன்றி சொன்னாள். கைலாசம் தன் வண்டியை யூஸ் செய் என்றாலும் அவள் மனம் ஒப்பவில்லை. வண்டி இருந்தால் பலவிதத்தில் அவளுக்கு நல்லது.

இளங்கோ தானே வந்து உதவியதில் அவளுக்கு மகிழ்ச்சி.

அவனும், அவளும் பள்ளி இறுதி வகுப்பு வரை ஒன்றாகப் படித்தவர்கள். அந்த நட்பு ஆழமாக இருந்தது. அவன்தான் கோவையில் பவானி படித்தபோது, அவளுக்கு ஆதரவாக இருந்தான். டிகிரி முடிக்கும் போதே, வங்கித் தேர்வு எழுதி செலக்ட ஆகி, கோவையிலேயே பணியிடம் அமைந்தது.

பவானி படிப்பு முடிந்து சிறிது மாதங்கள் சென்னையில் ஒரு நட்சத்திர ஹோட்டலில் பணி புரிந்தாள். அதன் பின் ராமநாதனுடன் கேண்டீன் ஒப்பந்தம் கிடைத்து வந்த போது தான், இளங்கோவின் அன்புக் கரங்கள் அறிமுகம் கிடைத்தது.

''நன்றி இளங்கோ.''

''சேர்த்து வை. நாளைக்கு வாங்கிக்கறேன்.''

''இப்போ எங்கே போறே?''

''அய்யாவுக்கு கல்யாண நிச்சயம்''

''அடப்பாவமே? யார் அந்தப் பொண்ணு.''

''பொண்ணு வீடு இங்க சூலூர். டிகிரி முடிச்சுட்டு ஒரு டெக்ஸ்டைல் மில்லில் வேலை பார்க்கறா. அவங்களுக்கு என்னைப் புடிச்சது. நான் போய் பார்த்துட்டு ஓகே. சொல்லணும்.''

''ஓகே சொல்லிடு இளங்கோ. அந்தப் பெண்ணின் மனதில் இப்போ நிறையக் கற்பனைகள் வளர்ந்திருக்கும். அதை கருக்கிடக் கூடாது.''

''எஸ்''- இளங்கோ குரலில் ஒரு தீர்மானம் இருந்தது.

''ஒரு பொண்ணைத்தான் பாக்கணும். அவளையே கல்யாணம் செஞ்சுக்கணும்னு நினைக்கிறேன். அதனால நான் சம்மதம்



# மனித பல், உதடுடன் வித்தியாசமான மீன்!

மலேசியாவில் ஒரு வித்தியாசமான மீன் கண்டறியப்பட்டுள்ளது. ''டிரிகர்' என்ற அந்த மீன் மனித உதட்டையும், பல்லையும் அச்சு அசலாக கொண்டுள்ளது.

இந்த மீனின் வாயை மட்டும் பார்க்கும் போது மனித உறுப்பாகவே தோன்றுகிறது. தற்போது இது



சமூக வலைதளங்களில் வைரலாகி உள்ளது.

பலரும் இந்த மீனின் போட்டோவையும், தங்களின் உதட்டு குளோஸ் அப் போட்டோவையும் இணைத்து பகிர்ந்து வருகின்றனர். அதுமட்டுமின்றி மீனின் உதட்டுக்கு லிப்ஸ்டிக் போட்டுவிட்டும் அழகு பார்க்கின்றனர். இந்த டிரிகர் மீன்கள் 40 வெவ்வேறு வகைகளில் இருக்கின்றன. பெரும்பாலும் ஓவல் வடிவத்தில் இருக்கும் டிரிகர் மீன்கள் அனைத்திற்கும் உதடும், பல்லும் மட்டும் மனிதனைப் போலவே இருக்கிறது.

– தொகுப்பு: கோட்டாறு ஆ.கோலப்பன்., நாகர்கோவில்.

சொல்லிட்டேன். இன்னைக்குப் போய் பொண்ணைப் பார்த்துட்டு, தாம்பூலம் மாத்தறோம்''

''அப்போ சீக்கிரம் கல்யாணச் சாப்பாடு உண்டு.''

''நீதான் சமையல் அம்மணி.''

''கலக்கிடுவோம்.

''சரி, இப்போ அடுத்த இடத்துக்குப் போவோமா?''

''எங்கே?'' வியப்புடன் கேட்டாள்.

''பவானி, சமூகத்துல கலந்து பழக, மொழி அவசியம். நம் தாய்மொழி நமக்கு இயல்பா வந்துடும். அதைத் தாண்டி மற்றொரு மொழி பேசவும், எழுதவும் தெரியணும். ஆங்கிலம் உலக மொழி. அதனால் உன்னை ஸ்போக்கன் லாங்வேஜ் கிளாஸ்ல சேர்த்து விடறேன். அப்படியே ஹிந்தி, படி. நாலைஞ்சு மொழி தெரிஞ்சுக்கறதுல தப்பு இல்லை..''

''உண்மையில் நீ என் நண்பனா கிடைச்சது என் அதிர்ஷ்டம் இளங்கோ. ஒவ்வொன்னையும் யோசிச்சு, செய்யறே.''

நெகிழ்வுடன் கூறினாள் பவானி.

''பவானி நீ என் தோழி. நட்பில் ஆண் பெண் பேதம் இல்லை. உன் கஷ்டங்களைக் கூட இருந்து பார்த்தவன் நான். நீ ஒரு நல்ல நிலைக்கு வரணும். ஒரு நண்பனா என் கடமை அது. அவ்வளவுதான். வா.''

இளங்கோ அவளை அழைத்துச் சென்று தன் நண்பனின் வகுப்பில் சேர்த்தான். அங்கேயே கணினிப் பயிற்சியும் இருந்தது. அதுவும் கத்துக்கோ என்றது சரியாகத்தான் தோன்றியது.

பவானி பறக்க ஆரம்பித்தாள். வெற்றிக் கோடி விரிய ஆரம்பித்தது.




**''பொன்னான மனம் ஒன்று வைத்தாய் கண்ணா,**
**அதில் பூப்போன்ற நினைவொன்று வைத்தாய் கண்ணா,**
**கண் பார்க்க முடியாமல் வைத்தாய் கண்ணா,- எந்தக்**
**கடன் தீர்க்க என்னை நீ படைத்தாய் கண்ணா?''**

சன்னக் குரலில் பாடியபடி வீட்டை துடைத்துக் கொண்டிருந்தாள் பவானி.

கீழே அமர்ந்து, இரண்டு பாத்திரத்தில் தண்ணீர் வைத்து, பளிச்சென்று துடைத்தாள். சுவரோரம் இருந்த அழுக்கை எல்லாம் எடுத்த தில் வீடு அழகாய், சூரிய வெளிச்சத்தில் மின்னியது.

ஹாலின் இரண்டு புறமும் பெரிய ஜன்னல். ஒரு பெட்ரூம். கிச்சன் என்று அடக்கமாக இருந்தது. கிழக்கு பார்த்த வாசல் என்பதால் சூரிய வெளிச்சம் பிரகாசமாக வீடு முழுவதும் இருந்தது.

வீட்டில் சூரிய வெளிச்சம் இருந்தாலே எந்த வாஸ்து குறைபாடும் இருக்காது என்பார் பவானியின் பாட்டி. கைலாசத்தின் அம்மாதான் பவானியின் பாட்டி. கைலாசம், மங்களாவுடன் வாழ மாட்டேன் என்றதுமே, அவரை உதறி விட்டு, மங்களாவுடன் சென்னை வந்து விட்டாள்.

''உனக்குப் பையனைப் பார்க்க வேணும்னு ஆசை இல்லையா பாட்டி?''

''ஒரு அயோக்கியனைப் பார்க்க எனக்கு என்ன ஆசை?''

''உன் புருஷனைப் பார்க்கணும்னு உனக்கு ஆசை இல்லையா?''- அம்மாவிடம் கேட்டாள்.

''ஆசையை விடத் தன்மானம் பெரியது.''- அம்மாவிடமிருந்து உடனே பதில் வந்தது. பவானிக்கும் அந்த ஆசை இல்லை. ஆனால் ராமனாதன்தான், ''நீ வளர்ந்துட்டே பவானி. நாளைக்கு உன் கல்யாணம், கார்த்திகைன்னு வரும்போது அப்பா, எங்கேன்னு கேள்வி வரும். அழகை விட, நல்ல குணம், பண்புகள் தான் முக்கியம்னு உங்கப்பா உணரணும்'' என்றார்.

ஆனால் இன்னும் கைலாசம் மைனர் மாதிரிதான் இருந்தார்.

பளபளவென்று சட்டை, சென்ட், மைனர் செயின், டை பூசிய முடி, கையில் பிரேஸ்லெட், விஜயத்திடம் இன்னும் கொஞ்சலும், சிரிப்புமாய் குழந்தைகள் முன்பே அவளைக் கொஞ்சுவார்.

ஒருவேளை அதனால்தான் மஞ்சு பாதை தவறுகிறாளோ என்று நினைத்தாள் பவானி. வயசு வந்த பெண் குழந்தைகள் இருக்கும் வீட்டில் எதுவுமே இலைமறை வாக இருக்க வேண்டும் என்று சொல்வார் பாட்டி.

ஷோக் பேர்வழியாக இருக்கும் கைலா சத்திடம், இன்னும் பொறுப்பு என்பது வரவில்லை. மஞ்சுவின் வாழ்க்கை நிலை என்ன என்று யோசித்தபடி தரையைத் துடைத்துக் கொண்டிருந்தாள்.

வீடு அழகாக சுத்தமாக இருந்தாலே மன தும் உற்சாகமாகி விடும். அனாவசிய சாமான்கள், படங்கள் எதுவும் இருக்காது பவானி வீட்டில். வாசலுக்கு நேர் எதிரில் பெரிய பிள்ளையார் சிலை. அதன்முன் பூக்கள் நிரம்பிய கிண்ணம். அதுதான் அவளின் பூஜையறையும்.

''உருவப் படம்கிறது நம் மனத் திருப்திக் காக. மனசில் ஒரு ஒளி ரூபத்தை நினைச் சிண்டு ஆழ்ந்து பிரேயர் செய். அதுவே போதும். பிரேயர் மூலம் நீ கடவுள்கிட்டப் போவே. அதே ஏழைகளுக்குச் சேவை செய். கடவுள் உன்கிட்ட வருவார்.''

பாட்டி அடிக்கடி சொல்லும் வார்த்தை கள். அதையே மனதில் வைத்து நடப்பாள் பவானி. வீட்டில் அதிகம் படங்கள், சாமான்கள் இருக்காது. எளிமையான வாழ்க்கை பவானியுடையது..

''எளிமைதான் அழகு''- என்பாள் அடிக்கடி.

அதனாலேயே பவானியை விஜயத்துக்கு மிகவும் பிடித்தது. அத்துடன், காலையில் தனக்குச் செய்யும் சமையலில் குழம்போ, கூட்டோ அவளுக்கும் தந்து விடுவாள்.

''சார், கேண்டீன்ல சாப்பிடுவார். குமரேஷும் ஆபீஸ் கேண்டீன். மஞ்சுவுக்கு கட்டுச்சாதம். உங்களுக்குன்னு நீங்க தனியாச் செய்யணும். அதனால் எனக்குச் செய்யறதுல, உங்களுக்கு ஒரு கைப்பிடி.''

வாய்க்கு ருசியாக, செலவில்லாமல் வரும் உணவுப் பண்டங்கள். வேலை இல்லை. விஜயம் உற்சாகமாகி விட்டாள்.

''நல்ல பொண்ணு. வீட்டை வேற சுத்தமா, அழகா வச்சிக்கறா. எனக்கு இவளை ரொம்பப் பிடிச்சிருக்கு.''

விஜயம் வாய் திறந்து சொல்லி விட்டாள். ஆனால் கைலாசம் மனதுக்குள்ளேயே வைத்துக் கொண்டு, ஒரு சந்தேகத்துடன் அவளைக் கவனித்தார். ஒரு சாயலில், பவானி அவர் அம்மாவை அடையாளப் படுத்தினாள்.

அவளின் ஒவ்வொரு செயலும் அம்மாவை ஞாபகப் படுத்தியது.

இப்போதும் பவானி துடைத்து முடித்து, ரூம் ஸ்பிரேயர் அடித்தாள். ஜவ்வாது பொடியைக் கரைத்து, ஜன்னல் திரைச் சேலைகளில் தடவ வீடு கமகமவென்று மணந்தது.

''ஜோரா இருக்கும்மா வீடு''- கைலாசம் உள்ளே வந்தார்.

''வாங்க சார்.''- பவானி வரவேற்றாள். அவர் பின்னாடியே வந்த இளைஞனைப் பார்த்ததும், கேள்வியோடு அவரை ஏறிட்டாள்.

''இவன் குமரேஷ். ராமநாதன் பையன்.''

''ஓ!''- பவானிக்குப் புரிந்தது. தன்னிடம் எதோ பேச வேண்டும் என்று வந்திருக்கிறான். அவள் புன்னகையுடன் அவனை உள்ளே வரவேற்றாள்.

குமரேஷ் உள்ளே வந்து இழுத்துப் போட்ட சேரில் அமர்ந்தான். பார்வை வீட்டைச் சுற்றி வந்தது.

''நல்லா வச்சிருக்கீங்க வீட்டை''

''நன்றி சார்.''

''சூரிய வெளிச்சம், நறுமணம் இருந்தாலே வீடு அழகா இருக்கும்.''

''வீடுங்கறது நம் மனசை பிரதிபலிக்கற இடம் சார் நம் மன உணர்வுகள்தான் வீட்டில் எதிரொலிக்கும். இதை அது, அதை இது.''

''குமரேஷ் உன்கூடப் பேசணும்னு சொன்னார்.''- கைலாசம் எழுந்தார். ''நீங்க பேசுங்க. நான் வெளியில் இருக்கேன்.''

''அங்கிள் நீங்களும் இருங்க.''- குமரேஷ் அவரைத் தடுத்தான்.

''முதலில் ஒரு காபி கலக்கறேன். குடிச்சிண்டே பேசலாம்.''

பவானி காபி கலந்து கொண்டு வந்தாள். ''சொல்லுங்க'' என்றாள்.

குமரேஷ் நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

''பவானி, அப்பா உன்ன எனக்குக் கட்டி வைக்கனும்னு ஆசைப்படறார். ஆனா நீயே சொல்லு. நீ எனக்குப் பொருத்தமா?''

குமரேஷ் மாநிறம் என்றாலும் ரொம்பப் பேஷனாக இருந்தான். சுருள் கிராப். வழ,வழவென்று முகம். அடர்த்தியான மீசை. நடுத்தர உயரம். பூசின மாதிரி தேகம். குண்டு கண்கள். விரல் நகங்கள் எல்லாம் செந்நிறம் ஓடியது. ஆரோக்கியமான உடல் என்று தோன்றியது. சிவப்பு விஜயகாந்த் என்று நினைத்துக் கொண்டாள்.

அவனுக்குத் தான் பொருத்தமில்லை என்று நினைத்தாள்.

அவளின் மௌனம் அவனுக்குப் புரிய வைத்தது.

''புரியுதா? என் மனைவி இப்படி இருக்கனும்னு எனக்குக் கற்பனை இருக்கும். அதை நான் அவருக்காக விட்டுத் தர முடியாது. உங்க தகுதி என்னன்னு தெரிஞ்சுண்டு ஆசைப் படணும்.''

அவள் பேச்சு சுரீறென்றது.

''லுக் மிஸ்டர் குமரேஷ். என் தகுதி என்னன்னு எனக்குத் தெரியும். நீங்க சொல்லணும்னு அவசியம் இல்லை. உங்களுக்குப் பிடிக்கலைன்னா, உங்க அப்பாகிட்ட நீங்க சொல்லுங்க அதுக்குப் பதில் இங்க வந்து என்னை கீழ்த்தரமா பேச வேண்டாம். உங்களை மாதிரி திமிர் பேச்சு பேசறவங்களை கல்யாணம் செஞ்சுக்க நான் விரும்பலை.''

அவள் பேச்சில் குமரேஷ் முகம் சுருங்கியது.

''அழகு, அழகுன்னு சொல்றீங்களே, ஏன் உங்கம்மா அழகா இருந்தாத்தான் அம்மான்னு கூப்பிடுவீங்களா?''

''- - - - - - - - - - -''

''நான் அழகா, இல்லையாங்கறது என் கவலை. நீங்க அதைச் சொல்ல வேணும்கிற அவசியம் இல்லை. ஒரு வயசு வரைக்கும்தான் சார் அழகு. அன்பான இல்லறத்துல, வயசுக் காலத்துல நம் துணை இருக்காங்கற உணர்வுதான் சந்தோஷம்.. அதை இந்த அழகு தராது.''

''நான் சொல்ல வந்தது வேற.''

''என்ன சொல்ல வந்தீங்கன்னு எனக்குப் புரியுது. இந்தக் கல்யாணத்துல எனக்கு இஷ்டம் இல்லைன்னு சொல்லணும். அதானே.''

குமரேஷ் தலை குனிந்தான். அவன் மனதைப் பவானி படித்தது அவமானமாக இருந்தது. ஆனாலும் அவன் விரும்பியது நடந்தால் போதும்.

''கவலைப் படாமல் போங்க. உங்களை மாதிரி பிறர் உணர்வுகளை மதிக்காம பேசறவங்களுக்கு நான் மதிப்பு கொடுக்கறதில்லை. உங்களைக் கல்யாணம் செஞ்சுக்க எனக்கு இஷ்டமில்லைன்னு உங்கப்பாகிட்டச் சொல்லிடறேன். ஆனா நீங்க இந்த மாதிரி பேசினதலதான் நான் இந்த முடிவு எடுத்தேன்னு சொல்வேன்.''

''இ..இ.ல்லை. அப்படி வேண்டாம்.''

''மன்னிக்கவும். தப்போ, சரியோ, எதிலும் உண்மையைப் பேசிடறது நல்லது. போய்ட்டு வாங்க.''- பவானி கை கூப்பினாள். அடி பட்ட குமரேஷ் சீறி நிமிர கைலாசம் அவனைத் தட்டிக் கொடுத்தார்.

''அழகும் இல்லை. திமிர் வேற. உனக்கு எப்படிக் கல்யாணம் ஆகும்னு பாக்கறேன்.''

''மனசை விரும்பறவங்க இருப்பாங்க. அது என் கவலை சார். உங்க வாழ்க்கையை நீங்க

பாருங்க''

அவளின் சீற்றத்தில் அடங்கி குமரேஷ் வெளியேற, கைலாசம் தயங்கி நின்றார்.

''நீங்க என்ன சார் சொல்லணும்?''

''கோபப் படாம பேசி இருக்கலாம்.''

''இது கோபம் இல்லை சார். தன்மானம்.''

''நாளைக்கே, எது வேணாலும் மாறலாம்மா.''

''எது மாறினாலும் என்னை அவமானப் படுத்த அவருக்கு உரிமை இல்லியே சார். அவருக்குப் பிடிக்கலைன்னா, அவங்க அப்பா கிட்ட அவர் சொல்லணும். இங்க வந்து என் முகத்துக்கு நேரா நீ அசிங்கமா இருக்கேன்னு சொல்ற ஒரு திமிர் பிடிச்சவனுக்கு நான் மரியாதை தரணும்னு அவசியம் இல்லை.''

பவானி அமைதியாகப் பேசினாலும், அழுத்தமாக இருந்தது குரல்.

''நான் அழகு, அழகு இல்லைங்கறது முக்கியமில்லை. யாரையும் நோகடிக்காமல், மனித நேயத்துடன், நல்ல குணம், பண்புகளுடன் இருக்கேனா என்பதுதான் முக்கியம். அதுல நான் உலக அழகி.''

''கைலாசத்தை அவளின் ஒவ்வொரு வார்த்தைகளும் சம்மட்டியாக அடித்தது. அவரின் கடந்த கால வாழ்க்கையை நினைவு படுத்தியது அவளின் பேச்சு.

எந்தப் பக்கமும் சார்பாகப் பேச தனக்கு அருகதை இல்லை என்று உணர்திருந்தார்.

''சரிம்மா.நான் கிளம்பறேன்.''

''சரி சார். நான் பேசினதைத் தப்பா நினைக்காதீங்க.''

''இல்லை பவானி. அவன் பேசினது தப்பு. நான் ராமநாதன் கிட்டப் பேசறேன்.''

''நன்றி சார்''

''ஆனா உனக்கும் வயசாகுது. கல்யாணம் செய்யணும்ல?''

''செஞ்சுக்கலாம் சார்.எனக்குன்னு ஒருத்தர் கண்டிப்பா பிறந்திருப்பார். மஞ்சுவுக்குச் செஞ்சுடுங்க''

''இப்பத்தானே காலேஜ் படிக்கிறா. முடிக்கட்டும்.''

''ஆனா, காலம் ரொம்பக் கெட்டுக் கிடக்கு சார்.''

''மஞ்சு அப்படி எல்லாம் பொறவா இல்லை பவானி''

''நல்லது சார்.''- பவானிக்குள் மஞ்சுவும் சரணும் வந்து போனார்கள்.

நிச்சயம் மஞ்சு ஏதானும் விபரீதம் செய்வாள் என்று நினைத்தாள் பவானி. தெரிந்தே நெருப்புக் குழிக்குள் போய் விழுகிறாள். அந்தச் சரணின் கண்ணும், சிரிப்பும் சரியில்லை என்று தெரிந்தது பவானிக்கு. மௌனமாக நின்றாள்.

''அவளுக்கும் மாப்பிள்ளை பார்த்திருக்கோம். அவங்க வந்து பார்த்துட்டுப் போயிருக்காங்க.. இந்த மே மாதம் அவளுடைய தேர்வுகள் முடிந்ததும் கல்யாணம் செஞ்சிடலாம்னு பேசி முடிவு செஞ்சிருக்கோம்.''

''ரொம்ப நல்ல விஷயம் சார். ஆனா அது வரைக்கும் மஞ்சுவை பத்திரமா பாத்துக்குங்க.''

''என்ன விஷயம் பவானி?''

''ஒன்னும் இல்லை சார் பொதுவா சொல்றேன். கல்யாணம் நிச்சயம் ஆனா பெண்கள் ஜாக்கிரதையா இருக்கணும்னு சொல்வாங்க.''

''அதெல்லாம் நான் பாத்துக்கறேன்''- என்றார் கைலாசம்.

ஆனால் நிச்சயத்தன்று மஞ்சு காணாமல் போனாள்.




**வா**ழ்க்கையில் எந்த நேரம் எது நடக்கிறது என்று தெரியாது.

ஆனால் காலம் மிகச் சிறப்பாகத் தன் வேலையைச் செய்கிறது. நடக்க வேண்டிய நேரத்தில் அது செய்ய வேண்டியதைச் செய்து விடும் என்பார் பாட்டி.

''ஒரு பெண்ணோட மனசைப் புன்படுத்திட்டு, அவ வாழ்க்கையை நாசம் செஞ்சுட்டு யாராலும் நிம்மதியா வாழ முடியாது. அவனுக்கும் ஒரு பெண் இருக்கே.''

பாட்டி கண்ணீரோடு கதறினாள்.

அவளின் கதறல் இன்னும் காதுகளில் ஒலிக்கிறது.

ஆனால் மங்களா, ஆத்திரமோ, கோபமோ கொள்ளவில்லை.

அவருக்கு சாபம் தருவதன் மூலம் நடந்த எதுவும் இல்லைன்னு ஆகிடாது. ஒருத்தர் செஞ்ச தப்புக்கு அவர் குழந்தைகள் என்ன செய்யும்?'' என்பாள்.

ராமநாதனுடன் பவானி கிளம்பும்போது

கூட, ''பவானி நீ அங்க போய் அவருக்கு உதவியா இருக்கணுமே தவிர, அந்தக் குடும்பத்துக்கு எந்தக் கெடுதலும் செய்யக் கூடாது.'' என்றுதான் கூறினாள்.

''ஏம்மா? அவர் உனக்கு செஞ்ச துரோகம் மறந்து போச்சா?''

''ஒரேலாஜிக். அவர் என்னை வெறுக்கலாம். ஆனா நான் வெறுக்கலையே. விரும்பிதான் உன்னையும் பெத்துண்டேன்''

''எத்தனை மாசம்மா நீ அவர்கூட வாழ்ந்தே?''

''நாள்னு கேளு. இருபத்தி மூணு நாள்.''

''கண்ணீர் மல்க அம்மாவைக் கட்டிக் கொண்டாள் பவானி.

''பவானி வாழ்க்கையில் எப்பவும் நல்லது செய்யற முதல் ஆளா நாமதான் இருக்கணும். அதை மட்டும் மனசில் வச்சுக்கோ.'' என்று சொல்லி அனுப்பினாள்.

வந்த நாள் முதல் கைலாசத்தின் குடும்பத்துக்கு உதவியாகத்தான் இருக்கிறாள் பவானி. மஞ்சுவைப் பார்த்த விஷயத்தைக் கூட வீட்டில் சொல்லாமல் தானே கண்டித்தாள். என்றாலும் இந்த அளவுக்கு நடக்கும் என்று நினைக்கவில்லை.

ஒரு ஞாயிறு அன்றுதான் நிச்சயம் நடந்தது.

மாப்பிள்ளைப் பையன் ஐடி யில் வேலை. சென்னை என்பதால் முதல் நாளே வந்து விட்டார்கள். கணபதியில் அவர்களின் சொந்தங்கள் இருந்தது. நேற்று அங்கு வந்து தங்கி, மஞ்சுவை அழைத்துக் கொண்டு போய் நிச்சயத்துக்கு நகை வாங்கினார்கள்.

காலையில் டிபன் இங்கு. பத்து மணிக்கு நிச்சயம் என்று முடிவாகி இருந்தது. எட்டு மணிக்கே கிளம்பி பார்லருக்குப் போன மஞ்சு பத்துமணி வரை வரவில்லை. டிபன், மதியம் லஞ்ச் எல்லாமே பவானிதான்.

ஒன்பதரை மணி அளவில் கைலாசம் வேகமாக மாடி ஏறி ஓடி வந்தார். மூச்சு இறைத்தது.

''என்ன சார்?''

''பவானி பியூட்டி பார்லருக்குப் போன மஞ்சு இன்னும் வரவில்லை.''

''வந்துருவா சார். பத்து மணிக்குத்தானே நிச்சயம்.

''என்னம்மா நீ? மணி பத்தாகப் போகுது.'

''ஒரு அஞ்சு நிமிஷம் பார்க்கலாம் சார். இல்லைன்னா சுரேஷைப் போய்ப் பார்த்துட்டு வரச் சொல்லலாம்.''

''எனக்கென்னவோ பயமா இருக்கு.''

கைலாசத்தின் முகம் பீதியைக் காட்டியது. ஏற்கனவே இரத்த அழுத்தம், சுகர் எல்லாமே உண்டு. இப்போது டென்ஷன் சேர முகம் பூராவும் வியர்த்திருந்தது.

''நீங்க முதல்ல உட்காருங்க.''- பவானி அவரை அமர வைத்தாள். சூடாக ரசம் தந்து



# 18 வினாடியில் 2 லிட்டர் சோடா குடித்து அமெரிக்கர் புதிய உலக சாதனை!

அமெரிக்காவை சேர்ந்த சாப்பாட்டு போட்டியாளரான ஒருவர் மிக குறைவான நேரத்தில் இரண்டு லிட்டர் சோடாவை குடித்து நம்பமுடியாத புதிய கின்னஸ் சாதனையை படைத்துள்ளார். எரிக் ''பேட்லேண்ட்ஸ்'' புக்கர் என்றழைக்கப்படும் அமெரிக்க நபர் தான் இந்த சாதனையை புரிந்துள்ளார். குளிர்பானங்கள் மீது தான் வைத்துள்ள ஈர்ப்பை 'கின்னஸ் உலக சாதனை' என்ற உச்ச நிலைக்கு கொண்டு சென்றுள்ள நியூயார்க்கை சேர்ந்த எரிக் புக்கர் என்ற இந்த மனிதர், வெறும் 18 வினாடிகளில் 2 லிட்டர் பாட்டில் சோடாவை குடித்து சாதனை படைத்துள்ளார். எரிக் 'பேட்லேண்ட்ஸ்' புக்கர் என்ற அந்த நபர் பானங்களை அதிவிரைவாக குடித்து முடிக்கும் தனது திறன்களை வீடியோ எடுத்து தனது பிரபல யூடியூப் பக்கத்தில் அப்லோட் செய்தார். பின்னர் கின்னஸ் உலக சாதனையின் அதிகாரப்பூர்வ யூடியூப் சேனலில் இந்த வீடியோ ஷேர் செய்யப்பட்டது.

யூடியூப் சேனலை நடத்தி வரும் எரிக், ரேப் பாடகராகவும் இருக்கிறார். தனது யூடியூப்



சேனலில் பாட்டு பாடி அதை வீடியோ எடுத்து போடுவது, செல்லும் இடங்கள் பற்றி மற்றும் தனது அதீத சாப்பாட்டு திறன் பற்றி ரசிகர்களுக்கு எடுத்துக்காட்டும் விதமாக அவ்வப்போது வீடியோ போடுவது என பன்முக திறமை கொண்டவராக இருந்து வருகிறார்.



குடிக்கச் சொன்னாள். சுரேஷை அழைத்து பார்லருக்குப் போய் மஞ்சுவை பார்த்து விட்டு வரச் சொன்னாள்.

போன வேகத்தில் திரும்பி வந்தான் சுரேஷ்.

''இன்னைக்கு பார்லர் லீவாம்.''

''கடவுளே, அப்போ மஞ்சு?''- அலறினாள் விஜயம்.

''அம்மா கொஞ்சம் அமைதியா இருங்க. வேற ஏதானும் பார்லருக்குப் போயிருக்கலாம்.''

''போன் செய்து பார்க்கலாமா?''

''போன் மணி அடித்துக் கொண்டே இருந்தது. பவானிக்குள் லேசாக ஒரு பயம் எழுந்தது.

''சார், கல்யாணத்துல மஞ்சுவுக்கு விருப்பம்தானே?''

மெதுவாகக் கேட்டதும் துடித்து எழுந்து பவானியை முறைத்தார்.

''என்ன இப்படிச் சொல்றே பவானி. என் பொண்ணு என் பேச்சை மீறியதில்லை. எப்படிப் பட்ட மாப்பிள்ளை தெரியுமா? ஒரே பையன், ஐடி கம்பெனில வேலை. சென்னையில் சொந்த வீடு இருக்கு. இன்னும் ஒரு மாசத்துல அமெரிக்கா போகப் போறான்.''

பெருமையாகப் பேசிய கைலாசத்தை வேதனையுடன் பார்த்தாள் பவானி.

''உங்களுக்குத்தானே பிடிச்சிருக்கு.''

''என்னம்மா சொல்றே?''

''பொதுவா, பெற்றவர்கள் பார்க்கிற வாழ்க்கைத் துணை அவர்களுக்குப் பிடிக்கறதில்லை. அப்பா அம்மாவுக்காக கல்யாணம் செஞ்சுண்ட பின்னர், கட்டிய மனைவியை விட்டுட்டு ஓடிப் போற எத்தனையோ பேரைப் பாக்கிறோமே.''

சுரீலென்று உறுத்த, கைலாசத்தின் முகம் சூம்பியது.

இவள் ஏதானும் உள்ளொன்று வைத்துப் பேசுகிறாளோ என்று அவளை உற்றுப் பார்த்தார்.

''சரி சார், இது யோசிக்கற நேரம் இல்லை. மஞ்சுவோட ரூமைப் பாருங்க, அவ தோழிகளுக்கு போன் செஞ்சு பாக்கலாம்''- பவானி

கைலாசம் அதிர்ந்து போயிருந்தார்.

மாப்பிள்ளை வீடு காத்திருந்து கசகச வென்று பேசியபடி களைந்து போனது.

''பொண்ணுகிட்ட இந்தக் கல்யாணத்துல இஷ்டமான்னு கேட்டுட்டு அப்புறம் நிச்சயத்துக்கு ஏற்பாடு செஞ்சிருக்கணும். இப்போ எங்களுக்கு அவமானம் பாருங்க.''- மாப்பிள்ளையின் அம்மா.

''அம்மா அவ எங்க போனான்னு தெரியாம பேசாதீங்க''- விஜயம்.

''நாங்களே பொண்ணைக் காணோமேன்னு

கலங்கிப் போயிருக்கோம். நீங்க வேற எங்க வேதனையைக் கிளறாதீங்க.'' பேசப் பேச விஜயம் அழுதாள்.

இன்னமும் மஞ்சு காதலிக்கிறாள் என்ற விஷயம் அவர்களுக்குத் தெரியவில்லை. அவளுக்கு என்னவோ ஆபத்து என்றுதான் கலங்கிப் போயிருந்தார்கள்.

''போலீஸ்ல சொல்லிடலாம்''- கைலாசத்தின் நண்பர்.

''நல்லா தேடித் பார்க்கலாம்.''- ராமநாதன். '' அவளுடைய தோழிகள் வீட்டில் இன்னும் தீர விசாரிக்கலாம்.''

பவானிக்கு உறுதியாகத் தெரிந்தது. மஞ்சு அவள் காதலன் சரணுடன் போயிருப்பாள் என்று புரிந்தது. சரணுக்கு இந்த மாப்பிள்ளை அளவுக்கு வசதி இல்லை. எனவே கைலாசம் சம்மதிக்க மாட்டார் என்று திட்டம் போட்டு போயிருப்பாள்.

ஆனால் எங்கே போயிருப்பாள்? சரண் எப்படிப் பட்டவன் என்று தெரியவில்லையே?- குழப்பமாக இருந்தது.

இந்த நேரத்தில் சரணைப் பற்றிச் சொன்னால் இவர்கள் நம்ப மாட்டார்கள். இவர்களைப் பொறுத்தவரை, மஞ்சு உத்தமமான பெண். ஆனால் இந்த வீடு படும் அவஸ்தை, வேதனையைப் பார்க்கையில் சொல்லிவிடலாமா என்று தோன்றியது.

பவானி மெதுவாக ராமநாதனை தனியே அழைத்துச் சென்று தான் பார்த்த காட்சியை அவரிடம் சொல்ல அதிர்ந்து போனார்.

''என்னம்மா சொல்றே?''

''ஆமாம் சார், என் சந்தேகம் உண்மைன்னா, மஞ்சு சரண் கூடப் போயிருப்பா.''

''இதை எப்படி கைலாசத்து கிட்ட சொல்றது.''

''எப்படியும் மஞ்சு இங்க வருவா. சரணைக் கல்யாணம் செஞ்சுண்டு வந்தா விஷயம் தெரியும்''

இதை எப்படி கைலாசம் தாங்குவான் என்று கவலைப்பட்டார் ராமநாதன். எப்பவும் கம்பீரமாக, ஆடம்பரமாக, மற்றவர்கள் முன் கௌரவமாக வாழ விரும்புவார். ஒப்புமை இல்லாத அளவுக்கு மற்றவர்கள் முன் வாழ வேண்டும் என்று விரும்புவார்.

அழகான மனைவி, மகள், மகன், வீடு, வசதி, சமூக கௌரவம், அந்தஸ்து இதுதான் அவரின் கனவு. எனக்கு யாரும் ஈடு இல்லை என்ற கர்வம் அவருக்கு உண்டு. அமெரிக்க மாப்பிள்ளை என்று பெருமையாகப் பேசினார். இப்போது?

கைலாசம் தளர்ந்து தரையில் அமர்ந்திருந்தார். விஜயம் சுருண்டு படுத்திருக்க, சுரேஷ் பைக்கில் மஞ்சுவைத் தேடித் போயிருந்தான்.

அவனிடம் ரகசியமாக சரண் பற்றிச் சொல்லி விட்டாள் பவானி.

'அவள் தோழிகளை வைத்து, சரணைப் பற்றி விசாரி.. அவன் நண்பர்களைப் பிடித்தால் அவனைக் கண்டு பிடித்து விடலாம்'' என்று பவானி கூறியதை அதிசயமாக சுரேஷ் ஏற்றுக் கொண்டான்.

செய்த சமையலை எல்லோருக்கும் போட்டாள் பவானி. மிச்சமானத்தை கீதாவுக்கு போன் செய்துச் சொல்ல, அவள் வந்து அனைத்தையும் பொட்டலமாகக் கட்டி தெருவோரக் குழந்தைகளுக்கு எடுத்துச் சென்று விட்டாள்.

நிதானமாக நேரம் நகர்ந்தது. உறவினர்கள் ஒவ்வொருவராக கிளம்பிச் செல்ல, கைலாசமும், விஜயமும் தளர்ந்து, சுருண்டு படுத்திருந்தார்கள். ராமநாதன் அருகில் அமர்ந்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்க, பவானி ஹாலைக் கிளீன் செய்தாள்.

ஒருமணிப் போல் சுரேஷ் பைக் வந்து நின்றது. பரபரப்புடன் எழுந்து நின்றது வீடு.

''என்னாச்சு சுரேஷ்?''- பவானி.

அவன் முகமே விஷயம் விபரீதம் என்று தெரிந்தது.

மெதுவாக வந்து உள்ளே அமர்ந்தவன் எதுவும் பேசாமல் தலையைக் குனிந்தபடி இருந்தான்.

''என்னடா? மஞ்சு எங்கே?''- விஜயம்.

''எல்லாம் குழந்தை, குழந்தைன்னு சொல்லிட்டிருந்தீங்கள்ல, அவ செஞ்ச வேலையைப் பாருங்க''

''என்னடா செஞ்சா?''- கைலாசம் பதறி எழுந்தார்.

''கல்யாணம் செஞ்சுகிட்டா''

''கல்யாணமா?''- விஜயம் அலறினார். ''எப்போ, யாரை? எங்கே?''

''அவ காலேஜுக்குப் போறான்னு நம்பினீங்க. அவ ஒருத்தனை இழுத்துகிட்டு ஓடிட்டா.''

''என்னன்னு சொல்லுடா.''- கைலாசம் உடல் நடுங்க கத்தினார்.

பவானிக்கு அவரைப் பார்க்க பயமாக இருந்தது. மெதுவாக அருகில் வந்து ''அமைதியாக இருங்க சார்'' என்றாள்.

''அமைதியா இருந்து என்ன செய்யச் சொல்றே? இவன் சொல்றதைக் கேட்டா தானே?''

''அவலவ் பண்ற சரனை இன்னிக்கு முருகன் கோவில்ல வச்சு கல்யாணம் செஞ்சுகிட்டா''

''உனக்கு எப்படித் தெரியும்?

''நான் அங்கிருந்துதான் வரேன். நான் போகும்போது மஞ்சு கழுத்துல அவன் தாலி கட்டிட்டான்.''

''முருகா''- அலறினார் கைலாசம்.

கை கால் நடுங்க, அப்படியே சரிந்தார். வாயிலிருந்து நுரைதள்ள, விஜயம் அலறினாள். மஞ்சு தண்ணீர் கொண்டு வர உள்ளே ஓட, ராமநாதன் ஆம்புலன்ஸுக்கு போன் செய்ய ஓடினார்.

பவானி விஜயத்தை அமைதிப் படுத்தினாள்.


சுரேஷ் திகைத்து நின்றான். செல்லமாக வீட்டு விஷயம் எதுவும் தெரியாமல் வளர்ந்த அவனுக்கு எதுவும் புரியவில்லை. பவானி மேலே போய் கதவைப் பூட்டினாள். பர்ஸில் பணம், ஏடிஎம் கார்டை எடுத்துக் கொண்டாள்.

இளங்கோவுக்குப் போன் செய்ய, அவன் உடனே கிளபுகிறேன் என்றான்.

''எந்த ஹாஸ்பிடல்?''- சுரேஷ்.

''தெரியலை. இளங்கோ போய் சொல்லி ஹாஸ்பிடல்லேர்ந்து பொன் செய்வார். நான் பாத்துக்கறேன். நீ அம்மாவைக் கவனி''

மளமளவென்று ஆம்புலன்ஸில் கைலாசத்தை ஏற்றி, உடன் தானும் ஏறிக் கொண்டாள். முன்பக்கம் ஏற. வண்டி கிளம்பியது.




''ஸ்ட்ரோக்''- என்றான் இளங்கோ.

''கடவுளே? என்ன சொல்றார் டாக்டர்?''

''ஆஸ் யூஷுவல். கவனமா பாத்துக்கணும். வைத்தியம், பிசியோதெரபி செய்யணும். மெதுவாத்தான் இது சரியாகணும். அதுவரை இவருக்கு பெட்தான்.''

இது எப்படி சாத்தியம்? படுக்கையிலேயே எல்லாமே என்றால் யார் செய்வது? திகைத்தாள் பவானி. இளங்கோ மீண்டும் டாக்டரைப் பார்க்க உள்ளே செல்ல, யோசனையுடன் தளர்ந்து ரிசப்ஷனில் போட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

வாழ்க்கை எப்போதும் நேராகப் போகாது. அவ்வப்போது ஏதானும் இடர்கள், வளைவு, நெளிவுகளைத் தந்துவிட்டுத் தான் போகும். அது போகும் பாதையிலேயே போவதுதான் வாழ்வதற்கான வழி.

எதுவும் நன்மைக்கே என்று நம்புவாள் பவானி. ஆனால் இது என்ன நன்மைக்கு என்று தெரியவில்லை. மகளின் மேல் அளவற்ற பாசம், குடும்ப கௌரவம் என்று வாழ்ந்த கைலாசத்திற்கு இது மிகப் பெரிய அடி. இந்த அதிர்ச்சியிலிருந்து மீண்டு வருவது எப்படி என்று தெரியவில்லை.

மீண்டு வருவாரா?''- பவானிக்குள் யோசனை குமிழியிட்டது.

விஜயமும், சுரேஷும் ஓடி வந்தார்கள்.

டாக்டர் கூறியதைக் கேட்டு அதிர்ந்து விட்டாள் விஜயம்.

''கடவுளே! இனி எங்க கதி என்ன?''- கலக்கம் புகுந்து கொண்டது அவளுக்குள். ஒரு குடும்பத்தின் தலைவன் செயலற்று விழுந்து விட்டால், அந்தக் குடும்பம் ஆடிப் போகிறது. விஜயத்தின் ஆடம்பர வாழ்வு, கைலாசத்தின் சம்பாத்தியத்தில்தான். லேடிஸ் க்ளப் மெம்பர், அந்தப் பகுதி கோசாலையின் மகளிர் அணித் தலைவர், கோவையின் சில முக்கிய அமைப்புகளின் உறுப்பினர். அவ்வப்போது சமூக சேவை செய்கிறேன் என்று பகட்டாய் டிரஸ் அணிந்து போட்டோவுக்கு போஸ் கொடுத்து விட்டு வருவாள்.

அந்தப் பெருமையில் மண் விழுந்து விட்டது.

விஜயத்திற்குள் பெரிய கவலையே இனி எப்படி இந்தப் பெருமைகளை அனுபவிப்பது என்றுதான்.

படுக்கையிலேயே என்றால் எப்படி எல்லாம் செய்வது?

விஜயத்திற்கு உடல் வளையாது. சொகுசாக இருந்து பழகியவள். கைலாசத்திற்கு அனைத்தும் தான் செய்ய வேண்டும் என்று நினைக்கக் கூட முடியவில்லை.

''எதுக்கு கவலைப் படறே விஜயம்? சுரேஷ் நல்ல வேலைக்கு வந்துட்டான். இனி அவன் பாத்துப்பான் குடும்பத்தை. கைலாசத்திற்கு கம்பெனில பணம் வரும். அதை டெபாசிட் செஞ்சுண்டு அமைதியா இரு. பணம் நம் மகிழ்ச்சியை அளவிடாது. நம் செயல்கள்தான்.''- அறிவுரை கூறினார் ராமநாதன்.

ஆனால் அது விஜயத்தின் காதில்

விழவில்லை. சுரேஷ் எதுவும் பேசாமல் நகர்ந்து விட்டான்.

''இதான் இந்தக் குடும்பம்''- ராமநாதன்,

''ஒரு போலித்தனமான வட்டத்தில் வாழ்ந்திருக்கிறார்''

''நம் வேஷங்களைக் கலைக்கத்தான் காலம் சில சம்பவங்களை நிகழ்த்துகிறது. எப்பவும், உண்மையா, நேர்மையா நடந்துண்டா எதைப் பற்றியும் கவலை இல்லை.''

பவானி யோசனையுடன் கைலாசத்தின் ரூமிற்குள் நுழைந்தாள்.

நர்ஸ் அவருக்கு உணவு தந்து கொண்டிருந்தாள்.

''நான் தரேன். கொடுங்க'' என்ற பவானியிடம், உணவுத் தட்டையும், மாத்திரைகளைத் தந்து விட்டு நர்ஸ் வெளியேறினாள். கைலாசத்தின் கண்களின் கேள்வியைப் புரிந்து கொண்டு பவானி மெதுவாகக் கூறினாள்

''அவங்க வந்தாங்க. நீங்க தூங்கிட்டு இருந்தீங்க. அப்புறம் வரேன்னு போனாங்க.''

கைலாசத்தின் கண்களில் படர்ந்த வெறுப்பு சங்கடத்தை உண்டு செய்தது. ஆனால் என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. சில சமயங்களில் மௌனமே அனைத்தையும் பேசி விடுகிறது.

சலிப்புடன் திரும்பிக் கொண்டார்.

அவரையே பார்த்தபடி நின்றாள் பவானி.

பதை பதைக்க வைத்த அந்த நிமிடங்கள் இன்னும் ஞாபகத்தை விட்டு விலகவில்லை. ஆம்புலன்ஸ் வருவதற்கும், இளங்கோ தனக்குத் தெரிந்த பெரிய மருத்துவமனையில் பேசி அட்மிஷன் சொல்லி விட்டான். கைலாசம் சென்றதும் உடனே சிகிச்சை ஆரம்பித்து விட்டார்கள்.

அதிகப்படியான பிரஷர் தலைக்கு ஏறி கை, கால் இழுத்து விட்டது. இடது கை மடங்கி விட்டது. கால் சிறிது, சிறிதாக உணர்வு வர ஆரம்பித்து விட்டது. பேச்சு முழுதாக வரவில்லை என்றாலும், குழறலாகப் பேசுவது புரிந்தது.

அவருக்குள் சொல்ல எவ்வளவோ விஷயங்கள் குமுறிக் கொண்டிருந்தது. ஆனால் தெளிவாகப் பேச முடியாமல் வார்த்தைகள் தடுமாறியது. பவானியைப் பார்த்த பார்வையில் அடிபட்ட வேதனை, அன்பைத் தேடும் பரிவும் தேடியது.

''எல்லாம் நல்லபடியா நடக்கும். எதை நினைச்சும் வேதனைப் படாதீங்க.''

''ம- - - - -ஞ்- - - - - - சு''

''மஞ்சுவுக்கு ஒண்ணுமில்லை. அவ சரணை கல்யாணம் செஞ்சுகிட்டா. அவங்க வீட்டுல சம்மதிச்சு, கல்யாணம் நடந்திருக்கு. அவ கண்டிப்பா நல்லா இருப்பா. நீங்க கவலைப் படாதீங்க.''- ஆறுதலாகப் பேசினாள் பவானி.

தலையை இல்லை என்பது போல் குறுக்காக மறித்து ஆட்டினார் கைலாசம்.

''அ....வ ...... வரக்கூடாது''

''அவ உங்க மகள். வராதேன்னு சொல்லாதீங்க.''

''இல்லை.''

''சரி. இப்போ எதுவும் பேச வேண்டாம். உடம்பு தேறட்டும். அப்புறம் எல்லாவற்றையும் பேசி ஒரு தீர்வுக்கு வரலாம்.''- பவானி அவருக்கு மாத்திரைகளை கொடுத்து விட்டு வெளியில் வந்தாள்.

''பவானி''- ராமநாதன் அழைத்தார்

''என்ன சார்?''

''மஞ்சு வந்திருக்கா''

''இப்போ எதுக்கு? அவருக்கு இவளைப் பார்த்தா இன்னும், உடல்நிலை மோசமாகும். எங்க நிக்கறா?''

ராமநாதன் அவளை வெளியில் அழைத்துச் சென்றார். ஹாஸ்பிடல் ரிசப்ஷனில் ஓரமாக நின்றிருந்தாள் மஞ்சு.

''அக்கா, அப்பாவுக்கு என்ன ஆச்சு? பதற்றமாக வந்தாள் மஞ்சு.

மௌனமாக பவானி பார்த்த பார்வை அவளைத் தலை குனிய வைத்தது.

''இப்போ சந்தோஷமா உனக்கு?''

''- - - - - - - - -''

''நீங்க எல்லாம் சுயநலமாத்தான் யோசிப்பீங்களா? உன் காதல் உனக்கு உயர்வா இருக்கலாம் ஆனால் உன்னைப் பெற்று வளர்த்தவங்களுக்கு அது எவ்வளவு வேதனையைத் தரும்னு புரியலையா உங்களுக்கு. உங்க இஷ்டம்போல பெத்தவங்க நடக்கணும்னு நினைக்கற நீங்க, ஏன் பெத்தவங்க இஷ்டம் போல் நடக்கக் கூடாது.''

பவானியின் வேகமான பேச்சுக்கு தலை குனிந்தாள் மஞ்சு.

''உன்னை பெத்து வளர்த்து, படிக்க வைக்கணும். நீ கேட்டதெல்லாம் வாங்கித் தரணும். உங்க இஷ்டப்படி நடக்கணும். ஆனா உங்க கல்யாணத்தை மட்டும் அவங்க பார்க்கக் கூடாது அப்படித்தானே? உன் காதல்ல நம்பிக்கை இருந்தா, நீ அப்பாகிட்ட சொல்லி, காதலுக்காகப் போராடி இருப்பே. செய்யலை. அவங்களை அசிங்கப் படுத்தி, அவமானப் படுத்திட்டு, இப்போ எந்த முகத்தோட வந்து நிக்கறே மஞ்சு.''

''எங்கப்பாவை பாக்காதேன்னு சொல்ல நீ

யாரு?''

''ஆஹா, அப்பா! பேஷ். இது ஓடிப் போறப்போ எங்க போச்சு? நீ எவ்வளவு பெரிய ஆளைக்கல்யாணம் செஞ்சாலும் ஓடிப் போனவதானே. ஒழுக்கம் இல்லாதவதானே. அழகா இருந்து என்ன பிரயோஜனம்? உன் அழகு இந்தக் குடும்ப அவமானத்தைத் துரத்துமா? இல்லை உனக்குத்தான் மரியாதையா? சரி அழகு, அழகுன்னு ஆணவமா நடந்தியே! எங்க உன் அழகால உங்கப்பா கைகாலை இயங்க வை பார்க்கலாம்.''

பவானி மனதில் இருந்த ஆதங்கத்தை எல்லாம் வார்த்தைகளில் கொட்டினாள். கைலாசத்தை கம்பீரமாகப் பார்த்தவளுக்கு இப்படி படுக்கையோடு பார்க்க முடியவில்லை. கம்பீரம் அழியக் காரணம் இவள்தானே என்ற ஆத்திரம் வீச்சுடன் வெளிப்பட்டது.

அதற்குள் சுரேஷ் வந்து விட்டான்.

''ஏய் உன்னை யாரு உள்ள விட்டது?''- கோபத்துடன் நெருங்கினான்.

''வேண்டாம் விடு சுரேஷ். ஹாஸ்பிடலில் ரசாபாசம் வேண்டாம். மஞ்சு நீ கிளம்பு. இந்தக் கோபம் ஆறட்டும். பிறகு நீ வரலாம்.''- ராமநாதன் குறுக்கே புகுந்தார்.

''அங்கிள் அப்பா...''- அழுதாள் மஞ்சு.

''இது நிச்சயத்தப்போ ஓடிப்போகும் போது இருக்கணும்.''

''நான் அவரைப் பார்க்கணும்''- பிடிவாதமாக நின்றாள் மஞ்சு.

விஜயம் அவளை முறைத்தாள். அவளுக்கு மகளைப் பார்க்கப் பிடிக்கவில்லை. தன் கௌரவம், அந்தஸ்து, புகழ் என்று அனைத்தையும் குலைத்தவள் இன்று ஏன் இங்கு வந்தாள் என்று குமுறியது.

''இங்க பார் மஞ்சு. நீ எங்களுக்குச் செய்த அவமானம் எல்லாம் போதும். இனி எங்க முகத்துல முழிக்காதே. இங்கிருந்து கிளம்பு. எங்களை வேண்டாம்னு போனவ எதற்காக வந்தே? இருக்கறதை சுருட்டிகிட்டுப் போகவா? இதோ பார். பொண்ணு மேல இருக்கிற பாசத்துல சிலர் வேணா ஓடிப்போன மகளை வீட்டுக்குள்ள விடலாம். ஆனா எங்களுக்கு இவ்வளவு பெரிய அவமானத்தைத் தந்த உன்னை என்னைக்கும் மன்னிக்க மாட்டேன்.'' விஜயம் படபடப்புடன் பேசினார்.

''குழந்தைகள் பெற்றவர்களுக்கு பெருமையையும், மரியாதையையும் தேடித் தரணும். சும்மாவா சொன்னார் வள்ளுவர். இவன் தந்தை என்னோற்றான் கொள் எனும் சொல்னு. பாசத்தினால பெத்தவங்க உங்க காரியத்தை ஏத்துக்கலாம். ஆனா உங்க மனசுல பிரியம், அன்பு இருந்திருந்தா இப்படிச் செய்திருக்க மாட்டீங்க.''

மஞ்சு மௌனமாக நின்றாள்.

''நீ கிளம்பு மஞ்சு. சரண் கூட மகிழ்ச்சியா வாழு. உன் ஆசை அபிலாஷைக்கு இவங்களை வதைக்காதே. உங்கப்பா உயிரோடு இருக்கணும்னா இனி இங்க வராதே. காலம் மாறும்.''- ராமநாதன் இதமாகக் கூறினார்.

''நீங்க வாங்க. டாக்டர் பாக்கணும்னு சொன்னார்.''- சுரேஷ் அம்மாவை அழைத்துக் கொண்டு நகர்ந்தான்.

''வாம்மா, நாமும் போகலாம்''- ராமநாதனும் நகர்ந்தார்.

''பாவமா இருக்கு சார்.''

''இருக்கட்டும். பெண்கள் மயக்கத்துல என்ன செய்யறோம்னு யோசிக்காம செஞ்சுடறாங்க. ஓடிப் போய் கல்யாணம் செஞ்சுக்கும்போது பெத்தவங்களை நினைக்கறதில்லை. அப்புறம் வந்து அம்மா, அப்பான்னு அழுது ஒரு நாடகம் எதுக்கு? போராடத் துணிச்சல் இல்லை. உடல் ஈர்ப்பு. கவர்ச்சி. இவங்க வாழ்க்கை எத்தனை நாள்னு கவலையா இருக்கு.''

பவானிக்குள்ளும் அந்தக் கவலை இருந்தது. மஞ்சு நல்லபடியாக வாழ்ந்தால் சரி. ஏதானும் மாறுபட்டு நடந்தால் பிறகு அவளின் வாழ்க்கை?

கவலையோடு கைலாசத்தின் அறைக்குள் வந்தாள். அவர் தூங்கிக் கொண்டிருந்தார். அருகில் இருந்த சேரில் அமர்ந்தாள் பவானி.

''பவானி. இங்க இருக்கியா?''- விஜயம் வேகமாக உள்ளே வந்தார்.

''டாக்டர் என்ன சொல்றார்?''

''டிஸ்சார்ஜ் செய்யலாம்னு சொன்னார். ஆனா வீட்டுக்குப் போனாலும், இவருக்கு தொடர்ந்து பிசியோதெரபி கொடுக்கணுமாம். இவர் இப்படியேதான் படுக்கையில் இருப்பாராம். அப்போ இவருக்கு எல்லாம் செய்ய ஒரு ஆள் வேணுமே.''

''ஏன் நீங்க செய்ய முடியாதா?''

''என்னால எப்படி முடியும் பவானி? ஒரு நர்ஸ் செய்யற மாதிரி என்னால முடியுமா? சரி ஹாஸ்பிடல்ல ஒரு நர்ஸ் கேட்கலாம்னா, அவங்க சொல்ற அமௌன்ட் கட்டுப்படி ஆகாது. இவர் படுத்ததால சம்பளம் இல்லை. சுரேஷ் இப்பத்தான் வேலைக்குப் போயிருக்கான். என்ன செய்யறதுன்னு தெரியலை.''

விஜயத்தின் கவலை நியாயமாகப் பட்டது.

''இது தவிர, பிசியோதெரபிஸ்ட் வந்து

போகிற சார்ஜ் வேற.''

''உண்மைதான். ஆனால் முடியாதுன்னும் விட முடியாது.. அவர் எழுந்து இயல்பானாத் தான் உங்க வாழ்க்கை மலர்ச்சியாகும். ஒரு வீட்டின் தலைவன் ஆரோக்கியமா, செயல்பாடா இருக்கணும்.''

''மஞ்சு கல்யாணத்திற்காக சேர்த்து வைத்த நகைகள் இருக்கு. அவ கல்யாண செலவுக்கு டெபாசிட் செய்த பணம் இருக்கு. வித்துடலாமா நகைகளை?''

''இல்லை வேண்டாம்''- பவானி மறுத்தாள்.

''பின்னே என்ன செய்யறது?''

பவானி யோசித்தாள். அந்த முடிவை ஏற்பார்களா?

''என்ன யோசிக்கறே பவானி?''

''எங்கம்மாவை வரச் சொல்லவா?''

''அம்மாவையா?''

''ஆமாம், அவங்க அங்க ஒரு தனியார் நர்சிங்ஹோம்ல வொர்க் செஞ்சிருக்காங்க. டாக்டர்கிட்ட பிசியோதெரபி எப்படிச் செய்யறதுன்னு கேட்டாங்கன்னா அவங்களே செஞ்சிடுவாங்க.''

''பிளீஸ், உடனே வரச் சொல்லு பவானி. என்னால முடிஞ்ச அமௌண்ட்டைத் தரச் சொல்றேன்.''

''எதுவும் வேண்டாம். அவங்க வந்து சாரை எழுப்பி உட்கார வச்சிடுவாங்க.''

நம்பிக்கையோடு கூறினாள் பவானி.

வந்து நின்ற மங்களாவைப் பார்த்ததும் விழிகள் கலவரத்தில் விரிந்தது கைலாசத்திற்கு.




''வணக்கம்'' என்று கை கூப்பிய மங்களாவை பார்த்த உடனேயே பிடித்துப் போனது விஜயத்திற்கு. பவானியைப்



போல் மாநிறம்தான். சிறிது அவளைப் போலவே இருப்பதாகத் தோன்றியது. ஆனால் பவானியின் தோற்றம் வேறு ஒருவரைப் போல் இருந்தது. யார் என்று கண்டு பிடிக்க முடியவில்லை.

''நீங்க எங்க இருக்கீங்க?''

''நான் சென்னையில் இருக்கேன். அங்க முதலில் மெஸ் வச்சு நடத்திட்டு இருந்தேன். பிறகு ஒரு டாக்டர் கிளினிக்ல வேலைக்குச் சேர்ந்துட்டேன்.''

''நீங்க பவானி கூட இங்க வந்திருக்கலாம்ல?''

''அவ தொழில் விஷயமா வந்திருக்கா. மேலும் அங்க என் மாமியார் கூட இருக்காங்க. அவங்களை விட்டுட்டு வர முடியாது. அதனால நான் வந்தேன். சாருக்கு உடல்நலம் சரியானதும் நான் மீண்டும் போயிடுவேன்.''

''எவ்வளவு சம்பளம் எதிர்பார்க்கறீங்க?''

மங்களா சிரித்தார். ''மனிதாபிமானத்திற்கு விலை வேண்டாமே. நான் ஒரு நோக்கம் வச்சுகிட்டு வாழ்ந்துகிட்டு இருக்கேன். அதை காசால எடை போட முடியாது.''

விஜயம் உள்ளுக்குள் ஆனந்தமாக உணர்ந்தார் என்றாலும் வெளியில் சன்னமாக கோபித்துக் கொண்டார்.

''சும்மா எப்படி வேலை வாங்கறது? ஒரு சம்பளம்னு கொடுத்தாத்தனே எங்களுக்கு நிம்மதி''

''சரி, உங்களுக்கு என்ன தோணுதோ அதைக் கொடுங்க.''

''சரி என்று உடனே ஒத்துக் கொண்டார் விஜயம்.

''என்ன வேலைன்னு தெரியும்ல?''

''சாருடைய முழுப் பராமரிப்பு, பிசியோதெரபி.''

''எப்படிச் செய்வதுன்னு தெரியுமா?''

''ஏற்கனவே கொஞ்சம் தெரியும். நான் உங்க டாக்டர் கிட்ட கேட்டுக்கறேன்.''



''உங்க பதில் ஒவ்வொன்றும் எனக்கு ரொம்பத் திருப்தியா இருக்கு.''

''ரொம்ப நன்றி. இன்னொரு விஷயம்''

''சொல்லுங்க.''

''இந்த மாதிரி முடியாதவங்களுக்கு தனிச் சமையல் உண்டு. நிறையக் காய்கறிகள் சேர்த்து, சத்தானதா, உப்பு, காரம் கம்மியா, செய்யணும். அதனால அதையும் நானோ, பவானியோ செஞ்சிடறோம்.''

''ஆஹா'' துள்ளியது விஜயத்தின் மனம். அவரின் வேலைப்பளு குறைகிறது என்பதே மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் அதற்கு தனியாக பணம் கேட்பாளோ என்று விஜயத்தின் முகத்தில் படிந்த குழப்பத்தைப் புரிந்து கொண்டாள் மங்களா.

''எனக்கு நான் அப்படிச் செய்து கொள்வேன். அதில் சிறிது சாருக்குத் தந்து விடுகிறேன்.''

''ஏன் எங்களுக்குக் கிடையாதா?''

''நீங்க விரும்பினா உங்களுக்கும் சேர்த்துத் தருகிறேன். நீங்க ஒரு சாதம் மட்டும் வைத்துக் கொள்ளுங்கள். குழம்பு, ரசம், பொரியல்னு பவானி தந்துடுவா.''

''அப்பாடா'' என்று இருந்தது விஜயத்திற்கு. கிச்சனில் சென்று செய்ய உடம்பு வணங்கியதில்லை அவருக்கு. பகட்டாக உடை அணிந்து வெளியில் வலம் வருவதுதான் அவருக்குப் பிடித்த விஷயம். அவ்வப்போது கிச்சனுக்குள் சென்றாலும் ரசம், துவையல், ஏதானும் கலவை சாதம் என்றுதான் செய்வார்.

விஜயத்தின் அம்மா இவருடன் இருந்த வரையில் அவரே வாய்க்கு ருசியாகச் செய்து விடுவார். அவரின் வீடுதான் இது. வீட்டோடு மாப்பிள்ளையாக கைலாசம் வந்தாலும் அவரை மரியாதையாகத்தான் நடத்தினார்கள் அந்த வீட்டில். அத்துடன் கம்பெனியில் நல்ல கை நிறையச் சம்பளம்.

கைலாசமும் ஷோக்குப் பேர்வழி. சினிமா ஹீரோ மாதிரி இருப்பார். அவரிடம் மயங்கிப் போய்தான் விஜயம் அவரைத் திருமணம் செய்து கொண்டார். கைலாசம் கணபதியில் விஜயத்தின் வீட்டில்தான் குடி இருந்தார்.

மங்களாவைத் திருமணம் செய்து கொண்ட விஷயத்தை மறைத்து, தனக்கு யாரும் இல்லை என்று பொய் சொல்லித்தான் அவர்கள் திருமணம் நடந்தது.

ஆனால் கைலாசம் விஜயத்திற்கு உண்மையாகத்தான் நடந்து கொண்டார். அவரின் அம்மாவும் அவரிடம் கோபித்துக் கொண்டு மங்களாவிடம் சென்ற பின் அவருக்கு ரொம்பச் சௌகர்யமாகி விட்டது.

உடன் பிறந்தவர்கள் யாருமில்லை. அம்மாவும் மங்களாவுடன், உறவினர் யாருடனும் தொடர்பில்லை. கைலாசம் ராஜபாட்டையில் நடந்தார். ஆனால் இப்போது உதவிக்கு மங்களா வந்து நின்றதும் அதிர்ந்து போனார்.

''எப்படி இருக்கீங்க?''

''நீ... நீ...'' பேச முடியாமல் திணறினார்.

''இது பவானியோட அம்மாங்க. உங்களுக்கு நர்ஸா பணிவிடை செய்ய வந்திருக்காங்க''- விஜயம்.

''ஏன்?..... எ...த...ற்கு?''

''உங்களுக்கு எல்லாம் படுக்கையிலேயே செய்யணும். என்னால முடியாது. ஒரு கேர்டேக்கர் போடலாம்னா, இருபது, முப்பதாயிரம்னு கேக்கறாங்க. அதான் பவானி அவங்கம்மாவை வரச் சொன்னா.''

''அடுத்த அதிர்ச்சி அவருக்கு. பவானி மங்களாவோட பொண்ணா? அப்போ அவ?

''ஆம் என்று கண்ணால் ஆமோதித்தாள் மங்களா.

இன்னதென்று சொல்ல முடியாத உணர்வில் தடுமாறிப் போனார் கைலாசம். மகிழ்ச்சி, பூரிப்பு, அத்துடன் லேசாய் ஒரு அவமானம் என்று மொத்தமாய் அவரைத் தாக்கியது உணர்வுகள்.லேசாய்க் கண்ணோரம் நீர் வழிய, மங்களா அதைத் துடைத்து விட்டாள்.

''சார், எதையும் மனதில் போட்டு குழப்பிக் காதீங்க. நான் உங்களைக் கவனிக்கத்தான் வந்திருக்கேன். இறைவன் அருளால் நீங்க நல்லபடியா எழுந்து நடமாட ஆரம்பிச்சதும், நான் கிளம்பிடுவேன்.''

மங்களா பேச்சில் குறுக்கே புகுந்தாள் விஜயம்.

''வந்த உடனே, போறதைப் பற்றி என்ன பேச்சு?''

விஜயத்தின் அதட்டலைக் கேட்டுச் சிரித்தாள் மங்களா.

''மேடம் ஒரு விஷயம்''

''சொல்லுங்க என்னை விஜயம்னே கூப்பிடலாம்.''

''ஓ சரி. சார் ஆண். நான் பெண். சில சமயங்கள்ல, நான் சாரைத் தொட்டுத் தூக்க வேண்டியிருக்கும். பாத்ரூம் அழைச்சிட்டுப் போக வேண்டியிருக்கும். நடக்கும்போது பிடிச்சுகிட்டு நடக்க வேண்டியிருக்கும். இதெல்லாம்உங்களைச்சங்கடப்படுத்தாதே?''

''சேச்சே, இதென்ன இப்படிச் சொல்றீங்க. இப்போ அவர் பேஷன்ட், நீங்க நர்ஸ்.''

''நன்றி விஜயம்''- மங்களா அவரின் அருகில் சென்றார்.

கைலாசம் இப்போது வீட்டுக்கு வந்திருந்தார். பவானி அவர்களிடம் சொல்லியபடி உடனே அம்மாவுக்குப் போன் செய்து வரச் சொல்லி விட்டாள். இன்று காலையில் வந்து இறங்கி விட்டார் மங்களம். மதியம் போல் கைலாசத்தை வீட்டுக்கு அழைத்து வந்து விட்டார்கள்.

யாரானும் பிடித்துக் கொண்டால் மெதுவாக நடுங்கியபடி கால் எடுத்து வைக்கிறார். எழுந்து அமருகிறார். அதற்கென்று ஒரு வீல்சேர் வாங்கி இருந்தார்கள். வார்த்தைகள் சிறிது இழுத்து, இழுத்துப் பேசினாலும் புரியும் அளவு இருந்தது.

விஜயம் அவர்களை விட்டு விட்டு வெளியில் சென்றார்.

''நலமா?''- மங்களா அருகில் நெருங்கினாள்.

''நீ... நீ... எப்படி? பவானி எ...ன்... பெண்ணா?''

''ஆமாம்''- நிதானமாகப் பேசினாள்.

''ஆனால் நான் உரிமை கொண்டாட வரவில்லை. ஒரு நர்ஸா உங்களைக் கவனிக்க வந்திருக்கேன். எக்காரணம் கொண்டும் நான் யாருன்னு சொல்ல மாட்டேன். நீங்க கவலைப்பட வேண்டாம்.''

''அ...ம்மா?''- முகம் முழுவதும் ஆசையுடன் கேட்டார்.

''நல்லா இருக்காங்க. உங்களைப் பாத்துக்க வரேன்னு சொல்லவில்லை.''

கைலாசத்தின் கண்கள் நிரம்பியது.

அவரின் மன உணர்வுகள் புரிந்தது. உடல் நலிவுற்ற சமயத்தில்தான் உறவுகளின் அருமையும், தாயின் அரவணைப்பும் தேவைப்படுகிறது. கைலாசம் உள்ளுக்குள் உடைந்து போயிருந்தார். அவரின் கடந்த காலம் ஒரு பெரிய பாவச் சுமையாக மனதில் நின்று உறுத்தியது.

மங்களாவை ஏறெடுத்துப் பார்க்க முடியவில்லை.

இன்று வரை தான் மங்களாவுக்குச் செய்தது துரோகம் என்று உணரவில்லை அவர். தன் சுகம், தன் மகிழ்ச்சி, தன் வாழ்க்கை என்றுதான் நினைத்தாரே தவிர அதே உணர்வுகள் அவளுக்கும் இருக்கும் என்று நினைக்கவில்லை.

அப்பாவின் பேச்சை மீற முடியாமல், மங்களாவைத் திருமணம் செய்து கொண்டாரே தவிர அவளிடம் ஆத்மார்த்தமான அன்பு இல்லை. அப்படி ஒன்றும் அசிங்கம் இல்லை மங்களா. கிராமத்துக் கட்டழகிதான். கருப்பு என்றாலும், கண்ணும், முகமும் களையாக இருக்கும். கோவில் சிலை போன்று இருப்பாள்.

ஆனால் கைலாசம் எதிர்பார்த்தது வெள்ளைத் தோல். நவநாகரீகம், சமூகத்தில் தன் தோற்றத்துக்கு இணையான ஒரு அழகி. அவரின் கனவுகளை பூர்த்தி செய்யவில்லை மங்களா.

பத்தாம் வகுப்புக் கூட தாண்டவில்லை. அவளின் அப்பாவிடம் கைலாசத்தின் அப்பா கடன் வாங்கி இருந்தார். அதைக் கட்ட முடியவில்லை அவரால். அதுவும் கைலாசத்தின் படிப்புக்கு. ஆனால் வேலைக்குச் சென்ற கைலாசம் அப்பாவுக்கு எந்த உதவியும் செய்யவில்லை.

கடன் தொகை வட்டியுடன் சேர்த்து எகிரவே, மங்களாவின் அப்பா '' உன் மகனுக்கு என் பொண்ணைக் கல்யாணம் செய்து கொள். கடனைத் தள்ளுபடி செய்கிறேன்'' என்றார். ''நல்லது'' என்று கைலாசத்தின் அப்பா, இவரைப் பயமுறுத்தி, தற்கொலை நாடகமாடி, கோவிலில் திருமணம் முடிந்தது.

ஒரு வாரத்தில் அவர் தன்னை வெறுக்கிறார் என்று புரிந்து கொண்டாள் மங்களா. ஆனாலும் வெளியில் எதுவும் சொல்லவில்லை. அம்மா இல்லாத தன்னை கட்டிக் கொடுத்த பின் அப்பா, தன் சின்ன வீட்டுடன் செட்டிலாகி விட்டார்.

ஆனால் மகனைப் புரிந்து கொண்ட தாய் மங்களாவுக்கு துணையாக இருந்தார். அவளுக்காக இவரிடம் வாதாடினார். மங்களாவை வாழ வைக்க என்னென்னவோ செய்தார். அதன் ஒரு விளைவாக பவானி உருவாகினாள்.

அந்த விஷயம் தெரிந்த அன்று கைலாசம் சொல்லாத வார்த்தைகளைச் சொன்னார்.

''உன்னை நினைச்சாலே எனக்கு அருவருப்பா இருக்கு. நான் எப்படி உன்னைத் தொடுவேன். இது என் குழந்தை இல்லை'' என்றவர் அதன் பிறகு அவர் ஊர் பக்கம் வரவே இல்லை. அந்த வேதனையில் அவரின் அப்பா இறந்து போனார்.

பிறந்த குழந்தையுடன், மாமியாரை அழைத்துக் கொண்டு ஒரு முறை கைலாசத்தைச் சந்திக்க கோவை வந்த போது அவருக்கு விஜயத்துடன் திருமணம் ஆகி இருந்தது.

''என்னைப் பார்க்க இனி வராதே'' என்றவரை மௌனமாகப் பார்த்த அம்மா, கிளம்பி மங்களாவுடன் கிராமத்துக்கு வந்தார். கைலாசம் ஒரே பையன். இரண்டு தங்கைகளுக்குத் திருமணம் செய்திருந்தார்கள். அவர்களிடம் எதுவும் சொல்லாமல், மருமகள், பேத்தியுடன் சென்னைக்கு தன் தம்பியிடம் வந்தார்.

உழைப்பு. யாருக்கும் பாரமாக இருக்கக் கூடாது என்ற தன்மானம் அவர்களை வெற்றி பெற வைத்தது. கைலாசத்தின் நண்பர் ராமநாதன் மட்டும் இவர்களுடன் தொடர்பில் இருந்தார்.

''அவன் தன் தப்பை உணர வேணும். பவானியைத் தன் மகள்னு சொல்லணும். நான் பாத்துக்கறேன்'' என்று அழைத்து வந்தார். காலம்தான் எவ்வளவு பெரிய நீதிபதி. அவன் மிகச் சிறந்த வைத்தியன் கூட. மனப்புண்ணுக்கு அருமையான மருந்து போடுகிறான்.

மங்களா ஒரு துண்டுடன் அருகில் வந்தாள்.

''நான் உங்களைத் தொட்டு பணிவிடை செய்யலாமா?''

அவளைக் கேள்வியுடன் பார்த்தார் கைலாசம்.

''நான் தொட்டா அருவருப்பா இருக்கும்னு சொல்வீங்களே?''

உதட்டைக்கடித்து பொங்கிய அழுகையை அடக்கினார். நடுங்கும் கைகளைக் கோர்த்து ''பி...ளீ ...ஸ்...'' என்றார்.

ஒரு புன்னகையோடு ஈரத் துணி கொண்டு அவரின் உடலைத் துடைத்து விட ஆரம்பித்தாள் மங்களா.




**ப**வானி மகிழ்ச்சியாக உணர்ந்தாள்.

எதிரில் அமர்ந்திருந்த கோவை டெக்ஸ்டைல் மில் உரிமையாளர்களைப் பார்க்கையில் பிரமிப்பாக இருந்தது. எத்தனை சாதனைகள் செய்தவர்கள்? தென்னகத்தின்

மிகப் பிரம்மாண்டமான மில் ஓனர்கள். அவர்கள் முன்னிலையில் இன்று தான் பேசப் போகிறோம்?

நினைக்கவே கிளர்ச்சியாக இருந்தது. அவளுக்குள் ஒரு பயமோ, தடுமாற்றமோ இல்லை. தெளிவும், தைரியமும், என்ன பேச வேண்டும் என்பது குறித்து அவளிடம் ஒரு தெளிவும் இருந்தது.

பேச வேண்டிய விஷயங்களை மனதில் ஒருமுறை, திருப்பிப் பார்த்தாள். திருப்தியாக இருந்தது.

எம்.டி. அருகில் வந்தார்.

''பவானி எல்லாம் ரெடியா?''

''ரெடி சார்.''

''ஓகே. உன் ஐடியா வொர்கவுட் ஆச்சுன்னா, இது நம்ம கம்பெனிக்கு ஒரு மிகப்பெரிய அச்சீவ்மெண்ட். நீ அடுத்த லெவலுக்குப் போயிடுவே பவானி.''

''நன்றி சார்.''

''ஓகே, எல்லோருக்கும் ஒரு ஜூஸ் தா. ஆரம்பிச்சிடலாம்.''

''ஓகே சார்.'' பவானி தன் உதவியாளருக்கு உத்தரவிட எல்லோருக்கும் சூடாக வெஜிடபிள் ஜூஸ் தரப்பட்டது.

அவர்களின் முகத்தில் தெரிந்த மகிழ்ச்சி, அவளுக்கு உற்சாகமாக இருந்தது.

புன்னகையுடன் அவர்களைக் கவனித்தபடி நின்றாள்.

எம்.டி. மில் ஓனர் அசோசியேஷனின் தலைவர். அந்த அமைப்பில் உள்ளவர்களுடன் சேர்ந்து, கோவையில் புதிதாக ஒரு புராஜெக்ட் ஆரம்பிக்கிறார். மேல்களுக்கு சப்ளை செய்யும், நூல்களை வரவழைத்து, அதன் மூலம் ஆயத்த ஆடைகள் தயாரிக்கலாம் என்று எண்ணம். வெளிநாட்டிலிருந்து துணிகளை வரவழைத்து அதில் ஆடைகள் தைப்பதை விட, நம் நாட்டிலேயே, வெளி நாட்டுத் தரத்தில் துணிகளை உருவாக்கி, அதில் ஆடைகளைத் தைக்கலாம் என்ற எண்ணத்தில், இந்த முயற்சியை ஆரம்பிக்கிறார் எம்.டி.

எப்போதும் புது முயற்சிகள் எதை ஆரம்பித்தாலும், அதைத் தன் ஊழியர்களுடன் பகிர்ந்து கொண்டு, அவர்களின் ஆலோசனைகளைக் கேட்பார் எம்.டி. அப்போது அவர்களுக்கு டிபன் உண்டு. அந்த மீட்டிங்கின் போது அங்கிருந்த பவானி தன் கருத்துக்களைக் கூற எம்.டி க்கு அது மிகவும் பிடித்துப் போனது.

''எங்கள் மீட்டிங் போது நீ இதை விளக்க முடியுமா?''



# நின்று கொண்டே சாப்பிடலாமா?

உணவு தான் உடல் ஆரோக்கியத்தின் முதல் படி அதில் உணவை எப்படி எடுத்து கொள்கிறோம் என்பதும் முக்கியமானது.

நின்று கொண்டும் படுத்துகொண்டும் சாப்பிடுவதால் உடல் மோசமான குறைபாட்டை சந்திக்கலாம்.

நின்றுகொண்டே சாப்பிடுவது முதலில் ஜீரண மண்டலத்தை பாதிக்க செய்யும். ஒருவர் உட்கார்ந்திருக்கும் போது அல்லது படுத்து கொள்ளும் போது வயிற்றில் இருக்கும் உணவு மெதுவாக வெளியேறும். அவர்கள் நிற்கும் போது இவை சரியாக நடப்பதில்லை.

நின்றுகொண்டே சாப்பிடுவது உணவுகள் செரிமான மண்டலத்துக்குள் செல்லும் வேகம் அதிகரிக்கிறது. உணவு நுண் துகள்களாக உடைக்கப்படுவது தடுக்கப்படுகிறது.

இது குடலில் அதிக அழுத்தத்தை உண்டாக்கி செரிமானத்தில் பிரச்சனையை உண்டாக்கும்.

நின்று கொண்டே சாப்பிடும் போது உணவு வேகமாக கீழே இறங்குகிறது. இதனால் சரியான





அளவு சாப்பிட்டிருக்கோமா என்பதே தெரியாத அளவுக்கு சாப்பிட்டு கொண்டே இருப்பீர்கள். அதிக அளவு உணவு எடுக்க நேரிடலாம். பசி நிறைந்த உணவை நீங்கள் எப்போதும் உணர மாட்டீர்கள்.

உட்கார்ந்து சாப்பிடும் போது நிதானமாக சாப்பிடுவதன் மூலம் குறைந்த உணவே நிறைவான உணவு திருப்தி அளிக்கும். கூடுதலாக கலோரிகளை எளிதாக எரிக்கும்.

சாப்பிட்ட உணவு செரிமானம் ஆகும் வரை உணவு எடுக்க கூடாது என்று சொல்வார்கள். ஆனால் நின்று கொண்டே சாப்பிடும் போது உணவு சீக்கிரமே செரிமானம் ஆகிறது. உணவில் இருக்கும் ஊட்டச்சத்து உறிஞ்சப்பட்டு உணவு நுண் துகள்களாக மாறுவதற்குள் அவை குடலை அடைந்து விடுகிறது.

இதனால் நீங்கள் சாப்பிட்ட சில மணி நேரங்களில் மீண்டும் பசி எடுக்க தொடங்கும்.

விரைவான செரிமானம் என்பது ஆபத்தானது. அது செரிமான பிரச்சனையை மட்டும் உண்டாக்காமல் இன்னும் பல வயிற்று கோளாறையும் உண்டாக்கிவிடும். நின்றுகொண்டே சாப்பிடும் போது உணவு ஊட்டச்சத்து உறிஞ்சுவதற்கு முன்னரே செரித்து விடுகிறது. இந்த சத்துக்கள் வாயுவாகி உடலில் தேங்கிவிடுகிறது. இது குடல் வீக்கத்தை உண்டாக்கிவிடும்.

குறிப்பாக கார்போஹைட்ரேட்டுகள் முழுமையாக செரிக்காத நிலையில் அது வீக்கத்தை உண்டாக்கும் அபாயமும் உண்டு.

''கண்டிப்பா முடியும்.''

''பாரிஸ்லேர்ந்து நம் கஸ்டமர்கள் சிலர் வருவாங்க. அவங்களுக்கு நீ தமிழ்ல பேசறது புரியாதும்மா.''- எம்.டி. தயங்கினார்.

''கவலைப்படாதீங்க. நான் ஆங்கிலத்துல பேசறேன்.''

''ஆங்கிலத்துல பேசத் தெரியுமா?''- எம்.டி ஆச்சர்யமாகக் கேட்டார்.

''நான் ஹோம் சயின்ஸ் காலேஜ்ல படிச்சேன் சார். அது போக பேஷன் டெக்னாலஜி கோர்ஸ் ஒன்று முடிச்சேன். எல்லாம் ஆங்கிலம்தான். இங்க கோவை வந்த பிறகு நான் ஸ்போக்கன் இங்கிலீஷ் கிளாஸ் போனேன் சார்''

''வெரிகுட்''-எம்.டி மனம் திறந்து பாராட்டினார்.

நம்பிக்கையோடு அவளை இந்தக் கூட்டத்தில் பேசச் சொன்னார்.

கையில் குறிப்புகளுடன் வந்து விட்டாள் பவானி. மதியம் லஞ்ச், காபி, ஸ்நேக்ஸ் எல்லாம் பவானியின் பொறுப்புதான். உதவியாளருக்கு குறிப்புகள் கொடுத்து விட்டு தன் இடத்திற்கு வந்து அமர்ந்தாள் பவானி.

''ஹலோ, பியூட்டி''- இளங்கோ வந்து அருகில் அமர்ந்தான்.

''ஏய், நீ எங்க இங்கே?''

''நான் அன்பின் கரங்கள் சார்பா வந்தேன். நல்லா பேசு. எல்லோரையும் இம்ப்ரெஸ் பண்ற மாதிரி.''

''எதுக்கு?''

''குமரேஷ் வந்திருக்காப்பல. அய்யா அப்படியே உன் ஆங்கிலப் பேச்சைக் கேட்டு, ஜெர்க் ஆகனும்.''

''டேய்ய்... நான் நல்லாவே ஆங்கிலம் பேசுவேன்.''

''எப்படி, டோல்டேட், செட்டுடு, இ கம்மு, யூ டுக்குடுன்னா''

''இரு உனக்கு காபில மிளகாய்த் தூள் போட்டு தரச் சொல்றேன்.''

''பாக்கியவான் ஆனேன்.''- இளங்கோ எழுந்து போய் ஒரு சேரில் அமர்ந்தான். பவானி ஹாலைப் பார்த்தாள். இரண்டாவது வரிசையில் குமரேஷ் தெரிந்தான். அவன் முகத்தில் தெரிந்த ஒரு ஏளனச்சிரிப்பு அவளை சிலிர்க்க வைத்தது.

எம்.டி. அவளை அறிமுகப்படுத்தி விட்டு, அவளைப் பேச அழைத்ததும், பவானி எழுந்தாள். மைக் முன் வந்து நின்று மூச்சை இழுத்து விட்டு, வணக்கம் சொல்லி விட்டு ஆரம்பித்தாள்.

தெளிவாய், துணியின் ரகம், அதில்

தைக்கும் துணி, டிசைன், அது எப்படி அந்தந்த வயதினருக்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்று விளக்கினாள். குழந்தைகளின் உடலுக்கு ஏற்ற விதத்தில் மெல்லிய ரகம், முதியவர்களுக்கானவகைகள், பட்டுப்புடவை விரும்பாதவர்களுக்கு, அதே போன்ற டிசைனில் ஆடை, என்று ரகவாரியாகப் பிரித்து விளக்கினாள்.

தன்னிடம் இருந்த சில வெளிநாட்டுத் துணி ராகங்களைக் காட்டி அதே தரத்தில் இங்கும் தயாரிக்க வேண்டிய அவசியத்தையும் கூறியதை ஆழ்ந்து கவனித்தது கூட்டம்.

''சமையலுக்கு படித்த நீங்கள் ஆடையின் வடிவில் கவனம் செலுத்துவது எப்படி சாத்தியம் ஆனது?''

''எல்லாமே ருசி பொறுத்த விஷயம்தானே சார். நாக்கின் ருசி, அழகைப் பராமரிக்கும் விஷயம்.''

''சரி, இந்தத் துணிகள் வெளிநாட்டு மெடீரியல். இதை நீங்கள் எங்கு கத்துகிட்டீங்க''

''பேஷன் டெக்னாலஜி படிக்கும்போது பாம்பேல ஆறுமாசம் டிரெய்னிங் எடுத்தேன்''

''குட். இந்த யூனிட்டை இங்கு கோவைல ஆரம்பித்தால் உன்னால் இதைக் கவனிக்க முடியுமா?''

''கண்டிப்பாக முடியும். ஆனால் இதில் நிபுணர்கள் இருப்பாங்க. அவர்களுடன் இணைந்து நான் பணியாற்றுவேன். இதில் என்ஜினீயரிங் படித்தவர்கள் என்னை விடவும் சிறப்பாக செயல் படுவார்கள்''

பவானியின் அடக்கமான பேச்சு அனைவரையும் கவர்ந்தது.

மதியம் உணவு சாப்பிட்ட பின் உணவின் தரம், ருசியும் அவர்களை அதிகம் கவர்ந்தது.

''பவானி எப்படி இவ்வளவு நல்லா ருசியா சமைக்க முடியுது?''

''எல்லாப் பெண்களுக்குள்ளும் ஒரு தாய் இருக்கிறாள் சார், எல்லோரையும் நேசிக்கும் உணர்வு. பசித்த வயிறுக்கு உணவிடும் கருணை இருக்கு. அந்த உணர்வுடன் சமைச்சா கண்டிப்பா, உணவு ருசியாவும், சத்தானதாவும் அமைஞ்சிடும்.''

''இந்த உணவு விஷயத்துல உனக்கு ஒரு ஐடியா இருக்குன்னு சொன்னியே? அதை இந்தக் கூட்டத்துல சொல்லு பவானி.''- எம்.டி

''ஆமாம் என்ற பவானி, தன் கருத்துக்களைக் கூறினாள்.

''ஒரு உணவகம்னா அங்கு உணவுப் பண்டங்கள் மீதி ஆகும். அப்படி ஆகாம உணவகம் நடத்த முடியாது. ஆனால் மீதி ஆகற மாதிரி உணவுகள் செய்யணும்னு நான் உங்களைக் கேட்டுக்கறேன். நமக்கு மூணு நேரம் சுடச் சுட உணவு கிடைக்குது. ஆனா ஒரு நேரம் உணவு கூடக் கிடைக்காம எத்தனையோ பேர் தெருவுல இருக்காங்க. மீதி ஆகற உணவுகளை அவங்களுக்குக் கொடுக்கலாமே? இங்கு மொத்தம் நூற்று எழுபது கேண்டீன் இருக்கு. அதுல மீதமாகிற உணவுகளை நாம் பொட்டலமா கட்டி, ஆயிரம் பொட்டலங்கள் செய்யலாம். ஒரு வேளை உணவு தந்தா நமக்கும் மனத் திருப்தி. கம்பெனிக்கு நஷ்டம் இல்லை. தூக்கி எறியற உணவை அவங்களுக்குத் தரலாமே.''

''சரி, டெய்லி அவங்களைத் தேடி யார் அலையறது?''

''நீங்க அலைய வேண்டாம். உங்க கம்பெனி தேடி வந்து உணவை வாங்கிட்டுப் போய் அவங்களுக்குக் கொடுக்க ஆள் இருக்கு.''

பவானி இளங்கோவைக் கை காட்டினாள்.

''மிஸ்டர் இளங்கோ. வங்கி மேனேஜரான இவர் அன்புக் கரங்கள்னு ஒரு அமைப்பு நடத்தறார். அதில் மூன்று வேன் இருக்கு. அவங்க மதியம் ஒரு மணிப்போல் உங்க கம்பெனி கேண்டீன் நோக்கி வருவாங்க. ஏன்னா கம்பெனில பன்னிரண்டு டூ ஒரு மணிதான் லஞ்ச் நேரம். இவங்க வரும்போது, மிகுதியான உணவைக் கொடுத்தா, அவங்க அதைக் கொண்டு வந்து ஒரே உணவா செய்து பொட்டலம் கட்டி, மன வளர்ச்சி இல்லாத, உடல் ஊனமுற்ற குழந்தைகள், தெருவோர அனாதைகள், முதியவர்களுக்குத் தந்து விடுவார்கள்.''

பவானி கூறியதை கை தட்டி வரவேற்றார்கள் அனைவரும்.

''மிகச் சிறப்பான விஷயம் இது.''

''அந்தப் பகுதியில் உள்ளவர்கள் கேண்டீனுக்கு வந்து கூட சாப்பிடலாம்.''

''காலையில் மீதமாகும் டிபனைக் கூட கொடுக்கலாம்.''

ஆளாளுக்குக் கருத்துக் கூற, இளங்கோ எழுந்து நின்று, அனைவருக்கும் நன்றி கூறினான்.

''நல்ல விஷயம் பவானி''

கூட்டம் கலைந்த பிறகு எம்.டி பவானியைப் பாராட்டினார்.

''நல்ல காரியங்கள் செய்யறீங்க. உங்க

அமைப்புக்கு என்ன உதவி தேவைன்னாலும் சொல்லுங்க. நான் செய்யறேன்.''

''நன்றி சார்.''

''பவானி... நீ ஆயத்த ஆடை அமைப்பையும் கவனிச்சுண்டு இந்தக் கேன்டீனையும் கவனிக்க முடியுமா?''

''கண்டிப்பாக முடியும் சார். இரண்டு பக்கமும் உதவியாளர்கள் இருக்காங்களே.''

''நம் கம்பெனியின் கீழ்ப் பக்கம்தான் அதனுடைய அலுவலகம். பக்கவாட்டில் காலி இடம் இருக்கு. அதன் கீழே அலுவலகம். மாடியில் குடோன் இருக்கும்.''

''பிறகென்ன சார். முடியும்னு நினைச்சா, எல்லாமே முடியும் எதிலும், உண்மையா, நேர்மையா நடந்தா போதும்.''

''வெரிகுட்.''

எம்.டி மகிழ்ச்சியுடன் நகர, பவானி ஹாலை விட்டு வெளியில் வந்தாள்.

''பவானி''- குமரேஷ் வாசலில் நின்றான்.

''உன் ஸ்பீச் ரொம்ப நல்லா இருந்தது.''

''நன்றி சார்.''

''உங்க சமையலும் நன்றாக இருந்தது. சாம்பார் சாதம், வித்தியாசமான டேஸ்ட்.''

''நன்றி.''

''இந்தபுதுபுராஜெக்ட்உங்கபொறுப்பிலா?''

''இல்லை சார். அதில் எக்ஸ்பெர்ட் இருக்காங்க. அவர்களுடன் ஒரு டிசைனரா செயல் படப் போறேன். அவ்வளவுதான்.''

புன்னகையுடன் பதில் சொல்லி விட்டு வெளியில் வந்தாள்.

''குமரேஷ் வீழ்ந்துட்டார் உன்கிட்ட. விரைவில் கெட்டி மேளம்தான்.''

''ஓடிப் போயிடு. கொன்னுடுவேன்.''

பவானி இளங்கோவை மிரட்டினாலும் அவள் மனதில் ஏனோ மகிழ்ச்சி இல்லை.




''மெதுவா''- மங்களா கைலாசத்தை மெல்லக் கை பிடித்து அழைத்து வந்தாள். ஹாலில் இருந்த வீல் சேரில் அமர்த்தி வாசலுக்கு அழைத்து வந்தாள்.

மழை லேசாக தூறிக் கொண்டிருந்தது. ஏற்கனவே ஜில் என்று இருக்கும் கோவை இன்னும் சில்லிப்பாக இருந்தது. மங்களா உள்ளே சென்று சூடாக வறுத்த பொறியும், டீயும் கொண்டு வந்தார்.

''ஏது?''- பார்வையால் கேட்டார் கைலாசம்.

''மழை மூடம் போட்டதுமே பொரியை வறுத்துட்டேன். டீ மட்டும் போட்டேன். சூடா குடிங்க.''

கைலாசம் டீ தம்ளரை வாங்கிக் கொண்டார்.

வலது கை செயல்பட ஆரம்பித்து விட்டது. லேசாகப் பேச்சு சரளமாக வர ஆரம்பித்திருக்கிறது. யாரானும் பிடித்துக் கொண்டால் சிறிது தொலைவு நடக்கிறார்.

உடல் நோய் குணமாக மாத்திரை பாதின்னா, மன உற்சாகம் பாதி என்று மங்களா அவருக்குப் பிடித்தமான விஷயங்களைச் செய்தாள். நிறையப் புத்தகங்களைப் படித்துக் காட்டினாள். சங்கீதம் கேட்க வைத்தாள். பழைய, புதிய பாடல்களைக் கேட்கச் செய்தாள்.

அருகில் அமர்ந்து பழைய கதைகளைப் பேசினாள்.

''அம்மா எப்படி இருக்காங்க?''

''நல்லா இருக்காங்க. உங்க மேல வருத்தம்தான். கோபம் இல்லை.''

''புரியுது. ஆனா எதோ ஒரு முட்டாள்தனம். அழகுதான், அந்தஸ்துதான் வாழ்க்கைன்னு போலித்தனமான மயக்கத்துல இருந்துட்டேன். நான் இந்தக் குழந்தைகளை நல்லா வளர்க்கலை, ஆனா நீ பவானியை அருமையா வளர்த்திருக்கே. அவளை நினைக்கும்போது எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு.''

அவரின் வார்த்தைகள் மங்களாவை முகம் மலரச் செய்தது,

பவானி இப்போது காலில் சக்கரம் கட்டி இருந்தாள். புதிய யூனிட், கேண்டீன் என்று வேலை இறுக்கமாக இருந்தது. ஆனாலும் உற்சாகமாக அதைச் செய்தாள். இரண்டுமே அவளுக்குப் பிடித்த வேலை.

கேண்டீனில் உதவியாளரிடம் சொல்ல வேண்டிய சமையல் குறிப்புகளைச் சொல்லி விட்டு, ஆயத்த ஆடை பிரிவுக்கு வருவாள். டெக்ஸ்டைல் டிசைனிங் படித்த இஞ்சினீயர்களுடன் சேர்ந்து கணினியில் வித, விதமான ஆடை டிசைனை உருவாக்குவது அவளுக்கு சுவாரஸ்யமாக இருந்தது.

அதில் தேர்ந்தெடுத்த டிசைனை, எம்.டி. க்கு அனுப்பி, அவரின் ஒப்புதல்

பெற்ற பிறகு அவைகள் தையல் பிரிவுக்குப் போகும். அதன் பிறகு அவைகள் ரெடியாகி ஷோரூமுக்குப் போகும்.

மூன்று மாதங்கள்தான் ஆகிறது. எம்.டி. மிகப் பிரமாதமாக விளம்பரம் கொடுத் திருந்தார். டி.வி, பத்திரிகை, என்று விளம்பரம் வந்தது. கோவையின் முக்கியமான இடங் களில் பெரிய கட் அவுட்டுகள் வைத்து பிரமாதப் படுத்தியிருந்தார்.

அதற்கு ஆர்டர்கள் வந்து குவியும் வேகம் பார்த்து எம்.டி குளிர்ந்து போனார். மகிழ்ச்சியுடன், தலைமை என்ஜினீயர்கள் பவானி போடும் டிசைன்களை அப்படியே உருவாக்கலாம் என்று கூறி விட்டார். எனவே பவானி டிசைன் செய்யும், ஆடை வடிவங்கள் எந்த மாற்றமும் இல்லாமல் தைப்பதற்குப் போனது.

பவானியிடம் நான் என்ற கர்வம் வளரவில்லை. தன்னை நம்பி ஒப்படைத்த வேலையைச் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம்தான் இருந்தது. தன் சீனியர் எஞ்சினீயர்களுக்கு மிகுந்த மரியாதை கொடுத்தாள்.

''நீங்க பாருங்க சார். ஓகேன்னா இதைப் பண்ணலாம்'' என்று அவள் கூறியது அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது.

''நீங்க இதுக்குன்னே படிச்சுட்டு வந்திருக்கீங்க. நீங்க சொல்றதுதான் சரியா இருக்கும் சார்'' என்ற அவளின் அடக்கம் அவர்களுக்குப் பிடித்தது. எனவே புது நிறுவனம் சுமுகமாக ஓடியது.

அத்துடன் பவானி புதிதாக டவுன் ஹாலில் ஒரு ஹோட்டல் திறந்திருந்தாள். முற்றிலும் அநாதை, முதியோர்கள், மன வளர்ச்சி குன்றிய, தெருவோரக் குழந்தைகளுக்கானது. பல்வேறு நிறுவனங்களில் மீதமாகும் உணவுகள் அங்கு வந்து சேரும். மீண்டும் அதை சூடு படுத்தி, புதிதாக ஏதானும் சேர்த்துச் சமைத்து அவர்களுக்கு சாப்பிடப் போடுவாள். தவிர இரவுக்கும் கட்டிக் கொடுத்து அனுப்பி விடுவாள்.

இளங்கோவின் அமைப்புடன் சேர்ந்து இதைத தொடங்கினாள்.

மதியம் ஒரு மணியிலிருந்து மூன்று மணி வரை நிறைய பேர் வந்து அங்கேயே சூடாகச் சாப்பிட்டு விட்டு திருப்தியுடன் போவது பரமானந்தமாக இருந்தது அவர்களுக்கு. மற்றொரு கம்பெனி எம்.டி அந்த இடத்தை இலவசமாகத் தந்திருந்தார்.



## கீரைகளின் பயன்கள்!

அகத்திக்கீரை: பித்தம் தீரும்; வெப்பத்தை குறைத்து, உடலுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தும். ஜீரண சக்தியை பெருக்கும். இதை 15 நாட்களுக்கு ஒரு முறை பயன்படுத்தி வர, உடல் ஆரோக்கியமாகும்.

அரைக்கீரை: சளி, இருமல், தொண்டைப்புண் மற்றும் காய்ச்சல் நீக்கும். உடல் சூட்டை சமப்படுத்தும்: மலச்சிக்கல் நீங்கும்; வாத நோய்களை கட்டுப்படுத்தும்; இதயம்; மூளை வலுப்பெறும்.

காசினிக் கீரை: இது நீரிழிவு, வாதம், உடல் சூடு, ரத்த சுக்தி, மூட்டு வீக்கம் போன்றவை நீங்க உதவுகிறது.

சிறு கீரை: சிறுநீரகத்தில் உண்டாகும் நோய்கள், பித்தம், கண் மற்றும் காச நோய்களை குணப்படுத்தும்; முகப்பொழிவு, உடல் வலு உண் டாகும்.

சிக்காங்கீரை: எல்லாவித பித்தங்கள், குடல் கோளாறுகள், நெஞ்செரிச்சல், வாய்வு, குன்மவலி, வாந்தி இவற்றை நீக்கி பசி உண் டாகும். மதுவின் பாதிப்பை போக்கும்; ஈரல் வலுவடையும்; ரத்தத்தை சுத்தி செய்யும்.

பசலைக்கீரை: கண் எரிச்சல், நீர்க்கடுப்பு, வெள்ளைப் போக்கு, வாந்தியைப் போக்கும்; கர்ப்பிணி பெண்களுக்கு ஏற்படும் மலச்சிக்கல், நீர் அடைப்புக்கு இது சிறந்த நிவாரணம். தாய்ப்பால் சுரக்கும்; சீழ் பிடித்து வேதனை தரும் கட்டிகளின் மீது இதன் இலைகளை வதக்கி கட்டினால், கட்டி உடைந்து சரியாகும்.

பருப்புக்கீரை: ரத்த சுத்திக்கு சிறந்தது; எல்லாவித சரும நோய்கள், மேக ரோகங்கள்,

''எல்லோரிடமும் நல்லது செய்யணும் என்ற எண்ணம் இருக்கிறது. அதைச் செய்ய சரியான வழி தெரியவில்லை.''- என்பார் எம்.டி.

''இந்தச் சமூகத்துக்கு நம்மால் முடிந்ததைச்



பித்த கோளாறுகள், கல்லீரல் நோய்கள், சிறுநீரக கோளாறுகள், சீதபேதி இவற்றை நீக்கும்.

புளிச்சகீரை: சொறி, சிரங்கு, கரப்பான் போன்ற தோல் நோய்கள் விலகும். மந்தம் விலகும்; காசநோய் கட்டுப்படும்; தேக பலம், அழகு கூடும்.

பிரண்டை இலை: சுளுக்கு குணமாகும்; நன்றாக பசி எடுக்கும்; ஜுரம் குறையும்.

பொன்னாங்கண்ணிக் கீரை: இது தங்க சத்து உடையது. கண் மற்றும் மூல நோய், மூட்டு வலிக்கு சிறந்த நிவாரணி. ஈரல் வலுப்படும்;

நெஞ்செரிச்சல் தணியும்; காமாலை நோய்க்கு சிறந்தது.

வெந்தயக் கீரை: இரும்புச் சத்து நிறைந்தது. நீரிழிவு நோய்க்கு சிறந்த நிவாரணி; ஊளைச் சதை மற்றும் உடல் சூட்டை குறைக்கும்; வாய் நாற்றம், புளிச்ச ஏப்பம் விலகும். உடல் வலிமை பெறும்; சொறி, சிரங்கு தீரும்.

மணத்தக்காளி கீரை: வாய்ப்புண், குடல் புண் குணமாகும்; மூலச்சூடு, உடல்சூடு, ஆசனக் கடுப்பு, நீர்க்கடுப்பு நீங்கும்; மூலம், காமாலை நோய் நீங்கும்.

முருங்கைக் கீரை: பித்தம், கண் நோய்கள், தலை சம்பந்தப்பட்ட நோய்கள், உடல் சூடு, அக்னி மந்தம் தீரும். அடிக்கடி சாப்பிட்டால் நரம்புகள் வலிமையடையும்.

முளைக்கீரை: குழந்தைகளின் மூளை மற்றும் வளர்ச்சிக்கு சிறந்தது. சிரங்கு மற்றும் சரும நோய்கள் குணமாகும். தலை முடி கருமையுடன் இருக்கும். மூலச்சூடு, குடல் புண்கள், சிறு நீர் கோளாறுகள் தீரும். நல்ல பசி உண்டாகும்.

– தொகுப்பு: கோட்டாறு ஆ.கோலப்பன்,
நாகர்கோவில்

செய்யணும்கிற எண்ணம் இருந்தால் போதும். தானாகவே வழி பிறக்கும்''- என்பாள் பவானி.

அவளுக்கு ஒவ்வொரு வழியாகத் திறந்தது.

கௌரவம், புகழ், மதிப்பு, மரியாதை, புகழ் சேரச், சேர அது கைலாசத்துக்குள் ஒரு பரபரப்பை உண்டு செய்தது.

நம் கோவையின் அடையாளம் என்று ஒரு டி.வி. சேனல் அவளைப் பேட்டி எடுத்தது. அதில் தன் வெற்றிக்கு முழுக் காரணம் என்று மங்களா, இளங்கோ, பெயர்களைச் சொன்னது அவருக்குள் ஒரு ஏக்கத்தை உண்டு செய்தது.

''எப்போ என்னை தன் அப்பான்னு சொல்வா?''

''அவ உங்க பொண்ணுன்னு நீங்க சொல்லும்போது''

''நான்தான் ஒத்துகிட்டேனே?''

''அதை பகிரங்கமா ஊர் உலகம் அறியச் சொல்லுங்க.''

கைலாசம் தயங்கினார். விஜயம், சுரேஷ் தவிர சமூகத்தை நினைத்தும் சங்கடப் பட்டார். அவமானம், தன் மரியாதை போய் விடும் என்ற தயக்கம் அவரிடம் இருந்தது. நாளைக்கு சுரேஷ் கல்யாணம் என்று வரும்போது இது பெரிய தடையாக எதிரில் நிற்கும் என்று நினைத்தார்.

அதே சமயம் புகழின் உச்சியில் பவானி போகப் போக அவளை நினைத்து பெருமிதப் பட்டது மனம்.

''போலித்தனமான கௌரவத்துல இன்னும் வாழ்ந்துகிட்டு இருக்கீங்க. அந்தப் போர்வையை இழுத்து எறிங்க. எல்லாமே சரியாகும். கௌரவம், மரியாதைங்கறது மத்தவங்க தரது இல்லை. நாம் உருவாக்கிக்கறது.''

மங்களா அழுத்தமாகக் கூறினாள்.

''மஞ்சு ஓடிப் போனாளே, அப்போ உங்க கௌரவம் எங்க போச்சு?''

''.......''

''வீண் ஆசைகள் வேண்டாம். உங்க குடும்பத்து பிரச்சினைகளை தீர்க்கப் பாருங்க. என்னை உங்க மனைவின்னு சொல்லணும், பவானியை உங்க பொண்ணுன்னு சொல்லணும்னு நாங்க என்னைக்கும் விரும்பலை. மேலும் எப்பவும் விஜயத்தின் வாழ்வில் நான் குறுக்க வர மாட்டேன்.''- மங்களா எழுந்தார். டம்ளர், தட்டுகளைக் கொண்டுபோய் உள்ளே வைத்து விட்டு வரும்போது விஜயம் மெல்ல தளர்ந்து படி ஏறிக் கொண்டிருந்தார்.

லேடீஸ் கிளப்பில் ஏதோ மீட்டிங் என்று போயிருந்தார்.

''என்னாச்சு?''

மங்களா கவலையோடு கேட்டார். எந்தப்

பதிலும் சொல்லவில்லை. கண்கள் கலங்கி, கண்ணீர் வழிந்தது.

''என்ன விஜயம்?- கைலாசம்.

''ஆடம்பரமான வாழ்க்கை, சொகுசு, வேணும்னு நினைச்சேன். ஆனா குழந்தைகள் வாழ்க்கைதான் மகிழ்ச்சின்னு நினைக்காம போயிட்டேன். வீட்டில் ஒரு தாயா என் கடமையைச் செய்யாம, வெளில சுத்தினதுல, குழந்தைகளைச் சரியா வளர்க்கலை நான்.''

''இப்போ எதுக்கு இப்படிப் பேசறீங்க?''

''மஞ்சு இன்னைக்கு லேடீஸ் கிளப் அலுவலகத்துக்கு வந்திருந்தா.''

எல்லோருமே எதிர்பார்த்த விஷயம் இது. நிச்சயம் ஒருநாள் மஞ்சு கண்ணீரோடு வந்து நிற்பாள் என்று நினைத்தாள் மங்களா. அது இவ்வளவு சீக்கிரம் நடக்கும் என்று நினைக்கவில்லை மங்களா?

''என்ன ஆச்சு?''

''சரண் வீட்டுல உங்கப்பா வீட்டுல போய் நகை, பணம் வாங்கிட்டு வான்னு சொல் றாங்களாம். வந்து அழுறா.''

எதுவுமே வேண்டாம்னு சொல்லித்தானே போனா?''

''அவ போனா... ஆனா அவங்க இதுக் காகத்தானே அவளை இழுத்துட்டுப் போனாங்க''

அந்த இடத்தில் மௌனம் நிலவியது. என்ன பேசுவது என்று தெரியவில்லை. சுரேஷ் வந்தவன் நின்று விஷயம் கேட்டு விட்டு உள்ளே போனான்.

''என்ன இவன் எதுவுமே பேசாமல் போறான்?''

''அவனுக்கு ஏதானும் பொறுப்பு வந்து டுமோன்னு பயம்.''- விஜயம் வெறுப்புடன் பேசினாள்.

மங்களா எழுந்து உள்ளே வந்தார். சுரேஷ் ஹாலில் காதில் ஹெட்போன் மாட்டியபடி, பாட்டு கேட்டுக் கொண்டிருந்தான். உடையைக் கூடக் கழற்றவில்லை. மங்களா அவன் தோளைத் தொட்டாள்.

''என்ன ஆன்ட்டி''

''இது ரொம்பத் தப்பு. சுரேஷ்.''

''என்ன சொல்றீங்க?''

''மஞ்சு உன் தங்கை. அவளை விடு. அவள் செய்தது தவறுதான். ஆனால் அதுக்காக இப்போ அவளை உதறுவது, கண்டுக்காம இருக்கறது ரொம்பத் தப்பு. பெத்தவங்களுக்கு பிள்ளை அனுசரணையா இருக்கணும். இது நம்ம அப்பா, அம்மா, தங்கைன்னு பாசம் வேணும். ஹோட்டலுக்குப் போறீங்க, டிபன் கொண்டு வந்து வைக்கற சர்வருக்கு டிப்ஸ் தரீங்க.

ஆனா, உங்களை வளர்த்து, ஆளாக்கி நல்ல நிலைமைக்குக்கொண்டுவரபெத்தவங்களுக்கு நீங்க என்ன டிப்ஸ் தரீங்க? அவங்க என்ன காசா கேக்கறாங்க? நான் இருக்கேன்ற உங்க ஆதரவான மொழிகளைத்தான். அதைத் தரத்துல உங்களுக்கு என்ன கஷ்டம்? ஒரு நல்ல மகன், பெத்தவங்க வேதனைல துணை நிப்பாங்க. உடன் பிறந்த சகோதரிகள்கிட்ட பிரியமா, அனுசரணையா இருப்பான்.

அப்பா, அம்மா கொடுக்கற படிப்பு, சொத்து மட்டும் வேணும். ஆனா அவங்க வேணாமா?''

''நான் எப்போ வேணாம்னு சொன் னேன்?''- ஈனஸ்வரத்தில் முனகினான் சுரேஷ்.

''இப்போ நின்னு என்ன, ஏதுன்னு கேட் காம வந்தியே? அதைத்தான் கேட்கறேன்.''

''அவ ஓடிப்போனா. அதுக்கு நான் என்ன செய்ய முடியும்.?''

''இதான் தப்பு. அண்ணான்னு நீ அவகிட்ட என்ன பிரியம் காட்டியிருக்கே? நீ பாட்டுக்கு மொபைலே உலகம்னு இருந்தே. உங்கம்மா, லேடீஸ் கிளப். கோசாலை, நவநாகரீகம்னு ஊர் சுத்தினாங்க. உங்கப்பா சொல்லவே வேண்டாம். ஷோக் பேர்வழி. அவளுக்கான என்டர்டெயின் மென்ட் எங்க இருந்தது? யாரானும் உட்கார்ந்து அவ கூடப் பேசி இருக்கீங்களா?''

சுரேஷ் தலை குனிந்தான்.

''ஒன்னு மட்டும் வச்சுக்கோ. பெத்தவங்க உன்கிட்ட எதிர்பாக்கறது பணமோ, காசோ இல்லை. அனுசரணை, அக்கறை மட்டுமே. அப்பா நான் இருக்கேன்னு சொல்லிப் பாரு. கோடி ரூபாய் கொடுத்த சந்தோசம் அவங்களுக்கு. உன்னைப் பார்த்துதான் உன் குழந்தைகள் வளரும். வெளிநாடு போறது வாழ்க்கை இல்லை. பெத்தவங்க மகிழற மாதிரி வாழ்றதுதான் நிறைவு.''

''நான் என்ன பண்ணனும்?''

''ஒரு பொறுப்பான அண்ணனா, மகனா யோசி''

மங்களா வெளியில் வந்தாள்.

''நன்றி மங்களா''- வெளியில் நின்றிருந்த விஜயம் அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்.

சின்னச்சிரிப்புடன் அவள் கையைத் தட்டித் தந்தாள் மங்களா.




''வணக்கம்''- கை கூப்பிய மங்களாவை கேள்வியுடன் ஏறிட்டார் சரணின் அப்பா.

''யாரும்மா நீங்க?''

''என் பெயர் மங்களா. நான் மஞ்சுவோட அப்பாவின் நர்ஸ்.''

''அவர் முகத்தில் குழப்பம். ''நான் உன்னை வரச் சொல்லவில்லையே?''

''நீ சொல்லி நான் வரலையே?''- புன்னகையோடு திருப்பிக் கொடுத்த அவள் பேச்சில் அவர் அதிர்ந்தார்.

''ஏய், முதல்ல மரியாதையாப் பேசு''

''நீங்க பேசினா, நானும் பேசுவேன். ஏன்னா, தராதரம் பார்த்துதான் நான் பேசுவேன்.''

''கேவலம் ஒரு நர்ஸ். இங்க வந்து திமிரா பேசறியா?''

''கேவலம் பணத்துக்காக பிள்ளையை விக்கறீங்க, உங்களை விட நான் எந்த விதத்தில் கேவலம்?''

அவர் நிதானித்தார். ''உட்காருங்க''- என்றார்.

''நன்றி''- மங்களா அமர்ந்தாள்.

''மஞ்சு'' அவர் அழைத்ததும் வெளியில் வந்தவளைப் பார்த்ததும் அதிர்ந்து போனாள் மங்களா. கருத்து, இளைத்து, கண்கள் உள்ளடங்கி, எலும்புக் கூடாய் நின்றாள் மஞ்சு. அவள் படும் வேதனையை, அவலத்தை அந்தத் தோற்றமே உணர்த்தியது. மங்களாவைப் புரியாமல் பார்த்தாள் மஞ்சு.

''நான் பவானியோட அம்மா.'' என்றதும் ஓடி வந்து கட்டிக் கொண்டாள். ''அம்மா'' என்று விம்மல் வெடித்தது. அவளின் அழுகுரல் கேட்டு சரணின் அம்மா வெளியில் வந்தார். பின்னாடியே சரண்.

''யார் நீங்க?'' அவன் கேள்விக்குப் பதில் சொல்லாமல் பின்னாடி திரும்பி, ''சுரேஷ்'' என்று அழைக்க சுரேஷ் உள்ளே வந்தான்.

''அண்ணா''- என்று அவனைப் பார்த்ததும் அழுகை மஞ்சுவுக்கு அதிகரித்தது.

''இதோ பார். அழறதால நடந்த எதையும் மாத்த முடித்து. சாதிக்கவும் முடியாது. நான் இப்போ போலீஸ்ல சொல்லிட்டுதான் வந்திருக்கேன். வரதட்சனை கொடுமைன்னு. ஏண்டா, காதலிக்கறப்போ, தேன் ஒழுகப் பேசறீங்க? அப்புறம் அதைக் கொண்டா, இதைக் கொண்டான்னு மனைவியைப் படுத்த வேண்டியது. இன்னும் நீங்க திருந்தவே மாட்டீங்களா?''- சுரேஷ் கொதித்தான்.

அழகு பிம்பமாய் இருந்த தங்கை சுட்ட கத்திரிக்காய் போல் வாடி வதங்கி, கண்ணீர் மல்க நிற்பதைப் பார்த்ததும் அவனால் தாங்க முடியவில்லை. மனது கொந்தளிக்க கத்தினான். சரண் மேல் கை வைக்கக் கூடாது என்று சொல்லித்தான் அழைத்து வந்திருந்தாள் மங்களா. ஆனாலும் அவனால் தாங்க முடியவில்லை.

''ஏண்டா, அவகிட்ட என்ன பணம் காசு இருக்கு? நகை இருக்குன்னு பார்த்துதான் காதலிச்சியா? அப்போ உன் காதலுக்கு என்னடா அர்த்தம்? படிப்பு முடியலை. அதுக்குள்ளே காதலிச்சு இழுத்துட்டு ஓடி வந்துட்டு, இப்போ, பணத்தைக் கொண்டா, நகையைக் கொண்டான்னா, நீ ஒரு ஆம்பளையா? கட்டினவளை காப்பாத்த முடியலை. உனக்கெதுக்கு மனைவி? காதல். உனக்கும் விபசாரிக்கும் என்னடா வித்தியாசம்?''

''ஏய் மரியாதையா பேசு''- அப்பா கத்தினார்.

''டேய்ய், உனக்கென்னடா மரியாதை? பிள்ளையை விக்கறே. உனக்கு மரியாதை ஒரு கேடா?''- சுரேஷ் சரண் பக்கம் திரும்பினான்.

''இதோ பார், உன் காதல் உண்மைன்னா, நீ இப்பவே எங்க கூட வா. உனக்கு வேலை வாங்கித் தரேன். எங்க வீட்டு மாப்பிள்ளையா இரு. இல்லை அப்படின்னா, நாங்க போலீஸ்ல ரிபோர்ட் தருவோம். வரதட்சனை சட்டத்துல கைது செஞ்சா, மீண்டு வரவே முடியாது. என்ன, எங்களுக்கு ஆள் இல்லைன்னு நினைச்சியா?''

''......''

''ஒரு ஆண் அப்படின்னா, உண்மையா இருக்கணும். தன்னை நம்பி வந்தவளைக் கண் கலங்காம பாத்துக்கணும். அவகிட்ட காசு வாங்கி அவளுக்கே பூ வாங்கித் தரத்துக்கு நீ என்னத்துக்குடா? ஒருத்திய வச்சுக் காப்பாத்த முடியாத கழிசடைக்கு கல்யாணம் எதுக்கு? காதல்னு அதைக் கொச்சைப் படுத்தாதே''

''......''

''ஒரு பெண்ணை நம்ப வச்சு ஏமாத்தறதுல உனக்கென்ன அவ்வளவு ஆர்வம்? அவ பாட்டுக்கு காலேஜ் போய் வந்துட்டிருந்தா.

அவளுக்கு ஆசை காட்டி மோசம் செய்யறியே, நீ மனுஷனா?''

கொந்தளித்த சுரேஷை அடக்கினாள் மங்களா.

''பாருங்க. எங்க பொண்ணு உங்க பையனை நம்பி, அவ அப்பாவுக்கு அவ்வளவு துரோகத்தைச் செஞ்சிட்டு வந்திருக்கா. சரண் உன் காதல் உண்மையான்னு நீ நிரூபிக்கணும் இன்னைக்கு இளமைத் திமிர்ல ஆடிடலாம். ஆனால் அதற்கான தண்டனையை அனுபவிக்கும் போது ஏற்படும் வேதனை தாங்க முடியாது.''

''மிரட்டறீங்களா?''- அம்மா.

''உங்களுக்கு பெண் இருக்கா?''- மங்களாவின் கேள்விக்கு எடுப்பாகப் பதில் சொன்னாள் அம்மா.

''இருக்கா. அவளுக்கு அருமையான இடத்துல கல்யாணம் செஞ்சு தந்திருக்கோம். யாரையும் கூட்டிட்டு ஓடலை.''



''ஓடிப் போகலை. ஆனா சந்தோஷமா வாழறாளா''

''அதற்குப் பதில் சொல்லவில்லை அம்மா பெண்ணுக்கு இன்னும் குழந்தை இல்லை. அதனால் அந்த வீட்டில் நிறையப் பிரச்சினை. நிம்மதி இல்லாமல் தினமும் போன் செய்து அழுகிறாள்.

''எங்களுக்கு எல்லாம் தெரியும். நாங்க விசாரிச்சுட்டுதான் வரோம். பொண்ணுக்கு குழந்தை இல்லை. சரணுக்கு வேலை இல்லை. உங்க வீட்டுக்காரருக்கு கிட்னி பிரச்சினை. உங்களுக்கு ஹை பிபி. எல்லாத்துக்கும் காரணம் அதிகப்படியான ஆசை தான்.''

மங்களா நிதானமாகப் பேசினாள்.

''வரப்போ என்ன கொண்டு வந்தீங்க? போறப்போ என்ன கொண்டு போகப் போறீங்க? உங்க ஆசை நிறைவேற நீங்க தான் பாடுபடனும். அதை விட்டுட்டு இன்னொருத்தர் வீட்டுப் பெண்ணை இம்சிப்பது என்ன நியாயம். இன்னொரு பெண்ணை அழ வைப்பதின் மூலம் உங்க பொண்ணு என்னைக்கும் அழுதுகிட்டு தான் இருப்பாங்க. நீங்க என்ன நினைக்கறீங்களோ அதுவே உங்களுக்கு நடக்கும். மனசுல நல்ல எண்ணங்களை வளர்த்துக்குங்க நல்ல உணர்வுகளும், எண்ணங்களும் எல்லையற்ற ஆற்றல் படித்தவை.


ஒரு வீட்டுக்கு வர பொண்ணு எப்படி குணம்னு பாருங்க. என்ன கொண்டு வருவான்னு நினைக்காதீங்க. வாழ்க்கை ஒருவட்டம். அது நம்மகிட்டே திரும்பி வரும். அடுத்தவங்க கூட நம்மை ஒப்பிடுவது, அடுத்தகிட்ட எதிர்பாக்கிறது, இதை விட்ருங்க''- மங்களா.

''அன்பை வெறும்

பேச்சில் காட்டாமல் செயலில் காட்டுங்கள். போலித்தனமான காதல் வேண்டாம். வாழ்க்கையை எளிமையா வாழ்ந்தா மத்தவங்களை இம்சிக்க தோணாது. நீங்க பண்ற தான தருமம் எல்லாம புண்ணியம் இல்லை. ஒரு பெண் கண்ணீர் சிந்தாமல் வாழ்வதுதான் புண்ணியம்.''

எண்ணங்களின் வலிமை மிகப் பெரியது. மஞ்சுவை அன்போடு நடத்துங்க. சரண் உன் காதல் உண்மையா இருக்கட்டும். அவகிட்ட அன்பையும், காதலையும் உண்மையா செலுத்து. நீ உண்மையும், சத்தியமுமா வாழ்ந்தா உன்னைச் சுற்றி அற்புதமான அதிர்வுகள் இருக்கும். அது உனக்கு எல்லையற்ற அற்புதங்களை நிகழ்த்தும்.

கொஞ்சம் முயற்சி செய். எந்த ஒரு விஷயமும் ஏழு நாள் தொடர்ந்து செய்தால் அது பழக்கமாயிடும். உன் மனசுல மஞ்சுவை நேசி. அவளுக்கான மரியாதை, அன்பை நீ செலுத்தற



மாதிரி கற்பனை செய். வாழும் வழி இது. முயற்சி செய். உன் அக்காவுக்கு குழந்தை உண்டாகும். அம்மாவின் பிபி குறையும். அப்பாவின் கிட்னி பிரச்சினை சரியாகும். நல்ல எண்ணங்கள்தான் தெய்வீகம்.''

மங்களா எழுந்தாள். ''இனி பேச எதுவும் இல்லை. முடிவுகள் உங்கள் கையில் வீட்டுக்கு வந்த பெண்ணின் கண்ணீரைத் துடைங்க. வாழப் போன உங்க பெண்ணின் கண்ணீரும் நிற்கும். இதான் ஆக்சன், ரியாக்ஷன். நாங்க மஞ்சுவை கூட்டிட்டுப் போறோம்.''

''ஏ... ஏ... எதுக்கு?''- சரண் பதறினான்.

''நாங்க சொல்றதைச் செஞ்சு பாரு. மஞ்சு மேல உன் காதல் உண்மைன்னா,சத்தியமா, நேர்மையா வாழு. வந்து கூட்டிண்டு போ. இல்லைன்னா நாங்க டைவர்ஸ் நோட்டிஸ் அனுப்பறோம். மஞ்சு வரியா?''

மஞ்சு தயங்கினாள். சரண் முகத்தைப் பார்த்தாள்.

''அதான் கூப்பிடறாங்களே. போ. இதோ பாரு சுரேஷ். எங்க பொண்ணுக்கு நாங்க முப்பது பவுன் போட்டோம். மாப்பிள்ளைக்கு பைக் வாங்கிக் கொடுத்தோம்.''

''அதெல்லாம் உங்க பெண்ணுக்கு ஒரு குழந்தையைக் கொடுக்கலையே?''

திருப்பி அடித்தாள் மங்களா. பேச்சு எழாமல் நின்றார் அம்மா.

''மஞ்சுவை அன்பா நடத்துங்க. உங்க வீட்டு வாரிசை தரப் போகிறவள் அவள். இவளை நீங்க அன்பா நடத்தினா, உங்க பெண்ணுக்கு குழந்தை பிறக்கும். நம்முடைய நல்ல எண்ணங்கள்தான் நன்மை நடக்கக் காரணம்.''

''போலாம் மஞ்சு''- என்று சுரேஷ் கூற மஞ்சு உள்ளே போய் தன் பையை எடுத்துக் கொண்டு வந்தாள். வீட்டிலிருந்து வரும்போது ஒரு செட் டிரஸ்சோடு வந்தாள். அது மட்டும் எடுத்துக் கொண்டு கிளம்பினாள்.

''மஞ்சு என்று அழைத்த சரண் அம்மாவின் முறைப்பைப் பார்த்து அடங்கினான்.

மஞ்சுவோடு வெளியில் வந்தார்கள்.

''நீ கவலைப்படாதே மஞ்சு. நான் இருக்கேன். அவன் நிச்சயம் வருவான்''- என்ற சுரேஷை வியப்புடன் பார்த்தாள் மஞ்சு. இவனா? குடும்பத்தில் அக்கறை இல்லாமல் இருந்தவனா?

அவள் பார்வையை உணர்ந்து சங்கடமாக நெளிந்தான் சுரேஷ்..

''ஒரு மகன் எப்படி இருக்கணும்னு மங்களா ஆன்ட்டி சொன்னாங்க. அப்பா கிட்டேர்ந்து படிப்பு, சொத்துன்னு வாங்கிக் கிறோம். அதே அப்பாவுக்கு ஒரு பிரச்சினைன்னு வரப்போ தோள் கொடுக்கறது தான் நல்ல மகனுக்கு அழகு. நான் நல்ல அண்ணணாவும் இருக்கேன்.''

''அண்ணா,'' மஞ்சு அவன் கையைப் பிடித்துக் கொண்டு கலங்கினாள். நான் அவனை உண்மையா நேசிச்சேன்.''

''அவ்வளவு பெரிய காரியத்தை செஞ்சப்பவே எங்களுக்குப் புரியும். ஆழமான காதல் இல்லாம ஒரு பெண் யாரை நம்பியும் ஓடிப்போக மாட்டாள்.''

மங்களா ஆறுதலாகச் சொன்னாள்.

''ஆன்ட்டி, சரண் வருவாரா?''

''அவன் அன்பு உண்மைன்னா கண்டிப்பா வருவான்.''

''வரலைன்னா?'

''அவன் அன்பு பொய்னு அர்த்தம். அவனை நம்பாம நீ வேற வாழ்க்கைக்குத் தயார் ஆகணும்.''

''வருவான்.''- நம்பிக்கையோடு கூறினாள் மஞ்சு.




''ஹாய் பியூட்டி ''

இளங்கோ வேகமாக வந்து டேபிளில் மொபைலைப் போட்டுவிட்டு உட்கார்ந்தான்.

உதவியாளருக்கு கேண்டீன் உணவுகளுக்கு குறிப்புகள் கொடுத்துக் கொண்டிருந்த பவானி நிறுத்தி அவனைக் கவனித்தாள்.

''என்ன விஷயம்?''

''ஒரு காபி கிடைக்குமா?''

''வரும்''

''நன்றி'' இளங்கோ சாய்ந்து அமர்ந்தான். அவன் முகத்தையே உற்றுப் பார்த்தாள் பவானி.

''என்னடா ஆச்சு?''

''என்ன ஆச்சு?''- திருப்பிக் கேட்டான் இளங்கோ.

''உன் கண்ல ஒரு சோர்வு தெரியுது. முகத்

துல வழக்கமான உற்சாகம் இல்லை.''

''கில்லாடி நீ. முகத்தைப் பார்த்தே கண்டு பிடிச்சுடறே.''

''உன் பாராட்டு போதும். விஷயத்தைச் சொல்லு.''

''அதான் தெரியலை.''

''என்னடா சொல்றே. ஒழுங்கா சொல்லித் தொலை. டென்ஷன் ஏத்தாதே.''- சீறினாள் பவானி.

''அதான் சொல்றேன். ஒருத்தர்கிட்ட ஒரு விஷயம் சொல்லனும். அதை எப்படிச் சொல்றதுன்னு தெரியலை.''

''இது ஒரு பெரிய கஷ்டமா? நேரா போய் அவங்க கிட்ட சொல்லிரு.''

''அவங்க இல்லை. அவ''

''நிதானித்தாள் பவானி. அவனைக் கூர்ந்து பார்த்தாள் பவானி.

''லவ்வா?''

''எஸ்''

''அறிவிருக்கா உனக்கு.?

''உன்கிட்ட இருந்தா தாயேன்.''

''ஏண்டா, கல்யாணம் நிச்சயம் ஆகப் போகுது. இப்போ போய் லவ்வுன்னு சொல்றியே?''

''அது நின்னு போச்சு.''

அதிர்ந்தாள் பவானி. ''என்ன இளங்கோ சொல்றே''

''ஆமாம். அந்தப் பொண்ணு வேற ஒருத்தரை விரும்பறேன்னு சொன்னா எனக்கு ரொம்ப மகிழ்ச்சி. எங்கிருந்தாலும் வாழ்கன்னு சொல்லிட்டு வந்துட்டேன்.''

''மனசு வருத்தமில்லையா உனக்கு?''

''எதுக்கு வருத்தம்? என் மனசுலேயும் ஒருத்தி இருக்கா. அதை அவகிட்ட சொன்னேன். அவளும் தான் ஒருத்தனை விரும்பறேன்னு சொன்னா. ஓகே. மகிழ்ச்சி. வேலை முடிஞ்சுது.''

''இதை அந்தப் பொண்ணை பாக்கறதுக்கு முன்னாடியே சொல்லி இருக்கலாம்ல?''

''எங்க வீட்டுல யார் கேட்டாங்க? சொந்தம், கட்டி வைக்கலாம்னு நினைச்சாங்க. இப்போ அவங்களுக்கே அதிர்ச்சி. நீயே உனக்கு எந்தப் பொண்ணை பிடிக்குதோ கட்டிக்கன்னு பச்சைக் கொடி காட்டிட்டாங்க.''

''சப்போஸ், அந்தப் பொண்ணு அப்படி யாரையும் விரும்பலைன்னா.''

''நான் என் மனசுல ஒருத்தி இருக்கறான்னு சொல்லி இருப்பேன். இது எங்கம்மாவோட கட்டாயத்துல நிச்சயம் ஆனா கல்யாணம்.''

அவனை வியப்போடு பார்த்தாள் பவானி.

''அமைதியானவன். தான் உண்டு, தன் வேலையுண்டு என்று இருப்பவன். இளங்கோவின் அம்மாவும், மங்களாவும் ஒன்றாகப் படித்தவர்கள். கைலாசம் விலகிப் போனதும் நான் இருக்கேன் வா என்று நம்பிக்கை கொடுத்து சென்னை அழைத்துச் சென்றவர்.

இளங்கோவும், பவானியும் ஒன்றாகப் படித்தவர்கள். பிளஸ்டூ முடித்து அவன் டிகிரி, பேங்க் வேலை என்று போய் விட, பவானி ஹோம் சயின்ஸ், பேஷன் டிசைனிங் என்று போய் விட்டாள்.

ராமநாதன் வந்து கைலாசம் கம்பெனியில் கேண்டீன் குத்தகைக்கு அவளை அழைத்தபோது இளங்கோவின் அம்மா தான் தைரியம் கொடுத்தார்.

''அங்க போ. நம்ம இளங்கோ அங்க இருக்கான். அவன் உன்னைப் பார்த்துப்பான் என்று சொல்ல வந்தாள். இளங்கோவின் பொதுச் சேவையில் தன்னையும் ஈடுபடுத்திக் கொண்டாள்.

அவனுக்குக் கல்யாணம் என்றதும் மகிழ்ச்சியாக இருந்தது.

''இப்படி ஏமாத்திட்டியே?''

''உனக்கென்ன ஏமாற்றம்?''

''உன் கல்யாணத்துல சமையல் காண்டிராக்ட் கிடைக்கும்னு ஆசையா இருந்தேன்.''

''கர்மம். சமைக்கறதிலேயே இரு.''

''எனக்குத் தெரிஞ்சது அதானே.''

''அதை விட்டு வெளியில் வா.''

''வந்து?''

''என்னை மாதிரி ஒரு நல்ல பையனை கல்யாணம் செஞ்சுகிட்டு சந்தோஷமா வாழு.''

''அருமையான அட்வைஸ். சரி உன் மனசுல இருக்கிற அழகி யாரு.''

''அழகியா? பேரழகி. நீ அழகுன்னா என்ன நினைக்கிற? வெள்ளைத் தோலா?, உருவ அழகா? இல்லவே இல்லை. என் காதலி, தைரியமானவ. எந்தச் சவாலையும் சந்திக்கக் கூடியவா. இந்த சமூகத்தை எதிர்த்து நின்னு எல்லோருக்கும் நல்லதைச் செய்பவள். சமூக சேவகி. அன்பும், மனித நேயமும் நிறைந்தவள். நடந்த அவமானங்களுக்கு எல்லாம் பதில் சொல்பவள்.''

கண்களில் கனவுடன் பேசியவனை அதிசயமாகப் பார்த்தாள் பவானி.

''ரொம்ப சந்தோஷமாக இருக்கு இளங்கோ. நான் அவளைப் பார்க்க முடியுமா?''

''இதோ இப்பவே''- இளங்கோ தன் பையிலிருந்து பர்ஸை எடுத்தான். பாரு

என்றான்.

பவானி அதை வாங்கிப் பிரித்துப் பார்த்தாள். ஒரு கண்ணாடி மட்டும் இருந்தது. போட்டோ எதுவும் இல்லை.

''இதுல எதுவும் இல்லையே?''

''கண்ணாடி இருக்குல்ல?''

''ம், இருக்கு.''

''அதுல பாரு.''

''என் முகம்தான் தெரியுது....''- சொன்னவள் சட்டென்று நிதானித்து அவனைப் பார்த்தாள். இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

''அந்த முகம்தான் என் நெஞ்சில் உள்ள முகம்''

அவள் முகத்தைப் பார்த்து புன்னகையுடன் கூறினான் இளங்கோ.

''சின்ன வயசுலேர்ந்து என் மனதில் பதிந்த முகம். இதைத் தவிர வேறு எதுவும் பதியவில்லை.''

நாக்கு ஒட்டிக் கொண்டது. என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. அவள் எதிர்பார்க்காத விஷயம் இது. தன்னையும் ஒருவன் நேசிக்கிறான் என்பதே அவளுக்கு அதிசயமாக இருந்தது. இது என்ன மாயம்?

அவள் திகைப்பை ரசித்தான் இளங்கோ.

''இளங்கோ, இது என்ன? நானா?''

''பவானி ஒருத்தரை விரும்ப அவ அழகா இருக்கணும்னு அவசியமில்லை. அன்பானவளா இருந்தால் போதும். சோறு போடறது அழகு இல்லை. வயசுக் காலத்துல நம்ம துணை இருக்காங்கற உணர்வுதான் அழகு. அன்பு, அக்கறை, பரிவு, பாசம் இது மனசுக்குத் தர மகிழ்ச்சியை அழகு தராது.''

பவானிக்கு அழுகை வரும்போல் இருந்தது. கண்ணைக் கொட்டி ததும்பிய கண்ணீரை அடக்கினாள்.

''ஏன், என்னைக் கல்யாணம் செஞ்சுக்கணும்னு நினைச்சா அழுகை வருதா?''

''போடா, அதெல்லாம் இல்லை.''

''பின்ன? ஆனந்தக் கண்ணீரா?''

''அதுவும் இல்லை.''


''இது என்னடா சோதனை. பின்ன உன் மனசுல யாரானும் இருக்காங்களா?

''ஆமாம். என்னை யார் லவ் பண்ணப் போறாங்க?''

''ஏன் நான் இல்லையா?''

''நீ ஒரு பைத்தியம்.''

''கரெக்ட், பைத்தியம் பைத்தியத்தைக் கல்யாணம் செஞ்சுண்டு கவலை இல்லாம வாழப் போகுது. உனக்கு ஒரு விஷயம்



# அந்தமானில் புதிய தாவர இனம் கண்டுபிடிப்பு!

அந்தமான் நிக்கோபார் தீவுக் கூட்டம் அருகே ஒரு புதிய வகை தாவர இனத்தை இந்திய அறிவியலாளர்கள் கண்டு பிடித்து உள்ளனர். இவர்கள் பஞ்சாப் மத்திய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவர்கள்.

★ 2019ஆம் ஆண்டு அந்தத் தீவு கூட்டத்திற்கு பயணம் மேற்கொண்ட உயிரியலாளர்கள் அங்கு கடலில் வாழும், பச்சை நிற பூஞ்சை ஒன்றைக் கண்டனர்.

★ அப்பொழுதுதான் அந்தப் பூஞ்சை முதல்முறையாக அறிவியலாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்வதற்கு இரண்டரை ஆண்டு காலம் ஆகியுள்ளது.

★ சுமார் 40 ஆண்டு காலத்தில் புதிதாக ஒரு பூஞ்சை இனம் அந்தமான் அருகே கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதல் முறை என்று அறிவியலாளர்கள் கூறுகிறார்கள்.

★ இந்தப் பூஞ்சை பற்றிய ஐந்து சுவாரசிய தகவல்கள் இதோ.

★ இந்தப் பூஞ்சை இனத்துக்கு அசெடாபுலே ரயாரியா ஜலகன்யகே (**Acetabularia jalakanyakae**) என்று பஞ்சாப் மத்திய பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் பெயரிட்டுள்ளனர். சமஸ்கிருதத்தில் 'ஜலகன்யகா' என்றால் கடல்கன்னி என்றும் பெருங்கடல்களின் பெண் கடவுள் என்றும் பொருள்.



★ டென்மார்க்கைச் சேர்ந்த புனைக்கதை எழுத்தாளர் ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன் கதையில் உள்ள கற்பனை கதாபாத்திரமான 'லிட்டில் மெர்மெய்ட்' (**Little Mermaid**) கதாபாத்திரத்தால் உந்தப்பட்டு இவ்வாறு பெயரிடப்பட்டுள்ள தாக இந்த ஆய்வில் ஈடுபட்ட உயிரியலா ளர்கள் கூறுகிறார்கள். 'மெர்மெய்ட்' என்பது கற்பனையான கடல் கன்னியைக் குறிக்கும்.

★ இந்தப் புதிய கண்டுபிடிப்பு மிகவும் வியப்பளிக்கும் வகையில் உள்ளது. ஒரு கடல் கன்னிக்கு இருக்கும் குடையைப் போல மிகவும் நுணுக்கமான வடிவமைப்பைக் கொண்ட மேல்கூரை இந்தப் பூஞ்சைக்கு உள்ளது என்று இந்த ஆய்வுக்கு தலைமை தாங்கிய முனைவர் ஃபெலிக்ஸ் பஸ்ட் கூறுகிறார்.

★ புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள இந்தத் தாவர இனத்துக்கு இருக்கும் முக்கியத்துவம் என்னவென்றால் ஒரே மிகப்பெரிய அணுவால் இது உருவாக்கப்பட்டுள்ளது.

★ இந்த தாவர இனத்தின் டிஎன்ஏவை தங்கள் ஆய்வகத்தில் உள்ள பிற தாவர இனங்களின் டிஎன்ஏவுடன் ஒப்பிடுவதற்காகவே இந்த உயிரியலாளர்கள் 18 மாத காலத்துக்கும் அதிகமான காலத்தைச் செலவு செய்துள்ளனர்.

இந்தக் கண்டுபிடிப்பு குறித்த ஆய்வுக் கட்டுரையும் இந்தியன் ஜர்னல் ஆப் ஜியோ-மரைன் சயின்சஸ் எனும் சஞ்சிகையில் பதிப்பிக்க ஏற்றுக்கொண்டுள்ளது.

புரியலை, குழந்தைகள், பைத்தியங்கள் வாழ்வில் கவலைங்கறது இல்லை.''

தன்னை மறந்து சிரித்தாள்.

''ஆங் தட்ஸ் குட். எப்பவும் சிரிச்சுகிட்டே இரு. எல்லாம் நல்லதா நடக்கும். எங்கம்மா, உங்க அம்மாகிட்ட பேசியாச்சு. உன் சம்மதம் மட்டுமே பாக்கி.''

''இது என்னது?''- பவானி திகைத்தாள்.

''என்னங்கறே? எல்லாம் சூப்பர் ஃபாஸ்டா போயிட்டு இருக்கு.''

''நான் சம்மதம் சொல்ல வேண்டாமா?

''தேவையில்லை. உனக்குச் சம்மதம்னு எனக்குத் தெரியும்.''

''எப்படி?''

''உன் கண்ணீர். வார்த்தைகள் பேசாததை அது பேசிருச்சி.''

இளங்கோ எழுந்தான். டேபிள் மேல் கை ஊன்றி அவளைக் குனிந்து நோக்கினான்.

''நன்றி.''

''எதுக்கு நன்றி?''

''என் காதலை ஏத்துகிட்டதுக்கு. சந்திக்கலாமா?'

பதில் பேசாமல் கண்கள் முழுவதும் திகைப்பு மின்ன அவனையே பார்த்தாள் பவானி.

''கண்கள் முழுவதும் காதல் வழியுது. ஐ. லவ் யூ பவானி''- என்றான் இளங்கோ.

அழகாய் வெட்கப் பட்டாள் பவானி.




**த**ன் மனது ஏன் தவிப்பாய் உணர்கிறது?

பவானிக்குப் புரியவில்லை. தூக்கம் வராமல் புரண்டாள். மனதுக்குள் எதோ ஒரு விஷயம் பிராண்டியது. ஆனால் அது என்ன என்று தெரியவில்லை.

இளங்கோவை வெறுக்கிறோமா?

உடனே இல்லை என்றது மனது.

பின்?

அதுவும் தெரியவில்லை. ஆனால் எதோ ஒன்றை எதிர்பார்க்கிறோம் என்று மட்டும் புரிந்தது. புரண்டு படுத்தாள்.

மங்களா அவளையே பார்த்தபடி படுத்

திருப்பது புரிந்தது.

''ஏம்மா? தூங்கலையா?''

''நீ தூங்கலையா?''

''என்னவோ தூக்கம் வரலை.''

''என்ன விஷயம்?''

''தெரியலை.''

''உன் மனசுக்குள் எதோ உறுத்துது. அதான் காரணம். அது என்னன்னு கண்டுபிடி.''

''அதான்மா தெரியலை.''

''இளங்கோ வந்தானா?''

''ம் காலையில் வந்தான்.''- என்றவள் எல்லா விஷயங்களும் சொன்னாள்.

''நல்லது. ஆனா பவானி நீ முடிவெடுக்க வேண்டியது எல்லாமே. நாங்க சொல்ல எதுவுமே இல்லை. ஒரு நல்ல பையன்கிற அளவுல எங்களுக்கு அவனைப் பிடிச்சிருக்கு. ஆனா வாழப் போறது நீ''

''எனக்கும் அவனைப் பிடிக்கும்மா.''

''அப்புறம் என்ன? யாரையானும் விரும்பறியா?''

'' அய்யய்யே, என் முகத்தை யார் விரும்புவாங்க.?''

''ஏன் உன் முகத்துக்கு என்ன? உடலைப் பராமரிக்க ஆரம்பிச்ச பிறகு களையா இருக்கே. மாநிறம் கொஞ்சம் ஷைனிங்கா இருக்கு. கோவில் சிலை மாதிரி இருக்கே. உன்னை யார் வேண்டாம்னு சொல்லுவாங்க. அதைவிட நீ ஒன்னை புரிஞ்சுக்கணும். அழகை விட திறமைதான் முக்கியம். நீ செய்த சாதனைகளை யாரும் செய்யலை.''

''க்கும். உன் பொண்ணுங்கறதால உனக்கு நான் செய்யறது எல்லாமே பெரிசாத் தோணும்.''

''அப்படி இல்லை. முதல்ல மகளின் முன்னேற்றம் பெத்தவங்களுக்குத்தான் சந்தோஷம்.''

''தப்பு. அப்பா இன்னும் சந்தோஷப் படவில்லை.''

''அவர் சொன்னாத்தானா?''

''சொல்லனும்மா. இவ தன் மகள்னு அவர் சொல்லனும். அதுதான் நமக்கு அவர் செஞ்ச துரோகத்துக்கு பிராயசித்தம்.''

''துரோகம்னு ஏன் நினைக்கிறே? நம்மைப் பிடிக்கலை. அவ்வளவுதான்.''

ஆனால் மங்களாவின் குரல் நெகிழ்ந்தது புரிந்தது. கணவனுக்கு தன்னைப் பிடிக்க வில்லை. தன்னை உதறி விட்டு வந்து வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார் என்ற உணர்வு முள்ளாய் அவள் மனதைக் குத் தியது.

இப்போது அவருக்குப் பணிவிடை செய்யும்போதும், அழகுன்னு நீ விரும்பிய விஜயம் உனக்கு எந்தச் சிகிச்சையும் செய்யவில்லை. அழகு இல்லைன்னு ஒதுக்கிய நான்தான் வந்து உனக்குத் தாதியாய் இருக்கிறேன் என்று கூறத் துடிக்கும் அவளின் மனம்.

தேவை என்று வந்தால் மட்டும் மனைவி அழகில்லை என்ற உணர்வு மறைந்து விடுமா? கைலாசம் அடிக்கடி மங்களா என்று கூப்பிடும்போது மனது அலறும். அவர் தன்னை உதறி விட்டு வந்தது, ஒரு பெண் குழந்தையுடன் தான் பட்ட அவஸ்தைகள் அனைத்தும் ஞாபகத்தில் வந்து போகும்.

மாமியார், இளங்கோவின் அம்மா இல்லை என்றால் தன் நிலை என்னவாகி இருக்கும் என்று தெரியவில்லை. இப்படி உதவிக்கு வந்து நிற்பது கூட ஒரு விதமான பழி வாங்கல்தான்.

மங்களாவின் மனக் குமுறல் பவானிக்குப் புரிந்தது.

ஆனால் பதில் பேசாமல் படுக்கையில் விழித்தபடி படுத்திருந்தாள்.

இரவு ஒரு மணி இருக்கும். கீழே பட்டறையில் இன்னும் தூங்காமல் மரம் அறுத்தக் கொண்டிருந்தார்கள். சோடியம் விளக்கின் ஒளி செந்நிறத்தில் வீட்டுக்குள் வீசியது. காற்றுக்கு திரைச்சீலை அசையும் போதெல்லாம் வெளிச்சம் உள்ளே வந்து போனது.

''ஒரு வார்த்தை... ஒரே ஒரு வார்த்தை இவ என் மனைவின்னு அவர் சொல்லணும். என் இத்தனை வருட தவம் கலைஞ்சிரும்.''

''ஏம்மா?''

'அவமானம். உருவத்தைக் கண்டு எள்ளி நகையாடிய உறுத்தல். நீ கறுப்பி, உன்கூட வாழப் பிடிக்கலை. உன்னைத் தொட்டாலே அருவருப்பா இருக்குன்னு சொன்ன அவமா னம். பொண்டாட்டி அழகா இருக்கணும்னா அதை அம்மாகிட்ட சொல்லி என்னுடனான கல்யாணத்தை மறுத்திருக்கணும். அதை விட்டுட்டு, சும்மா அவளை அவமானப் படுத் தினா? கால்ல எட்டி உதைச்சுட்டுப் போவார். தட்டு முகத்தில தூக்கி எறிவார். என் கையால் சோறு போட்டா சாப்பிட மாட்டார்.''

மங்களா மனம் திறந்து பேசினாள்.

''எதோ மாயம் மாறி நீ என் வயித்துல உதிச்சே. ஒரு முறை குடிச்சுட்டு வந்தப்போ அவருக்கு ஒரு பெண் தேவைப் பட்டா. நான் கிடைச்சேன். ஆனா மறுநாள் என்னைத்தான் தொட்டார்னு தெரிஞ்சதும் வாந்தி, வாந்தியா

எடுத்தார். அதுக்கு அடுத்த நாள் அய்யாவைக் காணோம்.''

அந்த நேரத்து அம்மாவின் மனநிலையை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அதே மன நிலைதான் குமரேஷ் தன்னைச் சொன்னபோதும் இருந்தது.

''உன் முகத்துக்கு நான் வேணுமா? என்று கேட்டதே மனதில் இருக்கிறது. அந்த நேரத்தில் அவன் முகத்தில் தோன்றிய வெறுப்பு, அலட்சியம் இன்னும் மனதிற்குள் இருக்கிறது.

அந்த நேரம் அவளுக்கு தன் மனதின் தயக்கத்திற்கு காரணம் புரிந்தது.

குமரேஷின் வார்த்தை. அவனின் அலட்சியம். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டும்.

''எப்படிச் சொல்லுவே?''

''தெரியலை. கைலாசம் சார், குமரேஷ் செய்த அவமானத்துக்கு எல்லாம் பதில் சொல்லணும்.''

''நீ கவலைப் படாதே. நிச்சயம் காலம் வழி காட்டும்.''

மங்களா ஆறுதலாகச் சொன்னாள்.

''பவானி எல்லாமே மாயாஜாலம்தான். அற்புதம் நடக்கும்னு நம்பு. உன் மனசு ஆசைகளை இந்தப் பிரபஞ்சத்திற்கு அனுப்பு. அது கிடைச்சிடுச்சின்னு நம்பு. அது உனக்கு வேணும்கறதைக் கொண்டு வந்து சேர்க்கும்.''

மங்களா அடிக்கடி சொல்றதுதான்.

''கடவுள்ங்கற கான்செப்டை விட்ரு. ஆனா நம்மையும் மீறிய ஒரு சக்தி இந்த பிரபஞ்சம் முழுக்கப் பரவி இருக்கு. அதை நம்பு. நம் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற அது காத்துகிட்டு இருக்கு. அதுக்கு நன்றி சொல்லிகிட்டே இரு.''

''என் கோரிக்கைகள் நியாயம்னு எப்படிம்மா நம்பறது?''

''அந்த கோரிக்கைகளை நினைக்கும்போது உன் மனதில் ஒரு மகிழ்ச்சி பூக்கும். அப்போ அது நியாயமானது.''

பவானி தன் ஆசைகளை நினைத்துப் பார்த்தாள். இதுவரை அவள் விரும்பிய அனைத்தும் நிறைவேறி இருக்கிறது. சமூக நலனுக்காக அவள் எடுத்த முயற்சிகள் நடந்திருக்கிறது.

கைலாசத்தைப் பார்க்க வேண்டும் என்பது அவள் ஆசை. சொந்தத் தொழில் செய்ய வேண்டும், ஏழைகளுக்கு வயிறார உணவிட வேண்டும், தோற்றப் பொலிவு வேண்டும். ஆங்கிலம் பேச வேண்டும், சமூகத்தில் பிரபலமாக வேண்டும் என்பது அவளின் ஆசைகள்.

நாளை மறுநாள் லோக்கல் டிவி ஒன்று கோவையின் பெருமை என்று அவளைப் பேட்டி எடுக்கிறது. தெருவோரக் குழந்தைகளுக்காக அவள் ஆரம்பித்த உணவகம் பற்றி கேள்விப்பட்டு நேரில் அவளின் பணிகளைப் பார்வையிட்டு ஒரு விழாவில் அவளை சிறப்பிக்கப் போகிறது.

இந்தப் பெருமையை விட கைலாசம் அவளைத் தன் மகள் என்று ஒப்புக் கொள்ள வேண்டும். குமரேஷ் அவளை மணக்கச் சம்மதிக்க வேண்டும். உனக்கு என்ன தகுதி இருக்கிறது என்ற கேட்டவன் அதே வாயால் உன்னை மணக்க விரும்புகிறேன் என்று சொல்ல வேண்டும்.

தன் மனதில் குழப்பங்களுக்கு அவளுக்கு விடை தெரிந்தது.

''சரி, குமரேஷ் உன்னை விரும்பினா நீ சம்மதிப்பியா? அப்போ இளங்கோவின் உண்மையான அன்புக்கு என்ன பலன்?''

மங்களா கேட்ட கேள்விக்கு பதில் தெரியவில்லை.

''அம்மா என் அவமானத்துக்குப் பதில் சொல்ல வேண்டும். அது மட்டும்தான் என் நோக்கம்.''

''சரி. தூங்கு. உன் குழப்பங்களுக்கு காலம் பதில் சொல்லும்''

மங்களா திரும்பிப் படுத்து நிமிஷத்தில் தூங்கிப் போனாள்.

பவானி வெகுநேரம் விழித்திருந்தாள்.




''உங்கள் வெற்றிக்குக் காரணம் என்ன?''

கேள்வி கேட்ட பெண்ணை ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்தாள் பவானி.

அவள் பார்வை சுற்றிச் சுழன்றது.

அரங்கத்தின் முதல் வரிசையில் மங்களா, கைலாசம் குடும்பம் ஒரு பக்கமும், மற்றொரு பக்கம் குமரேஷ் குடும்பமும்

அமர்ந்திருந்தது.

இளங்கோவுக்கும் விருது என்பதால் அவன் மேடையில் இருந்தான். அவன் மேல் பார்வை நிலைத்து பின் கேள்வி கேட்ட பெண்ணின் மேல் நின்றது.

அவள் புன்னகையுடன் பவானியின் பதிலுக்குக் காத்திருந்தாள்.

''கோவையின் பெருமை'' என்ற தலைப்பில் சிறந்த ஆளுமைகளுக்கு விருது கொடுக்கிறது லோக்கல் டிவி ஒன்று. அதன் நிகழ்ச்சியைக் கவர் செய்ய பல பிரபல தினசரி பத்திரிகைகள் வந்திருந்தது. அதன் நிருபர்கள் பவானியின் பதிலை குறிப்பெடுத்துக் கொள்ளக் காத்திருந்தார்கள்.

பவானி புன்னகைத்தாள்.

''சொல்லுங்க. உங்க வெற்றிக்குக் காரணம் என்ன?''

''அவமானம். எனக்குச் சிறு வயதிலிருந்து ஏற்பட்ட அவமானங்களே காரணம்''

பவானி நிதானித்தாள்.

''கருப்பு, வெளுப்பு என்பது ஒரு பெண்ணுக்கான தகுதி இல்லை. அழகான பெண் திறமைசாலி, அசிங்கமான பெண் வாழ்வதற்கே தகுதி இல்லாதவள் என்ற மனப்பான்மைதான் இந்த சமூகத்தில் இன்னும் இருக்கு. எனக்கு ஏற்பட்ட அவமானங்கள் அதிகம். உன் முகத்துக்கு இந்த ஆசை அதிகம் என்று சொன்னவர்களே அதிகம். அந்த அவமானத்திற்கு பதில் தேடியதே என் வெற்றிக்குக் காரணம். வழி காட்டிய அம்மா, நீ வாழப் பிறந்தவள் என்று உற்சாகம் ஊட்டிய என் நண்பன் இளங்கோ.''

காமிரா இப்போது மங்களாவை, இளங்கோவை நோக்கித் திரும்பியது.

மங்களா எழுந்து வணங்கினாள். மேடையிலிருந்த இளங்கோவும் காமிராவை நோக்கி வணங்கினான்.

''அழகு என்பது ஒரு அங்கம்தான். ஆனால் அதுவே வாழ்க்கை ஆயிடாது. நம் திறமை, இந்தச் சமூகத்திற்கு நாம் ஏதேனும் செய்ய வேண்டும் என்ற உணர்வும், நல்ல எண்ணம், மனித நேயம்தான் ஒரு பெண்ணுக்கு அழகுன்னு எனக்குப் போதிச்சது எங்கம்மா. அவங்க அழகு இல்லை. கருப்புன்னு எங்கப்பா அவங்களை விட்டுட்டுப் போயிட்டாங்க. ஒற்றை ஆளா என்னை வளர்த்து, இந்த மேடையில் நிற்க வைத்தது எங்கம்மா.''

''மேம் நீங்களும் மேடைக்கு வாங்க''-





ஏதேனும் ஒரு பொருளை வைத்து அதை நோக்கி நேராக நடக்க வேண்டும் என்றால் நம்மால் நடக்க முடியும். அதுவே எந்த பொருளும் இல்லாமல் நேராக நடக்க சொன்னால் நம்மால் நடக்க முடியாது. குறிப்பாக கண்ணை கட்டிக்கொண்டு நடக்க சொன்னால் நாம் இருக்கும் இடத்தை சுற்றி சுற்றி தான் நடப்போம் என்று கூறுகிறார்கள்.

★ நம் உடலில் உள்ள 'நாக்கு' தான் மிகவும் வலிமையான தசை ஆகும்.

★ பொதுவாக மனிதர்களுக்கு தும்மல் வருகின்றபோது மிகவும் வேகமாக தும்மினால் அவர்களின் நெஞ்சு எழும்பு ஆனது சில நேரங்களில் உடைந்து விடும் வாய்ப்புள்ளது என்று கூறப்படுகிறது. அதேபோல் தும்மல் வருகின்ற போது அதை அடக்க முயற்சி செய்யம்போது நம்முடைய ரத்த குழாய்கள் ஆனது வெடித்து உயிரிழப்பு ஏற்படவும் வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

★ பொதுவாக மனிதர்கள் முடி வெட்ட





வேண்டும் என்றால் அவர்களுக்கு பிடித்த வகையில் பிடித்த ஸ்டைல்களில் கடைகளுக்கு சென்று வெட்டிக் கொள்வார்கள். ஆனால் வடகொரியாவில் 14 வகையான ஸ்டைல்களில் மட்டுமே முடி வெட்ட வேண்டும் என்று ஒரு விதிமுறை உள்ளது. குறிப்பாக இந்த விதிமுறை ஆனது ஆண், பெண் என அனைவருக்கும் பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

★ பூனையின் உடலில் உள்ள ஒட்டுமொத்த எலும்புகளில் 10 சதவீத எலும்புகள் அதனுடைய வாலில் மட்டுமே உள்ளது.

★ எறும்புகள் என்றாலே கூட்டமாக வாழக்கூடியது என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் ஒரு தனி எறும்பின் வாழ்நாள் என்பது 29 ஆண்டுகள் ஆகும்.

★ நம்முடைய உடலில் உள்ள ஒட்டுமொத்த இரும்புச்சத்தையும் எடுத்தால், 2 இன்ச் அளவிலான ஆணியை மட்டுமே செய்ய முடியும் என்று கூறுகிறார்கள். இவ்வளவு சிறிய அளவிலான இரும்பு ஆனது நம் உடலுக்கு மிகப்பெரிய பலத்தை கொடுக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

★ நம் தலைக்கு மேல் நேராக உச்சியில் நிலா வருகின்ற போது நம் உடல் எடை ஆனது குறைந்தது போன்ற உணர்வு நமக்கு ஏற்படும்.

★ சாதாரணமாக பிறந்த குழந்தையின் நுரையீரல் ஆனது இளஞ்சிவப்பு நிறத்தில் தான் இருக்கும். ஆனால் குழந்தை வளர வளர கருப்பு நிறத்தில் மாறிவிடும்.

★ பொதுவாகவே மனிதர்களால் கடந்த காலத்தை காண முடியும். ஆனால் கடந்த காலத்திற்கு செல்ல முடியாது. அதேபோல் எதிர்காலத்தை பார்க்க முடியாது. ஆனால் எதிர்காலத்திற்கு செல்ல முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண் மங்களாவை மேடைக்கு அழைக்க மங்களா எழுந்து வந்தாள்.

''உங்களுக்கு இப்போ பெருமையா இருக்கும்ல?''

''ரொம்ப பூரிப்பா இருக்கு. ஈன்ற பொழுதினும் பெரிதுவக்கும் அன்னையாய் நிற்கிறேன். ஆனா அவ போக வேண்டிய தொலைவு இன்னும் இருக்கு. இது மட்டும் போதும்னு இந்த இடத்தோடு அவ நின்னுடக் கூடாது. அவ தேங்கிய குட்டை இல்லை. ஆர்ப்பரித்து ஓடும் நதின்னு உலகத்துக்குப் புரிய வைக்கணும்.''

''இவங்க அப்பா அப்புறம் வந்தாரா?''

''இல்லை''

''இப்போ உங்க பெண்ணோட உயர்வைப் பார்த்து அவர் வந்தால்?'

''வரும்போது பார்க்கலாம்.''- மங்களா முன்வரிசையில் அமர்ந்திருந்த கைலாசத்தைப் பார்த்தாள். அவர் ஒரு இம்சையான உணர்வில் இருந்தார். மேடையில் அந்தப் பெண் கேள்வி கேட்கக் கேட்க அவர் மனம் கொந்தளித்தது இதோ இவள் என் மகள் என்று உரக்கக் கூற வேண்டும் என்று துடித்தாலும், ஏதோ ஒன்று தடுத்தது.

மெதுவாக தலையைக் குனிந்து கொண்டார்.

அவருக்கு இப்போது உடல் நன்றாகத் தேறியிருந்தது. ஒரு ஊன்று கோலுடன் மெதுவாக நடக்க ஆரம்பித்திருந்தார். பேச்சும் குழறலாக இல்லாமல் வந்தது. ஆனாலும் உடலை அதிகம் அலட்டிக் கொள்ள வேண்டாம் என்றிருந்தார் டாக்டர்.

பவானி அவரைக் கவனித்து விட்டுப் பேசினாள்.

''என் வெற்றிகள் அனைத்தையும் நான் அவருக்குத்தான் சமர்ப்பணம் செய்கிறேன். எங்கயோ ஒரு மூலையில் இருக்கும் அவர் என்னைத் தன் மகள்னு ஒத்துக்கணும். அவர் எங்க கூடவே இருந்திருந்தா என் வெற்றிகள் சாத்தியமாகி இருக்காது. அறிவாளியா இருக்க, அழகா இருக்கணும்கற அவசியம் இல்லை.''

''வெரிகுட்.''- அந்தப் பெண் கை தட்டினாள்.

அரங்கமும் கை தட்டியது.

''உண்மையில் எங்கோ இருந்து இந்நிகழ்ச்சியைப் பார்க்கும் உங்கப்பா கண்டிப்பா, உங்களை நினைச்சு பெருமைப் படுவார்.''

''இல்லை.'' கைலாசம் தன்னை மறந்து எழுந்தார்,

''நான் இங்கிருந்தே பெருமைப் படறேன்''

''நீங்க யார் சார்?''

''நான்தான் பவானியோட அப்பா''

கைலாசம் நடக்கத் தடுமாறினார்.

''யாரானும் அவரை மேடைக்கு அழைத்து வாங்க''- பேட்டி எடுத்த பெண் கூற சட்டென்று விஜயம் எழுந்தார். அவரை மெல்லக் கை பிடித்து அழைத்துப் போய் மேடையில் ஏற்றினாள்.

''இந்த மேடையில் உங்க முன் நிற்கும் நான் உண்மையில் பெருமையா உணருகிறேன்.''- கைலாசம் மெல்லத் தடுமாற்றமின்றிப் பேசினார்.

''நான் கடந்து போன எந்த விஷயத்தையும் மீண்டும் கிளற விரும்பலை. ஆனா ஆடம்பரம், படாடோபம், அழகான மனைவி, மகள்தான் வாழ்க்கைன்னு நினைச்ச என் எண்ணங்களை உடைச்சு எறிந்தது என் வாழ்க்கை அனுபவங்கள். நான் வேண்டாம்னு உதறின மனைவிதான் இன்று என் உயிரைக் காப்பாற்றினாள். பவானியை சமூகத்தில் முன்னணியில் நிற்க வைத்திருக்கிறாள். இந்த மேடையில் பலர் அறிய பவானி என் மகள்னு நான் பெருமையோடு சொல்கிறேன்.''

அரங்கம் கை தட்ட, பவானி கண்ணீரோடு கை கூப்பினாள்.

''சார், இந்த மேடையில் ஒரு உறவு இணைஞ்சது எங்களுக்கு ரொம்ப சந்தோஷம். பவானிக்கு உங்க கையால் விருது வழங்கணும்னு விரும்பறோம்.''

''கண்டிப்பா அது என் பாக்கியம்''- நெகிழ்வோடு கூறினார் கைலாசம்.

பவானி நெகிழ்ந்து உருகினாள். கைலாசம் கையால் விருது வாங்கையில் அவள் அழுகை கொப்பளிக்க அவரை விழுந்து வணங்கினாள். அவளை அணைத்துக் கொண்டார் கைலாசம். அவளின் விரல்களைப் பிடித்துக் கொண்டார்.

மேடையை விட்டு இறங்கி, வீடு வந்து சேரும் வரையில் அந்த விரல்களை விடவில்லை அவர்.

''ஏம்மா, இந்த வீட்டுல இத்தனை நாள் இருந்தும் நீ என் மகள்னு சொல்லவே இல்லையே?''- ஏக்கத்துடன் கேட்டார் கைலாசம்.

''எங்களை வேண்டாம்னு சொல்லிட்டு வந்தீங்க. நீங்களே உங்க வாயால சொல்லனும்னு விரும்பினேன்''

மங்களா விஜயத்தை தயக்கத்துடன் ஏறிட்டாள்.

''விஜயம், நான் உங்க வாழ்க்கையைப் பங்கு போட வரலை.''

சங்கடத்துடன் கூறிய மங்களாவை அணைத்துக் கொண்டாள் விஜயம். நீங்க யாருன்னு எனக்கு முன்பே தெரியும். அன்று ஒருநாள் நீங்க இவர் கூடப் பேசிட்டிருந்ததை நான் கேட்டேன். உங்களுக்கு உரிமை உள்ளவர் இவர்னுதான் இவருக்கு எல்லாம் செய்ய உங்களை அனுமதிச்சேன். என் வாழ்க்கையை பறிக்கக் கூடிய அளவு நீங்க கேவலம் இல்லைன்னு எனக்குத் தெரியும்''

மங்களா நெகிழ்ந்தாள்.

''உண்மைதான் விஜயம். நான் இவர் கூட மீண்டும் வாழணும்னு விரும்பி வரலை. பவானியைத் தன் மகள்னு அவர் ஒத்துக்கணும்க்றதுதான் என் ஆசை அது மட்டும் தான் என் இலட்சியம்.''

மங்களம் தெளிவாகக் கூறினாள்.

''இல்லை மங்களா, ரெண்டு மனைவியோடு வாழறது தப்பு இல்லை. இப்போ அவர் தன் தவறு உணர்ந்திட்டார். ரெண்டு பேரும் இந்த வீட்டுல ஒண்ணா வாழலாம். நம்ம மாமியாரை கூட்டிண்டு வரலாம்.''

''இல்லை விஜயம். இவர் இப்போ மனசு மாறியிருக்கலாம். எப்போ? பவானி சமூகத்துல உயர்ந்த நிலைக்கு வந்த பின். வரலைன்னா? எப்போ ஒரு பொண்ணு கழுத்துல தாலி கட்டினாரோ, அப்பவே அவளுடைய நம்பிக்கைக்கு உரியவரா அவர் இருக்கணும். பிடிக்கலைன்னா, பிடிக்கலைன்னு சொல்லிடணும். அதை விட்டுட்டு அவளைக் கல்யாணம் செஞ்சுண்டு தேள் கொட்ற மாதிரி வார்த்தைகளால இம்சை செஞ்சா அந்த அவமானத்தை என்னைக்கும் மறக்க முடியாது.''

மங்களா உறுதியாகப் பேசினாள்.

''இவர் கூட திருப்பியும் வாழணும், உன் வாழ்வை பங்கு போட்டுக்கணும்னு நினைச்சு நான் இங்கு வரலை. அவர் தன் தப்பை உணரணும். பவானியைத் தன் பெண்ணுன்னு ஒத்துக்கணும். அது மட்டும்தான் என் குறிக்கோள். அன்பு காட்ட அழகா இருக்கணும்னு அவசியமில்லை.''

கைலாசம் தலை குனிந்தார். மங்களாவை

அலட்சியப்படுத்திய ஒவ்வொரு தருணமும் நினைவுக்கு வந்தது. இந்த மனசாட்சி உறுத்தல்தான் தனக்கான தண்டனையா?

''எனக்கு இன்னும் ரெண்டு விஷயம் பாக்கி இருக்கு. அது முடிஞ்சதும் நான் கிளம்பிடுவேன்.''

''என்னன்னு சொல்லுங்க. நான் நிறைவேத்தறேன்.''- சுரேஷ் துடித்தான்.

''மஞ்சுவோட காதலை புரிஞ்சுகிட்டு சரண் வரணும். பவானியோட கல்யாணம். இது முடிஞ்சதும் நான் கிளம்பிடுவேன். இதனால நம்ப உறவு முடிஞ்சு போச்சுன்னு அர்த்தமில்லை. நீங்க அங்க வாங்க. நான் அப்பப்போ இங்க வரேன். உறவைத் தாண்டி நாம நல்ல நண்பர்களா இருப்போம். அதுதான் எந்த கசப்பும் இல்லாதது.''

விஜயம் சன்னமான தேம்பலுடன் மங்களாவைகே கட்டிக் கொண்டாள்.

அவள் மனதின் கவலைக்குக் காரணம் புரிந்தது. ஓராமாய் குறுகி நிற்கும் மஞ்சுவின் வாழ்க்கையே விஜயத்தின் கவலைக்குக் காரணம். மூன்று மாதங்களுக்கு மேலாகிறது. இன்னும் சரண் வீட்டிலிருந்து எந்தச் சத்தமும் இல்லை.

வருவானா? தன் மகளின் வாழ்வு மலருமா என்ற கேள்வி விஜயத்துக்குள் குடைந்து கொண்டு இருந்தது.

''கண்டிப்பாக வருவான்.''- மங்களா.

''எப்படிச் சொல்றீங்க?

''நல்லதையே நினைப்போம். நல்லதே நடக்கும்.''

''வருவானா?''

ஏக்கத்துடன் கேட்ட மஞ்சுவின் தலை கோதி விட்டாள் மங்களா.

''கண்டிப்பா வருவான்.''- என்றாள்.

அவள் நம்பிக்கை பலித்தது.




மணவறையில் முகம் முழுவதும் பூரிப்புடன் நின்ற மஞ்சுவை மகிழ்வுடன் பார்த்தார் கைலாசம்.

இவளை இப்படிப் பார்ப்போமா என்றிருந்தது.

எத்தனைச் செல்லமாக வளர்ந்திருப்பாள்.!

நகக்கண்ணில் அழுக்கு படாமல் ஒரு துளி கண்ணீர் சிந்தாமல் பூப்போல வளர்ந்த பெண் இந்த நான்கு மாதத்தில் அழுது, அழுது இளைத்து, கருத்துப் போயிருந்தாள். கண்கள் உள்ளடங்கி, இளைத்து நின்ற மகளைப் பார்க்கையில் மனது துடித்தது.

ரகசியமாக அவர் அழுதது யாருக்கும் தெரியாது.

மங்களாவுக்குச் செய்த துரோகம் என்று உறுத்தியது உள்ளுணர்வு.

ஆனால் அந்த மங்களாதான் அவர் மகளின் வாழ்வை மீட்டுக் கொடுத்தது.

நினைக்கும்போதே பவானியும் உன் மகள்தானே என்று இடித்தது மனம்.

ஆம். ஒரு நல்ல தகப்பனாக அவளுக்கு ஒரு வாழ்வை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று துடித்தது அவர் மனம்.

மஞ்சு எதோ சொல்ல சரண் கலகலவென்று சிரித்தான்.

மேடை முழுவதும் அவர்களின் நண்பர்கள்.

சரண் வீட்டுக்கு வந்தது ஒரு கனவாகவே இருந்தது. ஆசை தீர அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார் கைலாசம்.

இதே மாதிரி ஒரு மாலை நேரம்தான் சரண் அவன் அம்மாவுடன் வந்து நின்றான்.

எடுத்ததுமே அவன் அம்மா ''நீங்க எங்களை மன்னிக்கனும் '' என்றுதான் ஆரம்பித்தார்.

''எதோ புத்தி கேட்டு மஞ்சுவை துன்புறுத்திட்டோம். மங்களா வந்து உங்க பெண் மாதிரி வீட்டுக்கு வர பெண்ணைப் பாருங்கன்னு சொன்னப்பதான் எனக்கும் உறுத்திச்சு. உண்மையான காதல் எந்த டிமாண்டும் செய்யாது. ஒரு ஆண் அப்படின்னா மனைவியின் நம்பிக்கைக்குப் பாத்திரமா இருக்கணும்னு சொன்னாங்க.''

அவர் மனம் விட்டுப் பேசினார்.

''ஒரு இல்லறம் காசு, பணம், அழகை அடிப்படையா கொண்டு அமையக் கூடாது. அன்பை, அக்கறையை, நம்பிக்கையை அஸ்திவாரமா கொண்டு கட்டுப்படனும். நல்லவங்களா இருங்க. நல்லதையே நினையுங்க. நல்லதே நடக்கும்னு சொன்னாங்க. மங்களா சொன்ன மாதிரி நான் என்னை

மாத்திக்க முயற்சி செய்தேன்.''

அவர் பேசுவதை வியப்புடன் கவனித்தது வீடு.

மங்களா வந்து விட்டுப் போன பிறகு சரணின் அம்மா, அவள் கூறியதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தார். விலகி நின்று உங்கள் செயலைப் பாருங்கள் என்று கூறியபடி தான் செய்தது, பேசியதை நினைக்க அவருக்கே அவமானமாக இருந்தது.

மெல்ல, மெல்ல அவரின் மனம் மாறியது. அம்மாவின் சொல்லுக்குப் பயந்து தன் மனதை மறைத்து வைத்த சரண் வெளிப்படையாகப் பேச ஆரம்பித்தான்.

''அம்மா, அவ என்னையே நம்பி, அத்தனை பேரையும் உதறிட்டு வந்தவ. காதலிக்கும்போது எங்களுக்குள் எந்த எதிர்பார்ப்பும் இல்லை. இப்போ அது எங்க போச்சு? நீ நகை கொண்டா, பணம் கொண்டான்னு சொல்லி, அவளை விரட்டினது எனக்கே ரொம்ப அவமானமா இருக்கு. என் காதல் உண்மையில்லைங்கற நினைப்பு என்னைக் குறுகிப் போக வைக்கிறது.''

சரண் உண்மையாக வருந்தினான்.

மங்களாவின் பேச்சு அத்தனை பேரையும் மாற்றியது.

அம்மா, கிளம்பிப் போய் தன் மகளை அழைத்து வந்தார். குலதெய்வம் கோவிலுக்குப் போய் விட்டு வந்தார். லேடி டாக்டரிடம் கொண்டுபோய் காட்டினார். தினமும் அவள் அருகில் அமர்ந்து நிச்சயம் உனக்கு குழந்தை பிறக்கும் என்று நம்பிக்கை வார்த்தைகளைச் சொல்லி, அவளை மகிழ்ச்சிப் படுத்தி, நம்பிக்கை ஊட்டினார்.

மாப்பிள்ளை தினமும் இங்கு வந்தார். மகளுடன் அவரை வெளியூருக்கு அனுப்பி வைத்தார். மெல்ல, மெல்ல மாறியது சோகம். மகள் கரு உண்டானது. அவள் வீட்டில் உற்சாகம் வர மகளின் மாமியார் அவளைத் தாங்க, சரண் அம்மாவுக்கு தன் தவறு உறுத்தியது. உடனே மஞ்சுவை அழைத்துப் போக வந்து விட்டார்.

இளங்கோ மூலம் சரணுக்கு கோவையில் ஒரு ஐடி கம்பெனியில் வேலை வாங்கித் தந்தான். மகிழ்ந்து போனது சரண் குடும்பம்.

''மஞ்சுவுக்கு போட வேண்டிய நகைகளைப் போட்டு, சொந்த பந்தங்களைக் கூப்பிட்டு ஒரு ரிசப்ஷன் வச்சிடுங்க. கல்யாணமும் ஏனோதானோன்னு நடந்துருச்சி''- என்று மங்களா சொல்லியதை கைலாசம் ஏற்றுக் கொண்டார்.

கைலாசத்தின் அம்மா வந்தார். பல வருஷங்கள் கழித்து தாயும், மகனும் சந்தித்து வெறுப்பு, கசப்பு மறந்து போனார்கள். மகனின் நிலை பார்த்து தாயுள்ளம் அவரின் தவறுகளை எல்லாம் மன்னித்து விட்டது.

குலதெய்வம் கோவிலில், சரண் மஞ்சுவுக்கு தாலி கட்டினான்.

கோவையில் ஒரு பெரிய மண்டபத்தில் அவர்களுக்கு ரிசப்ஷன் வைத்தார் கைலாசம். முப்பது பவுன் நகை போட்டு, சரணுக்கு ஒரு பைக் வாங்கித் தந்தார். அத்துடன் வீட்டுக்குத் தேவையான அனைத்துப் பொருள்களும் வாங்கித் தர சரண் வீடு மகிழ்ந்து போனது.

வார்த்தைக்கு வார்த்தை மன்னிப்பு கேட்டது குடும்பம்.

''நீங்கதான் காரணம்'' என்று மங்களாவின் கை பிடித்து நெகிழ்ந்தார் சரணின் அம்மா.

கைலாசத்தின் பார்வை மங்களா, பவானியைப் பின் தொடர்ந்தது.

அவரின் பார்வையைக் கவனித்து விஜயம் அருகில் வந்து அமர்ந்தார்.

''மஞ்சுவைப் பார்க்கும்போது ரொம்பச் சந்தோஷமா இருக்கு. இல்லையா?'

''ஆமாம். அவ முகத்துல இந்த மலர்ச்சியைப் பார்ப்போமான்னு இருந்தது.''

''எல்லாத்துக்கும் காரணம் மங்களாதான்.''

ஆமாம் என்று ஆமோதித்தார் கைலாசம்.

''மஞ்சுவுக்குச் செஞ்ச அதே மாதிரி கடமை உங்களுக்கு இருக்கு. பவானிக்கும் நீங்க தகப்பனா இருந்து கல்யாணம் செஞ்சு வைக்கணும்.''

''ஆமாம் விஜயம். நான் அவளுக்கு துரோகம் செஞ்சேன். ஆனால் அவ எனக்கு நல்லது செஞ்சுட்டா. அதுக்கு நான் நன்றி காட்டணும். ஒரு தகப்பனா நின்னு பவானிக்கு கல்யாணம் செஞ்சு வைக்கணும்.''

''ஆமாம். அவளுக்குப் பொருத்தமான மாப்பிள்ளை பாக்கனும்..''

''நம்ம ராமநாதன் மகன் குமரேஷ் இருக்கான். அவனுக்கு பவானியைக் கட்டி வைக்கனும்னு அவர் இஷ்டம். நல்ல பையன். ஆனா அவன் பவானியை மறுத்துட்டான். அது மட்டும் இல்லாம அவளை அவமானப் படுத்தியும் பேசிட்டான்.''

''இப்போ அவன் மனசு மாறியிருக்க லாம்.''

''எப்படிச் சொல்றே?''

''அங்க பாருங்க.''

விஜயம் கை நீட்டிய திசையில் குமரேஷ் பவானியுடன்நின்று பேசிக் கொண்டிருந்தான். குமரேஷிடம் இப்போது அவளைப் பார்க்கும்போது பிரமிப்பாக இருந்தது. பவானியிடம் இப்போது ஒரு பளபளப்பு, மெருகு தெரிந்தது. தொடர்ந்து தனக்கான அழகுக் குறிப்புகளை செய்து, தன்னை நேர்த்தியாக வைத்திருந்தாள்.

எல்லோரும் அழகுதான். தன்னை எப்படி அழகு படுத்திக் கொள்வது என்று தெரியாதவர்கள்தான் அதிகம் என்று நினைத்தாள் பவானி. அவளிடம், திறமை தந்த கம்பீரம், அறிவின் ஒளி, மென்மை, நாசுக்கு, என்று பாரதி கண்ட பெண்மையாய் இருந்தாள்.

அவளைக் குறித்து குமரேஷிடம் ஒரு எதிர்பார்ப்பு இருந்தது. அவளின் மதிப்பைக் கவர வேண்டும் என்ற ஒரு ஆர்வம் இருந்தது அவனிடம்.

கைலாசம் மங்களாவை அழைத்தார்.

குமரேஷை சுட்டிக் காட்டி கேட்டார்.

''பையன் எப்படி?''

''ம். நல்லா இருக்கானே?''

''கொஞ்சம் அவங்களை இங்க வரச் சொல்லு விஜயம்'' என்று கைலாசம் கூற ராமநாதனும், குமரேஷும் அருகில் வந்தார்.

''சொல்லு குமரேஷ். இன்னும் பவானியை நீ மட்டமா நினைக்கிறியா?''

''அச்சோ அங்கிள். அப்படி இல்லை.''

''இப்போ அவளைக் கல்யாணம் செஞ்சுக்க உனக்குச் சம்மதமா?''

''சம்மதம் அங்கிள்.''

''அப்புறம் என்ன. பவானி என் பொண்ணு.''

''தெரியும் அங்கிள்.''

''பின்ன என்ன? மங்களா என்ன சொல்றே?''

மங்களா சிரிப்புடன் அவர்கள் அனைவரையும் பார்த்தாள்.

''நான் சொல்ல என்ன இருக்கு? வாழப் போறது பவானி. அவள் இஷ்டம் கேட்கணும்.''

''குமரேஷை வேண்டாம்னா சொல்லப் போறா?''

ஆனால் வேண்டாம் என்றாள் பவானி.




''ஏம்மா பவானி, உனக்கு குமரேஷைப் பிடிச்சிருக்கா?''

பவானி வந்ததும் நேரடியாக விஷயத்திற்கு வந்தார். எதற்காக இதைக் கேட்கிறார் என்று தெரியவில்லை. புரியாமல் பார்த்தாள்.

''எதுக்கு இப்படிக் கேட்கறீங்க?''

''நீ சொல்லு. அப்புறம் சொல்றேன்.''

''ம். பிடிச்சிருக்கு.''

''குட். அப்போ உங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் செஞ்சிடலாமா?''

''கல்யாணமா? அவருக்கு என்னைப் பிடிக்காதே?''

''இப்போ பிடிக்குதே.''- சிரிப்புடன் கூறினார் கைலாசம்.

''அப்போ முதல்ல பிடிக்கலை இல்லையா?''

பவானியின் குரல் கூர்மையாக ஒலித்தது. அது குமரேஷை நெளிய வைத்தது. அதைப் புன்சிரிப்புடன் பார்த்தாள் அந்தச் சிரிப்புக்கு அர்த்தம் புரிந்தது மங்களாவுக்கு. மெதுவாக சைகை காட்டி இளங்கோவை அருகில் அழைத்தாள். என்ன என்று புரியாமல் இளங்கோ அவர்களை நெருங்கினான்.

''இதோ பார் கடந்து போனதை மனதில் வச்சுக்கக் கூடாது.''

''ஆனா அவமானத்தை மறக்கக் கூடாது இல்லையா?''

''பிடிக்குதுன்னு சொன்னியே?''

''ம். பிடிக்குது. ஆனா கல்யாணம் பண்ணிக்கப் பிடிக்கலை.''

''என்னம்மா சொல்றே?'- ராமநாதன்.

''சார், இவர் என்னைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார். உன் மூஞ்சிக்கு நான் தேவையான்னு. என்னை கல்யாணம் பண்ணிக்க உனக்கு என்ன தகுதி இருக்கு. தகுதி பார்த்து ஆசைப் படணும்னார். அந்தத் தகுதி எனக்கு

வந்துருச்சின்னு நினைக்கறாரா?''

''......''

''ஏன் ஒரு ஆணுக்கு தன் மனைவி இப்படி இருக்கணும்னு ஆசை இருக்கலாம். ஆனா ஒரு பெண்ணுக்குக் கூடாதா? இவர் என்னை அசிங்கப் படுத்தலாம். இன்னைக்கு என்னைப் பிடிக்குதுன்னு சொன்னா நான் உடனே இது என் பாக்கியம்னு பூரிச்சு சம்மதிக்கணுமா?''

''நல்ல கேள்வி.''- விஜயம்.

''நான் இப்படி மேடை ஏறி விருது வாங்காம, என் தோற்றத்தையும் பொலிவு இல்லாம இருக்கறப்போ இவர் என்னை கல்யாணம் செஞ்சுக்க சம்மதிச்சிருந்தா நான் மகிழ்ந்திருப்பேன். இல்லையே. அவமானத்தை எப்படி மறக்க முடியும்?'''

அமைதியாக தன் கருத்தை முன் வைத்தாள் பவானி.

''அம்மா தன் அவமானத்தை மறக்கலை. அதனால்தான் இன்று கைலாசம் சார், அவங்க கூட வாழ முன் வந்தும் மறுத்துட்டாங்க. அதேபோல்தான் நானும். இவர் கூட வாழற ஒவ்வொரு நிமிஷமும் இவர் கூறிய வார்த்தைகள்தான் ஞாபகத்துக்கு வரும். அந்த அவமான உணர்வோடு நான் எப்படி வாழ முடியும்? இவர் உள்ளத்துக்கு முக்கியத்துவம் தரலை. தோற்றத்துக்கு முக்கியத்துவம் தரார்.''

அனைவரும் பதில் கூற முடியாமல் அமைதியாக இருந்தார்கள்.

''ஒரு கணவர் தன் மனைவி மேல் அன்பு, அக்கறை காட்டணும். அவ வாழ்க்கை முன்னேற்றத்துக்கு உதவியா இருக்கணும். இவர் எதுவும் பண்ணலை. அவமானப் படுத்தினார். இன்னைக்கு வாழ்க்கைல ஜெயிச்சதும், கல்யாணம் செஞ்சுக்க சம்மதம்னார். நிறம் மாறும் ஒருத்தரை நம்பி என் வாழ்வை எப்படி ஒப்படைக்க முடியும்?''

''பவானியின் கேள்வி அனைவரையும் யோசிக்க வைத்தது.

''சரி, உனக்கு யாரைப் பிடிச்சிருக்குன்னு சொல்லு. நான் செஞ்சு வைக்கிறேன்.''

''நீ விரும்பறவரை விட உன்னை விரும்பற ஆளைக் கல்யாணம் செஞ்சுண்டா, வாழ்க்கை இனிமையா இருக்கும்பாங்க.''

''ஆமாம்.''

''நான் ஆரம்பத்துலேர்ந்து நல்லா வரணும், படிக்கணும், சமூகத்துல உயர்ந்து நிக்கணும்னு நினைச்சது இளங்கோ. என்னைப் படி, ஆங்கிலம் பேசு, புது முயற்சிகள் ஆரம்பி, நான் துணையா இருக்கேன்னு தைரியம் கொடுத்தது இளங்கோ. என் தைரியம், துணிச்சல், நம்பிக்கை இளங்கோ. என் அஸ்திவாரம் அவர்தான். அவர் கூட என் வாழ்க்கை இணைஞ்சா நல்லா இருப்பேன்னு நம்பறேன்''- மெல்லிய தயக்கத்துடன் பேசினாள். பவானி.

''குட் டெசிஷன்.''

சுரேஷ் கை தட்டினான்.

''எனக்கோ, அம்மாவுக்கோ யாரையும் அவமானப் படுத்தணும்னு ஆசை இல்லை. அதனுடைய வலி என்னன்னு எங்களுக்குத் தெரியும். ஆனால் நாங்க மரியாதையா, எங்க மனசுக்கு நிறைவா வாழணும்னு விரும்பறோம். ஏதோ பிறந்தோம், வாழ்ந்தோம்னு இல்லாம இந்த வாழ்க்கைப் பயணத்துல நாலு பேருக்கு நல்லது செஞ்சுட்டு, பிறருக்கு உதவிகள் செஞ்சுட்டு போயிடலாம் என்று நினைக்கிறேன். இந்தப் பயணம் ஸ்மூத்தா, மன நிறைவா இருக்க, நம்ம கூட வர துணை நம்மைப் புரிஞ்சிண்டவரா இருக்கணும். அது இளங்கோவா இருந்தா நல்லாயிருக்கும்னு நான் நம்பறேன்.''

''நல்லாச் சொன்னேம்மா.''- ராமநாதன் கை தட்டினார்.

''அன்னைக்கு குமரேஷ் உன்னை எப்படி அவமானப் படுத்தினான்னு எனக்குத் தெரியும். இன்னைக்கு நீ சமூகத்துல மேலான நிலைல இருக்கேன்னதும், ஒகே சொல்றானேன்னு நினைச்சேன். வெரிகுட். நல்ல முடிவு. இளங்கோ எப்படி உன்கூட இணைஞ்சு நடந்தான்னு எனக்குத் தெரியும். உன்னைப் புரிஞ்சவன் அவன். நீ என்ன சொல்றே இளங்கோ?''

''அவன் என்ன சொல்வான். அவன்தான் தன் மனதை வெளிப்படுத்திட்டு இவளோட பதிலுக்குக் காத்திருக்கானே?''- மங்களா சிரித்தாள்.

''இளங்கோவோட அம்மாவும், நானும் முதலிலியே எடுத்த முடிவு.. இளங்கோவை நம்பித்தான் நான் பவானியை இங்கு அனுப்பினேன். என் பொண்ணுக்கு நான்

அன்பும், அக்கறையுமான ஒரு கணவனை தேர்ந்தெடுக்க விரும்பினேன்.''

மங்களா தெளிவாகப் பேசினார்.

''என்னை யாரும் தப்பா நினைக்க வேண்டாம். நானும், என் மகளும் எதையும் எதிர்பார்க்கலை. எல்லோருடைய அன்பு, எங்களையும் ஒரு உணர்வுகள் உள்ள ஒரு மனுஷியா மதிங்க. தோற்றத்தை வைத்து எடை போட வேண்டாம்னு கேட்டுக்கறோம்.''

விஜயம் மங்களாவின் கைகளைப் பிடித்துக் கொண்டார்.

''மனசுல எதையும் வச்சுக்காதே மங்களா. பவானியின் தகப்பானா அவரும், தாயா நீயும் நின்னு அவங்க கல்யாணத்தை முடிங்க.''

''இல்லை விஜயம்.''- தீர்மானமாகக் கூறினாள் மங்களா.

''அவர் தன் தப்பை உணரனும்னுதான் விரும்பினேனே தவிர, இணைஞ்சு நின்னு வாழணும்னு இல்லை விஜயம். பவானிக்கு நானே தாயும், தகப்பனுமா நின்னு இந்தக் கல்யாணத்தை நடத்தறேன். நீங்க வந்து ஆசீர்வாதம் செஞ்சா போதும். ஒரு பைசா கூட நான் எதிர்பார்க்கலை.''

மங்களாவின் குரல் உறுதியாக இருந்தது.

''மஞ்சுவுக்கு போட்ட அதே அளவு நகை நான் போடறேன்.''

கைலாசம் கூறியதை சின்ன சிரிப்போடு மறுத்தாள் மங்களா.

''அப்போ இதுக்காகத்தான் நான் மீண்டும் வந்தேன்னு நினைக்கறீங்களா?''

''சார், மன்னிக்கவும். நான் பவானியை மட்டுமே எதிர்பார்க்கிறேன்.''

இளங்கோ அழுத்தமாகப் பேசினான்.

''என் மனைவிக்கு வேணும்கறதை நான் வாங்கித் தரேன். நாங்க எதிர்பார்க்கறது உங்க அன்பான ஆசிர்வாதம்தான். அன்பு செலுத்த என் மனைவியை கௌரவமா காப்பாத்த அழகு முக்கியமில்லைன்னு நிரூபிக்க விரும்பறேன். அன்புங்கற பூரணமான பொன்னகை அவகிட்ட இருக்கு.''

கூறிய இளங்கோவைத் தாவி அனைத்துக் கொண்டார் கைலாசம்.

''கிரேட், கிரேட்'' - பூரிப்புடன் கூறிய கைலாசம், இங்கேயே எப்போ கல்யாணம்னு டேட் பிக்ஸ் செஞ்சிடலாம்''- என்றார்.

''நீங்க பேசி முடிவு செய்ங்க. மங்களா இவங்களை கூட்டிட்டுப் போய் ஒரு ஸ்வீட் கொடு''- என்றார்.

மங்களா இருவரையும் டைனிங் ஹாலுக்கு அழைத்து வந்தார்.

''உட்காருங்க'' என்று கூறி விட்டு ஸ்வீட் எடுத்து வர உள்ளே சென்றார்.

''இந்த பதிலை அன்றே சொல்ல என்ன கஷ்டம் உனக்கு?''

இளங்கோ கேட்க, ''ஏண்டா உனக்குத் தெரியாதா?''

''குமரேஷுக்கு இந்த பதிலைச் சொல்லிட்டு எல்லோர் முன்னாடியும், என்னைக்கல்யாணம் செஞ்சுக்க சம்மதம் தெரிவிக்கத்தானே?''

ஆமாம் என்று தலையசைத்தாள் பவானி.

''உன்னைப் பிடிக்கலைன்னு எப்படிடா சொல்வேன். என் மூச்சு நீதானே.''

''பவானி. ஒரு தோட்டத்துல ஆயிரம் மலர்கள் பூத்தாலும், ஒரு மலர் மட்டுமே இறைவனின் பூஜைக்கு உரியதாகிறது. அது மாதிரி நீ. நீ சாதாரண வாழ்க்கை வாழப் பிறந்தவள் இல்லை. உன்னால் இந்தச்சமூகமே மலர்ச்சியுறப் போகிறது. அர்த்தமுள்ள வாழ்க்கை வாழும் உனக்குத் துணையா நான் வரப் போறேன்றது எனக்கு ரொம்பப் பெருமையா இருக்கு.''

அவனை மகிழ்ச்சியோடு பார்த்தாள் பவானி.

''உனக்கு ஏதானும் செய்யணும்டா. என்ன வேணும் கேளு?''

''ஒரே ஒரு விஷயம் கேட்கறேன்.''

''சொல்லு.''

''அம்மாடி நான் உன் கணவன் ஆகப் போறேன். இனி என்னை டா போடாதே.''

''ஏன், டா போட்டா என்ன?''


''நாளைக்கு என் பையனும் வந்து என்னை வாடா, போடாம்பான்.''- முகத்தைக் கவலையாக வைத்துக் கொண்டு சொன்னான் இளங்கோ.

''ச்சீ. போடா''- என்றாள் பவானி.



**உயர்கல்வி - வேலைவாய்ப்பு:**

# ரோபோ பொறியியல் படிப்பு!



வாழ்க்கையை எளிதாக்க உதவுபவை ரோபோக்கள். மனிதர்களைப் போலப் பணியாற்றும் இயந்திர மனிதன் ரோபோ எனலாம். இது குறித்து பொறியியல் படிப்பு புதிதாக உருவானது. ரோபாட்டிக்ஸ் பொறியியல் என கூறப்பெறுகிறது.


ரோபோவைக் கண்டுபிடித்தவர் ஜார்ஜ் டெவால் ஆண்டு 1954. டிஜிட்டல் முறையில் இயக்கப்பெறுவது. இதனை ரோபோ யுனி மேட் என அழைக்கின்றனர். 1956-ல் உலகின் முதல் ரோபோ நிறுவனம் டெவால் மற்றும் அவருடைய நண்பர் ஜோசப் ஏங்கல் பெர்ஜர் உருவாக்கினர்.

1961 -ல் தொழிற்துறை ரோபோ, யுனி மேட், தொடர் தொழிற்சாலை நியூஜெர்ஸியில் உள்ள ஜெனரல் மோட்டார்ஸ் ஆட்டோ மொபைல் தொழிற்சாலையில் புதிய சமூகத்தின் ஒரு பகுதி ஆயின. உலோகத் துண்டுகளை ஒன்றிணைத்து அவற்றை வெளிப் படையாக உயிர்ப்பிப்பது எளிதான பணி அல்ல. ரோபோடிக் பொறியியல் என்பது முறையான கல்வி பட்டம். இதனைக் கற்க விரும்புவோருக்கு ரோபோக்களை எவ்வாறு வடிவமைப்பது எனும் கல்வியை அளிக்கிறது. ரோபோக்களை உருவாக்கும் பொறியாளர் ஆகிய பாட நெறிப் பணிகளை முடித்தவர்களுக்கு வழங்கிடும் பட்டம் இது. இப்பட்டம் பெற்றவர்களின் பணி ரோபோ அமைப்புகள், ரோபோக்கள் அகியன உருவாக்குதல் ஆகும்.

வேறு வகையில் சொல்வதாயின் அடிப்படையில் செய்ய இயலாத, அல்லது செய்ய இயலாதவற்றை முடித்திட மனிதர்களுக்கு உதவிட ரோபோக்களை உருவாக்குகின்றனர். ரோபோக்கள் பலப் பலப் பணிகளை எளிதாகவும், கச்சிதமாகவும், பாதுகாப்புடனும் உதவிடும். இயந்திரங்கள் அல்லது இயந்திர மனிதர்களைக் கணினி கட்டுபடுத்துகிறது. இதனால் ரோபோக்கள் உற்பத்தித் துறையில் திறமையானவை.

ரோபோ பொறியாளராக ஆகிட விழையும் மாணவர்கள், உயர் நிலைப் பள்ளியில் அறிவியலைத் தேர்வு செய்ய வேண்டும். இளங்கலைப் பட்டப்படிப்பு முன்பு இல்லாமல் இருந்தது. ஆனால் இந்தியாவில் மட்டுமல்லாது உலக நாடுகள் பலவற்றிலும், பல நாடுகள், பல நிறுவனங்கள், ரோபோ உருவாக்குவதில் ஈடுபடுவதால், இது குறித்த தொழில்நுட்பக் கல்வி இன்றியமையாதது எனக் கருதி அனைத்திந்தியத் தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் அறிமுகம் செய்ய பட்டப்படிப்பு ரோபோட்டிக்ஸ், ஆட்டோமேஷன் பொறியியல் பட்டப்படிப்பு ஆகும்.

தொழிற்சாலைகளில் டிஜிட்டல் இயந்திரங்கள் உள்ளன. அவற்றைக் கண்காணித்திட, வடிவமைக்க இந்த நான்காண்டு இளநிலை பொறியியல் பட்டப் படிப்பு உதவுகிறது. இந்தப் படிப்பு கோயம் புத்தூர் பிஎஸ்ஜி காலேஜ் ஆப் டெக்னாலாஜியில் உள்ளது. இப்படிப்பை அளித்திட்ட முதல் கல்லூரி இது. இந்தப்



**- பேராசிரியர் க.ம.ராஜேஷ்கந்தன்**



படிப்பினை அக்கல்லூரி 2011-ம் ஆண்டில் தொடங்கியது. அண்ணா பல்கலைக் கல்லூரி விதிகளின்படி 60 மாணவர்களை இப்படிப்பிற்குச் சேர்க்கின்றனர்.

தானியங்கி இயந்திரங்களுக்கான பொறியியல் துறையின் மென்பொருள், வன்பொருள் சார்ந்த அனைத்துப் பாடப்பிரிவுகளையும் அதனைச் சார்ந்த ஆய்வகங்களையும் உடையதாக இதனைக் கட்டமைத்து உள்ளனர்.

இதில் பயிலும் மாணவர்களுக்கு அடிப்படை அறிவியல், பொறியியல் பாடங்களை நடத்துகின்றன. பொறியியல் கருவி வடிவமைப்பு, இயந்திரப் பகுதிகள் வடிவமைப்பு, மின்னணுவியல், இயந்திரவியல் உள்ளிட்ட பாடங்களும் நடத்துகின்றனர். இயந்திரப் பகுதிகள் குறித்தும், அவற்றின் செயல்பாடுகள் குறித்த பயிற்சியும் வழங்குவர்.

மேலும் மூன்றாம் ஆண்டு, நான்காம் ஆண்டில் ரோபாவின் பகுதிகள், மின்சாரம் வாயிலாக அதனை செயல்பட வைப்பது




எப்படி? பழுதானால் பழுதை நீக்குவது எவ்வாறு எனக் கற்பிக்கும் பயிற்சி உண்டு.

எல்லாவற்றுக்கும் மேலாகத் தொழிற்சாலையின் செயல்பாடு, அவற்றில் ஏற்படும் சிக்கல்கள், அவற்றை எவ்வாறு தீர்ப்பது என்பன குறித்தும் பாடமும் பயிற்சியும் உள்ளது.

நான்காம் ஆண்டு மாணவர்கள் ஆறுமாத காலம் தொழிற்சாலைகளுக்கு நேரில் சென்று அதன் செயல்பாடுகள், இயந்திரத்தில் ஏற்படும் இடர்கள், டிஜிட்டல் முறையிலான இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்த பயிற்சி பெறுகின்றனர். நான்காம் ஆண்டு இறுதியில் மாணவர்களின் புதிய கண்டுபிடிப்பு அல்லது இருப்பதை நவீனமாக்குவது பற்றித் திட்ட அறிக்கையினை புராஜக்ட் ரிப்போர்ட் தயாரித்துத் தேசிய அளவிலான கருத்தரங்கில் அளித்துச் சான்றிதழ் பெற வேண்டும்.

பிஎஸ்ஜி கலூரியைப் பொறுத்தவரையில் டாடா, பெப்ஸ்கோ, சிமென்ஸ் உள்ளிட்ட பல கல்லூரிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது என அறிகிறோம். அந்நிறுவனங்களின் துணையோடு இக்கல்லூரியில் பிஎஸ்ஜி அடப்டு சென்டர் பார் ரோபோடிக்ஸ் **(PSG adept centre for Robotics)** பிஎஸ்ஜி டான்போஸ் சென்டர் பார் கிளைமேட் அண்டு எனர்ஜி **(PSG Danfoss centre for climate and energy)**, பிஎஸ்ஜி சென்டர் ஆப் எக்சலன்ஸ் இன் ஆட்டோமேஷன் **(PSG centre of Excellence in Automation)** ஆகிய சிறப்புப் பயிற்சிக் கூடங்களைக் கல்லூரி அமைத்துள்ளது.

சிறப்புப் பயிற்சி கூடங்கள் வாயிலாகச் சிறு, குறு, பெரிய ஆகிய நிறுவன்ங்களில் பணிபுரியும் பொறியாளர்கள், தொழில்நுட்ப



உதவியாளர்களுக்குச் சிறப்பு பயிற்சி அளிக்கின்றனர்.

இதன் வாயிலாகப் பேராசிரியர்களும், மாணவர்களும் இன்றைய நடைமுறையில் உள்ள தொழில்நுட்பங்களைக் கற்று தொழிற் சாலைகளில் ஏற்படும் இடையூறுகளைச் சுலபமாகத் தீர்க்கும் வழிமுறைகளைத் தெரிந்து கொள்கிறார்கள்.

இதில் பயின்றவர்கள் உற்பத்தி, பாதுகாப்பு, உணவு, விண்வெளி, மருத்துவம் உள்ளிட்ட பலவற்றிற்கும் பயன்படுகிறார்கள். படிக்கும் போதே பல பெரிய நிறுவனங்களில் இருந்து வந்து மாணவர்களைத் தேர்வு செய்து பணியில் சேர்த்திட வாய்ப்பு உள்ளன.

இத்துறையில் மேல் படிப்புப் படிக்க அமெ ரிக்கா, ஆஸ்திரேலியா, கொரியா உள்ளிட்ட பல நாட்டுப் பல்கலைக் கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது எனக் கூறுகின்றனர். இதன் வாயிலாக மாணவர்கள் அயல் நாடுகளில் சென்று மேல் படிப்புப் பயில்லாம்.

இந்தியாவிலும், அயல் நாடுகளிலும் ரோபோவின் பயன் அதிகரித்து வருவதால் இப்படிப்பிற்கு நல்ல எதிர்காலம், வேலை வாய்ப்பு உள்ளது.

ரோபோ என்ற சொல்லின் பொருள், மனித இயந்திரம், இயந்திரம் போல இயங்கும் மனிதன். ரோபோ என்ற ஆங்கிலச் சொல், அடிமை எனும் பொருள் தரும் செக் மொழியில் இருந்து பிறந்தது. ஐசக் அசிமோவ் எனும் அமெரிக்க நூலாசிரியர் எந்திர மனித இயல் என்ற சொல்லை முதன் முதலில் 1940-களில் பயன்படுத்தினார் என்பது கூடுதல் தகவல்.

இவர் 1921-ல் **RUR ((ROSSUM'S UNIVERSAL ROBOTS)** எனும் நாடகத்தில் ரோபோ எனும் சொல்லை முதன் முதலில் பயன்படுத்தியதாக கூறுகின்றனர்.

- ஆக மனிதர்களால் காலம் காலமாகச் செய்யப்பெறும் கடின வேலைகளைச் செய்திடக் குறிப்பிட்ட இயந்திரங்களைப் பயன்படுத்துதல் எந்திர மனித இயல் **(ROBOT-ICS0** ஆகும்.
- இத்தாலிய ஓவியர் லியர்னாடோ டாவின்சி 1945-ல் ஒரு ரோபோவைக் கண்டுபிடித்தார்.
- 1928-ல் எரிக் என்ற ரோபோவை டபிள்யூ.எச் ரிச்சர்ட்ஸ் என்பவர் லண்டனில் சொசிட்டி ஆப் மாடல் எஞ்சினியர்சில் முதன் முதலில் காட்சிக்கு வைத்தார்.
- 1939-ல் நடைபெற்ற உலகக் கண்காட்சியில் வெஸ்டிங் ஹவுஸ் எனும் நிறுவனம் எலெக்ட்ரோ எனும் ரோபோவைக் காட்சிக்கு வைத்தது.
- 1940களில் வில்லியம்கிரே வால்ட்டர் என்பவர் எல்மர், எல்சி ஆகிய ரோபோக்களை வடிவமைத்தார்.
- 1954-ல் ஜார்ஜ்டெவல் என்பவர் யூனிமேட் எனும் இயந்திரத்தைக் கண்டுபிடிக்க 1961-ல் இது அமெரிக்கக் கார் தொழிற் சாலையில் பயன்பட்டது. 1960-களில் ரோபோக்களின் பயன்பாடு பெருகி, ஜப்பான், தென்கொரியா, அய்ரோப்பா ஆகிய நாடு களுக்குப் பரவியது.
- 1973-ல் டோக்கியோவில் உள்ள வாசேடா பல்கலைக் கழகம் வேபோபட் எனும் முழுமையான ரோபோவை உருவாக்கியது. ஜப்பானிய மொழியில் பேசவும் செய்யலாம். ஜப்பானியர்கள் ரோபோக்களை உருவாக்குவதில் அமெரிக்காவைப் பின்தள்ளி விட்டனர்.
- உலகிலுள்ள பத்து லட்சம் தொழிற் சாலை ரோபோக்களில் பாதி ஜப்பானில் உள்ளன. ஒரு விமானத்தை பன்னிரண்டு மணி நேரம்தூய்மைப்படுத்தும்பணியைஸ்கைவாஷ் எனும் ரோபோ, இப்பணியை மூன்று மணி நேரத்தில் முடித்துவிடும். ஜப்பானில் நடனமாடும் ரோபோக்கள் உண்டு.
- அறுவை சிகிச்சைகள் மேற்கொண்ட ரோபோக்களில் ரோபோ டாக் என்பதும் ஒன்று. ஹெல்ப்மேட் என்ற ரோபோ மருத்துவ மனைகளில் உதவியாளராக விளங்குகிறது.

இன்று தமிழகத்தில் 34 ரோபோடிக் பொறியியல் கல்லூரிகள் உள்ளன. அவற்றில் சென்னையில் உள்ளவை

இந்துஸ்தான், எஸ்.ஆர்.எம்., வி.ஐ.டி., ஸ்ரீராமச்சந்திரா, ராஜலட்சுமி, டாக்டர் எம்.ஜி.ஆர். பலகலைக் கழகம்.

இவற்றில் முக்கியம் என்றால் இப்படிப்பை படித்தால் வேலை வாய்ப்பு என்பது முன்னிற்கும். இப்படிப்பு என்பது இப்போது உள்ளகாலகட்டத்தில்மிகப்புதியதுமட்டுமல்ல. இதுவே இனிவரும் காலங்களில் தொழில் துறைகளில் மட்டுமன்றி பல்வேறு துறைகளிலும் இதுவே கோலோச்சும் என்பது திண்ணம். இப்படிப்பு ரோபோடிக்ஸ் என்று மட்டும் நின்று விடுவதில்லை. இப்படிப்பு வேறுபடுத்தப்பட்டு ரோபோடிக்ஸ் மற்றும் ஆட்டோமேஷன் என்று வழிவகைப்பட் டுள்ளது. ★

# ஊட்டச் சத்துகள் நிறைந்த அத்திப்பழம்!


தினசரி 2 அத்திப் பழங்களை சாப்பிட்டால் உடலில் ரத்த உற்பத்தி அதிகரிக்கும். உடலும் வளர்ச்சி அடைந்து பருமனடையும். மலச்சிக்கலை நீக்க உணவிற்குப் பிறகு சிறிதளவு அத்தி விதைகளைச் சாப்பிடலாம். நாள்பட்ட மலச்சிக்கலை குணமாக்க 5 பழங்களை இரவில் சாப்பிட வேண்டும்.

அத்திப் பழத்தை தினமும் 5 முதல் 10 வரை காலை, மாலை என இரு வேளை சாப்பிட்டு பால் அருந்தினால் தாது விருத்தியாகும். ஆண்மலடு நீங்கும். உலர்ந்த அத்திப் பழங்களை தேனில் ஊற வைத்து சாப்பிட்டால் அளவற்ற போஷாக்கை பெறலாம். உலர்த்திப் பொடி செய்து ஒரு ஸ்பூன் வீதம் பாலில் போட்டும் சாப்பிடலாம்.




போதைப் பழக்கம் மற்றும் இதர வியாதிகளால் ஏற்படும் கல்லீரல் வீக்கத்தை குணமாக்க அத்திப்பழங்களை காடியில் (வினிகர்) ஒரு வாரம்வரை ஊற வைக்க வேண்டும். அதன்பின் தினசரி இரண்டு பழங்களை ஒருவேளை சாப்பிடலாம். தினசரி இரண்டு அத்திப்பழங்களை சாப்பிட்டு வந்தால், உடல் கொழுக், மொழுக் என்று வளரும். இதில் புரோட்டீன், சர்க்கரைசத்து, கால்ஷியம், பாஸ்பரஸ் மற்றும் இரும்புச் சத்து அதிக அளவில் இருப்பதாகவும், மற்ற பழங்களைவிட அத்திப்பழத்தில் இந்த சத்துக்கள் நாலு மடங்கு அதிகமாக உள்ளது. இதைத் தவிர வைட்டமின் ஏ, வைட்டமின் சி அதிக அளவில் உண்டு. சீமை அத்திப்பழம் வெண்குஷ்டத்தை குணமாக்குகிறது. அரை கிராம் காட்டு அத்திப்பழத்தை தினசரி ஒரு வேளை சாப்பிட்டு வந்தால், வெண்புள்ளிகள், வெண் குஷ்டம், தோலின் நிறமாற்றம் ஆகியவை குணமாகும். அதைப் பவுடராக்கி பன்னீரில் கலந்து, வெண் புள்ளிகள் மீது பூசலாம்.





18 புள்ளி 4 வரிசை 4வரை
நேர்புள்ளி
**- எப்.கவுசி, சின்னமணலி.**

23 புள்ளி 12 வரை
இடைப்புள்ளி
**- எஸ்.தேன்மொழி, சின்னமணலி.**



# கோலங்கள்

20 புள்ளி 6 வரிசை 6 வரை
நேர்புள்ளி
**- எஸ்.தேன்மொழி, சின்னமணலி.**





21 புள்ளி 7 வரிசை. 7-ல் நிறுத்தவும்
நேர்புள்ளி
**- என்.இந்திராணி, சிதம்பரம்.**




15 புள்ளி 5 வரிசை
நேர்புள்ளி
**- அ.யாழினிபர்வதம்,**
**சென்னை - 78.**

15 வரிசை 3 புள்ளி 2, 2 ஆக
குறைத்து 2 வரிசை 3 வரை
**- ஜே.சி.ஜெரினாகாந்த், சென்னை.**



ரங்கோலி
**-மகாலெஷ்மி சுப்ரமணியன்,**
**காரைக்கால்.**





19 புள்ளி 10 வரை
இடைப்புள்ளி
**- அ.யாழினிபர்வதம்,**
**சென்னை - 78.**



# கலைகளுக்கு அரசி சரஸ்வதி!

தன்னுடைய உடலிலிருந்து சாவித்திரி, காயத்திரி, பிராமணி, சரஸ்வதி எனும் பேரழகியைப் பிரம்மா உருவாக்கினார் என்று மச்சபுராணம் கூறுகிறது. தேவிபாகவதம், கிருஷ்ணபிரானின் மனைவியான ராதையின் முகத்தில் இருந்து சரசுவதி தோன்றினாள் என்றும், நான்முகனை மணந்து சத்தியலோகம் சென்றாள் என்கிறது.

சரஸ்வதியின் இருப்பிடம் பிரம்மனின் நாவு என கந்தபுராணம் கூறுகிறது. அதனால் நாமகள், நாமடந்தை, நாமிசைகிழத்தி, நாவுக்கரசி எனப் போற்றப்படுகிறாள்.

ராமாஞ்சர் எனும் உடையவருக்கு பாஷ்யக்காரர் என்னும் பட்டம் கொடுத்தவள் சரஸ்வதிதேவி. ராமானுஜர் வேதத்திற்கு பெருவிளக்கம் சொல்லியவர். தன்னுடைய ஹயக்கிரீவர் உருவத்தையும் அவருக்கு அளித்தார். ராமானுஜர் அதனைத் தினமும் பூஜித்தார். அவரால் பூஜிக்கப்பட்ட ஹயக்கிரீவர் சிலை மைசூர் பரகாலமடத்தில் இருப்பதாக கூறப்படுகிறது.

கம்பர் பாடிய சரஸ்வதி அந்தாதி கேட்டு சரஸ்வதிதேவி மகிழ்ந்து அவருக்குத் தன் காலில் அணிந்துள்ள இட்து கால் சிலம்பைக் கொடுத்தாள். மன்னர் கம்பரை மீண்டும் சரஸ்வதி தேவியை துதிக்கும்படி வேண்ட, அதன்படி மீண்டும் தோன்றிய சரஸ்வதி ஒற்றைச் சிலம்புடன் நாட்டிய கோலம் காட்டினாள். பின்பு சரஸ்வதி தேவி தன் இடது கால் சிலம்பை கம்பரிடம் வாங்கி அணிந்து கொண்டாள்.

சரஸ்வதி உடலில் தோன்றிய புலவர்கள் பற்றி திருவிளையாடல் புராணம் கூறுகிறது. பிரம்மன் சரஸ்வதி தேவி செய்த தவறின் பொருட்டுப் பூமியில் பிறக்கும்படி சபித்தார். சரஸ்வதிதேவி வேண்டிக் கொள்ளவே சரஸ்வதி தேவியின் உடலில் உள்ள 51 எழுத்துக்களில் 48 எழுத்துக்கள் 48 புலவர்களாகப் பிறப்பார்கள். சிவபெருமான் தலைமைப் புலவராகத் தோன்றுவார் என்று பிரம்மன் சாப விமோசனம் தந்தார். மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் இந்த 48 புலவர்களுக்கு சந்நிதி உள்ளது. 'சங்கப்புலவர் கோவில்' என்பது பெயர்.

தட்சிணாமூர்த்தி அனைத்துகலைகளுக்கும் அதிபதி. சகலகலாவல்லி சரஸ்வதி. எனவே சர்வ வித்யா சொரூபிணி என்று பெயர். சரஸ்வதிக்கும் தட்சிணாமூர்த்திக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன. இருவருக்கும் சந்திரகலை, நெற்றிக்கண், ஜடாமகுடம், வெண்மை நிறம், ஸ்படிக மாலை உண்டு.

– மங்களராஜம்.

## வாழைமர வாகனம்!

கோவில் விழாக்களில் வீதி உலா வரும் சுவாமி சிலைகளுடன் பின்னால் பலவித வாகனங்கள் வருவதுண்டு. ஆனால் வாழைமர வாகனத்தை திருக்கழுக்குன்றம் தட்சிணாமூர்த்தி கோவிலில் மட்டுமே காண முடியும். இங்குள்ள கோவில் குளத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு விளைவது மற்றுமொரு அபூர்வ செய்தி ஆகும்.

– சுசீலா சோமசுந்தரம், கும்பகோணம்.

'பெண்மணி', முரசு பப்ளிகேசன்ஸ் நிறுவனத்துக்காக, சன் பிரஸ் அச்சகத்தில் அச்சிட்டு 246, அண்ணா சாலை, ஆயிரம்விளக்கு, சென்னை – 600 006–ல் இருந்து வெளியிடுபவர் ஆசிரியர் சி.ராஜா



பிரதிவேண்டுவோர் அலுவலக வங்கிகணக்கில் பணம் செலுத்திவிட்டு
**murasupublication@gmail.com** என்ற
மின்னஞ்சலுக்கு தங்களது முகவரியை அனுப்பவும். அல்லது
**murasupublication** என்றபெயரில் DD/cheque/MO அனுப்பவும்.
தபால் செலவு பிரதி ஒன்றுக்கு ரூ.30கூடுதலாக அனுப்பவும்.

வங்கி கணக்கு விவரம்
**Name: murasupublication**
**A/c : 6034172999**
**Bank: Indian Bank**
**Branch : Peters Road**
**IFSC : IDIB000R047**

# முரசு பப்ளிகேஷன்ஸ்

**246, அண்ணாசாலை, ஆயிரம் விளக்கு, சென்னை-600006.**
**தொலைபேசி :044-28297225**

PENMANI Oct-2021 with the Registrar of newspaper for India under No.24258/71. Published 1st of every month.

